3268

உ

இதிகாசமாகிய

தமிழ்

# ஸ்ரீமகாபாரதவசனத்தில்

# விராடபர்வம்.

இஃது
பலர் வேண்டியபடி
வாலாஜாபேட்டை
உ. தியாகராய ஐயர் அவர்களால்

சென்னை.
பெத்துநாயக்கன் பேட்டை
123-வது கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்திருக்கும்
லலிதாப்ரஸந்நோதய அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1887-௵

வியய௵

உ

# விளம்பரம்.

---

லலிதாம்பாள் துணை.

சென்னை பெத்துநாயக்கன்பேட்டை தங்கசாலைவீதி 123-வது நெ கிரகத்தில் ஸ்தாபித்திருக்கும் லலிதாப்ரஸந்நோதய அச்சியந்திர சாலையில் அடியில்கண்ட புத்தகங்கள் விலைக்கு வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| உத்தர ராமாயணம் வசனம் சாதாகாகிதம் | ... | 0 | 6 | 0 |
| உத்தர ராமாயணம் வசனம் உயர்ந்த காகிதம் | ... | 0 | 8 | 0 |
| வால்மீகி ராமாயணம் ,, | ... | 0 | 1 | 0 |
| சிவபஞ்சாக்ஷரிமகிமை ,, | ... | 0 | 1 | 0 |
| மஹாலிங்கையர் இலக்கணம் | ... | 0 | 2 | 0 |
| நீதிமஞ்சரி அர்த்தம் க-வது பாகம் | ... | 0 | 1 | 0 |
| ஸ்ரீ மகாபாரத வசனத்தில் விராடபர்வம் | ... | 0 | 12 | 0 |

நன்ருக. குருவாழ்க. குருவேதுணை.

# ஸ்ரீ மஹாபாரதம்.

நான்காவது.

# விராடபர்வம்.

(விருத்தம்.)

அங்கையிநேமி சங்குவாடண்டோ டம்பினமிவைதரித் தருள்வோன், சங்கையின்மறைக ளாயிரங்களுக்குஞ் சாற்றுதற்கரிய தத்துவத்தோன், க்ங்கையினறலுங் காளியன்முடியுங் காளிந்தியின்கரையுமே கமழும், பங்கையமலர்க ளிரவுநற்பகலும் பணிந்துபாடுதுமவன் புகழே.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

## பாண்டவர் விராடநகரஞ்சேர்ந்த சரித்திரம்,

ஸ்ரீ வைசம்பாயன மகாமுனிவர் ஜனமேஜய மகாராஜனைப் பார்த்துச் சொல்லுகிருர்.

காரீதுறையவாலோசனை.

கேளும் ராஜாவே இவ்வகையாய்ப் பாண்டவர் ஐவரும் வனவாசஞ் செய்து முடிவில் தருமதேவதை பிரத்தியக்ஷமாக, அந்தத் தேவனுடைய கிருபையினலே இனி செய்யவேண்டுவதாகிய அஞ்ஞாதவாசம் இடையூறின்றி நிறைவேறும்படி வரம்பெற்று முன் தங்

களோடு காட்டிற்கு வந்து வாசஞ் செய்த வேதியரை யெல்லாம் நமஸ்காரஞ் செய்து கைகூப்பிக்கொண்டு சொல்லுகிறார்கள்.

வாரீர் பிராமணோத்தமர்களே, நீங்களெங்களுடன் இவ்வளவு காலம் வனவாசஞ் செய்து கஷ்டப்பட்டீர்கள். இனி நாங்கள் அஞ்ஞாதவாசஞ் செய்யவேண்டி இருக்கிறபடியினாலே அது விரோதமில்லாமல் நிறைவேறும்படி யனுக்கிரகஞ் செய்து எங்களுக்கு விடைதரவேண்டும் என்று சொல்லிய பாண்டவர்களின் பேச்சைக் கேட்டு வேதிய ரெல்லாரும் சொல்லுகிறார்கள்.

ஓ பாண்டவர்களே, நீங்கள் நினைத்த காரிய மெதுவும் நிறைவேறாமற் போகமாட்டாது. ஆனதுபற்றி இந்த அஞ்ஞாதவாசமும் இடையூறின்றி நிறைவேறிப் பின்பு நீங்கள் வெளிப்பட்டுச் சத்துருக்களை வென்று முன்போல் சகல சாம்பிராஜ்ஜியங்களையும் அனுபவிப்பீர்கள் என்று சொல்லும் பிராமணரைப் பார்த்து தருமபுத்திரர் ஓ மகாத்துமாக்களே, இந்த ஆபத்தைத் தாண்டி எப்போது உங்களோடு சேர்ந்து களிப்பே னென்று சொல்லிப் பொறுக்கக்கூடாத விசனத்தை நெஞ்சி லடக்கிக்கொண்டு பரவசமாயினர். அப்போது தம்பிமார் தேற்றக் கொஞ்சஞ் சமாதானப்பட்டு நிற்கு மந்த யுதிஷ்டிரரைப் பார்த்துத் தவுமியமுனிவர் ஒரு வார்த்தை சொல்லுகிறார்.

ஓ யுதிஷ்டிர மகாராஜாவே, தருமத்திலும் தைரியத்திலும் ஆழமுடைமையிலும் புகழ்பெற்ற நீர் இங்ஙனம் விசாரப்படலாமா? தேவர்களுக்கும் ஆபத்து வந்தால் அநுபவித்துத் தீரவேண்டும். கேளும் முன்னே இந்திரன் நிஷத பருவதத்திலே ஓர் மடுவிலே தாமரைத் தண்டினுள்ளே வெகு நாள் ஒளித் திருந்தான். மகாவிஷ்ணு அதிதியின் கருப்பத்திற் பிறந்து குறள்வடிவா யிருந்து பலிசக்கரவர்த்தியை மூவடி மண் யாசித்தார். அக்கினிபகவான் அவுர்வரென்னும் மகாமுனியின் மனையாளது தொடையில் நெடுநாள் மறைந்திருந்து வெளிப்பட்டார். சூரியபகவான் பசுவின் வயிற்றி லொளித்திருந்தார். ஆனபடியினாலே ஆபத்து யாரையும் விடமாட்டாது. தைரியத்தோடு அனுபவித்தே தீரவேண்டும். நீங்களும் அஞ்ஞாதவாசத்தை நிறைவேற்றி முன்போல் சிறக்க அரசு செலுத்துவீர்கள் என்று புரோகிதர் சொல்லக் கேட்டு யுதிஷ்டிரர் சந்தோஷித்தார்.

இப்படி யிருக்க மகா பலசாலியாகிய வீமன் தமயனைப் பார்த்து, ஐயா மகாராஜாவே, உமக் கெப்போதுதான் என்னகுறை?

கதாயுதமுடைய யானும் காண்டீபத்தையுடைய அர்ச்சுனனும் மகா சூரராகிய நகுல சகாதேவரும் உமது கட்டளையினாலே சத்துருக்கள் செய்த பல வுபத்திரவங்களையுஞ் சகித்துக்கொண் டிருக்கிறோமே யல்லது: நீர் கடைக் கண்ணா லனுமதி செய்வீராகில் இந்த நிமிஷத்திலேயே பகைவரை வேரோடு கெல்லி யெறிந்து நாற்கடல் சூழ்ந்த விப்பூமியைச் சுவாதீனஞ் செய்யமாட்டோமோ வென்று சொல்லக் கேட்டு யுதிஷ்டிரர் சொல்லுகிறார்.

தம்பி வீமா, சத்தியத்தைக் காக்கவேண்டு மவர்கட்குப் பொறுமையும் தருமமும் விடத்தகாது. ஆதலால் நீ அதற்கு விரோதமாய் ஒன்றுஞ் சொல்லாதே. மேல் நடக்கவேண்டுங் காரியத்தைக் குறித்து இந்த ரிஷிகளை வேண்டி வினவுகிறே னென்று தம்பியைப் பார்த்துச் சொல்லி பின்பு சமீபத்தி லிருக்குந் தவுமியர் முதலாகிய முனிவர்களைப் பார்த்து விண்ணப்பஞ் செய்கிறார்.

ஓ முனிவர்களே, நாங்கள் துரியோதனாதிகளால் சூதாடித் துரத்தப்பட்டுப் பன்னிரண்டு வருஷ காலம் வனவாசஞ் செய்தது உங்களுக்குத் தெரியுமே? இனி பதின்மூன்றும் வருஷம் அஞ்ஞாதவாசஞ் செய்யவேண்டு மல்லவோ? அதைக் குறித்து எவ்விடத்தி லிருந்தால் நாங்கள் எதிரிகளால் காணப்படாமல் பிரதிக்கினையை நிறைவேற்றுவோம்? அப்படிப்பட்ட இடத்தை எல்லா மறிந்த நீங்கள் அடியேங்களுக்குத் தெரிவிக்கவேண்டு மென்று கூறக் கேட்டு வேத மறிந்து தபோநிஷ்டை பெற்ற அம்முனிவர்கள் சொன்னார்கள்.

கேளீர் யுதிஷ்டிரரே, நீர் தருமமும் சத்தியமுந் தவறாதவர். ஆனதுபற்றி பெரியோர்களின் அனுக்கிரகத்தினால் அப்படிப்பட்ட விடம் உமக்கே தோன்றும். நாங்கள் சொல்லவேண்டுவ தில்லை. எங்களுக்கு விடை கொடு மென்று சொல்லி அவரிடத்தில் விடை பெற்றுத் தத்தம் அக்கினிகளோடு தத்த மாசிரமங்களைச் சேர்ந்தார்கள்.

பின்பு பாண்டவர் ஐவரும் துரோபதியும் தவுமியரை முன்னிட்டுக்கொண்டு இரண்டு நாழிகை வழிதூரம் போய் ஓர் மரத் தடியிலுட்கார்ந்து சகல கலைகளையும் ஓதி யுணர்ந்து மந்திராலோசனையையும் அதை நிறைவேற்றும் வகையையும் அறிந்த தவுமியரை முன்னிட்டுச் செய்யவேண்டுங் காரியத்திற்கு ஆலோசனை செய்ய வாரம்பித்தார்கள்.

கேளும் ஜனமேஜயரே, அப்போது யுதிஷ்டிரர் அர்ச்சுனனைப் பார்த்துத் தம்பி நாம் எவ்விடத்தில் ஒளிந்து வாசஞ் செய்யலாம்? நீ புத்திசாலி யாகையால் அதை யோசித்துச் சொல்லென்று சொல்லக் கேட்டு அர்ச்சுனன் சொல்லுகிறான்.

கேளீர் மகாராஜாவே, முன்னம் யமதருமராஜனது அனுக்கிரகத்தினாலே எப்படி விபத்துக்களைத் தாண்டினேமோ அப்படியே இனியும் ஒருவருக்கும் பாண்டவரென்று தெரியாமல் ஒருவருஷ காலத்தையும் தாண்டுவோம். பூமண்டலத்தி லிருக்கும் இராஜ்ஜியங்களில் நல்ல விடங்களைச் சொல்லுகிறேன். அவைகளுள் எது மனதிற் கினிதா யிருக்கின்றதோ அதில் வாசஞ் செய்வோம். நமது குருதேசத்திற்குச் சமீபத்தில் பாஞ்சாலதேசம் மச்சதேசம் சாள்வதேசம் விதர்ப்பதேசம் பாகிலிகதேசம் விதேகதேசம் தசாரணதேசம் சூரசேனதேசம் கலிங்கதேசம் மகததேசம் இவை யெல்லாம் மிகவும் மனோரம்மியமா யிருக்கின்றவைகள். இவை யெல்லாவற்றிலும் மச்சதேசத்தைச் சேர்ந்த விராடநகரம் மிகவற்புதமா யிருக்கின்றது. அதில் சம்மதியாகில் வாசஞ்செய்யலாம், விசனப்படவேண்டா மென்று சொல்லியதைக் கேட்டுத் தருமராஜன் மன மகிழ்ந்து அவனை நோக்கிச் சொல்லுகிறார். தம்பி, நீ சொல்லியதனால் மனதிற்கு மிகவும் சந்தோஷ முண்டாயிற்று. நீ நன்றாய் நினைப்பு மூட்டினாய். எல்லாத்தேசங்களிலும் விராடநகரமே சிறந்தது. அவ்வரசனும் மகா தரும சீலன், பலசாலி, குணசாலி, கல்வி கேள்வியிற் சிறந்தவன். அவனிடத்தில் வாசஞ் செய்ய என்றனுக்குச் சம்மதியா யிருக்கின்றது. ஆகையால் நா மெல்லாம் மாறுவேஷங்கொண்டு அவ் வரசனை யடுத்து அவனுக் கிஷ்டமாகிய பணிவிடைகள் செய்யவேண்டு மல்லவோ? நமக்குள் யாரார் எவ்வெப் பணிவிடை செய்யலாம்? அதைக்குறித்துச் சொல்லெனக் கேட்க அர்ச்சுனன் அண்ணலை நோக்கிச் சொல்லுகிறான்.

அண்ணா சத்தியசந்தராகியும் காமக்குரோத மில்லாதவராகியும் மெதுவாய்ப்பேசுகின்றவராகியும் உதாரராகியும் தருமவானாகியும் இருக்கிற நீர் உமது ரூபத்தை மறைத்து மாறுருக்கொண்டு உமக்குக் கீழ்ப்பட்ட விராடராஜ னிடத்தில் எப்படி சேவை செய்வீ ரென்று அளவில்லாத விசனத்தை யடைகிறே னென்று சொல்லக் கேட்டு யுதிஷ்டிரர் ஒரு வார்த்தைச் சொல்லுகிறார்.

கேளாய் அர்ச்சுனா, நீ விசனப்படவேண்டாம். நான் சன்னாசி வேடம் பூண்டு கங்கபட்டனென்று பேர் இட்டுக்கொண்டு விராடராஜனை யனுசரித்து அவன் மரியாதை செய்யும்படி புண்ணிய கதைகள் தரும சாஸ்திரங்கள் நீதி சாஸ்திரங்கள் ஜோதிடம் சகுனம் வேதாந்தம் முதலாகிய பல நூல்களையும் போதித்துக்கொண்டு அவனுக்குச் சந்தோஷம் வரும்படி யிருக்கமாட்டுவேன். அன்றியும் சொக்கட்டான் ஆடி மெய்ப்பிக்கும்படியாய்ப் பொற்கவறும் வெள்ளிக்கவறும் என் கையி லிருக்கின்றனவே? அவைகளை யவனுக்குக் காட்டிச் சந்தோஷப்படுத்த மாட்டுவேன். நீ ரெங்கே யிருந்து வந்தீ ரென்று அவன் என்னைக் கேட்டால் நான் தருமராஜருக்கு ஒற்றுமையுள்ள அன்பன். அவர் சூதாடித் தோற்று வனவாசம்போய் அஞ்ஞாதவாசம் செய்யும்படி போனார். ஆதலின் நீர் அவர்போலவே தருமவானென்று நினைத்து உம்மிடத்தில் வந்தேன். உமது கருத்துக்கு மாறுபடாமல் நடக்கமாட்டுவேன். என்னை யாதரித்துக் காப்பாற்றவேண்டுமென்று சொல்லுகிறேன் என்று சொல்லிப் பின்பு வீமசேனனைப் பார்த்து மிகுந்த விசனத்தினாற் பெருமூச் செறிந்துகொண்டு சொல்லுகிறார்.

அப்பா வீமசேனா, நீ அந்த விராடராஜ னிடத்தில் எந்தக் காரியஞ் செய்துபிழைப்பாய்? நீயோ வெகு பலசாலி, கோபம் உடையவன், ஆதியில் இடிம்பாசுரனைச் சங்கரித்தாய். பின்பு ஏகசக்கரபுரத்தில் பகாசுரனைக் கொன்று வேதியரைக் காத்தாய். மஹா பலசாலியாகிய ஜடாசுரனையும் கிம்மீராசுரனையும் மடித்து எங்களைக்காத்தாய். கந்தமாதன பருவதத்தில் அதிகவீரமும் கோபமு முடையவராகிய இயக்கரையும் இராக்கதரையும் போரில் ஜயித்து தேவர்க்கே கிடைக்கும்படியாகிய தாமரை செங்கழுநீர் முதலிய மலர்களைக்கொணர்ந்து கொடுத்துத் துரோபதிக்குச் சந்தோஷ முண்டாக்கினாய். இப்படிப்பட்ட நீ பலவீனனாகிய விராட னிடத்தில் அடங்கி யெப்படி சேவைசெய்யப்போகிறாய்? என்று சொல்லிக் கண்ணீர் ததும்ப நிற்குந் தருமபுத்திரரைப் பார்த்து வீமனானவன் சொல்லுகிறான்.

கேளும் அண்ணா நான் சயம்பாகி வேடம் பூண்டு வல்லனென்கிற நாமதேயத்தை வைத்துக்கொண்டு புளியோரை ததியோதன முதலிய பலவகை யன்னங்கள் பாயசங்கள் பணியாரங்கள் முதலாகிய எல்லா உணவுகளும் செவ்வையாய்ச் செய்து அவ்வரசனுக்குச் சந்

தோஷம் வரும்படி நடக்க மாட்டுவேன், அன்றியும் பாகசாலைக்கு
த் தினந்தோறும் வேண்டிய விறகுகளுக்காக உலர்ந்த மரங்களை வே
ரோடு பேர்த்துக்கொணர்ந்து நிரப்புவேன். மேலும் அவ்வரசனி
டத்தில் இருக்கும் மல்லர்கள் யாவரினும் இவனே பலசாலி யென்னு
ம்படி சண்டைசெய்து அவன் கண்களுக்குத் திருப்தி யுண்டாக்கு
வேன். சிங்கங்கள், புலிகள், யானைகள் முதலாகிய துஷ்ட மிருகங்
களை யெளிதிற் பிடித்துக் கொணர்ந்து அரசன் முன்னிலையில் விட்
டு ஆச்சரியப்படச் செய்வேன். அவனது பாகசாலையி லிருக்கின்ற சுய
ம்பாகிகள் யாவரையுஞ் சிநேகஞ் செய்து எங்களுள் இவன் சிறந்தவ
னென்று அவர்களே இராஜாவுக்குத் தெரிவிக்க அவன் தயையைச்
சம்பாதிப்பேன். நீ யாரென்று கேட்டால் நான் தருமபுத்திர ம
ஹாராஜனது பாகசாலையி லிருக்கும் சுயம்பாகிகளுக்கு யஜமானனா
யிருந்தவ னென்று சொல்லுகிறேன். இப்படிக்கு நான் மடைப்
பளி அதிகாரம் பெறாமற் போனால் வயிறு நிரம்பச் சோறு கிடைக்
கமாட்டாது என்று சொல்லிய தம்பியை நோக்கி ராஜா மற்றொ
ரு பேச்சைச் சொல்லுகிறார்.

தம்பீ; நீ இவ்வகையாய்ப் பிழைக்கிறே னென்று சொல்லக்
கேட்டு எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. இந்த அர்ச்சு
னன் அசகாயசூரன். முன்பு அக்கினிதேவன் பிராமணவேஷத்தோ
டு வந்து எனக்குப் பூரணமாகிய ஆகாரங் கொடுக்கவேண்டு மென்
று யாசிக்க அப்படியே செய்கிறே னென்று பிரதிக்கினை செய்து
இந்திரனுடைய காண்டவ வனத்தை அஞ்சாம லெரிக்கச் செய்தா
னல்லவோ? அந்த அக்கினி தேவனது அனுக்கிரகத்தினாலே ஜயிக்க
ப்படாதனவாகிய நான்கு வெள்ளைக் குதிரைகள் கட்டி வானரத்
துவசம் நாட்டிய திவ்ய ரதமும் வில்லும் குருகுலத்தோ ரெல்
லாங் கொண்டாடப் பெற்று சர்ப்பங்களுள் வாசுகிபோலவும்
தேஜசுடையோர்களுள் அக்கினிபோலவும் நதிகளுள் கங்கைபோலவு
ம் கடல்களுள் பாற்கடல் போலவும் அரசருள் தேவராஜன்போலவும்
அசுரருள் பலிசக்கரவர்த்திபோலவும் திக்கஜங்களுள் சுப்பிரதீபம்
போலவும் குதிரைகளுள் உச்சைச்சிரவம்போலவும் இயக்கருள் கு
பேரன் போலவும் மிருகங்களுள் சிங்கம் போலவும் இராக்கதருள்
இராவணன்போலவும் மனிதருள் பிராமணன்போலவும் கொடையா
ளிகளுள் மேகம்போலவும் ஆயுதங்களுள் வச்சிராயுதம்போலவும் எ
ருதுகளில் விருஷபம் போலவும் யானைகளில் அயிராவதம்போலவும்
நேசரில் மகன் போலவும் அன்பரில் மனையாள்போலவும் மலைகளில்

மேரு போலவும் கோட்களில் சந்திரன் போலவும் தேவருள் நாராயணமூர்த்தியைப் போலவும் குளங்களுள் மானச சரசுபோலவும் சூருள் சிறந்தவனாக விளங்குகின்றன னல்லவோ? வில்லாளிகள் யாவரினு மதிசய முடையனாகிய இவன் தேவேந்திரனது அனுக்கிரகத்தினாலே ஐந்து வருஷம் பிரமசரிய மனுட்டித்துச் சகலவித அஸ்திர வித்தைகளைக் கற்றுச் சத்துருக்களை நாசஞ்செய்யவும் நமக்கு வெற்றி வருவிக்கவும் பூமியில் வந்திருக்கிறான். இவனது கைகளிரண்டையும் பார்! நீண் டுருண்டு திரண்டு யானைத்துதிக்கையின் அழகைக் கவர்ந்து கணுக்க ளடங்கிச் சுந்தரமாகிய விரல்களுள்ளனவாய் நாரியின் உரைச்சலினால் காய்ப்படைந்து பகைவரின் உயிரையுண்ணும்படியாகிய சர்ப்பங்கள்போல் விளங்குகின்றன. இவ்விதமாகிய மகாவீரனும் கிரீடியென்று சிறந்த நாமதேய முடையவனுமாகிய இவ்வர்ச்சுனன் எந்தவேடந் தரித்துப் பிழைப்பான்? எப்படி பணிசெய்திருக்க மாட்டுவா னென்று விசனப்படுகிறேன். இவனைப் பார்க்கும்போதே மகா புருஷனென்று தோற்றுமல்லவோ? அதற் கேற்ற குறிகள் இவன் கை முதலாகிய அவயவங்களில் நன்றாய் விளங்குகின்றன. ஆதலினாலே இவ னெப்படி மறைந்து வாசஞ் செய்வா னென்று நினைக்குமளவில் மனம் பதைக்கின்றது, கண்களி னின்றும் நீர் வடிகின்றது, மெய் சோருகின்றது, என்று சொல்லுகின்ற தருமபுத்திரரைப் பார்த்து அர்ச்சுனனானவன் சொல்ல முயன்றான்.

கேளு மண்ணா, முன் நான் இந்திரசபையி லிருக்கும்போது ஊர்வசி யென்பவள் என்னை விரும்பி அதற்கு நான் சம்மதிப்படாமையாலே அலியாகும்படி சபித்தா ளன்றோ? அந்தச் சாபத்தை இப்போ தங்கீகரித்து ஸ்திரீவேஷம் பூண்டு காய்ப்புள்ள கைகளை கஞ்சுகத்தினால் மறைத்துப் பிருகன்னளை யென்று பேர் வைத்துக்கொண்டு அந்தப்புரத்தி லிருக்கும் ராஜ கன்னிகைகளுக்கு ஆடல் பாடல்களைக் கற்பித்து அந்த ராஜாவுக்குச் சந்தோஷம் வரச்செய்வேன். அவர்கள் நீ யாரென்றால் துரோபதிக்கு நாட்டியங் கற்பித்துக்கொண் டிருந்தவ ளென்று சொல்லி அவர்கள் என்னை ஆதரவுடனே பரிபாலனஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்காக நீர் விசனப்படவேண்டா மென்று சொல்லக் கேட்டுத் தருமபுத்திரர் அர்ச்சுனனைப் பார்த்துச் சொல்லுகிறார்.

தம்பி நீ சொல்லிய பேச்சைக் கேட்டு உனக்காக வந்த விசனம்

நீங்கிற்று. இந்தக் குழந்தை நகுல னிருக்கிறானே சவுந்தரியத்திலும் குணத்திலு முயர்ந்தவன், நல்ல சவுரியமுடையவன்; இவன் பிறந்தது முதல் இதுவரையிலும் செல்வப் பிள்ளையாய் நமக்குக் கீழிருந்து வளர்ந்தவன்; உங்க ளெல்லாரிலும் எனக்கு மிகவு மிஷ்டனா யிருக்கிறவன். இவ னவ்விடத்தி லெப்படி பிழைப்பானோ தெரியவில்லை? அதனால் அதிக மனோ வியாகுல முறுகிறேன் என்று கண்களில் நீர் ததும்பச் சொல்லிய தருமராஜனை நோக்கி நகுல னுரைக்கின்றான்.

அண்ணா? நீர் அடியேனுக்காக விசனப்படவேண்டாம். அடியேனுக்கு அசுவசிக்ஷை நன்றாய்த் தெரியுமல்லவோ? அதனாலே எப்படிப்பட்ட பொல்லாத குதிரையு மடக்கி நடத்தமாட்டுவேன். வேகமெவ்வளவு மில்லாத குதிரையும் காற்றுக்கொப்பாய் நடக்கும்படி செய்வேன். குதிரைகளின் கருத் தறிந்து செலுத்தவல்லேன். அவைகளுக்கு வரு மெல்லாப் பிணிகளையு மெளிதில் தீர்க்க வல்லேன். என் சிக்ஷைபெற்ற குதிரைகள் தேரிற் கட்டினாலும் ஏறி நடத்தினாலும் வேற்றுமை யில்லாமல் அதற்கேற்ப நடக்கும். யானேறுங் குதிரைகள் எவ்வளவு வருத்தம் நேரிட்டாலும் ஊக்கமுற்றுச் சந்தோஷமாகச் செல்லும். ஆதலால் யான் தாமக்கிரந்தி யென்று பேரிட்டுக்கொண்டு அவ் வரச னிடத்திற் போய்ப் பாண்டவரது குதிரைச் சாலையின் அதிபதியா யிருந்தவ னென்று சொல்லி என் சாமர்த்தியங்கள் யாவையும் விளக்கி அவனது எல்லாக் குதிரைகளையும் ஒப்பற்றனவாகச் செய்து அவ்வரசன் மிகவு மனங்களித்து என்றனக்கு வேண்டுவன வெல்லாங் கொடுத்து ஆதரிக்கும்படி யாவேன் என்றுரைத்தது கேட்டுத் தருமபுத்திரர் சொல்லுகின்றார்.

தம்பிமாரே, ஆக்ட்டும் சந்தோஷமாயிற்று. நமது தாய்க்கு நம்மெல்லாரிலும் கண்மணிபோல் மிகவும் பிரியமாகிய குழந்தை சகாதேவ னிருக்கிறானே, இவன் அந்த வேந்தனிடத்தி லெவ்வகையா யிருந்து சீவிப்பான்? இவனோ மிகுந்த பராக்கிரம முள்ளவன், புத்தியில் பிரகஸ்பதிக்கு நிகரானவன். நீதியில் சுக்கிராசாரியனுக்குச் சமானமானவன். மந்திரசாஸ்திரமும் ஆயுதசாஸ்திரமும் பூரணமாய்க் கற்றவன். அரசாட்சி செலுத்துந் திறமையுடையவன். இவனுக் கொப்பாகிய புருஷன் கிடைப்பது உலகத்தி லருமையன்றோ! இப்படிப்பட்ட இவனுக்கு இந்தக் காலம் எவ்வகையில் கழியு மென்று சிந்தையுற் றிருக்கிறேன் என்று கூறக் கேட்டுச் சகாதேவன் சொல்

லுகிருன், கேளீர் மஹாராஜனே? பசுக்களைப் பரிபாலனஞ் செய்யும் வகை யான் நன்ரு யறிவேன். முறட்டுப் பசுக்களையும் வசப்படச் செய்வேன், அவைகளுக்கு வரும் பிணிகள் யாதுக்கும் சிகிச்சை செய்வேன், அற்பமாய்க் கறக்கு மவைகளை வெகுவாய்க் கறக்கச் செய்வேன், மலட்டுப் பசுக்களுக்குக் கருவுண்டாகும்படி செய்ய வல்லமை யுடையவனுய் இருக்கிறேன், அவைகளைக் காலத்திற் கேற்றபடி காக்கத் திறமையுடையவனுக இருக்கிறேன், மேலும் புலிமுதலாகிய துஷ்டமிருகங்களால் அந்த மாடுகளுக்கு ஒரு தீங்கும் நேரிடாமலிருக்கும்படி செய்வேன். ஆனதுபற்றி அந்த விராடராஜனிடத்திற் சென்று தந்திரிபாலனென்கிற நாமதேயமுடையவன், பாண்டவர்களுடைய பசுக்களைக் காத்துவந்தவன், என்றுசொல்லி அங்கே அவ்வதிகாரம்பெற்று அந்த ராஜாவுக்கு விசேஷமாய் என்னிடத்தில் விசுவாசம் வரும்படி செய்கிறேன். ஆதலால் அடியேனுக்காக தேவரீர் கலங்கவேண்டா மென்று கூறக் கேட்டுக் குந்தியின் மூத்தகுமாரர் சொல்லுகிருர்.

கேளுங்கள் தம்பிமார்களே? இந்தத் துரோபதி வெகு அழகும் மேன்மையும் பளபளப்புள்ள சரீரமுமுடையவள், ராஜகுமாரி, பிறவிச் செல்வமுடையவள், கற்புமுதலாகிய நற்குணங்களால் கீர்த்தியடைந்தவள், எப்போதும் திவ்ய ரத்தினுபரணங்கள் விலையுயர்ந்த பட்டுவஸ்திரங்கள், திவ்யபோஜனம், பானம், திவ்ய சந்தனம், புஷ்பமுதலாகியவை யனுபவித்து அநேகந் தாசிகளால் பலவகை யுபசாரங்களுஞ் செய்யப்பட்டு பூசிதையாயிருந்தவளன்ருே? இப்படிப்பட்டவள் எவ்வகையாய் அவ்விடத்திலிருந்து காலத்தை யோட்டுவள்? ஒருவருக்குக் கீழடங்கியிருந்து எவல்செய்ய எப்படி சகிப்பள்? இதை நினைக்கத் தீயில் வீழ்ந்ததுபோல் என்மனம் தவிக்கின்றது என்று கண்ணீர்பெருக பெருமூச்செறிந்து சொல்லும் கணவன் பேச்சைக் கேட்டு அந்தப் பாஞ்சாலி சொல்வாள்.

நான் சைரந்திரியெனப் பேர்பெற்று அவ்வரசனுது அந்தப்புரத்திற் சென்று ராஜபத்தினியாகிய சுதேஷ்ணுதேவிக்கு பூமுடித்தல், புழுகு பூசல், திலதந்தீட்டல், ஆடை யுடுத்தல், பூஷணங்களைப் பூட்டல், முதலிய காரியங்களைச் செய்யும்படி யொப்புக்கொண்டு அவைகளில் எனது சாமர்த்தியங்களைக் காட்டி சந்தோஷிக்கச் செய்வேன், நீ யாரென்று கேட்கில் துரோபதிக்கு அலங்காரஞ் செய்து வந்தவள், அவள் பர்த்தாவோடு அஞ்ஞாதவாசம் போயிருப்பது பற்றி உன்

னிடம் வந்து சேர்ந்தேனென்று சொல்லி அவ்வரசன் மனையாட்டியின் கிருபைக்குப் பாத்திரமாகி கற்புநிலை வழுவாமற் பிழைப்பேனென்று சொல்லிய துரோபதியின் பேச்சைக் கேட்டு யுதிஷ்டிரர் மிகவுஞ் சந்தோஷித்தார்.

பின்பு யுதிஷ்டிர மகாராஜன் தம்பிமாரும் பத்தினியுஞ் சொல்லிய பேச்சுகளைக் கொண்டாடி அவர்களை நோக்கி, கேளுங்கள் தம்பிமாரே? நாமிப்படியே விராடராஜ னிடத்தில் சேவை செய்வோம், நமது புரோகிதராகிய தவுமியர் நம்முடைய அக்கினிகளைக் காப்பாற்றிக்கொண்டு இந்த ஆசிரமத்திலேயே இருக்கட்டும், நமது பரிசாரக ஜனங்களும், துரோபதியின் பரிசாரக ஜனங்களும், துருபத மஹாராஜாவின் பட்டணத்திற் போய்ச் சேரட்டும், இந்திரசேனன் முதலாகிய சேனபதிகள் இரதங்களோடு துவாரகாபுரியிற் போய்ச் சேரட்டும், இவர்க ளெல்லாம் நா மிவ்வகையாய் இன்னவிடத்தி லிருக்கிறோ மென்பதை வெளியிடாம லிருக்கவேண்டும், நாம் சீக்கிரத்தில் ஒருவருக்குந் தெரியாமல் விராடபட்டணம் போய்ச் சேருவோம், புறப்படுங்க ளென்று சொல்லக் கேட்டு வீமன் முதலானோர்கள் சரிதானென் றங்கீகரித்து நிற்க, தவுமியர் சொல்லுகிறார்.

கேளுங்கள் பாண்டு குமாரரே? நீங்கள் அரசர்க்கெல்லாம் மேலா யிருந்து ஆட்சிசெய்து வந்தீர்கள், இப்படிப்பட்ட நீங்கள் கீழ்ப்பட்ட ஒருவ னிடத்திற் சேவை செய்வது மிகவும் கடினம், ஆகிலும் காலகதியின்படி சேவை செய்யவேண்டுவதாய் நேரிட்டபடியினாலே நீங்கள் மானத்தையும் பெருமையையும் நாணத்தையும் விட்டு அவ்வரசனிடத்தில் சேவை செய்து ஒரு வருஷகாலத்தைக் கழிக்கவேண்டும், உங்களுக்குத் தெரியாத தொன்று மில்லை. ஆனாலும் நேசத்தால் ஒன்று சொல்லுகிறேன், ஒருவ னிடத்தில் சேவை செய்வதே வருத்தம், அதிலும் ராஜசேவை செய்வது மிகவருத்தம். எனெனில், அரசன் மனதிற் கிஷ்டப்படியே நடக்கவேண்டும். அப்படி நடவாமற்போனால் மக் களானாலும், தந்தை யானாலும், மற்று மெப்படிப்பட்டவ னானாலும் கெடுக்கவே நினைப்பார்கள். எல்லாச் செய்திகளும் தனக்குத் தெரிந்திருந்தாலும் அறியாதவன்போலவே இருந்து சொல்லத்தக்கவைகளைச் சொல்லவேண்டும். தனக்குத் தாழ்ந்தவனிடத்தில் அரசன் விசேஷமாகப் பிரீதிவைத்து வெகுமதி செய்தாலும் அதற்காகப் பொறாமையைக் காட்டக்கூடாது. இழிகுலத்தானாயிருப்பவன் அரசனுக்கு இஷ்டனா யிருந்து உயர்ந்த விடத்தில் வை

க்கப்பட்டாலும் அவனோடு பிணங்க லாகாது. தன்னாசனத்தில் ராஜாவுக் கிஷ்டனாகி யவன் வந்துட்கார்ந்தால் அதற்குச் சம்மதிக்கவேண்டும். இவன் இதற்காக இவ்விடத்தி லிருக்கிறானென் றொருவருக்கும் தெரியாம லிருக்கும்படி இருக்கவேண்டும். சபையில் எந்த ஆசனம் ஒழிந்திருந்தாலும் தன்னாசனத்திலேயே உட்காரவேண்டும். தனக்குத் தகுதியாகிய ஸ்திதியை விடலாகாது. அரசன் எந்தவேளையில் என்ன கட்டளை யிடுவானோ வென் றெதிர்பார்த் திருக்கவேண்டும், இராஜாவின் வாகன முதலானவைகளைத் தா னனுபவிக்க லாகாது, அரசனொரு வஸ்துவை விரும்பினால் அதை இதோ கொண்டு வருகிறே னென்று புறப்படவேண்டும். சோம்பல் தூக்கம் பசி தாகம் விசனம் வெயில் காற்று மழை பனி முதலானவைகளை லக்ஷியஞ் செய்யா திருக்கவேண்டும். அரசன் தன்னை எவ்வளவுகொண்டாடினாலும் தனக் கெவ்வளவு வெகுமதி செய்தாலும் கருவப்படலாகாது, தன்மீதிற் கோபித்தாலும் மனஸ்தாபப்பட லாகாது, இராஜசேவை பண்ணுகின்றவன் பல நூல்களைக் கற்றுணர்ந்தவனும் உலக வியற்கைகளை யறிந்தவனும் வாய்மை முதலான சுகுணங்களுடையவனுமாக விருக்கவேண்டும்; ஒரு வேளையில் அரசன் தன்னோடு சில ரகசியங்களைச் சொன்னாலும் அல்லது, ராஜ ரகசியங்கள் தனக்கு எவ்வகையில் தெரிந்தாலும் அவைகளை வெளியிடாம லிருக்கவேண்டும். அரசருக்கு விரோதிகளோடு உறவாடலாகாது, அரசனது காரியங்களைத் தன் காரியங்களைப்போ லெண்ணி நடக்கவேண்டும், அவனுக் கொருவகையிலும் துரோகஞ்செய்ய லாகாது, அவன் பொருளைத் திருட லாகாது, ராஜாவானவன் வல்லவனை வல்லமையில்லாதவனென்றாலும் வல்லமை யில்லாதவனை வல்லவனென்றாலும் மறுத்துச் சொல்லலாகாது, அரசனோடு வாதாட லாகாது, நியாயங்களை யினிமையாய்த் தெரிவிக்க வேண்டும், அரசன் ஸ்திரீகளை நேசிக்க லாகாது, அரசனிடத்தி லிருக்கு முத்தம வஸ்துக்களை விரும்பலாகாது, ராஜ சபையில் உரக்கக் கூவவும், சிரிக்கவும், சோம்பல் முறித்தல், கொட்டாவிவிடல், முதலாகியவை செய்யவுமாகாது, தான் ராஜாவுக்குச் சமானமாக வாகனாதி போகங்களை யனுபவிக்கலாகாது, ராஜாவின் நேசனை மிகவு மனுசரிக்கவேண்டும், எப்போதும் அரசர்களின் குறிப்பறிந்து நடக்கவேண்டும், வேசையானவள் விடனை வெகு தந்திரமா யனுசரித்து வசப் படுத்துவதுபோல சேவகனும் ராஜாவை வெகு உபாயமாய் அனுசரித்து அவன் தயை சம்பாதிக்கவேண்டும், சபைக்குப் போகுமளவில் ஸ்நான முதலானவை செய்து பரிசுத்தனாய் நல்ல வஸ்திர முதலான அலங்காரங்களை யணி

ந்து போகவேண்டும், யாவரும் நல்லவனென்று சொல்லும்படி நடக்கவேண்டும். உலகத்தைத் தருமம் வழுவாது காக்கும்ராசன் விஷ்ணு அம்சமாகையால் அவனிடத்தில் பயம் பக்தி வணக்க ஒடுக்கம் இவ்வகைகளோடு சொல்லவேண்டும். ஆகையால் ராஜசேவை செய்வது கத்தியின் முனையை நாவினால் நக்குவதுபோல மிகக்கொடிது, புத்திமான் நல்ல அரசனை யாசிரித்தால் நன்மையோடு ஜீவனஞ் செய்யலாம். விராடராஜன் நல்லவன், விவேகமுள்ளவன், நன்றி யறியத்தக்கவன், தருமசீலன், கொடையாளி, தயாளு, ஆனபடியினாலே அவனிடத்தில் நீங்கள் சேவிப்பதில் குறையில்லை, உங்களை நன்றாய் ரக்ஷிப்பன். எப்படியாகிலும் ஒருவருஷகாலம் ஜாக்கிரதையா யிருந்து வருவீர்களாகில் உங்களுக்கு முறிபோல இராச்சிய முதலானவை யெளிதில் வரும், உங்களுக்கு நினைத்த காரியங்களெல்லாம் நிறைவேறும் பொருட்டும் கரந்துறைதல் அன்னியருக்குத் தெரியாதிருக்கும் பொருட்டும் நான் சில தெய்வ மந்திரங்களை ஜபிக்கிறேன், என்று சொல்லிய புரோகிதனையும் அக்கினிகளையும் பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து அவரிடத்தில் விடை பெற்றுப் புறப்பட்டார்கள்.

அந்தக்காலத்தில் தருமபுத்திரர் மகானுபாவராகிய தவுமியரைப் பார்த்து சுவாமி, புரோகிதரோ, குந்தியையும், திரிதராஷ்டிர மகாராஜாவையும் பிரிந்ததுபற்றி மனதிற்கு மிகுந்த விசனமுண்டா யிருக்கிறது, இனி நாங்கள் அஞ்ஞாதவாசத்தைச் சுகமாய் நிறைவேற்றி துக்கசாகரத்தைக் கடந்து இராச்சியத்திற் சென்று எல்லாப் பந்துக்களோடுங் கூடி களிக்கும்படி யனுக்கிரகஞ் செய்து அனுப்பவேண்டும் என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, அந்த முனிவரும் அப்படியே அனுக்கிரகஞ் செய்து அவர்களுடைய நன்மைக்காக அக்கினியை வளர்த்தி ஓமஞ்செய்து அந்த அக்கினியை நல்லவேளையில் கையிலெடுத்துக்கொண்டு புறப்படுங்க ளென்று சொன்னார்.

அது கேட்டுப் பாண்டவர் துரோபதியோடு புறப்பட்டு ஆரணிய மார்க்கத்திலே வெகுதூரம் நடந்து அநேக வனங்களையும் பருவதங்களையும் தாண்டி ஆயுதபாணிகளாகவே இயமுனாநதியின் கரையைச் சேர்ந்து தசார்ணதேசத்திற்கு வடபுறமும் பாஞ்சால தேசத்திற்குத் தென்புறமுமாக இருக்கிற வழியினாலே சூரசேனதேசத்தினெல்லையைக் கடந்து ரமணீயங்களாயும், விஸ்தாரங்களாயு மிருக்கிற பலமடுக்கள் நிறைந்த விடங்களையும் புண்ணிய நதிகளின் கரை

கனையும் அங்கு செழிப்பாய்ப் பூத்திருக்கின்ற மரங்களில் கொடிகள் படர்ந்திருப்பதையும் அதிலுட்கார்ந்து கொஞ்சுகின்ற கிள்ளை முதலாகிய பறவைகளையும் பார்த்து அந்த மலர்களின் வாசனையை முகர்ந்துகொண்டே வழியில்வரும் சிங்கம், புலி, முதலிய துஷ்ட மிருகங்களைச் சங்கரித்து விராடராஜனது தேசத்தைச் சேர்ந்த ஒ ரா ரணியஞ் சென்முர்கள்.

பின்பு தவுமியர் பாண்டவரிடத்தில் விடைபெற்று அக்கினியோடு தமதாசிரமஞ் சேர்ந்தார். இந்திரசேனன் முதலானவரும் த மக்கு நியமித்த விடங்களைச் சேர்ந்தார்கள். பின்பு பாண்டவர்கள் விராடநகரஞ் சேரவேண்டுமென்று விரைவாய் நடக்க துரோபதி யுதிஷ்டிரரைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறாள்.

ஐயா, மஹாராஜாவே? நான் ஒருநாளு மிவ்வளவுதூரம் நடந் தறியேன், கால்கள் மிகவும் நோகின்றன. உடம்பு சோருகின்றது, விராட நகரமோ இன்னும் வெகுதூரமிருக்கிறதுபோல் காணப்படுகி ன்றது, ஆதலால் இன்றிராத்திரி சமீபத்திலிருக்கு மோர்கிராமத்தில் இருந்து விடிந்தவாறே எழுந்து அந்த நகரஞ்சேருவோமென்று சொ ல்லக்கேட்டு யுதிஷ்டிரர் நகுலனைப் பார்த்து நகுலா? தாமரையிதழ் போன்ற கண்களுள்ளவளும், காட்டுவாகைப் பூவினும் மேன்மை பொருந்திய மேனியுடையவளும், தளிர்போன்ற பாதமுடையவளு மாகிய நமது துரோபதி, நடக்கமாட்டாமல் வருந்துகிறாள். ஆகை யால் அவளை நீ சற்றுநேரம் எடுத்துக்கொண்டு வாவென்னக் கேட்டு நகுலன் அண்ணா? நான் உதயகால முதல் மேடுபள்ளங்களாகிய கானகத்தில் நெடுந்தூரம் மிருகங்களின் பின்னோடி வேட்டையாடி யதனால் கைகால்கள் வருந்தி பசி தாகங்களால் வாதைப்படுகிறே னாபடியினாலே அவளைச் சுமக்க எனக்குச் சக்தியில்லை யென்று சொல்ல, பின்பு சகாதேவனோடு துரோபதியை யெடுத்துக்கொள்ளு ம்படி சொல்ல, அவனும் நான் வெயிலில் நெடுந்தூரம் நடந்து வந்ததுபற்றி மிகவும் வருத்தமுற் றிருக்கிறேன், அவளைச் சுமக்க மாட்டேனென்று சொல்ல, பின்பு அர்ச்சுனனைப் பார்த்து பரந்து நீண்ட கண்மலர்களுள்ளவனும் சூரனுமாகிய அர்ச்சுனா, நமது து ரோபதி மெல்லிய பாதங்கள் கொப்பளிக்க நடக்கமாட்டாமல் வருத் தப்படுகிறாள். ஆதலால் இவளை நீசிலதூரம் எடுத்துக்கொண்டு வரு வாயாகில் நன்று, இனி நாம் வனவாசம் வருவதில்லை, இராச்சியஞ் சேர்ந்து சுகமா யிருப்போம் என்று யுதிஷ்டிரர் சொல்லிய பேச்சைக்

கேட்டு மகாசுந்தரனும் வில்லம்புசடைமரவுரிகளைத் தரித்திருந்தாலும் சூரியன்போல் விளங்குகின்றவனுமாகிய அர்ச்சுனன் மதயானைக்கன்றானது தாமரைப்பூவை வகிப்பதுபோல் அந்தத் துரோபதியை இலேசா யெடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு அந்த வழியைத் தாண்டி விராடநகரத்திற்குச் சமீபமாகிய ஓரிடத்தில் அவளை யிறக்கினான்.

இவ்வகையாய் பாண்டவரைவரும் பாஞ்சாலபுத்திரியோடு விராடநகரத்தின் சமீபஞ்சேர யுதிஷ்டிரர் அர்ச்சுனனைநோக்கிக் கூறினார், அர்ச்சுனா, நாமிப்போது பட்டணத்தினுள்ளே பிரவேசிக்கவேண்டுமல்லவோ? கையிலாயுதங்களைத் தரித்துக்கொண்டே பிரவேசிப்போமாகில் நம்மைக் கண்டு ஜனங்கள் பயப்படுவார்கள். மேலும் இந்தக் காண்டீவ முதலானவைகளைக் கண்டு பாண்டவரொன் றெண்ணுவார்கள். நம்மி லொருவரை யறிந்தாலும் மறுபடியும் நாம் வனவாசஞ் செய்யும்படி நேரிடுமே! ஆதலால் புத்திசாலியாகிய நீ நமது ஆயுதங்களை வைக்கும்படியாகிய இடத்தை யோசித்துச் சொல்லவேண்டும் என்று யுதிஷ்டிரர் சொல்லிய பேச்சைக் சேட்டு அர்ச்சுனன் சொல்லுகிறான்.

கேளும் மகாராஜாவே? இதோ இந்தப்பட்டணத்தின் சமீபத்திலிருக்கின்ற சுடுகாட்டில் பெருங்கிளைகள் அநேகம் நிறைந்து ஒருவனுக்கும் ஏறக்கூடாததாய் வன்னிமர மொன்று காணப்படுகிறதே, இதின்மீதில் நமது ஆயுதங்களை யெல்லாம் கயிற்றினால் ஒரு புருஷன்போல் கட்டி தோலினால் மூடிவைத்தால் பார்க்கின்றவர் ஆயுதமென்று அறியாமல் யாரோ மனிதன் அதின்மீதி லேறி யிருக்கிறானென்றெண்ணுவார்கள், பெரும்பாலும் இந்த விருக்ஷத்தினிடத்து மனிதர் வருவதே யருமை. இப்படி செய்தால் ஆயுதங்களுக்கோர் குறைவுபாடும் நேரிடாதெனத் தோற்றுதென்று அர்ச்சுனன் சொல்லக் கேட்டு தருமராஜன் சரிதானென் றங்கீகரித்து, சகாதேவனைப் பார்த்து குழந்தாய்? நீ இந்த மரத்தின்மீதேறி அர்ச்சுனன் சொல்லியபடி ஆயுதங்களைக் கட்டிவை மறுபடி யவன் சொல்லும்போதெடுப்போமென்று சொல்லி அர்ச்சுனனைப் பார்த்து, தம்பி நீ தேவர் தானவர் நிவாதகவசர் காலகேயர் பவுலோமர் முதலானோரை எந்தத் தனுசினாலே வென்றாயோ அப்படிப்பட்ட இந்தக் காண்டீவ தனுசை நாணிறக்கித் சணையில் வையென்றார், அவனு மப்படி செய்தான். பின்பு யுதிஷ்டிரர் எதனாலே குருக்ஷேத்திரத்தில் பெரும்போர் செய்தாரோ?

எது சர்ப்பத்தின் தேகம்போல் நீண்டுருண்டு பயங்கரமான ரூபமாயிருக்கின்றதோ? எது நவரத்தினு லலங்கிருதமாகி விற்களிலெல்லா முயர்ந்ததாகி காண்டீவத்திற்குச் சமானமென்று சொல்லப்பட்டதோ? அப்படிப்பட்ட தமது தனுசைத்தாமே நாணிறக்கிவைத்தார்.

அதன்பின்பு யுதிஷ்டிரர் சொற்படி பீமசேனன் எதனாலே பாஞ்சாலர் முதலாகிய சகல ராஜாக்களையும், கந்தமாதனத்தி லிருக்கும் யக்ஷ ராக்ஷசரையும், வென்றானோ? எதின் தொனி ஊழிகாலத் திடிபோல் ஒலிக்கின்றதோ? எதைக்கொண்டு திரிகர்த்தனையும் சைந்தவனையும் ஜயித்தானோ? அந்தத் தனுசை நாணிறக்கித் தரையில் வைத்தான்.

அப்படியே நகுல சகாதேவரும் ராஜாவின் கட்டளைப்படி சுராஷ்டிரர் முதலானவர்களைச் செயித்தனவாகி பொற்பட்டங்களா லலங்காரம் பெற்று இந்திர தனுசுக் கொப்பாய் விளங்குகின்ற தங்கள் விற்களை நாணிறக்கிக் கொணர்ந்து வைத்தார்கள்.

அன்றியும் பொன் னுறைகளுக்குள் போடப்பட்ட கத்திகளையும் கதைகளையும் அர்த்தசந்திர பாணங்கள் எறியீட்டிகள் முதலான நமது சகல ஆயுதங்களையும் வஸ்திரத்திற் சுற்றிக்கொண்டு வாவென்று யுதிஷ்டிரர் சொல்லக் கேட்டு சகாதேவன் அவைகளை யங்ஙனஞ் செய்து கொணர்ந்து வைத்தான்.

அதன்பின்பு வனவாசத்தில் தருமதேவதையினிடத்தில் வேண்டிய வரங்களைப் பெற்ற யுதிஷ்டிரரானவர் ஸ்நானஞ் செய்து பரிசுத்த வஸ்திரங்களைத் தரித்து, குசைகளினாற் செய்த ஆசனத்திலுட்கார்ந்து கையில் பவித்திரம் போட்டுக்கொண்டு அந்த வரங்களை யெல்லாம் நினைத்து நமஸ்கரித்து பின்பு எல்லா வரங்களையுங் கொடுக்கும்படியாகிய ஸ்ரீமகாவிஷ்ணுவையும், பிரமனையும், எளிதில் வரங்கொடுக்குஞ் சந்திரசேகரனையும், இந்திரன் குபேரன் வருணன் வாயு யமன் சந்திரசூரியர் தருமம் பூமி ஆகாசம் திசைகள் அக்கினி முதலிய சகல தேவதைகளையும் மனதினால் தியானித்து நமஸ்கரித்து துதித்து அவ்வாயுதக்கட்டைக் கையி லெடுத்துக்கொண்டு கேளுங்கள் சகலமான தேவர்களே, உங்களுக்கு முன்பாக இந்த ஆயுதங்களை இந்த வன்னிமரத்தில் வைக்கிறேன், இதை மற்றொருவர் பாராமலும் தீண்டாமலு மிருக்கும்படி நீங்கள் காத்து கடி

னமாகிய இந்த வருஷத்தைத் தாண்டி நாங்கள் வந்தவுடனே எனக்காவது அர்ச்சுனனுக்காவது கொடுங்கள், மிகுந்த கோபமுள்ள வீமனுக்கும் சிறுவராகிய நகுல சகாதேவருக்கும் கொடுக்கவேண்டாம். ஏனெனில், இந்தப் பீமசேனன் துரியோதனாதிகளிடத்தில் அதிக விரோதத்தை வகிக்கிறானாகையால் ஆலோசிக்காமல் சண்டைக் காரம்பிப்பான். அதனாலே வெகு அனர்த்தங்கள் நேரிடும். ஆனது பற்றி அவன் கையிற் கொடுக்கவேண்டாம் என்று சொல்லிப் பிரார்த்தித்து மரத்தின்மீதேறி அவ்வாயுதக்கட்டை வைத்து இறங்கி அந்த வன்னிமரத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து சமீபத்திலிருக்கும் வீமனைத் தழுவிக் கட்டிக்கொண்டு தம்பி, சூரசிகாமணியே? இந்த ஒருவருஷகாலம் ஆயுதத்தைத் தொடாம லிருக்கவேண்டுமென்று நல்லவார்த்தை சொல்லி சகாதேவனை நோக்கி, குழந்தாய்? இதோ செத்துக்கிடக்கின்ற கடம்பின் தோலை யெடுத்து நமது ஆயுதங்களுக்கு, வெயில், மழை, முதலான வாதையில்லாம லிருக்கும்படி போர்த்துவாவென்று சொன்னார். அவனும் அப்படியே மரத்தின் மேலேறி அந்தத் தோலை ஆயுதங்களுக்கு மறைவாய்ச் சுற்றிப் போர்த்தான். பின்பு பாண்டவர்கள் விராட நகரத்தைக் குறித்துப் புறப்பட, அப்போது அந்த மரத்தின் சமீபத்திலும் வழியிலுமிருக்கிற மாடுமேய்க்கிறவர்கள் பயிரிடுகிறவர்கள் வேடர் முதலாகிய எல்லாரோடும் கோவென் றழுதுகொண்டே கேளீர் ஜனங்களே? எங்களுடையதாய் மிகவும் மூப்படைந்திருந்து இன்றைக்குப் பரலோகமடைந்தாள், எங்கள் குலத்தார் மரித்தவர்களை யுடனே புதைக்கிறதும் அல்லது கொளுத்துகிறது மில்லை. மயானத்தில் வன்னிமரத்தின் மீது ஒருவருஷம் கட்டிவைத்துப் பின்புதான் ஏதாகிலும் சமஸ்கீரஞ்செய்வார்கள், ஆனதுபற்றி நாங்களும் எங்கள் மாதாவை இம்மரத்தில் கட்டிவைக்கிறோமென்று சொல்லி வழியிற் செல்லுமளவில், நடுவழியில் பிச்சைவாங்கி ஜீவனம் செய்துகொண்டிருந்த பிராமணனொருவன் பிராயோபவேசஞ்செய்து உயிரைவிட்டிருக்கக் கண்டு உலர்ந்த அந்த பிராமண தேகத்தையு மெடுத்துக்கொண்டு போய் ஆயுதக்கட்டோடு கூடக் கட்டிவைத்தார்கள். இவ்வாறு செய்து வந்த பின் தருமபுத்திரர் தம்பிமாரை நோக்கிச் சொல்லுகிறார்.

கேளுங்கள் தம்பிமார்களே? நம் மைவர்கட்கும் முறையே ஜயன், ஜயேசன், விஜயன், ஜயேச்சேனன், ஜயத்பலன், என்றிந்த நாமங்களிருக்கட்டும். இதுமுதல் வருஷமளவும் நாமொருவரை யொருவர் அழைக்கவேண்டுமாகில் இந்தப் பெயர்களைக்கொண்

டழைக்கக்கடவோம் என்று சங்கேதம் செய்து அவர்களோடும் துரோ
பதியோடும் விராடநகர சமீபத்தில் கங்கையாற்றின் கரையை
யடைந்தார்கள். அதற்குப்பின் பாவங்களை யெல்லாம் போக்கிச் சகல
இஷ்டங்களையும் கொடுக்கத்தக்க கங்கா நதியின் தீர்த்தத்தில் யாவ
ரும் நீராடி நித்திய கருமங்களை முடித்தார்கள். தருமபுத்திரர் அப்
போது கிழக்குமுகமாய் நின்றுகொண்டு கைகூப்பித் தருமதேவ
தையைத் தியானித்துச் சொல்லுகிறார்.

சுவாமி தருமதேவனே? என் பிதாவாகிய நீர் வனத்தில் ஒரு
முந்தினான காலத்தில் யக்ஷரூபமாக இருந்து தாகத்திற்காகத் தண்
ணீர் முகக்கப்போன என் தம்பிமார்களைச் சில தருமசூக்குமங்களைக்
கேட்டு அதற்கு விடைதராமல் தண்ணீர் முகந்த அவர்களை மூர்ச்
சிக்கச்செய்து, பின்பு அடியேனையும் அப்படிகேட்டு அடியேன் த
ந்த விடைகளினாலே மனமகிழ்ந்து நிஜ ரூபத்தோடு பிரத்தியக்ஷ
மாகி அடியேன் வேண்டியபடி தம்பிமாரெல்லாம் பிழைக்கவும், தரு
மசிந்தை யிடைவிடாமலிருக்கவும், வனவாசமுதலிய கஷ்டங்களெ
ல்லாம் வருத்தமின்றி நிறைவேறவும், வரங்களைத் தந்தருளினீரே,
அப்படியே இப்போது எங்களுக்கு மறைந்து வாசஞ் செய்வதற்கு
அனுகூலமாகிய ரூபங்கள் வரும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டு
மென்று பிரார்த்தித்தார்.

கேட்டீரோ, ஜநமேஜய மகாராஜாவே? இவ்வகையாய் தரும
புத்திரர் பிரார்த்திக்கவே அந்தத் தருமதேவன் பிரத்தியக்ஷமாக
வந்து அவருக்கு சந்நியாசிவேஷத்திற்கு வேண்டிய, திரிதண்டம்
காஷாயம், கமண்டலம் முதலானவைகளை யளித்தான். அந்த க்ஷணத்
திலேயே தருமபுத்திரரும் பிராமணசந்நியாசியாகி காஷாய முதலா
னவை தரித்து உதயமாகாநின்ற சூரியன்போல் விளங்கினார். பீம
சேனன் முதலாகியபேர்களும் அந்தத் தேவனருளினாலே முன்னு
ரைத்தபடி சுயம்பாகி முதலான வேடங்களைப் பூண்டார்கள். துரோ
பதியும் அந்தக் கடவுளின் கிருபாகடாக்ஷம் பெற்று சைரந்திரி ரூப
த்தைத் தரித்தாள். இப்படியாகி யாவரும் அந்தத் தேவனை வணங்கி
நிற்க, தருமபுத்திரர் மற்றவர்களைப் பார்த்து தம்பிமாரே? நமக்குத்
தருமதேவதையின் கிருபையினால் மறைந்து வாசம்பண்ணத்தக்க
ரூபங்கள் கிடைத்தன, இனி நம்மைப் பாண்டவரென்று யாரும் அறி
யமாட்டார்கள். ஆகையால் நாமினி யொவ்வொருவராய் விராட
ராஜனிடத்திற்குப் போய்ச் சேரவேண்டும். நான் முன்னே போகி

றே னென்று சொல்லி பொற்கவறு தந்தக்கவறுகளை யெடுத்து நல்ல வஸ்திரத்திற் சுற்றிக்கொண்டு சொலியாநின்ற அக்கினிபோல் பட்டணத்திற் புகுந்தார். புகுந்து வீதியோ ரெல்லாம் வியந்து காணும்படி நடந்து ராஜ சபைக்கு எதிரிற் போகுமளவில் சபையி லிருப்பவரும் அவ்வரசனும் தூரத்தில் வரும் சந்நியாசியைக் கண்டு பூமியி லிறங்கிவந்த சூரியனைக் கண்டதுபோல் திப்பிரமைகொண்டு நின்றார்கள்.

இப்படி யிருக்க அந்தத் தருமபுத்திரர் கத்திகளை யுருவிக் கையிற் பிடித்துக்கொண்டு அனேக சேவகர் காத்திருக்கவும், சூராகிய சேனாநாயக ரனேகர் சூழ நிற்கவும், சகல கலைகளையு மோதி யுணர்ந்த பிராமணர் நன்மை யறிவித்துக்கொண் டிருக்கவும், அதிகாரிகள் பலரும் குடிகள் பலரும் ஆணையை யெதிர்பார்த் திருக்கவும், குறியர், மல்லர், அகசியஞ்செய்பவர் முதலானோர் ஓர் புறத்தில் சமய மாராய்ந்துகொண் டிருக்கவும், வெகு விபவமாய்ச் சிங்காதனத்தி லிருந்து ஆக்ஷி செலுத்தா நின்ற விராடமகாராஜனிடத்திற்கு அச்ச மில்லாமல் மிருந்த பழக்கமுள்ளவர்போல் முகமலர்ச்சியோடும் புன்னகையோடும் தேவேந்திரனிடத்திற்கு பிரகஸ்பதி போவதுபோல் போகக் கண்டு அவ்வரசனனவன் வியப்போடு சபையில் இருப்பவரை நோக்கிச் சொல்லுகிறான்.

ஓ! சபையி லிருப்பவர்களே? இதோ ஒரு மகாபுருஷன் வருகிறோ இவனைப்போ லென்றைக்காகிலு மெவ்விடத்தாகிலும் நீர் கண்டதுண்டா? பாருங்கள்; இவர் குபேரன், அக்கினி, இவர்களுக்குச் சமானமாக இருக்கிறார். இவர் தெளிந்து பிரகாசமுற்றிருக்கிற முகத்தோடும் முத்துமுத்தாய் அரும்பிய வேர்வைத் துளிகளோடும் கூடி யிருப்பதனால் சந்திர மண்டலத்தோடும், நக்ஷத்திரங்களோடும், கூடிய மகாமேரு பருவதம்போல் விளங்குகிறார். இவரது கம்பீரத்தை நோக்கில் உலகத்தை யெல்லா மோர் குடையின்கீ ழாளத்தக்கவர்போல் தோற்றுகின்றது, மதயானைபோலவும், மதித்த விருஷபம் போலவும், சிறந்த சிங்கம்போலவும், வீரமும் பலமு முடையவராய்த் தோற்றுகின்ற இவருக்கு திவ்யமாகிய வெண்குடை வெண்சாமரை முதலிய விருதுகளும் நவரத்தின மயமாகிய கிரீட கவச குண்டலாதி பூஷணங்களும்; ரதகஜ துரகபதாதிகள் என்கிற சதுரங்கங்களுள்ள அனேக மகாசேனைகளும் இருக்கவேண்டும், அப்படி யில்லாமல் சந்நியாசியா யிருப்பதனாலே என் மனதிற்குச் சந்தேகமா யிரு

க்கிறது, நல்லது எப்படி யிருந்தாலும் சந்நியாசியாகிய மகா தேஜசு பொருந்திய இந்த மகானுபாவர் நம்மிடத்தி லிருப்பதனாலேயே நமக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும், பகைவரும் அஞ்சுவார்கள். ஆனகயால் இவரை நான் வரவழைத்து எனது ராச்சியத்திற்கும் யானை, குதிரை, தனங்கள், ரத்தினங்கள் முதலாகிய எல்லாவற்றிற்கும் யஜமானரா யிருக்கும்படி செய்ய நினைக்கிறேன் என் றிப்படி பேசிக்கொண்டே இருக்கையில், அந்தச் சந்நியாசி சமீபமாக வந்தார். அதுகண்டு விராடராஜன் பரிவாரத்தோடு எழுந்து எதிர்கொண்டு சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு அவரால் ஜயவிஜயீபவ என்று ஆசீர்வதிக்கப் பெற்று கைகூப்பிக்கொண்டு வினவுகிறான்.

— சுவாமி யதீச்வரரே? தேவரீர் எழுந்தருளி யிருக்கின்ற தேசம் யாது. இவ்விடத்திற்கு என்ன காரியத்திற்காக எழுந்தருளிற்று, தேவரீர் திருநாமம் யாது, குலம் யாது, கோத்திரம் யாது, இவைகளை யெல்லாம் நன்று யடியோனுக்கு அருளிச் செய்யவேண்டும், பெரியோர் பொய் சொல்லார்க ளல்லவோ? ஆனதுபற்றி தேவரீர் யதார்த்தத்தையே அருளிச்செய்யவேண்டுமென்னக் கேட்டு பாண்டவ சந்நியாசி சொல்லுகிறார்.

கேளும் விராடமகாராஜாவே? நான் குருவின் உபதேசப்படி ஒரு விரதத்தை யேற்றுக்கொண்டு சந்நியாசியாகி காட்டிற் சஞ்சரிக்கிறேன். பிராமணவேஷத்தைப் பூண் டிருக்கிறேனே யன்றி ஜாதியிற் பிராமண னல்லேன், எங்கள் பூர்விகர் காட்டில் வாசஞ் செய்யும்படி கட்டளையிட் டிருப்பதினால் இங்ஙனம் காட்டிலும் கிராமத்திலும் வாசஞ் செய்கிறேன். நான் சிலநாள் பாண்டவர்களின் தலைவராகிய தருமபுத்திரருடைய வீட்டில் வாசஞ் செய்துகொண் டிருந்தேன், எனக்கு மவருக்கும் தேகபேதங்கூட இல்லை யென்று யாவருக்கும் தோற்றும்படி இருந்தேன், என்னுடைய ஆக்கினையின்படியே அந்தப் பட்டணத்திலும் தேசத்திலும் சகல அதிகாரங்களும் நடந்துவந்தன, அவர் சேனைகளும் நான் சொல்லியபடி நடக்கும், அவருடைய அந்தப்புரஸ்திரீகளும் எனக்குப் பேத மில்லாமல் சகலவுபசாரங்களையுஞ் செய்வார்கள். இப்படி மேன்மையோ டிருந்த எனக்குப் பாண்டவர் வனவாசம் போகும்படி நேரிட்டதனாலே சுகமில்லாமல் ஊருக் கொருநாளாய் காட்டிற் சஞ்சரிக்கும்படி யாயிற்று, நான் வையாக்கிரபாத கோத்திரத்தான், எனது பூருவாசிரமத்துக் குலகோத்திர நாமதேய முதலியவற்றை இப்போ தெடுத் துரைப்

பது கியா..மல்ல, இப்போ தென்றனுக்குக் கங்கபட்டனென்று பேர், பாண்டவர்போன விட மொருவருக்குந் தெரியவில்லை. ஆதலால் மஹா தருமாத்துமாவாகிய உமது புகழைக் கேள்வியுற்று இவ்விடம் வந்தேன். என்க்கு ஓராண்டளவில் அருமையாகிய விரதமொன் றிருக்கின்றது, அதை உம்மிடத்தில் வாசஞ் செய்து நிறைவேற்றக்கருதி யிருக்கின்றேன். அவ்வளவுகாலம் நீர் என்னை ஆதரித்துக் காப்பாற்றவேண்டும். பின்பு உமக்குச் சந்தோஷமும் மேன்மையுமான காரியஞ் செய்வேன். பாண்டவரைப்போல் உம்மையும் இஷ்டபந்துவாக நினைத்து வந்தேன். எனக்கு வெகு வித்தைகள் தெரியும். விசேஷமாய் சொக்கட்டா னாட்டமும், பக்ஷி சகுனமும், ரத்தின பரீக்ஷையும், வேதாந்த சாஸ்திரமும் தெரியும். இவைகளில் உமக் கிஷ்டமான வித்தையினால் உம்மைச் சந்தோஷப்படுத்துவேன் என்று சொல்லிய சந்நியாசியின் பேச்சைக் கேட்டு மச்சராஜன் மனமகிழ்ந்து அவனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

வாரீர் மஹானுபாவராகிய சந்நியாசியே? சுகமாய் என்னிடத்திலேயே நீ ரிரும், உமக்கொரு குறைவு மில்லை, எனது ராச்சியத்தையும் சம்பத்துகளையும் தேவரீரே யாளலாம், என்னோடு சரியாக போஜனங்கள் வாகனங்கள் முதலிய யாவையு மனுபவியும் என்று அன்புடனே சொல்லக் கேட்டு யுதிஷ்டிரசந்நியாசி மனமகிழ்ச்சியுடனே அவரிடத்தில் வாசஞ் செய்துவந்தார்.

பின்பு வீமன் மற்றொரு வழியால் அந்தப் பட்டணத்திற் பிரவேசித்து சூத்திரவேஷத்தோடு கறி யரியும்படியாகிய வோர் நல்ல கத்தியையும் இரும்பினாற்செய்த பெரிய கரண்டி யொன்றையும் ஓர் தோலையும் சீரகம் பெருங்காய முதலிய வஸ்துக்களின் வாசனை பொருந்திய பணியாரஞ் செய்கிற பாத்திரத்தையும் கையி லெடுத்துக்கொண்டு யானைக்கன்றுபோல் மெள்ளமெள்ள நடந்து வந்தான். அப்படி வருகிற பீமசேனனைப் பார்த்து அந்தச் சபையி லிருந்தவர்கள் இயமனைக் கண்டதுபோல் வெருட்சியடைந்து ஆச்சரியமாய்ப் பார்த்து இவன் தேவனோ? மனிதனோ? இவன் தேகம் பருவதம்போ லிருக்கின்றது. இவனது ஒளி அக்கினிக்கொப்பா யிருக்கின்றது ஆகிலும் கறுத்த வஸ்திரந் தரித்திருக்கிறபடியினாலே இவன் சுரூபத்தை நன்றா யறியக்கூடவில்லை. இவனை நன்றா யறியவேண்டுமென்று ஒருவரோ டொருவர் மெள்ளப் பேசிக்கொண் டிருக்க, விராடராஜாவு மிவனைப் பார்த்து சமீபத்தி லிருக்கிற மந்திரிமார்களைப் பார்

த்து மந்திரிகளே? நீங்கள் இவனை யறிவீர்களா? இவனைப் பார்த்தால் சூத்திரன்போ லிருக்கின்றது. இவனது தேஜசைப் பார்த்தால் மகாசூரனாகிய பெரிய மனிதனென்று தோற்றுகிறது. ஆதலால் நன்றாய் விசாரியுங்கள் என்று அரசன் சொல்லியதைக் கேட்டு யாவரும் அவனை யறியும்படியான முயற்சியோ டிருந்தார்கள்.

இப்படி யிருக்க வீமன் சபையில் வந்து அரசனை வணங்கி கைகூப்பிக்கொண்டு சொல்லியதாவது, சுவாமி ராஜாதிராஜனே, நான் சூத்திரஜாதியிற் பிறந்தவன், வல்லனென்று பேருடையவன், என் முன்னோர் நான்கு ஜாதியாருக்கும் பணிவிடை செய்து பிழைக்கும்படி எனக்குக் கட்டளையிட் டிருக்கிறார்கள்; அப்படியே நான் பாண்டவர்களுடைய பாகசாலையில் சுயம்பாகிகளுக்கு அதிபதியா யிருந்தேன். அவர்கள் வனவாசம் செய்து அஞ்ஞாதவாசஞ் செய்யப் போனபடியினாலே தருமிஷ்டராகிய உம்மிடத்திற் சேர்ந்து பிழைக்க வந்தேன். அரசர் புசிக்கத்தக்க பலவகையான சோறுகளும், மாமிச வகைகளும், கறிகளும், பாயசம், பணியாரங்களும், எல்லா வுணவுகளையும் அனேகம்பேருக்கு உபயோகிக்கும்படி நான் ஒருவனாகவே செய்யமாட்டுவேன். ஆனதனாலே என்னை நீர் ஆதரிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் என்று வீமன் சொல்லக் கேட்டு விராடராஜன் சொல்லுகிறான்.

வாராய் வல்லா? நீ சொல்வதையும் உன் ரூபத்தையும் பார்த்தால் ஒன்றுக்கொன் றெவ்வாம லிருக்கின்றது. ஏனென்றால், உனது தேஜசும் கம்பீரமும் நோக்குமளவில், க்ஷத்திரியவீரனாகத் தோற்றுகின்றது. ஆனபடியினாலே நீ என்னிடத்தில் சுயம்பாகியா யிருப்பதை விட இரதகஜ துரக பதாதிகளுக் கெல்லாம் அதிபதியாகி அதிகாரஞ் செலுத்திக்கொண் டிரு, அப்படி நீ யிருப்பாயாகில் என் ராச்சியத்திற்கு ஒரு தீங்கும் வரா தென்று நான் சுகமா யிருப்பேன், என்று சொல்லியதைக் கேட்டு வல்லன் சொல்லுகிறான்.

கேளீர் மகாராஜாவே? நீர் சொல்லுகிறபடி நான் பலசாலி தான். புலிகள், சிங்கங்கள், யானைகள், மல்லர்கள், இவர்களோடு சண்டை செய்ய மாட்டுவேன். இது எனக்குப் பிறப்பிலேயே வந்த குணம். ஆகிலும் நான் க்ஷத்திரிய னல்லேன். ஆளுகை வகையொன்று மறியேன், சமைக்கும் வகைதா னறிவேன். ஆனதனாலே என்னை மடைப்பளி யஜமானனாக வைத்துக்கொள்ள சம்மதியாகில் அப்படி

செய்யும்; இல்லாவிடில் செலவு கொடுத்தால் இன்னு மெங்கேயா வது போகிறேன்: என்று சொல்லக் கேட்டு விராடராஜன் வல்லனைப் பார்த்து, வாராய் பிள்ளாய்? நீ ஆளுகை செய்யதக்கவனே யல்ல து பணிவிடை செய்யத்தக்கவ னல்ல. ஆகிலும், நீ சுயம்பாகியாக விரு க்க வேண்டுகிறபடியால் அப்படியே இரு, உனக்கு வேண்டியவை யெல்லாந் தருகிறேன்; எப்படியாவது நீ நம்மிடத்தி லிருப்பதே முக்கியமென்று சொல்லக் கேட்டு வீமன் சந்தோஷத்தோடு அவ் வதிகாரம் பெற்று சுகமா யிருந்தான்.

பின்பு அர்ச்சுனன் நபும்சகனாகி ஸ்திரீவேஷம்பூண்டு இரண்டு கறுப்பு வஸ்திரங்களையும் காதிற் பொன்னோலைகளையும் தரித்து கறு த்து நீண்டு அலங்காரம்பொருந்திய கூந்தல்களால் பின்புறம் மறை க்கப்பட்டபடியினாலே மேகத்தில் மறைந் துலாவுஞ் சந்திரனைப் போல விளங்கி சபைக் கெதிராகிய வழியால் நடந்துவருமளவில், அரசன் கண்டு மந்திரிகளோடு சொன்னான். இதோ ஸ்திரீவேடந் தரித்து ஒரு யவ்வனபுருஷன் வருகின்றனே, இவன் ரூபமும் காந்தி யும் ஆச்சரியமா யிருக்கின்றது பாருங்கள்! சிங்கம்போல் கம்பீர மான பார்வையும் யானைபோல் கம்பீரமான நடையும், நீண் டுருண்டு பருத்திருக்கிற தோட்களும், மிகவும் பளபளப்புள்ள மேனியுமு டைய இவன் இந்திரன் மகனோ? பிரமன் மகனோ? பார்வதியின் மகனோ? குபேரன் மகனோ? கேவலம் மனிதஜாதி மகனாகில் இப்ப டிப்பட்ட ரூப முதலிய குணங்க ளிராது, என்று பேசிக்கொண்டே யிருக்க அவ்வர்ச்சுனன் அரசன் சமீபத்தில் வந்து ஜயவிஜயீபவ என்று சொல்லி பணிந்து சொல்லுகிறான்.

சுவாமி மகாராஜாவே? நான் பாண்டவர்களின் அந்தப்புரத்தி லிருந்து ராஜகன்னிகைகளுக்கு சங்கீத பரதங்களைச் சிக்ஷைசொல் லிக்கொண் டிருந்தவள். பிருகன்னளை யென்கிற நாமதேய முடை யவள். புஷ்பங்களை வகைவகையாய்த் தொடுத்து அழகாய் மாலை கட் டவும், அழகாய்ச் சித்திரங்க ளெழுதவும், வீணை முதலிய வாத்திய ங்கள் வாசிக்கவும், சங்கீதம் பாடவும், நாட்டிய மாடவும், இவை களை யெல்லாம் கற்பிக்கவும் நன்றாய்த் தெரிந்தவள். அந்தப் பாண்ட வர் வனவாசம்போன பின்பு அனேக விடங்களிற் போயும் நிலையா யிருக்கமாட்டாமல் மிகவும் யோக்கியனாகிய உம்மிடம் வந்து சேர்ந் தேன், என்னை யாதரத்துடன் காப்பாற்றவேண்டு மென் றுரைக்கக் கேட்டு அந்த ராஜா சொல்லுகிறார்.

வாராய் பிருகன்னளாய்? உனது ரூபத்தைப் பார்த்தால் அலியாகத் தோற்றவில்லை, வேடம் போட்டுக்கொண் டிருக்கிறதாய்க் காணப்படுகிறது, உன் தோட்களையும் கைகளையும் பார்த்தால் விற்பிடித்து சூரரை வெல்லத் தகுந்தனவாய்க் காணப்படுகின்றன. நல்லது, நீ என்னிடத்தில் வில்லாளிகளில் முதலா யிருந்து என் குமாரருக்குப் புத்திசொல்லிக்கொண்டு அவர்களைப்போல் சகல போகங்களையும் அனுபவித்துக்கொண்டு இராச்சியத்தைக் காத்துக்கொண் டிரு. நானோ மூப்படைந்தவ னாதலின் அசக்தன், என் குமாரரோ சிறுவர்; அன்றியும் சாமர்த்தியவான்களல்லர். ஆதலினால் சத்துருக்களஞ்சார்கள். அதற்காக மிகுந்த சாமர்த்தியம் பொருந்திய நீ ஆயுதபாணியாக என் னிடத்தி லிரு, என்று கூறி அவ்வரசன் இவள் வில்லைக் கண்டா லென்ன செய்கிறாள் பார்ப்போ மென் றறிதற்பொருட்டு சேவகரை உத்தமமாகிய விற்களைக் கொணர்ந்து வைக்கும்படி கட்டளை யிட்டான், அப்படியே அவர்களும் கொண்டுவந்து சபையில் வைத்தார்கள்; அந்த பிருகன்னளையானவள் அரசன் சொன்ன பேச்சுக்களைக் கேட்டும் அந்த விற்களைப் பார்த்தும் சிரித்து கைகூப்பிக்கொண்டு ஐயா, அரசரே? அடியாள் அலியே யல்லது அங்ஙனம் வேடம்பூண்டவ ளல்ல. உண்மையை, விண்ணப்பஞ் செய்கிறேன். இப்படிப்பட்ட விற்களைக் கையினால் தீண்டினதே யில்லை. இப்போது அவை யெடுத்து என்னசெய்ய மாட்டுவேன்? பயிற்சியிருந்தா லல்லவோ பாணங்களைத் தொடுத்து பிரயோகிக்கலாம்? சும்மா தேவரீர் சந்தேகிக்கிறீர், வேண்டாம், முன் னுரைத்தபடி சங்கீத முதலியவை கற்றிருக்கிறேன், அவைகளி லேதாகிலுஞ் செய்யும்படி கட்டளை யிட்டால் செய்கிறே னென்று சொல்லக் கேட்டு, அரசன் நல்லது நீ சொல்லியது சரிதான், ஆனால் உன் ரூபம் மேகத்தில் மறைந்த சூரியன்போற் காண்கிறபடியால் இவ்வா றுரைத்தே னென்று சொல்லி அந்தப்புரத்தி லிருக்கும் தன் மகளாகிய உத்தரையை யழைப்பித்து மகளே? இதோ இருக்கிறாளே இவளுக்கு பிருகன்னளை யென்று பேர், இவளுக்கு சங்கீத பரதங்கள் முதலிய பல வித்தைகள் நன்றாய்த் தெரியும்; இவளுடைய லக்ஷணங்களால் குணங்களிலும் குற்ற மிராதென்று தோற்றுகிறது. ஆகையால் நீ இவளைச் சகோதர பாவனையாய்ப் பாவித்து ஆதரித்துக்கொண்டு வீணை வாசித்தல் முதலியவைகளைக் கற்றுக்கொள் என்னக் கேட்டு அந்த உத்தரையானவள் சந்தோஷத்துடனே பிருகன்னளையை அந்தப்புரத்திற் கழைத்துக்கொண்டுபோய் வித்தை கற்றுக்கொண்டு ஆதரித்து வந்தாள்.

பின்பு நகுலனும் மாறுவேஷத்தோடு ராஜ்சபையில் வர, அரசனும் ஆச்சரியப்பட்டு புடைசூழ்ந் திருக்கின்றவனை நோக்கி ஓகோகோ? இதென்ன ஆச்சரியம்! புதிதுபுதிதாய் நல்ல லக்ஷணங்களுடைய மனிதர் நம்மிடத்திற்கு வருகிறார்கள். இதென்ன காலமோ? தெரியவில்லை, இருக்கட்டும்; இவனாரோ? வரும்போது குதிரைகளைக் கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டே வருகிறான். இவனை அறியவேண்டுமென் றிருக்குமளவில், நகுலன் அரசனுக்குத் தெண்டனிட்டுச் சொல்லுகிறான்.

சுவாமி நான் தந்திரிபாலனென்கிற நாமதேய முடையவன், அசுவசாஸ்திரத்தை நன்றாகக் கற்றவன், பாண்டவர்களின் குதிரைச் சாலையில் குதிரைகளுக்கு வைத்திய முதலியவை செய்துகொண்டிருந்தேன். நான் குதிரைகளுக்கு லக்ஷணம் பார்க்கவும் நடை பழக்கவும் வைத்தியஞ் செய்யவும் கருத்தறிந்து நடத்தவு மறிவேன், அன்றியும் இந்திரனுக்கு மாதலிபோலவும், தசரதனுக்குச் சுமந்திரன் போலவும், பரசுராமனுக்குச் சுமித்திரன்போலவும் உமக்குச் சாரதியாகவு மிருப்பேன். என்னைக் காப்பாற்றவேண்டுமென்னக் கேட்டு அரசன் அவனைப்பார்த்து நீ இராச்சியத்தைக் காக்க வல்லவனாகத் தோற்றுகிறபடியினாலே என் புத்திரருக்குத் துணையாய் அவ் வதிகாரத்தி லிரு என்று சொல்ல, அதை யங்கீகரியாமல் நகுலன் எனக்கு அசுவசிக்ஷைதவிர மற்றொன்றுந் தெரியாதென்றே சொல்லியபடியால் அப்படியே அவனைக் குதிரைகட்கு யஜமானனா யிருக்கும்படி நியமித்தான். அந்தத் தந்திரிபாலனும் மந்திரிகளின் ஆக்கினையினாலே குதிரைகளை யெல்லாம் சுவாதீனமாக்கிக்கொண்டு சுகமா யிருந்தான்.

அதன்பின்பு சகாதேவன் மேய்ப்பவன்போல் மாடுகட்டத் தகுதியாகிய சில கயிறுகளை இடையிற் கட்டிக்கொண்டு மணிக்கயிற்றைக் கையிற் பிடித்துத் தடியுங் குழலுமாய் ஜனங்களுடைய கண்களெல்லாம் தன் மேலே யுலாவும்படி விளங்கி சபையி லிருப்பவர்களெல்லாம் வியந்து ஸ்தம்பித்து நிற்கும்படி யானைக்குட்டிபோல் அசைந்தாடி கம்பீரமாக நடந்து சபையில் வந்து விராடராஜனை நமஸ்கரித்துச் சொல்லுகிறான்.

சுவாமீ, ராஜாதிராஜனே! நான் தாமக்கிரந்தி யென்று பெயருடையவன், பசுக்கள் எருதுகள் இவைகளுன் இலக்கணங்களை யறி

ந்தவன், என்றால் காக்கப்படும் பசுக்களுக்கு ரோகம் வாராது, புலி முதலிய துஷ்ட மிருகங்களின் பயமும் நேரிடாது, மாடுகளுக்கு வரும் சகல ரோகங்களையும் போக்கடிக்க வல்லவன், பொல்லாத பசுக்களும் என்னைக் கண்டால் சாதுக்களாகும், மலட்டுப் பசுக்களும் நான் செய்கிற சிகிச்சையால் கருத்தரிக்கும், பாலில்லாதனவும் விசேஷமாய் பால் கறக்கும், சில விருஷபங்களின் மூத்திரத்தை மோந்தாலும் மலடிகளாகிய மாதர் கருத் தரிப்பார்கள்; அப்படிப்பட்ட விருஷபங்களின் லக்ஷணங்களு மறிவேன், முன்பு நான் யுதிஷ்டிர மகாராஜாவி னிடத்தில் பசுக்களைக் காக்கு மதிகாரத்தி லிருந்தேன். அவர்களுக்கு ஆபத்து நேரிட்ட பின் அங்கங்கே அலைந்து தகுதியாகிய இடம் இதுவே யென்று உமது சமீபத்தில் வந்து சேர்ந்தேன், இனி என்னைக் காக்கும் பாரம் உமதேயாம். இதனால் கீர்த்தியும் பயனு முமக்குக் கிடைக்கும் என்று சகாதேவன் சொன்னதைக் கேட்டு மச்சதேசத் தரசன் அவனைப் பார்த்து, நீ மாடுமேய்க்கத் தகுதியானவனல்ல. ஆயுதபாணியாய் எனது போர்ச்சேவகருக்கு முதல்வனா யிருந்து பகைவரை வெல்லும்படியான அதிகாரத்தி லிரு என்று சொல்லக் கேட்டு தாமக்கிரந்தியானவன் சுவாமி? வைசியகுலத்திற் பிறந்து மாடுமேய்த்துவந்த சிறுவனாகிய வென்றனுக்குச் சவுரிய மெப்படி யிருக்கும்? ஆதலால் எனக்குத் தெரிந்த காரியத்திற் கட்டளை யிட்டீராகில் இங் கிருக்கிறே னென்னக் கேட்டு ராஜா அநேகவிதமாகப் பலவந்தஞ் செய்தும் ஒப்புக்கொள்ளாமையாலே அவ னிஷ்டப்படியே தன் மாட்டு மந்தைகளுக்கெல்லாம் அவனை யதிபதியாக்கி அவன் வசத்தி லவைகளை ஒப்புவித்தான். அந்த தாமக்கிரந்தியும் அவ்வதிகாரத்தைக் கைக்கொண்டு சுகமா யிருந்தான்.

இப்படி பாண்டவர் ஐவரும் விராடனிடத்திற் சேர்ந்த பின் துரோபதியானவள் கறுத்து நீண்டு பரிமளம்பொருந்தி விளங்கா நின்ற கூந்தலைவாரி வலதுபக்கத்திற் சொருகி பெரிதாகியும் அழுக்குடன்கூடியு மிருக்கின்ற கறுத்த வஸ்திரத்தினால் முக்காடுபோட்டு தேகமெல்லாம் மறைத்துக்கொண்டு சைரந்திரி ரூபந் தரித்து நாணத்தினால் தலை யிறங்கிக்கொண்டு மெள்ளமெள்ள ராஜவீதியில் வரும்போது சகல ஜனங்களும் பார்த்து ஆச்சரியப்பட்டு சித்திரப்பதுமைகள்போல் சற்று மசை வில்லாமல் நிற்க, உப்பரிகையின்மீதி லுலாவிக்கொண் டிருந்த ராஜபத்தினியான சுதேஷ்ணாதேவி அவளைப் பார்த்து உள்ளங்களித்து ஓகோ இப்படிப்பட்ட ரூபலாவண்ணிய சவுந்தரியங்களுள்ள ஸ்திரீயை எப்போதுங் கண்டதில்லை. விசித்திரமா யிரு

க்கிறது. இவளைக் கண்டால் ராஜா என்னை லக்ஷியஞ் செய்வாரோ? ஆதலால் நீங்க ளிவளை யழைத்துக்கொண்டு வாருங்கள். அவளுக்கு வேண்டிய பாக்கியங்களைக் கொடுத்து அந்தப்புரத்திலேயே வைத்துக்கொண் டிருப்போம். சீக்கிரம் போய் அழைத்து வாருங்கள் என்று தாதிமாரோடு சொல்ல, அவர்கள் விரைவில் வீதிக்கு வந்து அவ ளழகைப் பார்ப்பதற்கு கூட்டங்கூடிவாராநின்ற பட்டணத்து ஜனங்களுடைய நடுவில் விளங்காநின்ற அந்த துரோபதியினிடத்திற் போய் அவ்வணங்கைப் பார்த்து ஊராய் பெண்கள் நாயகமே! உன்னை எங்கள் ராஜபத்தினி அழைத்துக்கொண்டு வரும்படி எங்களை யனுப்பினாள். ஆதலால் சீக்கிரம் நீ வரவேண்டும். வருவாயாகில் உன்னிஷ்டங்களை யெல்லா மளிப்பாள் என்று சொல்லக் கேட்டு துரோபதியானவள் சந்தோஷித்து அந்தப்புரத்திற் பிரவேசிக்க, அவ்விடத்தில் சுவர்ணமயமாகிய கட்டிலில் அன்னச் சிறகுகள் போட்டு தைத்திருக்கிற பட்டு மெத்தையின்மீதில் உட்கார்ந்து மெல்லிதாகிய கறுப்பு வஸ்திரந் தரித்து மேகத்தின் மத்தியி லிருக்கும் மின்னற்கொடிபோல் விளங்கிக்கொண்டு நவரத்தினங்க ளிழைத்த திவ்வியாபரணங்களைப் பூண்டு தாமரை மலர்போன்ற முகமும், கருநெய்தல் மலர்போன்ற கண்களும், குமிழம்பூப்போன்ற நாசியும், செவ்வரத்தம்பூப்போன்ற விதழும், முல்லை யரும்புகள்போன்ற முறுவல்களும், கோங்கை மலர்போன்ற கொங்கைகளும், காந்தள்போன்ற கைகளும், பொருந்தியபடியால் பல்வகை மலர்கள் நெருங்கப்பூத்த பொற்கொடியோ வென்று ஆச்சரியப்படும்படியாகிய சரீரமுள்ளவளாய் அநேக ராஜ ஸ்திரீகளால் சூழப்பட்டு தாதிமார் பலவகை யுபசாரங்கள் செய்யப்பெற் றிருந்த சுதேஷ்ணாதேவி யானவள் அவள் வரவை யெதிர்பார்த்துக்கொண் டிருந்தாள்.

இப்படியிருக்க தாதிமார் இதோ அந்த உத்தமஸ்திரீ வருகிறாளென்று சொல்லவே அந்த ராஜபத்தினி நாணத்தா லுடம்பு கூசி பயத்தினால் காற்றி லகப்பட்ட வாழைபோல் நடுநடுங்கி தன் கூட்டத்தைவிட்டுப் பிரிந்த பெண்மான்போலவும் பெண் யானைபோலவும் தன்னெதிரில் வாராநின்ற துரோபதியைப் பார்த்து அவளது தேஜசுக்கு அஞ்சி திடீலென் றெழுந்தாள், அவ ளெழுந்திருக்கவே யாவரும் எழுந்தார்கள்; அப்போது அந்தப் பாஞ்சாலி அரசியினிடத்திற்கு வந்து வணங்கி நிற்க, அவளைப்பார்த்து ராஜ ஸ்திரீ வினவுகிறாள்.

அடி பெண்மணியே? நீயார்? எங்கேயிருந்து வந்தாய்? உன் ரூபலாவண்ணியங்களைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது,

சாமுத்திரிக சாஸ்திரத்திற் சொல்லுகிறபடி ஸ்திரீ லக்ஷணங்களெல்லா முன்னிடத்திலேயே அமைந்திருக்கின்றன. அடி ஸ்திரீ ரத்தினமே? உனது முகம் சரத்கால பூர்ண சந்திரனை யொத்திருக்கின்றது, கூந்தலோ கறுத்தமேகம்போ லிருக்கின்றது, மிடற்றோசை வீணையினு மினிதா யிருக்கின்றது, கொங்கைகளோ பருத்த கலசங்கள்போ லிருக்கின்றன, நேத்திரம் நெருங்கிய இமைமயிர்களுள்ளனவாய் காதளவு நீண்டு புரளு மீன்கள்போல் விளங்குகின்றன, அதரம் கொவ்வைக் கனியினு மழகா யிருக்கின்றது, கண்டம் சங்குபோல் பிரகாசிக்கின்றது, அங்கைகள் தாமரைமலர்போல் அழகாயிருக்கின்றன, தொடைகள் வாழைமரங்களினு மதிசயமுடையனவாயிருக்கின்றன, பாதங்கள் தளிர்களினு மேன்மைபொருந்தி விளங்குகின்றன, இப்படி யெல்லா அங்கங்களு மிக வழகியனவாய் நோக்குவோர் மனத்தைக் கவரும்படி யிருக்கின்றன, அன்றியும் நீ நடுத்தரமாகிய மங்கைப் பருவமுள்ளவளாய் கருநெய்தல்போன்ற நிறமும் வாசனையும் மேன்மையும் பொருந்தி விளங்குகிறாய். இப்படிப்பட்ட ஸ்ரீயை இதுவரையிலும் நான் கண்டதில்லை. ஆதலால் நீ கந்தருவ ஸ்திரீயோ? வனதேவதையோ? அரம்பைகளின் தலைவியோ? நாககன்னிகையோ? உரோகிணியோ? ரதிதேவியோ? சசிதேவியோ? பார்வதியோ? சரசுவதியோ? மகாலட்சுமியோ? தெரியவில்லை. நீ மனுஷிய ஸ்திரீ யல்லவென்று நினைக்கிறேன். உண்மை கூறவேண்டும், உன்னைப் பார்க்கும்போது உன்போற் பெண்களாகிய நாங்களே மோகித்துத் தழுவி முத்தமிடக் கருதுகிறோமே! ஆடவர்காணில் எப்பாடுபடார்கள்? என்று ராஜஸ்திரீ சொல்லியதைக் கேட்டு துரோபதி சொல்லுகிறாள்.

அம்மே? நான் நீ சொல்லியபடி கந்தருவஸ்திரீ முதலியவர்களில் ஒருத்தியும் அல்லேன், காட்டிற் சஞ்சரிக்கின்ற சைரந்திரி சாதியிற் பிறந்தவள், காய் கிழங்குகளைப் பக்ஷித்துப் பிழைத்தேன், இப்படியிருக்க கந்தருவர் ஐவர் ஒரு காரணத்தினால் பூமியில் வந்து என்னை விவாகஞ் செய்துகொண்டார்கள், அவர்களொரு சாபத்தினால் காட்டில் திரிகிறார்கள், நானோ சாதி முறைப்படி ராஜஸ்திரீகளுக்குத் தலைவாரிப் பின்னுதல், மலர்களைச் சூட்டுதல், சந்தன முதலாகியவை பூசுதல், ஆடையாபரணங்களா லலங்கரித்தல், முதலிய சிற்பங்களைச் செய்ய வல்லவள், இந்தப் பணியினாலேயே பாண்டவர்களின் பத்தினியாகிய துரோபதியினிடத்தும் ஸ்ரீகிருஷ்ணனுடைய பத்தினிகளாகிய ருக்குமணி சத்தியபாமைகளிடத்தும் இரு

ந்து வெகுமதிகள் பெற்று மேன்மை யடைந்தேன். பலமலர்களை இணையாக்கித் தொடுப்பதிலும் பல பரிமள வஸ்துக்களைச் சேர்த்து விசித்திரகந்தங்களை யுண்டாக்குவதிலும் எனக்கிருக்கிற சாமர்த்தியத்தைப் பார்த்து அவர்க ளாச்சரியப்பட்டு சந்தோஷத்தினால் எனக்கு மாலினி என்கிற பெயரைக் கொடுத்தார்கள். அப்படிக்கு அவர்கள் ஆதரித்து வந்தாலும் நா னொருவிடத்திலேயே இராமல் அஸ்தினாபட்டணத்திற் சில தினங்களும் துவாரகாபட்டணத்திற் சில தினங்களும் வாசமா யிருந்தேன். இப்போது என் பர்த்தாக்களாகிய கந்தருவருக்கு நன்மை யுண்டாகும் பொருட்டு ஒரு விரதத்தைக் கைக்கொண்டு இப்படி தேசாந்தரஞ் சஞ்சரித்து வருகிறேன். நீ மகா குணசாலி, மகானுபாவை, ஆனதுபற்றி உன்னிடத்திலும் சிலகால மிருந்து பணிவிடை செய்து மேன்மை பெறவேண்டு மென்று நினைத்து உன்னை யடைந்தேன். நீ காப்பாற்றுவாயாகில் அப்படியே சிலகால மிருக்கின்றேன். எனக்கு எல்லாத் தேவர்களினும் இயமன், வாயு, இந்திரன், அசுவினிதேவர், இவர்கள் விசேஷமாகப் பூசிக்கவேண்டியவர்கள். இந்தத் தேவர்களின் பயத்தாலும் அந்தக் கந்தருவரின் பயத்தாலும் என்னை யொருவரும் பரிசிக்கமாட்டார்கள். ஆதலால் நீ சங்கையுறாமல் என்னை வைத்துக் காப்பாற்றவேண்டும் என்று சைரந்திரி சொல்லக் கேட்டு ராஜபத்தினி சொல்லுகிறாள்.

வாராய் மாலினி, நீ சொல்லியவெல்லாம் சரிதான். ஆனாலும் நீயோ மிகுந்த ரூபலாவண்ணியங்களுள்ளவள், என் பர்த்தாவோ இராச்சிய பரிபாலனஞ் செய்துகொண் டிருக்கிறவர். அவ ரொருவேளை யுன்மீதி லாசைப் படுவாராகில் அதனால் அனர்த்தம் விளையு மென்று இந்த ஸ்திரீக ளெல்லாஞ் சொல்லுகிறார்கள். அது சரியென்றே தோற்றுகிறது. ஏனென்றால் நீ யெந்தப்புருஷனைக் கண்களினால் பார்க்கிறாயோ அவன் பசி, தாகம், சோம்பல், தூக்க முதலாகிய துன்பங்க ளில்லாதவனா யிருப்பான். நீ யாருக்குப் பாரியையா யிருக்கிறாயோ, அவன் தேவேந்திரனுக்கும் மேலாய் விளங்குவான். இப்படிப்பட்ட நீ இங்கே இருப்பாயாகில் எனக்குக் கேடு விளையும். ஆனதால் நீ இன்னு மெங்கேயாகிலும் போய் வாசஞ் செய்யலா மென்றாள். அதுகேட்டு மாலினி சொல்லுகிறாள்.

கேளம்மா. ? என்பர்த்தாக்களாகிய கந்தருவர் பராக்கிரமத்தில் தேவேந்திரனை யொத்தவர்கள், தேஜசில் சூரியனையும் அக்கினியையும் ஒத்தவர்கள், அவர்கள் எனக்குக்காப் பாயிருக்கிறார்கள், என்னையாரா

கிலும் காதலித்து வலிமை செய்வார்களாகில் அவர்களைக் கொல்வா ர்கள். இந்தப் பயத்தாலேதான் என்னைத் தேவர், அசுரர், முதலாகிய பேர்களில் ஒருவரும் பரிசிக்கிறதில்லை. இந்தச் செய்தியை நீ ராஜா வுக்கு அறிவிப்பாயாகில் தருமாத்மாவாகிய அவர் என்னை இச்சிக்க மாட்டார். இவ்வகையாய் அவருக்குத் தெரிவித்து நீ என்னையாதரித் துக்காப்பாற்ற வேண்டும். நீ என்னைக் காப்பாற்றுவாயே யானால் என் பர்த்தாக்களும் என்தெய்வங்களும் உங்களிருவருக்கும் மிகுந்த நன் மைகளைச் செய்வார்கள், என்று சைரந்திரி சொல்லிய பேச்சைக் கே ட்டு சுதேஷ்ணையானவள் அவளைப் பார்த்து அடிகொடிபோன்ற மே னியுடையவளே ? இவ்விதமாய் கற்போடிருப்பாயாகில் உன்னை ஸ்ரீமஹா லட்சுமியைப் போல் ஆதரிக்கிறேன். நீ இங்கேயே சுகமா யிரு என்று ராஜபத்தினி சொல்ல, அதுகேட்டு துரோபதியானவள் மனக் களிப்போடு அவ்வரசிக்கு இஷ்டமானபடி நடந்துகொண்டு சுகமாயிருந்தாள்.

இவ்வகையாய் பாண்டவரும், துரோபதியும், விராட ராஜனும் சுதேஷ்ணு தேவியும் செய்கின்ற ஆதரத்தினால் தாழ்ந்த விடத்திற்ப ணிவிடை செய்கிறோமே யென்கிற குறையில்லாமல் சந்தோஷமா யிருந்தார்கள். அவர்க ளப்படி யிருப்பதை தருமதேவதையின் அனு க்கிரக பலத்தினாலும், புரோகிதர், பிராமணர், முதலானவர்களு டைய அனுக்கிரகத்தினாலும் ஒருவரும் அறியாம லிருந்தார்கள்.

கேளும், ஜநமேஜய மஹாராஜாவே ? பாண்டவர்க ளெல்லாம் தத்தமக்குக் கிடைக்கின்ற நல்லவஸ்துக்கள் உணவுகள் முதலாகிய வைகளை ஒருவர்க் கொருவர் ஏகாந்தத்தில் கொடுத்து க்ஷேமங்களைவி சாரித்துக்கொண்டு அரசருக்குச் சந்தோஷங் குறையாமலிருக்கும் படி நடந்து வருகையில் நான்கு மாதங்கள் கழிந்தபின் அந்நகரத்தி ல் ஈசுவரனுக்கு உச்சவம் நேரிட்டது. அந்த மஹோச்சவம் சிறப்பாய் நடக்கையில் அநேகமல்லர் வந்து அரசனைக்கண்டு பணிந்தார்கள். அவர்களில் ஒருவன் மிகவும் வல்லமை யுடையவன், மலைபோன்ற தே கமுள்ளவன், வருஷந் தோறும் எல்லா மல்லரையும் ஜயித்து வெகு மானங்களைத் தானொருவனே கைக்கொண்டு வந்தான். அப்படிப்பட் ட அவன் அரசனைப் பணிந்து, சுவாமி! ராஜாதி ராஜராஜபரமேஸ் வரா, இந்தமல்லரோடு யுத்தஞ் செய்து ஜயிக்கிறேன், இன்னும்புலி கள், யானைகள், சிங்கங்கள், முதலான பொல்லாத மிருகங்களோடும் யுத்தஞ்செய்து அவைகளை சுவாதீனப் படுத்துகிறேன், தகுந்த வெகு

மான்மீ பெறுகிறேன், உம்மிடத்தில் யாராகிலும் மல்லிருந்தால் வ ரச்சொல்ல வேண்டுமென்று சொல்லி மீசையை முறுக்கித் தோள் தட்டிநிற்க, அவ்வரசன் மல்லரை யெல்லாங் கூப்பிட்டு உங்களில் இவனேடியோர் சண்டை போடவல்லவன் ? என்றுவினவ, அந்த மல் லரெல்லாம் நடுநடுங்கி நாங்கள் ஒருவரும் அவனேடு சண்டை போட மாட்டோ மென்று சொல்லவே அப்போது கங்கபட்டர் அரசனைநோ க்கி கேளீர் ராஜாவே ? நமது மடைப்பளி யஜமானனு மிருக்கிற வ லவ னிருக்கிறானே, அவன்மகா சாமர்த்திய முள்ளவன், முன்பு தரும புத்திரரிடத்தி லிருக்கும்போது வெகுமல்லரை ஜயித்து வெகும திகள் பெற்றவன், அவனுகில் இவனேடு சண்டை செய்யமாட்டுவா னென்று சொல்ல, அரசன் வீமனை யழைப்பித்து நீ இந்த மல்லனேடு யுத்தஞ் செய்ய மாட்டுவையா வென்று கேட்க, வீமன் சுவாமி ? உ மது அனுக்கிரகத்தினல் யுத்தஞ் செய்து ஜயிக்க மாட்டுவேன், கட் டளை யிட்டால் ஓர்நொடியில் இவனை ஜயிக்கிறே னென்று சொல் லவே, அதுகேட்டு ராஜா ஆனல் யுத்தஞ் செய்யென்று கட்டளை யிட்டான்.

பின்பு அவ்விருவருக்கும் யுத்த முண்டாயிற்று, அதில் வீமன் வெகுநேரம் யுத்தவகைகளை நன்று யறியாதவன்போல் யுத்தஞ்செய் து எதிரியின் முழுவல்லமையு மறிந்து பின்பு தன்சாமர்த்தியத்தைக் காட்டி, அந்த மல்லனை எளிதில் தூக்கி கக்கத்திலிடுக்கிக்கொண்டு தோள் தட்டினன். அதுகண்டு ராஜா மிகவும் சந்தோஷித்தான். அந் த மல்லனும் தன் வலிமையினல் எதிரியின் கக்கத்தினின்றும் விடுப ட்டு கர்ச்சனை செய்து தோள் தட்டி லாகவத்தினல் வீமனைத்தூக்கி க் கக்கத்தி லிடுக்கினன், அந்த வீமன் ஓர்நொடியில் விடுபட்டு அவ னைத்தூக்கி யெறிந்தான்.

இவ்வகையாய் அவ்விருவரும் சிலநேரம் ஒருவனை யொருவன் தூக்கி யெறிகிறதும், கீழே தள்ளுகிறதும், மருமமாகிய இடங்களிற் பிடித்து வெலவெலுக்கச் செய்கிறதும், கட்டி யிறுக்கிறதும், கால்க ளா லுதைக்கிறதும், கைகளால் குத்துகிறதுமாக வருஷாகாலத்து விருஷங்கள் போல் யுத்தஞ் செய்தார்கள்.

இப்படியிருக்க வீமன் அதிககோப முடையவனுகி அந்த மல்ல னைத் தூக்கித் தலையிற்போட்டு இரண்டு கால்களையும் பற்றிப் பல தரம் சுழற்றி யறைந்து புலி அற்பமிருகத்தை யுபத்திரவிப்பதுபோல் உ

பத்திரவித்து விட்டான். அதனால் அந்த மல்லனது தேகங்கள் சின்னு பின்னங்களாய்ச் சிதறிப் போயின, அவனும் உயிரை யிழந்தான்; அந்தச் செய்கையைக் கண்டு அங்கிருந்த ஜனங்களும் அரசனும் ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையு மடைந்தார்கள். வீமன் அரசனிடத்தில் பல வெகுமானங்களைப் பெற்று இவனுக்கெதிரி யில்லை யென்று புகழு மடைந்து ஒவ் வொருகாலங்களில் காட்டிலிருந்து சிங்கங்கள் புலிகள் முதலான கொடிய மிருகங்களைப் பிடித்து வந்து அவைகளோடு போர்செய்து அரசனுக்குக் குதூகலம் மாறாமலிருக்கும்படி செய்து வந்தான். இப்படியே மற்றப் பாண்டவரும் தாம்தாம் செய்யும் பணிகளில் விநோதங்களைக் காட்டி அரசனைக்களிக்கச் செய்துகொண் டிருந்தார்கள். இவ்வகையாய் பாண்டவருக்கு அஞ்ஞாதவாசத்திற் பத்துமாதங்கள் கழிந்தன. பின்பு அந்த விராடராஜனுக்கு மைத்துனனும் சேனாதிபதியுமாகிய கீசக னென்பவன் ஒருநாள் தன்னுடன் பிறந்தவளாகிய சுதேஷ்ணா தேவியைப் பார்ப்பதற்கு வந்து அவ்விடத்தி லிருந்த சைரந்திரியைப் பார்த்து ஆச்சரியப்பட்டு மோகித்து காமசரங்களுக் கிலக்காகிய மனமுள்ளவனாகி ஓகோகோ ? இவள் உலகத்தை யெல்லாம் மோகிக்கும்படியான மாயையோ ? மன்மதனுடைய மோகனாஸ்திரமோ ? பிரம்மனது விசித்திர சிருஷ்டியோ ? ஒன்று மறிகிலேன். இந்த ரூபத்தையும் காந்தியையும் சுந்தரத்தையும் விலாசங்களையும் எங்குங் கண்டறியேன் என்றுதிகைத்து யாகசாலையில் தேவர்க்கு ஆகுதி செய்யும்பொருட்டு பரிசுத்தமாகச் சமைத்து வைத்திருக்கும் புரோடாசத்தை நாயானது தின்னக்கருதி சென்றாற்போல் அவளருகிற் சென்று அவளைப் பார்த்துச் சொல்லுகிறான்.

அடி பெண்மயிலாகிய சைரந்திரி ? உன்னைக் கண்டு நான் மிகவும் வியப்படைகிறேன், உனது அழகு நிகரில்லாததா யிருக்கின்றது. அவ்வழகானது தனக்கேற்ற பருவத்தோடு கூடி மிகவுஞ் சிறப்பாய் விளங்குகின்றது. ஆனால், அது நல்லவாசனை பொருந்திப் பூத்தமலர் ஒருவராலும் அனுபவிக்கப்படாமற்போனால் எப்படி வீணா யிருக்குமோ அப்படியே தகுதியான புருஷனில்லாமையால் வீணா யிருக்கின்றது. இப்படி வீணாய்ப்போவதைக்குறித்து நான் மிகவும் விசனப்படுகிறேன். உன்னிட சரித்திரத்தைக் கேட்க விரும்புகிறேன். நீ யார், எவ்விடத்திலிருக்கிறவள், உனக்குக் கணவன் யார் என்ன காரியமாக நீ இங்கே வந்திருக்கிறாய் ? இவையெல்லாம் நன்றாய்ச் சொல்லவேண்டும். நான் உன்னை வசந்தகாலத்தில் வண்டு மலரைவிரும்புவது போல் மிகவும் விரும்புகிறேன். அந்தமலரானது தன்தே

னைக்கொடுத்து அவ்வண்டின் மனத்தைக் களிக்கச்செய்வது போல நீயுன் இதழ்த்தேனைக் கொடுத்து என்னிருதயத்தைக் களிக்கச்செய்யவேண்டும். அடிசரசவசந்தக்குயிலே? உனக்கு எல்லா மங்கையரும் பணிவிடை செய்யவேண்டுமே யல்லது நீயொருவருக்கும் பணிவிடை செய்யத் தகாது; இவ்விடத்தி லலங்காரஞ் செய்யும்ஸ்திரீகள் பலரிருக்கிறார்கள்; அவரெல்லா முனக்கு அலங்காரஞ் செய்யும்படி கட்டளையிடுகிறேன். உனக்குஎன்ன அலங்காரந்தான் செய்யவேண்டும்? இயற்கையில் அலங்கரிக்கப் பட்டதுபோல் விளங்கும் உன்திருமேனியில் எது எப்படி யிருந்தாலும் அலங்கார மாகவே விளங்கும், அன்றியும் உன்தேக காந்தியினால் சகல ஆபரணங்களும் அலங்கரிக்கப்பட்டவைபோல விளங்கும், உன்னைக்கண்ட மாத்திரத்தில் யான் விவாகஞ் செய்த ஸ்திரீகளை யெல்லாம் பார்ப்பதற்கும் அருவருக்கிறேன். ஆதலால் உனக்காக அவர்களை நான் விட்டுவிடுகிறேன். இது உண்மை என்பதற்கு உனக்கிஷ்டமானபடி ஆணையிடுகிறேன். நவரத்தினா பரணங்கள் பலவும் உயர்ந்த வஸ்திரங்களும் பொற்பாத்திரங்களும் இன்னும் வேண்டிய சகல பாக்கியங்களும் தருகிறேன், திவ்யமாகிய ஆசனங்களும் படுக்கைகளும் இனிப்பாய்ப் பாடும்படியாகிய பக்ஷிகளும் அநேகம் பொருள்களும் இவையெல்லாம் நிறைந்து சந்திரமண்டலத்தை யளாவி சந்திரமண்டலம்போல் விளங்காநின்ற மாளிகையை யுன் வசப் படுத்துகிறேன்; இன்னும் என்னுடைய சகல அதிகாரங்களையும் உனக்கே ஒப்புவித்து நானும் உனது குற்றேவல் செய்யு மடிமையாகிறேன். என்னை நீ இஷ்டப்படி யாண்டுகொள், என்மோகாந்த காரத்தை யுனது அன்புள்ள கடைக்கண் கிரணத்தினாலும் புன்னகையாகிய நிலவினாலும் போக்கடிக்க வேண்டும், அடிகிளிமொழியே? என்தேகத்தில் மன்மதன் எய்த பாணங்களால் துளைபட்டுண்டாகிய புண்களை உனது தளிர்போன்ற மேனியால் தழுவுதலாலே ஆற்றவேண்டும். என்னுளத்தின் தாபத்தை பருத்துயர்ந்து வட்டமாகி கல்லினுங் கடினமும் மலரினும் மேன்மையுமாகி சுணங்கு பூத்து பளபளப்போடு விளங்காநின்ற நின்முலைகளாகிய அமிர்தகலசங்களால் தீர்க்கவேண்டும். அடிபூங் கொடியே? எவ்வகையிலும் நீ என்னை யடிமை கொள்ளவேண்டும், நானோ இந்திரனையும் போரில் வெல்லும்படியாகிய பராக்கிர முடையவன், வயதினாலும் ரூபத்தினாலும் உனக்குத்தகுந்தவன், வெகு மேன்மை யுள்ளவன், மிகுந்த செல்வங்க ளுடையவன், இவ்வி ராச்சியத்திற்கு நானே அதிபதி. விராடராஜன் என்னிடத்தில் பயந்திருப்பதினாலும் உடன் பிறந்தவளது புருஷனானதினாலும் அவனை இராச்சியத்தினின்றும்

தள்ளாம லிருக்கிறேன். நான் அவனை லக்ஷியஞ் செய்கிற தில்லை. என்பேச்சையோ அவன் தள்ளமாட்டான். எனது மகிமையை நீ நன்றாய் விசாரிக்க வில்லை. உனக்கு எதுவேண்டி யிருந்தாலும் எப்படி செய்யவேண்டியதானாலும் நானே கொடுத்து நிறைவேற்ற மாட்டுவேன். என் மனைவிகளையும் உனக்குப் பணிவிடைசெய்யப் பண்ணுகிறேன், நீ யாவரிலும் மேன்மையாக விளங்கலாம், நீ வசமாகும்பொருட்டு விருஷபத் துவசராகியும் முக்கண்ணராகியும் பார்வதி பதியாகியு மிருக்கிற சிவனைப் பூசிக்கிறேன், உனது சிநேகம் எனக்குக் கிடைத்ததாகில் பன்னிரு கைகளும் பன்னிரு நேத்திரங்களும் ஆறு முகங்களும் பொருந்தி மயிலேறி வேலேந்தி அசுரரைக் காய்ந்து அடியார்களுக்கு வேண்டுவன கொடுத்தருளும் சுப்பிரமணியக்கடவுளைத் தியானித்துத் துதித்துப் பூசித்துக்கொண்டாடுவேன், யான் செய்த புண்ணியங்களையும் உனக்கே ஒப்புவிக்கிறேன், உன்னிடத்தில் காதலினாலே மனம் தவிக்கின்றது. இந்தக் காமவிடாயாற்றாமற் போவாயாகில் அடி என் கண்மணியே? என்னுயிர் நில்லாது. ஆதலால் காமமோகக் கடலி லாழ்ந்த அடியேனைக் கைகொடுத்துத் தூக்கிக் கரையேற்றி பிழைப்பு மூட்டவேண்டும். இதனால் உனக்கு மிகுந்த புண்ணியங் கிடைக்கும். அடி என் கண்ணாட்டி? இனி விசேஷமாய் நா னென்னசொல்ல மாட்டுவேன், நீயே தயை செய்து ரக்ஷிக்கவேண்டும். மனம் பதைக்கிறது, மெய் சோருகிறது, பொறிகள் மயங்குகின்றன. என்னசெய்வேன்? உன் பொற்றாமரை யடியிணையே தஞ்சமென்று அடைகிறேன்; காக்குங் கடமை யுனதேயாம் என்று கீசகன் காமாதுரனாகி வாய்க்கு வந்தபடி யெல்லாம் சொல்லியதைக் கேட்டு துரோபதியானவள் கொஞ்சங் கோப முள்ளவளாகி அவனைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

ஐய, கீசக, நீர், உத்தமசாதியிற் பிறந்திருந்தும் தன் குலப்பெருமையை எவ்வளவும் சிந்திக்காமல் சூத்திரசாதிப் பெண்ணாகியும் ராஜ ஸ்திரீகளுக்குப் பணிவிடை செய்பவளாகியு மிருக்கிற என்னைக் காதலிப்பது தகுதியல்லவே? எனக்குக் கொடுக்கிற பொருளை நற்குலத்திற் பிறந்த அழகிய பெண்களுக்குக் கொடுத்து மணந்து சுகமா யிருக்கலாமே? அதைவிட்டு ஈனசாதியான என்னிடத்தில் நீரோ னாசைப்படுகிறீர்? உலகத்தில் புத்திமானாகிய மனிதன் வேண்டும் பொழுதெல்லாம் தன் சொற்படி நடக்கத்தக்க மணந்த மாதரை விட்டு சுவாதீனமாகாத அயல்மாதர்களை விரும்பார்களே? அன்றியும் அயல்மாதரை விரும்புகின்றவர்க்கு இம்மை மறுமைகளில் இடர்

நேரிடுமல்லவோ? அபகீர்த்தியும் வரும் ஐய, என் பேச்சைக் கிஞ்சித்துக் கவனித்துக் கேட்கவேண்டும். அயல்மாதை விரும்பிச் சேருவதே வருத்தம், சேர்ந்தாலும் அதனால் பாவம் நேரிடுவது மன்றி வேறுபயனு மில்லை. எப்படியென்றால், அவள் சுகதுக்கங்களுக்குச் சம்பந்தப்படமாட்டாள், காதலன் இறந்தால் அவனுக்குச் சிரார்த்தமுஞ் செய்யமாட்டாள். அவள் வயிற்றிற் பிறக்கு மக்களும் அவன் குலத்திற்கு விருத்தியேதுக்க ளாகமாட்டார்கள். சிரார்த்தமுஞ் செய்யமாட்டார்கள். அச்சத்தோடும் பழிப்போடும் பிறர்மாதனைப் புணரவேண்டுதலில் அதி லின்பமு மில்லை. தகுதியாகிய பெண்ணை விவாகஞ் செய்துகொண்டாலோ ஓரிடருமின்றி முன்னுரைத்த எல்லாப்பயன்களு முண்டாகும். இப்படி யிருக்கையாலே எல்லாந் தெரிந்த நீ அதருமத்திற் பிரவேசிக்கவேண்டாம். என்னைக் காதலோடு நோக்குதலும் பரிசித்தலும் தேவர்களுக்கும் எளிதல்ல, என் வரலாற்றை நீர் நன்றா யறியீர், ஒரு காரியத்தைப் பற்றி இங்கே வந் திருக்கிறேன், அதை யறியாமல் என்னை நீர் வலிமை செய்தால் அதனாலே தீங்கு நேரிடும். முன்பு இராவணன், சீதையைக் காதலித்து குடும்பத்தோடு நாசமடைந்தா னல்லவோ? அப்படியே என்னை இச்சிப்பதினாலும் நேரிடும். ஏனென்றால் என்னை ஐவர் கந்தருவர் விவாகஞ் செய்திருக்கிறார்கள். அவர்களோ மகா பலபராக்கிரமங்க ளுள்ளவர்கள், சாதாரணமாய்ச் சஞ்சரியாநின்ற என் விஷயத்தில் தீமை செய்வோர்களின் சிரங்களைப்பெருங் காற்று பனங்காய்களைத் தள்ளுவதுபோல் தள்ளும்படி பிரதிக்கினை செய்திருக்கிறார்கள். ஆதலால் என்னை விரும்பவேண்டாம். என்னை நீர் விரும்புவது ஓர் குழந்தை பெரிய வாவியைத் தாண்ட நினைப்பதுபோலும், ஒரு மூடன் கடலைக் கடக்க நினைப்பதுபோலும், பெரு மலையைத் தலையா லெடுக்கக் கருதுவது போலு மிருக்கின்றது. தேவரும், என்னைப்பார்க்க அஞ்சுவார்கள். என் கணவராகிய கந்தருவர் எங்குஞ் சஞ்சரிக்க வல்லவர். ஆனதுபற்றி சத்துருவா யிருக்கிறவன் ஆகாசத்திற் போனாலும், சமுத்திரத்திற் போனாலும், பாதாளத்திற் பிரவேசித்தாலும், குகையிற் புகுந்தாலும், சூரியமண்டலத்திற் போனாலும், இன்னு மெங்கே போனாலும் விடமாட்டார்கள். அன்றியும் இந்திரன், இயமன், வருணன், குபேரன் முதலிய திக்குப்பாலகர் சகாயஞ் செய்தாலும் சத்துருவின் உயிரை வாங்காமல் விடமாட்டார்கள். ஆகையால் என்னிமித்தம் நீர் இனத்தாரோடுகூட நசிக்கவேண்டாம். வலுவில் காலபாசத்தைக் கழுத்திற் சுற்றிக்கொள்ளவேண்டாம். சொந்த ஸ்திரீகளோடு சேர்ந்து சவுக்கியத்தை யடைந்துகொண் டிரும் என்று துரோபதி சொ

ல்லிய வார்த்தையைக் கேட்டு கீசகன் மிகுந்த விசனமுற்று தன் உடன்பிறந்தவளிடத்திற்குப் போய் அவளைப் பார்த்துச் சொல்லு கிறான்.

தங்காய், இப்போ தெனக்கு மிகுந்த விபத்தொன்று நேரிட்டிருக்கிறது. அதினின்றும் நீ என்னைக் காத்தருளவேண்டும். அதென்னவென்றால் உன்னிடத்தி லிருக்கிறாளே மாலினி யென்கிற சைரந்திரி யொருத்தி அவளைக் கண்டமாத்திரத்திலே என் மனங் கலங்கி காமவேதனை யடைந்தது. அவளோ என்னைத் திரஸ்காரஞ் செய்தாள். அவளைக் கூடாவிடில் என் னுயிர் நிற்காது. ஆதலால் நீ அவளுக்குப் போதித்து என்னை மருவும்படி செய்யவேண்டும். நான் பிழைக்கக் கருதுவையாகில் இங்ஙனம் நீ செய்யவேண்டும் என்று மிகவும் வணக்கத்துடன் கீசகன் சொல்லக் கேட்டு சுதேஷ்ணையானவள் சொல்லலுற்றாள்.

கேளாய் கீசக, உலகத்தில் யாவருக்கும் உயிரொன்பது எல்லாவற்றினு முக்கியமா யிருக்கிறது. ஆனதுபற்றி புத்திமான் அதை முன்னம் காத்து மற்றவைகளைக் குறித்து முயலவேண்டும். இந்தச் சைரந்திரி என்னிடத்திற்கு வரும்போது தனக்கு இந்திரனுக்குச் சமானமாகிய பராக்கிரமமுடைய ஐந்து கந்தருவர் பதிகளா யிருக்கிறார்களென்றும் அதனாலே தன்னை யொருவனும் பரிசிக்கக்கூட வல்லவ னில்லையென்றும் அப்படி பரிசிப்பானாகில் அவனுக்கு அவர்களால் மரணம் நேரிடுமென்றும் இப்படிப்பட்ட கணவ ரிருக்கும்போது, ஒரு காரணத்தால் சிலகாலம் இவ்விடத்தி லிருக்கவேண்டி யிருக்கிறதென்றும் சொல்லித் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று என்னைச் சரண மடைந்தாள். நானு மப்படியே அவளுக்கு வாக்குத்தத்தஞ் செய்து காப்பாற்றி வருகிறேன். எனது பர்த்தாவாகிய மகா ராஜாவும் இந்தப் பயத்தாலேயே அவளைக் கண்ணெடுத்துப் பார்க்கிற தில்லை. அப்படிப்பட்ட அவளை நீ இச்சிப்பது நன்மையல்ல. அப்படி செய்தால் அந்தக் கந்தருவரால் உனக்கு மரணம் கிடைக்கும். அந்தக் கந்தருவர் எப்படிப்பட்டவர்க ளென்றால் வேகத்தில் கருடனுக்கும் வாயுவுக்கும் நிகரானவர், பராக்கிரமத்தில் இந்திரனுக்கும் வருணனுக்கும் சமானமா யிருக்கிறவர்கள், தேஜசில் சூரியனுக்கும் அக்கினிக்கும் சமானமானவர்கள், அவர்கள் கோபித்தால் இந்த மூன்று லோகங்களும் பிழைக்கமாட்டாதுகள், இந்த விருத்தாந்தங்களைச் சைரந்திரி என்னோடு மெய்யாய்ச் சொல்லியிருக்கிறாள். ஆனபடியினா

லே நீ அந்தச் சைரந்திரியினிடத்திற் காதலுறுவது எவ்வளவேனும் தகாதகாரியம் என்று சுதேஷ்ணை கூறக்கேட்டு கீசகன் சொன்னான்.

கேளாய் சுதேஷ்ணாதேவி, உனக்கு என் பராக்கிரமமகிமை நன்றாய்த் தெரியாது. தெரிந்திருந்தால் இப்படி பேசமாட்டாய். அப்படிப்பட்ட கந்தருவர் பதினாயிரம்பேர் வந்தாலும் என் பலத்துக்கு ஒரு லக்ஷியமோ ? இப்படியிருக்க ஐந்து கந்தருவரை நான் ஜயிப்பது அரிதன்று, இதிருக்கட்டும். நீ பெண்ணா யிருந்தும் பெண்களுடைய ரகசியமான குணங்களை கண் டறியமாட்டாய். அதென்னவென்றால் துஷ்ட ஸ்திரீகளுக்குப் பிதா பிராதா முதலியவரில் அழகும் வயதும் அலங்காரமும் பொருந்திய எவனையாகிலும் கண்டால் சித்தங் கலங்குமென்று பெரியோர் சொல்வார்கள். ஆகையால், நீ அவளுக்குப் போதிப்பதுமன்றி எனக்கும் அவளுக்கும் ஏகாந்தமான விடத்தில் சேர்க்கையுண்டாகும்படி செய்யவேண்டுமென்று உடன்பிறந்தானுரைத்ததைக் கேட்டு, சுதேஷ்ணை மிகுந்த விசனமடைந்தவளாகி அண்ணனை நோக்கி நீ சைரந்திரியென்கிற வடவாக்கினிச் சுவாலையில் வனுவில்விழ யத்தனப் படுகிறாய். உன்னாலே உன் பந்துக்களும் நசிக்கப்போகிறார்கள். உலகத்தில் ஒருவன் துஷ்டகாரியஞ் செய்தால் அதனாலே அவனைச் சேர்ந்தவரும் நசிப்பார்களென்று பெரியோர் சொல்வதற்கு திருஷ்டாந்த முன்னிடத்திலேயே காணும்படி நேரிட்டது. இங்ஙனம் தெய்வச்செய லிருந்தால் நான் விசனப்படுவதிற் பய னென்ன ? உடன்பிறந்தவனாகிய உன்னைப் பிரியும்படியாகிய காலம் நேரிட்டதென்று நினைக்கிறேன். நல்லதாகட்டும், நீ வீட்டுக்குப் போனவுடனே அந்தச் சைரந்திரியை எனக்குப் போஜனம் வாங்கிக் கொண்டு வரும்படி உன் னிடத்திற்கு அனுப்புகிறேன். அப்போது நீ அவளை வலிமை செய்யாமல் சமாதானஞ் சொல்லி வசப்படுத்திக் கொள் என்றுசொல்ல, அதைக் கீசகன் கேட்டு மிகுந்த சந்தோஷத்தோடு தன்மனைக்குச் சென்று உருசியாகிய மாமிச முதலானவைகளைச் சித்தப்படுத்தி சைரந்திரியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அன்றியும் உருத்திரமூர்த்தியையும் குமரவேளையும் அவள் தனக்கு வசப்பட வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணிக் கொண்டான். இப்படி யிருக்க சுதேஷ்ணையானவள் சைரந்திரியை யழைத்து, வாராய் சைரந்திரி, எனக் கிப்போது மிகுந்த பசியுண்டா யிருக்கிற தானபடியினாலே நீ இந்தப் பொற் கின்னாங்களை எடுத்துக் கொண்டு என் னுடன்பிறந்தவனாகிய கீசகனத் மனைக்குச் சென்று மாமிசங்களும் மதுக்களும் மற்று முணவுகளும்

கொண்டுவா, அவன் மனையிற் சமைத்தவை மிகவு முருசியுள்ளனவா யிருக்கு மாதலால் அவைகளைப் புசிக்க வாசையா யிருக்கின்றது, சீக்கிரஞ்சென்று யான் கேட்டதாகச் சொல்லி வாங்கிக் கொண்டுவா, என்று சொன்னாள். அதுகேட்டு துரோபதியானவள் இராஜபத்தினியை நோக்கி, கேளாய் எம்பெருமாட்டி, அந்தக் கீசகன் என்னைப் புணரவிரும்பி நான் சம்மதிபடாமையாலே என்னிடத்தில் மனஸ்தாபத்தோடு போயிருக்கிறான். இதுஉனக்கும் தெரிந்திருக்கும். ஆகையாலே அப்படிப்பட்டவனிடத்திற்கு என்னைத் தனியே அனுப்புவது நன்மையன்று. இந்தப்பட்டணத்திற்கு வரும்போதே நான் என்கற்பைக் காக்கும்படி உன்னைச்சரணமடைந்தேனே? நீயும் அப்படியே காப்பேனென்று கூறினையே? அப்படி யிருக்க அதற்கு விரோதமாய் என்னை ஏவுதல் உனக்குத் தருமமன்று. உன் பேச்சைத் தடுக்கமாட்டாமல் நானவ்விடம் போவேனாகில் அவன் என்னை வலிமை செய்வானே? அப்போது நானென்ன செய்வேன்? அதனால் மிகுந்த அனர்த்தம் நேரிடுமே? ஆனதுபற்றி இந்தக் காரியந்தவிர வேறெந்தக் காரியஞ் செய்யும்படி ஏவினாலும் நான் செய்வேன், என்னைப்போல் வேலைக்காரிகள் உனக்கு வெகுபெய ரிருக்கிறார்களே, அவர்களி லாரையாகிலும் ஏவலாம் என்று சைரந்திரிசொல்லக்கேட்டு ராஜபத்தினி சொல்லுகிறாள்.

வாராய் சைரந்திரி, நான் யுக்தமாகிய வார்த்தை சொல்லியிருக்க அதை நீ தடுத்து கீசகனைத் தூஷிக்கிறாய். இது உனக்குத் தகுதியன்று. இந்தக் காரியத்திற்கு நீயே போகவேண்டும், என்சொல்லை மறுக்காதே, சீக்கிரம்போய் போசனங் கொண்டுவா, என்று அரசி சொல்லியதைக் கேட்டு துரோபதியானவள் மறுபேச் சொன்றுஞ் சொல்லமாட்டாமல் மனதில் மிகுந்த விசனத்தை யடைந்து, இயமன், வாயு, இந்திரன், அசுவினிதேவர், இவ்வைவரையுந் தியானித்து, நான் பாண்டவர் ஐவரைத் தருமத்தின்படி விவாகஞ் செய்து மற்றொருவரை மனதினாலும் பரிசியாம லிருந்தது மெய்யாயிருந்தால் அந்தக் கீசகனாலே என்கற்பிற்கு விரோத மில்லாம லிருக்கும்படி இந்தத் தேவர் அனுக்கிரகஞ் செய்யக் கடவர் என்று பிரார்த்தித்துக் கொண்டு பொற்பாத்திரத்தைக் கையி லெடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

இவ்விதமாய் துரோபதி புறப்பட்டு முன்னம் தியானித்த தேவர்களையும், சூரியன், குபேரன், வருணன், ருத்திரன், விஷ்ணு, சண்

முகன், சரஸ்வதி, பிரமன், இவர்களையும் தியானித்துத் தன் கற்
பிற்குப் பங்கம் வாராம லிருக்கவும் தனக்குச் சத்துருக்களாயிருக்கி
றபேர்கள் நாசமடையவும் பிரார்த்தனை பண்ணி காட்டில் வெருண்
ட மான் போல் கண்கள் மிரளமிரள நாற்புறமும் பார்த்துக்கொ
ண்டு அச்சத்தினாலும் நாணத்தினாலும் மெய்கூச ராஜவீதியிற் செ
ன்று கீசகன் மனையில் பிரவேசித்தாள் ; அவள் பிரவேசிக்கவே கீச
கனானவன், நதியைத்தாண்ட வேண்டுகிறவன் ஓடத்தைக்கண்டா
லெப்படியோ, அப்படி துரோபதியைக் கண்டமாத்திரத்தில் சந்
தோஷத்தோடு எழுந்திருந்து அவள் சமீபத்தில் வந்து புன்னகை
யோடு மெள்ள ஒருவார்த்தை சொன்னான், வாராய் சைரந்திரி ? உ
னக்கு நல்வரவாக, நானின்றைக்கு நன்முகூர்த்தத்தி லெழுந்திருந்
தேன், அதனாலேதான் நீதயைசெய்து என்வீட்டுக்கு வரக்கண்டே
ன், இன்றைக்குத்தான் என்பிறப்புபயன் பட்டது, எல்லாச்சிறப்புக
ளையும் பெற்றவனானேன், இனிமேலாகிலும் என்மீதி லன்புகூர்ந்து
என்னிஷ்டப்படி நடக்க மனமுடையவளாகி திவ்யமான முத்துமா
லைகள், ரத்தினமாலைகள் இன்னும் ரத்தினமயமான ஓலைமுதலிய தி
வ்யபூஷணங்கள், பொற்சரிகையினால் சித்திரித்த நல்ல பட்டுவஸ்தி
ரங்கள், புனுகு சவ்வாது முதலிய பூச்சுக்கள், அதிகவாசனை பொரு
ந்திய புஷ்பங்கள், வெகு பரிமளம் பொருந்திய பானவஸ்துக்கள்,
இன்னு மநேக விதங்களாகிய அன்னபானங்கள், இவைகளை யெல்லா
ம் கைக்கொண்டு விஸ்தாரமாகி சந்திர கிரணம் போலும் பாற்கட
லி னுரைபோலும் மிக்கவழகாகிய வஸ்திரத்தினா லலங்காரம் பொரு
ந்திய மஞ்சத்தின் மீதிலேறி நான் மிகவு மானந்தத்தில் அமிழும்படி
யான போகங்களைச் செய்யக் கோருகிறேன். அடி பெண்மணியே !
நான் வயதினாலும் ரூபத்தினாலும் உனக்கேற்றவன். ஆனபடியினாலே
சூரியனது காந்தியானது மஹாமேருவை விளங்கச் செய்வதுபோல
நீ யென்னை விளங்கச்செய்யவேண்டும், என்றிப்படி சொல்லிய கீச
கன் பேச்சைக்கேட்டுத் துரோபதி சொல்லுகிறாள்.

கேளாய் கீசக, நீயென்னைத் தொடத்தகாது. நாய் உத்தமமான
பிராமணஸ்திரீயைத் தொடலாமோ ? வீணாய் நரகத்தில் விழுந்து
நெருப்பில் விழுந்த புழுவைப்போல் துடியாமல் சுகமாய் உனக்குக் கி
டைத்த போகங்களை யனுபவித்துக் கொண்டிரு ; அயல்மாதரைவிரு
ம்பி, இஷ்டமாகிய உயிரைப்போக்கவேண்டாம் என்று, துரோபதி
சொல்லக்கேட்டு கீசகனானவன் அவளை நோக்கி, அடிமின்னற்கொடி
யே ? என் னுடன்பிறந்தவளுக்கு மாமிசத்தையும், மதுவையும், இ

ன்னும் யாராகிலும் கொண்டு போகட்டும். நீயப்படிப்பட்ட காரியஞ் செய்யத்தகாது, ராஜபத்தினி தெரியாமல் உன்னை இப்படியேவினுள், ஆனாலும் நீ இது செய்யவேண்டாம், என்னிஷ்டம் நிறைவேறும் பொருட்டுத்தான் அவளனுப்பினு ளென்று நினை, என்றுசொல்லி காமமோகத்தினாலே அவளுடைய வலதுகையைப் பற்றியிழுத்தான். அந்தத் துரோபதியானவள் அந்த க்ஷணத்திலே அவனால் பிடிக்கப்பட்ட கையை திமிறிக்கொண்டு கையிலிருந்த பொற்பாத்திரத்தை யங்கே யெறிந்துபோட்டு அந்தமனைக்குச் சமீபத்தி லிருந்த சபையில், அரசனோடு சூதாடிக் கொண்டிருந்த தருமபுத்திரருடைய எதிரில் ஓடிவந்தாள், அந்தப் பாவியாகிய கீசகன் கோபத்தினால் நாணத்தையும் அச்சத்தையும் விட்டுப் பின்னோடு ஓடி, அவள்கூந்தலைப்பற்றி யிழுத்துக் கீழேதள்ளி கால்களினால் உதைத்தான். அப்போது அந்தச்சபையி லிருந்த விராடராஜனும் அவன் மந்திரிகளும் தருமபுத்திரரும் வேதியரும் அரசர்களும் அந்தக் கீசகன் பலசாலியானதுபற்றி அவனிடத்திலுள்ள பயத்தினாலே ஒன்றுஞ் சொல்லாமல் வாயைமூடிக்கொண் டிருந்தார்கள். துரோபதியோ அந்த உதைகளினாலே மிகவும் வேதனை யடைந்து வாயினாலே உதிரத்தைக் கக்கிக்கொண்டு கிடந்தாள். இப்படியிருக்க, அந்தத் துரோபதியினாலே பிரார்த்திக்கப்பட்ட சூரியபகவான் ஒரு ராக்ஷசனை யேவ, அவன் ஒருவர் கண்களுக்கு மகப்படாமல் வந்து அந்தக் கீசகனை சபையின் வாசலில் உதைத்துத் தள்ளினான், அவன் ராக்ஷசனால் உதைக்கப்பட்டுமிருந்த வேதனையடைந்து ஒன்றுந் தெரியாமல் திசைகெட்டு மூர்ச்சித்துக் கீழேவிழுந்தான். அப்படி யவன் விழக்கண்டு யாவரும் ஆச்சரியப்பட்டு அவள் மகாபதிவிரதை யானபடியினாலே அவளையுதைத்த இந்தப் பாவிக்குத் தெய்வம் அகாரணமாய் மூர்ச்சித்துக் கீழேவிழும்படி சிக்ஷைசெய்தது, என்று ஏகாந்தமாய் ஒருவரோடொருவர் சொல்லி சிந்தித்தார்கள். அந்தக் கீசகனும் சில நேரங் கழித்து மூர்ச்சை தெளிந்து எழுந்திருந்து சபையில் தனக்கிப்படி நேரிட்டதைக்குறித்து நாணமுற்று தன்மாளிகை போய்ச் சேர்ந்தான், அந்தவேளையில் ஓர்காரிய நிமித்தம் அந்தச்சபையில் வந்திருந்த வீமசேனன் துரோபதியைக் கீசக னுதைத்ததைக் கண்டு சகிக்கமாட்டாமல் மிகுந்த கோபமுடையவனாகி கண்கள்சிவக்க சமீபத்திலிருந்த ஓர்மரத்தைப்பார்த்து இதைப் பிடுங்கிக்கொண்டு இவனை இப்போதே கொல்லுகிறே னென்கிற கருத்தை யவ ரறியும்படி தருமபுத்திரர் முகத்தைப் பார்த்தான். அந்தத் தருமபுத்திரர் வீமசேன னங்ஙனம் யத்தினப்பட்டதை யறிந்து சைகையினால் அவனை யருகி லழைத்து

ஒருவரு மறியாம லிருக்கும்படி மறைபொருளாகிய பேச் சொன்று சொன்னார்.

கேளாய் வல்லா? நீ மடைப்பளிக்கு அதிபதியாகையால் உலர்ந்த விறகுகளைக் குறித்து உன்கண் மரங்கள் மீதிலோடிக்கொண்டிருக்குமல்லவா? அப்படியே இப்போதும் அந்தக் கண் இந்தப் பச்சை மாத்தின்மீது ஓடுகின்றது. இதில் உலர்ந்த விறகொன்றுமில்லை. அவசியமாய் பாகசாலைக்கு விறகுவேண்டி யிருந்தால் அதற்குத்தக்க மனிதனை யனுப்பி விறகுகளை அழைப்பித்துக் கொள்ளவேண்டும். அல்லது மகாபலசாலியான உனக்கு ஒன்றும் லக்ஷியமில்லாமையால் நகரத்துக்கு வெளிப்புறங்களில் போய் வேண்டியபடி செய்யலாம். அன்றியும் நீ ராஜாவின் சமீபத்தி லிருக்கிற மரத்தைப் பார்ப்பதே யுக்தமல்ல. புத்திமானு யிருக்கிறவன் நாலுபேருக்கு உபயோகமாக நிழலையும் பழத்தையும் கொடுக்கும்படியாகிய மரத்தை வீணாய் முறிக்கலாமா? கேட்ட தருமங்களை யெல்லாம் மறக்கலாகாது; நினைத்தகாரிய முனக்கு லக்ஷிய மன்று, என்றுசொல்லி காலாலே தரையைத் தேய்த்துக் காட்டினார். வீமன் அந்தச் சைகை தெரிந்து கொண்டு மேலெழுந்த கோபத்தை யடக்கினான், துரோபதியும் மூர்ச்சைதெளிந்து எழுந்திருந்து சபையினருகில்வந்து கண்ணீர்பெருக அரசனைப்பார்த்துச் சொல்கிறாள்.

சுவாமி மகாராஜாவே? நீர் எல்லாத்தருமங்களையு மறிந்து எல்லா ஜனங்களுக்கும் தீமை நேரிடாம லிருக்கும்படி செங்கோல் செலுத்தி வருகிறீர். இப்படியிருக்க இப்போது என்னைக் கீசகன் கீழேதள்ளிக் காலினு லுதைத்ததைப் பார்த்துக்கொண்டிருந்தும், விசாரணை செய்யாம லிருக்கலாமா? நல்ல ராஜாக்கள் தன்னை யடுத்திருக்கிற பேர்களைத் தன் மக்களைப்போல் காப்பாற்றவேண்டு மென்று சாஸ்திரங்களும் பெரியோர்களும் சொல்லுகிறார்க ளல்லவோ? பலசாலியாகிய ஒருவன் துர்ப்பலனாகிய மற்றொருவனை யடித்தாலும் அவன் பொருளை யபகரித்தாலும் இன்னு மெவ்வகைத் துன்பப்படுத்தினாலும் அதை விசாரித்து துஷ்டனுக்கு சிக்ஷை செய்யவேண்டுவது அரசனுடைய கடமை. அப்படி யல்லாத அரசனாற் பயனென்ன? ஜனங்களுக்குத் தீமைகளை யகற்றி நன்மைகளை யுண்டாக்குவதற்குத் தா னல்லவோ அரசன் பெரியோர்களால் முடிசூட்டப்பட்டு தருமாசனத்தி லுட்காருகிறான். அவனது காப்பை நம்பியல்லவோ யாவரும் அச்சமுற்றிருக்கவேண்டும். இப்படியிருக்க உமது பாதத்தின்கீழ் குற்

றேவல் செய்யு மடியாளை யொரு பாவி அநியாயமாய்த் துன்பப்படுத்
தியதைப் பார்த்திருந்தும் விசாரியாமற்போனால் பேதையா மெனக்
குக் கதியேது ? இப்போது நீர் சும்மா விருந்தால் அந்தப் பாதகன் இனி
என்னை யுயிரோடு வைக்கமாட்டான்; எல்லா மறிந்தவருக்கு யான்
என்னசொல்லவேண்டுவது? சரணமடைந்தவளைக் காப்பதைக்காட்டி
லும் பல தவங்கள் செய்தலும், வாய்மையோடிருத்தலும், யாகங்க
ளைச் செய்தலும், தீர்த்தயாத்திரைசெய்தலும், எதுவும் மிகுந்த புண்
ணியமாகமாட்டாது; முற்காலத்தில் நான்முகக்கடவுள் தேவேந்தி
ரனை நோக்கிச் சொல்லிய பேச்சைப் பெரியோர் சொல்லக் கேட்
டிருக்கிறேன்; அதென்னவெனில், வாராய் இந்திர, இம்மூவுலகங்களி
லும் நடக்கிற தருமாதருமங்கள் உன் அதீனமா யிருக்கும். ஆதலால்
நீ தரும சூட்சுமங்களை யறிந்து நடக்கவேண்டும், அப்படி செய்யாம
ற்போவாயாகில் பூமியில் ராஜாக்கள் செய்யும் பாவங்களில் பாதி யுன்
னைச்சேரும்; அதை நீக்கிக்கொள்வதற்காக பூமியில் யார் அதருமங்
களைச் செய்கிறார்களோ அவர்களை நீ தண்டிக்கக் கடவாய்; விசேஷ
மாய் நன்றி யறியாதவரையும் அடைக்கலம் புகுந்தோரை யாதரியாத
வரையும் வச்சிராயுதத்தினால் அடித்துச் சிக்ஷை செய்து தருமங்களை
நடத்துவாயாகில் உலகத்தார் செய்யும் புண்ணியங்களிற் பாதி உன்
னைச்சேரும்; நீ மூவுலகங்களுக்கும் அதிபதி யாதலால் இங்ஙன முனை
க்குச் சொன்னேன், என்று பிரம்மதேவன் சொல்லக் கேட்டு, இந்
திரன் பூமியில் வந்து துஷ்டரை யெல்லாம் தண்டித்துச் சிஷ்டரை
ரக்ஷித்தான். ஆகையால், நம்பி வந்த அடியாளை யொருவரும் உபத்
திரவப் படுத்தாம லிருக்கும்படி ரக்ஷித்தருளவேண்டும் என்று துரோ
பதி வெகுவாய் பிரார்த்தித்தும் அவ்வரசன் கீசகனிடத்துப் பயத்
தினால் ஒன்றுஞ் சொல்லாமல் சும்மா விருந்தான்; பாஞ்சாலி யவ்
வாறு அரச னிருக்கக் கண்டு மிகுந்த கோபமுடையவளாகி மறுபடி
யும் சொல்லத் தொடங்கினாள்.

கேளீர் மஹாராஜாவே ? நீர் நற்குலத்திற் பிறந்து நன்னடை
யோடு கூடி தருமவழியில் நடக்கிறவரென்றும் தயை முதலிய நற்
குணங்களுக் கிருப்பிட மானவ ரென்றும் கேள்வியுற்று உம்மை
யடுத்தால் குறையின்றி வாழலாமென்று நினைத்துவந்தேன். என் தீவி
னையால் உமது நற்குணங்களும் பயன் படாமற் போயின. இவ்வா
றரசனிருந்தால் உலகத்தார் எப்படி நம்புவார்கள் ? சிக்ஷை செய்யவே
ண்டியவர்களுக்குச் சிக்ஷை செய்யாமற் போனால் அந்த அரசனுக்கு
நற்கதி கிடைக்கமாட்டாதல்லவோ? அதிலும் பேதைகள் நாத

ன்றவர், நொண்டிகள், ஊமைகள், செவிடர், குருடர் முதலானவர்களுக்கு அரசனே முக்கியமாகிய கதியானதால் அப்படிப்பட்டவர்களை அரிய புத்திரனைப்போல் ஆதரிக்கவேண்டும். அங்ஙனஞ் செய்யாத அரசன் பழிக்கும் பாவத்திற்கும் பாத்திரனாவன். இவ்வகையாய் சாஸ்திரங்களும் பெரியோர் நடக்கைகளுமிருக்க நீர் பேதையாகியும் அநாதையாகியும் உம்மையே சரணமென்று நம்பியடைந்தவளாகியு மிருக்கின்ற என்னை உபேக்ஷை செய்வது உமக்குத் தகுதியும் நன்மையுமல்ல என்றிப்படி சொல்லிய துரோபதியை நோக்கி அரசன் சொல்லியதாவது, கேளாய் ஸைரந்திரி, நான் கீசகனை தண்டிக்காம லுபேக்ஷை செய்கிறதாய் நினைக்கிறாய், அப்படியன்று. மற்றென்னவென்றால், உனக்கும் கீசகனுக்கும் விரோதம் நேரிட்டவகையும் இப்போது அவனுக்குக் கோபம் வந்தவகையும் நீயவன் வீட்டுக்குப் போனகாரணமும் இவை யெல்லாம் எனக்குத் தெரியவில்லை. ஒன்றுந் தெரியாமல் தண்டிப்பது யுக்தமல்லவே? ஆனபடியினாலே இந்தச் சங்கதியைப் பொறுத்து விசாரிக்க நினைத்திருக்கிறேன், என்று வாயினால் சொல்லி உபேக்ஷையா யிருந்து விட்டான்.

பின்பு துரோபதி அரசன் சொல்லிய கபட வார்த்தையைக் கேட்டு மிகுந்தகோப முடையவளாகிச் சொல்லுகிறாள். ஐய மஹாராஜாவே ? அடியாளுக்கு ஐவர் கந்தருவர் பர்த்தாக்களா யிருக்கின்றார்கள். அவர்கள் ஒப்பில்லாத சவுரிய தயிரியாதிக ளுள்ளவர்கள். மகாபலசாலிகள், அவர்களுடைய சத்துருக்கள் பூமியில்நிற்கமாட்டார்கள், அவர்களின் இரதவோசையும் நாணோசையும் கேட்டு உலகமெல்லாம் நடுநடுங்கிப் போகும்; அவர்களை யடுத்தவர்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்கும், அப்படிப்பட்ட மஹாபுருஷருக்குப் பத்தினியாகிய என்னை இந்தக் கீசகன் உதைத்து துன்பப் படுத்தினானே அதனாலே அவனுக்கு நல்லகால மல்லவென்று நினைக்கிறேன், அப்படிப்பட்ட மஹாபுருஷர் ஒருகாரணத்தினால் தங்களுடைய மேன்மைகள் மாறி உருமறைத்துக் கொண்டு திரிகிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு இந்தச் செய்தி தெரியாமற் போகாது. அவர்கள் சர்வமு மறிய வல்லவரும் எங்குஞ் சஞ்சரிக்கிறவரு மானதால் தாமே இவையெல்லாமறிந்து கொள்வார்கள், இப்போதே அறிந்து மிருப்பார்கள். ஆகிலும் காலத்தை யனுசரித்துச் சும்மா யிருக்கிறார்கள். இப்படிக்கு நீரும் உபேக்ஷைசெய்து அவர்களும் உபேக்ஷைசெய்தால் பேதைப் பெண்ணாகிய நான் என்னசெய்ய மாட்டுவேன் ? ஒருவர்மீதிலும் குற்றமில்

லை, என் பொல்லாத விதியின்மீதுதான் குற்றம். தெய்வமும் காலத்தையனுசரித்து நடக்கிறது என்றுசொல்லிப் பின்பு சபையிலிருக்கிற ஜனங்களைப் பார்த்து ஓ! சபையாரே? தெய்வத்தினால் தருமமென்றும் அதருமமென்றும் இரண்டுண்டாக்கப் பட்டிருக்கின்றது. அவைகளில் தருமம் முக்கிய மல்லவோ? அப்படிப்பட்ட தருமம் எந்தச் சபையில் விளங்காமல் அதருமத்தினால் கீழ்ப்படுத்தப்படுகிறதோ அந்தச் சபையிலிருக்கிற பேர்களெல்லாம் நரக மடைவார்கள். ஆனபடியினாலே நீங்கள் தருமத்தை யெடுத் துரையாமல் சும்மாவிருப்பது நன்மையல்ல என்றுசொன்னாள். அதுகேட்டு சபையா ரெல்லாம் கீசகனையும் விராட ராஜனையும் மனதில் நிந்தித்து துரோபதியை வாக்கினாற் புகழ்ந்து சமாதானஞ் செய்து இந்தப் பேச்சுக்களைச் சொல்லிக் கொண்டார்கள். ஓகோ இந்தச் சைரந்திரியின் அங்கங்கள் சகல லக்ஷணங்களோடு கூடியிருக்கிறபடியினாலே இவள் மகிமையுள்ள ஸ்திரீயே யல்லது சாதாரண மானவளாய்த் தோற்றவில்லை. இவளுக்குப் பர்த்தாக்களா யிருக்கிறவர்கள் மஹாபாக்கிய சாலிகளாயும் மஹாபுருஷராயு மிருப்பார்க ளென்பதற்குச் சந்தேகமில்லை. அன்றியும் இவளது குணங்களும் குரலும் பேச்சும் சர்தாரணமா யிருக்கிறவர்களுக் கிராது. இப்படிப்பட்டவள் சாதாரணமான மனிதனால் உதைக்கப்பட்டதைப் பார்த்தால் யார்தா னாச்சரியப்படமாட்டார்கள்? இவளிப்படி யிருக்கத்தகாது, என்ன காரணத்தினா லிப்படி நேரிட்டிருக்கிறதோ தெரியவில்லை. சசிதேவிக்குஞ் சிரமம் நேரிட்டிருந்ததல்லவோ என்று இவ ளழகைப் பார்த்து ஜனங்க ளெல்லாம் இப்படி சொல்லிக்கொண் டிருக்க தருமபுத்திரர் கிஞ்சித்து கோபத்தோடு சைகையினால் துரோபதியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

கேளாய், சைரந்திரி; நீயென்ன கிஞ்சித்தும் பயமில்லாமலும், நாண மில்லாமலும், சபையில்வந்து அதிகமாய்ப் பேசுகிறாய்? இந்த ராஜாவோ மகாதருமசீலர், அகத்தியமாய் நியாயா நியாயங்களை விசாரிப்பார்; நீ அஞ்சாதே. ஒருவேளை இவர்விசாரியாமற் போனாலும் உன் பர்த்தாக்கள் அகத்தியம் விசாரிப்பார்க ளென்று சோதிடத்தால் எனக்குத் தெரிகிறது. உனக்கு உன் பார்த்தாக்களிட்ட கட்டளையைப் பரிபாலனம் பண்ணுவதே தருமம், கோபமாகாது. ஆதலால் கோபத்தை விட்டு சாந்தத்தோடு அந்தப்புரஞ் சென்று நீ யிருக்கவேண்டிய விதத்திலிரு, நீ பெண்ணானது பற்றி சுதந்தரை யல்லை, போவென்று சொல்லக் கேட்டு துரோபதி மேனிமேற் படிந்த புழுதிகளைத் துடைத்துக் கொண்டு புறப்பட்டு அந்தப்புரஞ் சென்று ராஜபத்தினி

க்கு எதிரில் பெருங்காற்றி லடிபட்ட வாழைமரம்போல் நடுநடுங்கி நின்றுள். நின்ற சைரந்திரியை நோக்கி ராஜபத்தினி யானவள், அடி மாலினி? தாமரையிதழ்க ளோடொத்த நேத்திரங்களும் சண்பகமல ரோடொத்த நாசியும், முல்லையரும்புகளோடொத்த பல்வரிசையும், கொவ்வைக் கனியோடொத்த விதழும் பொருந்திய உனதுமுகம் மி குந்த வாட்டத்தோடு கூடியும் பூரண சந்திரன்போலவே விளங்குகி ன்றது, உன் கண்மலர்களினின்றும் வருகின்ற நீர்த்துளிகள் கொங் கைகளின்மீதில் முத்துக்கள் சிந்தியிருப்பது போலிருக்கின்றன, இ வ்விதமாக நீ ஆருகைக்குக் காரணமென்ன? எந்தப்பாவி உன்னைத் துன்பப் படுத்தினன்? சொல், அவனை இப்போதே சகுடும்பமாய் தே சத்தினின்றுந் துரத்தி விடுகிறேன் என்று சொல்லக் கேட்டு சைரந்தி ரியானவள் அரசியை நோக்கி என்தாய்க்குச் சமானமாகியதேவி, நீ என் கண்ணைக்குத்திக் கண்ணீர்க்குக் காரணங் கேட்பது ஆச்சரிய மா யிருக்கிறது, நீ என்னை அந்தப்பாவி கீசகன் மனைக்கு அனுப்பி ஒன்று மறியாதவள்போல வினவுகிருய். உன் னேவலினலே பொற்பா த்திரத்தை எடுத்துக்கொண்டு அவன் மனையிற் பிரவேசிக்கக் கண் டு அவன் என் கையைப் பிடித்து வலுமை செய்ய ஆரம்பித்தான். அதற்கு நான் சம்மதிக்காமல் அருகிலிருக்கும் ராஜசபைக்கு ஓடி வந்தேன், வருமளவில் அவனும் பின்னே டோடிவந்து என் கூந் தலைப்பற்றி யிழுத்துத் தள்ளி கால்களால் யாவரும் பார்த்துக்கொ ண் டிருக்கையில் உதையுதை யென்று உதைத்தான். இன்னம் நான் சொல்லவேண்டுவ தென்ன இருக்கிறதென்று விக்கி விக்கி யழுது கொண்டே சொல்லாநின்ற சைரந்திரியைப் பார்த்து சுதேஷ்ணு தேவி மிகவு மிரக்கமுற்றுச் சொல்லுகிருள்.

கேளாய் சைரந்திரி, அந்தக் கீசகன் எனக்குப் பிராதாவானலும் பதிவிரதையாகிய உன்னைக் காதலித்தது மன்றி கால்களா லுதைத் ததனலே மிகவும் அயோக்கியனுயினன். அப்படிப்பட்ட துஷ்டன் இருப்பதைக்காட்டிலு மில்லாம லிருப்பதே நன்று. எனக்குப் பிரிய மாகியும் கற்பு முதலிய நற்குணங்கள் பூண்டவளுமாகிய உனக்கு ஆகாத பாவி எனக்கு மாகாதவனே. ஆனபடியினலே அவனைச் சங் கரிக்கவேண்டுமென்று உனக்குக் கருத் திருக்கிறதாகில் இப்போ தே அரசனேடு சொல்லி சங்கரிக்கச் செய்கிறேன் என்று சொல்லக் கேட்டு துரோபதி சொல்லுகிருள்.

கேளாய் எம்பெருமாட்டி, நீ யவனைத் தண்டிக்கவேண்டாம். ஏனென்றல் என்னுடைய கணவராகிய கந்தருவர் தங்களுக்குப் பிரி

யையாகிய என் விஷயத்தில் அபராதஞ் செய்த இந்தக் கீசகனைச் சும்மா விடமாட்டார்கள். அவர்களுக்குத் தீங்கு செய்து பிழைப்பவ ரில்லை. ஆனபடியாலே எல்லாவற்றையு மறிய வல்லவரும் எங்குஞ் சஞ்சரிக்க வல்லவருமாகிய அவர்கள் இச்செய்தி யறிந்து இன்றைக்கோ நாளைக்கோ அவனைக் கொல்லப் போகிறார்கள். நீ சித்தமாய் அவன் மசானஞ் சேர்ந்தவனென் றறி. இனியவன் பிழைக்கப்போகிற தில்லை, அந்தக் கந்தருவர் ஐவருக்குள்ளே ஒருவன் மகா கோப முடையவன், அபராதஞ் செய்தவனைக் குறித்து எள்ளளவேனும் பொறுக்கமாட்டான், அவன் கோபித்தால் இம் மூவுலகும் எதிரல்ல. ஆனபடியினாலே அவ னிந்தச் செய்தி கேட்டவுடனே சத்துருவாகிய கீசகன் பாதாளம் ஆகாச முதலாகிய எவ்விடத்திற்குப் போனாலும் பிடித்துச் சங்கரிப்பான். ஒருவனைப்பற்றி அவனைச் சேர்ந்த பலரும் நசிப்பார்க ளென்பதற்குத் திர்ஷ்டாந்தத்தை இந்தக் கீசகன் விஷயத்திலேயே காணப்போகிறாய் என்று சுதேஷ்ணையைப் பார்த்துச் சொல்லிப்போட்டு ஒரு பிரதிக்கினையும் பண்ணினாள். அதாவது, இந்தக் கீசகன் வதமடைகிற வரையில் நான் ஸ்நானஞ் செய்கிற தில்லை, உடம்பி லிருக்கும் புழுதிகளையுந் துடைக்கிற தில்லை, தண்ணீரு மருந்துவ தில்லை, மற்றென்னவென்றா லிப்படியே யிருப்பேன் என்று சொல்லக் கேட்டு அங் கிருந்த ஸ்திரீகள் வெகுவாய் அவளைச் சமாதானம் பண்ணினார்கள். அப்படி செய்தும் துரோபதி யங்கீகரிக்க வில்லை. அதனாலே அங்கிருந்தபேர்க ளெல்லாம் இனி கீசகன் பிழைக்கபோகிற தில்லை யென்று நிச்சயஞ் செய்தார்கள் என் றிப்படி சொல்லி வந்த வைசம்பாயன முனிவரை நோக்கி ஜநமேஜய மகாராஜன் வினவுகிறார்.

---

## கீசகன் வரலாறு.

---

சுவாமீ, மகா பதிவிரதையாகிய துரோபதியானவள் அந்தக் கீசகன் தன்னைக் காலா லுதைக்க என் சபியாம லிருந்தாள்? அந்தக் கீசக னென்கிறவன் யாருடைய குலத்திற் பிறந்தவன்? எத்தன்மையுள்ளவன்? எவ்வளவு பல முடையவன்? இதுகளை யெல்லாம் அடியேனுக்கு சவிஸ்தாரமா யுரைக்கவேண்டு மென்னக் கேட்டு அந்த

வைசம்பாயன முனிவர் ஜநமேஜய மகாராஜாவைப் பார்த்துச் சொல்ல வாரம்பித்தார்.

கேளும் ராஜாவே? நீர் கேட்ட சந்தேகத்தை விவரித்துச் சமாதானஞ் சொல்லுகிறேன். லோகத்தில் பிராமண ஸ்திரீயினிடத்தில் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவன் சூதனென்று சொல்லப்படுவான். அவனை க்ஷத்திரியனுக்குக் கீழ்ப்பட்டவனென்றும் வைசியனுக்கு மேற்பட்டவனென்றும் பெரியோர் சொல்லுவார்கள். ஆதிகாலத்திலும் இந்தக் காலத்திலும் க்ஷத்திரியர் அந்தச் சூத வமிசத்தில் சம்மந்தஞ் செய்யும் வழக்க முண்டு. ஆகிலும் சூதனென்று கிஞ்சித்து யீனமாகவே உலகத்தார் சொல்வார்கள். அப்படிப்பட்ட குலத்தில் கேகயராஜனென் றொருவன் பிரசித்தனு யிருந்தான். அவனுக்கு ராஜகன்னிகை என்கிறவளிடத்தில் சுதேஷ்ணை யென்பவளும், மாளவி யென்கிறவ ளிடத்தில் கீசகனென்கிற பெயருடைய நூற்றொருபேரும் பிறந்தார்கள். அவர்களில் கீசக னென்கிறவன் மூத்தவன். மகா பலசாலி, சிங்கபலனென்று பேர் பெற்றவன். அந்த விராடராஜனுக்கு சுரதை யென்று மூத்தபத்தினி யொருத்தி யிருந்தாள். அவள் வயிற்றில் சுவேதனென்றும் சங்கனென்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அந்தச் சுரதை சிலநாளில் சுவர்க்கலோகஞ் சென்றாள். அதன்பின்பு சுவேத னென்கிறவனும் சுவர்க்கமடைந்தான். சங்கனென்பவனே அம்மான் வீட்டில் வாசம்பண்ணிக்கொண் டிருந்தான். பின்பு விராடராஜன் அந்த சுதேஷ்ணையை விவாகஞ்செய்துகொண்டான். அவள் வயிற்றில் உத்தரையென் றொரு கன்னிகையும் உத்தரனென் றொரு புத்திரனும் பிறந்தார்கள். அந்த சுதேஷ்ணைக்கு உடன்பிறந்தவ னனதனாலும் சிங்கபலனென்று காரணப்பெயர் பெற்று சத்துருக்களை வெல்லும்படியாகிய சக்தியுள்ளவனுகையாலும் அந்தக் கீசகன் அந்த விராடராஜ னிடத்தில் அவனுக்குப் பலமாகவந்து சேர்ந்தான். அவனுடைய பிராதாக்களாகிய உப்கீசகரும் அவனுடன் கூடவே வாசம்பண்ணிக்கொண் டிருந்தார்கள். அந்தக் கீசகர் யாவரும் பூருவ ஜனனத்தில் காலகேய ரென்கிற கந்தருவர். அவர்கள் ஒரு காரணவசத்தாலே பூமியிலிப்படி வந்து பிறந்தார்கள். அந்தக் காலகேயருள் மூத்தவனுகிய பாண னென்கிறவன் இந்தச் சிங்கபல கீசகனுகப் பிறந்தான். அவன் பாலியத்திலேயே சகல அஸ்திரங்களையும் அப்பியாசஞ் செய்து பதினுயிரம் யானை பலமுள்ளவனுகி அந்த விராடராஜனுக்குச் சத்துருக்களா யிருக்கிறவர்களை யெல்லாஞ் ஜயித்து அந்த ராச்சியத்தை நிலைநிறுத்தி வந்தான்., அவனேடு திரிகர்த்த தே

சத்தார், தசார்ணதேசத்தார், கசேரு தேசத்தார், மாளவ தேசத்தார், யவன தேசத்தார், புளிந்த தேசத்தார், கோசல தேசத்தார், அங்க தேசத்தார், வங்க தேசத்தார், களிங்க தேசத்தார், டங்க தேசத்தார், மகததேசத்தார், இவர்களும் இன்னு மநேக ராஜர் முதலாகியவர்களும் யுத்தஞ் செய்து தோற்று ஓடிப்போனார்கள். இவ்வகையாய் அநேக லாபங்களை விராடனுக்கு வரச்செய்து அவனுக்குச் சேனாபதியா யிருந்தான். பலவானானதுபற்றி தேச முழுதும் அவனுக்கே சுவாதீனமா யிருந்தது; அரசனும் அவனுக்கு அஞ்சி யிருந்தான். அதனாலே தான் துரோபதியை யுதைத்ததை யனியாயமென் றறிந்திருந்தும் உபேக்ஷையா யிருந்தான். துரோபதியும் வீமனாலே இவனுக்கு மரணம் சித்தமாய் நேரிடுமென்று அறிந்து தான் சாபங் கொடாம லிருந்தாள். அந்த விராடராஜனுக்கு நல்ல பலசாலிகளாகிய பதினைவர் தம்பிமார்க ளுண்டு. அவர்களும் அந்தக் கீசகனுக்குள் ளடங்கியே இருந்தார்கள், இதுதான் கீசகனுடைய சரித்திரம். நீர் சந்தேகப்பட்ட விஷயங்களுக் கெல்லாம் சமாதானஞ் சொன்னேன். கேளுமையா ஜநமேஜய மகாராஜாவே? அதற்குப் பின் நடந்த சரித்திரத்தைச் சொல்லுகிறேன்.

---

## கீசக சங்கார கதை.

---

துரோபதியானவள் அன்று இராத்திரியிலேயே கீசகனை மடிக்க வேண்டுமென்று கருதி அது வீமனாலேதான் சித்திக்கு மென்று எண்ணி சுதேஷ்ணைக்கு முன்பாக கீசகன் சாகிறவரையில் ஸ்நான முதலானவை செய்கிற தில்லையென்று சொன்னபடியினாலே பகலெல்லாஞ் சும்மாயிருந்து இரவில் யாவரும் நித்திரைசெய்த பின் ஸ்நானஞ் செய்து நல்ல வஸ்திரந் தரித்து அலங்காரத்தை யடைந்து தருமபுத்திருடைய பாதங்களை மனதில் தியானஞ் செய்துகொண்டு மெள்ள நடந்து மடப்பளிக்குப் போய் வெளுத்த வஸ்திரத்தினாலலங்கரிக்கப்பட் டிருக்கிற கட்டிலின்மீதில் படுத்துக்கொண் டிருக்கிற வீமசேனனைக் கண்டு வீணையி னொலிபோன்ற தன் மிடற்றோசையினாலே ஸ்ரீமஹாவிஷ்ணுவை லக்ஷிமிதேவி எழுப்புவது போலவும் உருத்திரமூர்த்தியைப் பார்வதிதேவி யெழுப்புவதுபோலவும் எ

முப்பினுள். அப்போது அவள் சொன்னதாவது ஓய் வருஷாகாலத்து விருஷபம்போன்ற ராஜகுமாரரே? நீர் உமது சத்துருவாகிய கீசகனைச் சங்கரியாமல் உடம்பு மறந்து நித்திரைசெய்கிறது ஆச்சரியமா யிருக்கிறது! என்னை அபகரிக்க நினைத்து அதற்கு வசப்படாமற் போனதைக் கண்டு காலினு லுதைத்த சத்துருவை உயிரோடு வைத்து தூக்க முமக்கு எப்படி வந்தது? என்று சொல்லி யெழுப்பவே வீமன் திடீலென் றெழுந்திருந்து அருகில் நிற்கும் துரோபதியைப் பார்த்து அறியாதவனைப்போல் ஓகோ துரோபுதி இந்த நல்லிருளில் நீ யொருத்தியாய் இங்கேன் வந்தாய்? உனக்கு என்ன பயம்? உன் விஷயத்தில் அபராதஞ் செய்த ஜடாசுரன் முதலாகிய ராக்ஷசரை யெல்லாங் கொன்றேனே, இப்போ தப்படி யாராகிலும் உனக்கு அபகாரஞ் செய்திருந்தால் சொல்லு. அவனையும் இந்த க்ஷிஷத்திலேயே சங்கரித்துப் போடுகிறேன் என்று சொல்லிய வீமனை நோக்கி துரோபதி கோபத்தோடு ஒரு வார்த்தை சொல்லுகிறுள். என்ன ஐய, நீர் இப்படி பேசுகிறீர்? கீசகன் என்னை வெள்ளாட்டியைப்போல் காலினுலே உதைத்ததை கண்ணுற் பார்த்திருந்தும் ஒன்று மறியாதவரைப்போல் நீர் வினவுதல் தகுதியல்லவே? மகாராஜாவாகிய தருமபுத்திரருக்குப் பாரியையா யிருந்து அப்பரால் இப்பாடுபடி மெனக்கு விசனம் என்பது உண்டோ? விசனத்தை அனுபவிப்பதற்கே பெண்ணுய்ப் பிறந்த நான் சொல்லவேண்டுவ தொன்று மில்லை. துருபத மகாராஜனுக்குப் புத்திரியாகியும் உங்களுக்குப் பத்தினியாகியு மிருக்கிற நான் புஷ்பிணியா யிருக்கும்போது பாவி துச்சாதனனுல் சபையில் கொண்டுவரப்பட்டு துரியோதனன், கர்ணன், முதலான பேர்களால் கொடுஞ்சொற்கள் சொல்லப்பட்டு மானபங்கமும் செய்யப்பட்டேனே? அப்போது என் துக்கத்தை யார் தீர்த்தார்கள்? பீஷ்மர், துரோணர் முதலானபேர்களும் பார்த்துக்கொண்டு சும்மாத்தானே இருந்தார்கள். நீங்களோ ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு நின்றீர்கள். அப்படிப்பட்ட மகா ஆபத்தில் சகல லோகநாதராய் கருணைப் பெருங்கடலாய் யதுகுலத்தி லவதரித்த நீலமேகம்போன்ற அந்த மகாபுருஷரல்லவோ மானத்தைக் காத்து ரக்ஷித்தார்! பின்பு பன்னிரண்டு வருஷம் காட்டில் காய் கிழங்குகளைத் தின்று முட்களிலும் கற்களிலும் சஞ்சரித்து உருமாறி இந்தப் பட்டணத்துக்கு வந்து நமக்குக் கீழ்ப்பட்ட ராஜ ஸ்திரீக்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கிறதும் பூதொடுத்துக் கொடுக்கிறதும் வஸ்திர முடுத்துகிறதும் இப்படி யநேகம் ஏவல்கள் செய்துகொண்டு வருகிறேனே? இதோ பாரும் எனது கைக ளெல்லாம் கன்றிப்போயின, இதுகளெல்லா மிரு

க்கட்டும் கீசகனென்னும் ஒரு அற்ப மனிதனாலே யாவரும் பார்க்க நன்றா யுதைக்கப்பட்டு அவனது கால் புழுதிகள் தேக மெல்லாம் படிந்திருக்கும்படி யானேன். இந்த விதியைப் பார்க்கிலும் என க்கு வேறு துக்கமுண்டோ? இப்போதும் என்னை அந்த பகவான் காப்பாற்றவேண்டுமே யல்லது மற்றை யார் காப்பாற்றுவார்கள்? அக்கினியிற் பிறந்து வெகு மேன்மைகளைப் பெற்ற என்னைப்போ ன்ற மாதருக்கு இவ்விதமாகிய துக்கங்களை யனுபவிப்பதை விட மரண மடைவதே விசேஷ மானபடியினாலே இப்போதே நான் வி ஷத்தைத் தின்ன நினைக்கிறேன். நெருப்பிலாகிலும் விழுகிறேன். கத்தியினா லாகிலும் தேகத்தை வெட்டிக்கொள்ளுகிறேன். நாளைய காலையில் அந்தக் கீசகன் சூரியனைக் காண்பானாகில் உடனே நா னுயிரை விடுவேன். பூமண்டல முழுவதையும் ஓர் குடையின் கீழாண்டு இப்போது சகல சம்பத்துக்களையும் துறந்து சந்நியாசி வேடம்பூண்டு வயிறு வளர்ப்பதற்காக விராடராஜனுக்குச் சந்தோ ஷமாய் சொக்கட்டா னாடிக்கொண் டிருக்கிற தருமபுத்திரரோடு இந் தக் காரியத்தைச் சொல்லலாமா? மூன்று லோகங்களையும் ஒருவனா கவே ஜயிக்கும்படியான பாகுபலம் அஸ்திர பலமுள்ள மகா வீரசி காமணியா யிருந்து பேடி வேடந் தரித்து பின்னலும் ரவிக்கையு மாக கன்னிகைகளி னடுவே இருந்து ஆடல்பாடல்களைக் கற்பித்துக் கொடுத்துப் பிழையாநின்ற அர்ச்சுனனோடு இதைச் சொல்வதிற் பயனென்ன? இவர்களைப் பார்க்கும்போதும் நினைக்கும்போதும் வெ கு விசனமா யிருக்கின்றது. அப்படியே உமது விஷயத்திலும் விச னப்படவேண்டுவதா யிருக்கின்றது. ஏனென்றால், நீர் ஒருகாலத் தில் புலிகள், சிங்கங்கள் முதலான துஷ்ட மிருகங்களோடு அரசன் முன்னிலையில் போர்செய்யுமளவில் அந்த மிருகங்கள் உம்மீதிற் பாய நீர் அஞ்சியவர்போல் சற்றே பின்னிடையக் கண்டு சுதேஷ் ணாதேவியானவள் கவாக்ஷத்தி லிருந்து சிரித்தாள். ஏனென்றால் உம து மகிமையை அறிந்துகொள்ளாமல் உம்மைச் சாதாரணமாய் பாக சாலை யூழியக்கார னென்றே நினைத்து அறியாமையாலே மிருகங்க ளோடு யுத்தஞ்செய்யப் போய் அகப்பட்டுக்கொண்டதா யெண்ணி யபடியால் சிரிக்கும்படி யாயிற்று. இதுவுமன்றி அந்த யுத்தங்களி லேயே உமது தேகங்களி னின்றும் உதிரம் வடியவுங் கண்டு நான் உம்மைப் பார்க்கச் சகிக்காமல் தலை யிறங்கிக்கொண்டு போனேன். அப்போது அந்தச் சுதேஷ்ணை தனது தோழிகளைக் கூப்பிட்டு தோ ழிகளே? பாருங்கள் இந்த வல்லனுக்குத் துயரம்வருவதைப் பார்க் கமாட்டாமல் இந்தச் சைரந்திரி முகம் வாடப் பெருமூச்செறிந்து

கொண்டுபோகிறாள். இதனாலே இவளுக்கு மவனுக்கும் மனங்கலந்த
நேச மிருக்கலாம் என்று எனக்குத்தோற்றுகிறது. ஏனென்றால் இ
வ்விருவரும் தருமபுத்திர மஹாராஜாவினிடத்தில் நெடுநாள் வாசஞ்
செய்துகொண்டு இருந்தார்க ளல்லவோ? இவளும் மங்கைப் பரு
வமும் அழகும் பொருந்தியவள். அவனும் அப்படிப்பட்ட குணமு
டையவனாகி இவளுக்கு ஏற்றிருக்கிறான். ஆனதுபற்றி யப்படிப்ப
ட்ட சம்மந்தமுண்டா யிருக்கலாம். இல்லாவிட்டால் அவனுக்காக
இவளுக்குத் துக்கம் வரவேண்டுவ தென்ன என்று சொல்லி நகை
த்தாள். இந்தக் காரணங்களினாலே உம்மைக் குறித்தும் நான் விச
னப்பட வேண்டுவதா யிருக்கிறது. மிகவு மேன்மையுள்ள நாம் யாவ
ரும் இழிவான தொழில்களைச் செய்வதற்காகப் பொதுவாய் விசன
ப்படவேண்டியதா யிருக்கிறது மல்லாமல் விசேஷமாய் அவரவர்க
ளைக்குறித்தும் விசனப்படவேண்டி யிருக்கிறதே? இவை யெல்லாம்
எனது துர்ப்பாக்கியங்களே தவிர வேறில்லை. இப்படி நீங்கள் பணி
விடைசெய்து வ்ருத்தப்பட்டுக்கொண் டிருக்க, என் விஷயத்தில் கீச
கன் செய்ததை நான் சொல்வதிற் பயனில்லையே? என் றிப்படி து
ரோபதி சொல்லக் கேட்டு வீமனுக்கு மிகுந்த கோப முண்டாகி செ
ந்தாமரை மலர்போன்ற கண்கள் மிகவுஞ் சிவந்தன. அதுகண்டு
துரோபதி சமாதானமாக மறுபடி யொரு வார்த்தைச் சொன்னாள்.

வாரீர், ராஜகுமாரரே? நான் இவ்வளவு கடினமாகப் பேசிய
தெல்லாம் வெறுப்பினாலேயே யன்றி வேறு காரணத்தினா லன்
று. அதாவது, தருமபுத்திரர் நித்திரைவிட் டெழுந்திருக்கும்போது
அநேக சங்கவாத்தியங்களும், துந்துமி வாத்தியங்களும், பேரி வாத்
தியங்களும், இன்னு மநேக வாத்தியங்களும் முழங்கு மல்லவோ?
அன்றியும் வந்திகள் சகல பூஷணங்களா லலங்காரம் பெற்று துதி
ப்பார்க ளல்லவோ? அவர் புறப்படும்போது அநேக ஆயிரம் சேனை
கள் சூழ்ந்து புறப்படுவார்களே? அப்படிப்பட்ட மஹாராஜா அற்ப
னாகிய விராடராஜ னிடத்தில் அடங்கிச் சொக்கட்டா னாடிக்கொ
ண் டிருக்கிறாரென்கிறதை நினைத்தும் அப்படியே நீரும் அர்ச்சுன
னும் சாமர்த்தியங்களை யெல்லாம் மறைத்துக்கொண்டு அற்பர்
போல் பணிவிடை செய்கிறதைப் பார்த்தும் நகுல சகாதேவர்
குதிரை, மாடுகளை மேய்க்கிறத்தைச் சிந்தித்தும் உண்டாகிய விசன
த்தினாலே சொன்னேனே யல்லது எனக்கு சவுக்கிய மில்லை யென்
பதுபற்றி யன்று. இதுவு மன்றி உலகத்தில் ஒரு அற்பனைக் கைப்பிடி
த்த ஸ்திரீயும் மேன்மையுடன் போகங்களை யனுபவிக்கிறாள். நானோ

ரூபம், சவுரியம், கல்வி, அறிவு, தயை, தாக்ஷண்ணிய முதலிய நற்குணங்கள் இவைக ளெல்லாம் பொருந்தி மஹா குலத்திற் பிறந்த மஹாராஜவின் குமாரராகிய ஐவரைப் பதிகளாக அடைந்தும் இப்படி வருத்தப்படும்படியாக இருக்கிற என் துர திருஷ்டத்தை யோசித்தும் உண்டாகிய வயிற் றெரிச்சலால் உம்மை வெறுத்தேன். இந்தத் துக்கங்க ளெல்லாம் எனக்குப் பெரிதல்ல. கற்பு கெடும்படி நேரிட்டு கீசகன் கால்களா லுதைப்பட்டதனாலேதான் அதிக விசனமுண்டாகின்றது என்று துரோபதி சொல்லிய வார்த்தையைக் கேட்டும் சந்தன மரைத்துக் காய்த்திருக்கிற அவள் கைகளைப் பார்த்தும் வீமசேனனுக்கு அளவில்லாத விசன முண்டாயிற்று. அப்படி விசனப் படுகிறபோது மறுபடியும் துரோபதி சொல்லுகிறாள்.

'வாரீர் மகாபுருஷரே? நீர் இப்படி விசனப்பட லாகாது. மகா பலசாலியான உமக்கு அந்தக் கீசகனைச் சங்கரிப்ப தொரு விஷயமோ? மதயானைக்கு மரத்தின் கிளை லக்ஷிய மல்லவே? என்று சொல்லிய துரோபதியைப் பார்த்துச் சமாதானமாக வீமனொரு வார்த்தை சொல்லுகிறான். அந்தக் கீசகன் உன்னை யுதைக்கும்போது நான் சகிக்க மாட்டாமல் அந்த நிமிஷத்திலேயே அவனைச் சங்கரிக்கும்படியான யத்தினஞ் செய்தேன். அதுகண்டு தருமபுத்திரர் கண் சைகையினால் என்னை யழைத்து இங்கே நீ யிந்தக்காரியஞ் செய்யத் தகாதென்று அமர்த்தினார். அந்தக் கட்டளையின்படி சும்மா விருந்தேன். இல்லாவிட்டால் அவ னுயிர் அன்றே போயிருக்கு மல்லவோ? இதிருக்கட்டும். எங்களுக்குப் பல மிருந் தென்ன, சவுரிய மிருந்தென்ன, காண்டீவ முதலான திவ்யாயுத பல மிருந்துதானென்ன? உன் கைக ளிவ்விதமாய்ச் சிவந்து உன் மேனி ஒரு பாதகன் பாததூளினால் பூசப்பட்டதே! இதைக் கண்களாலே பார்த்துக்கொண் டிருந்த எங்களுக்கு ஆண்மையேது? இராச்சியம் விட்டு அரணியம் வந்தும் கவுரவரைக் கொல்லாம லிருக்கிறதும் உன்னைச் சபையிற் பிடித்திழுத்த துச்சாதனன் மார்பைப் பிளவாமலிருக்கிறதும் என் இருதயத்தை யறுக்கின்றன. ஆனாலும் அந்தக் கோபங்களை யெல்லாம் இந்தக் கீசகன்மீதிற் பிரயோகித்துத் தீர்க்கிறேன். இந்த விஷயத்தில் தருமபுத்திரர் பேச்சையும் அர்ச்சுனன் பேச்சையுங் கேட்க மாட்டேன். இதை நீ நிச்சயமாய் நம்பு. உனக்குக் கொஞ்சகாலம் வருத்த மனுபவிக்கும்படியானதைக்குறித்துச் சிந்திக்கவொண்ணாது. முற்காலத்தில் சனக மகாராஜன் மகளாகிய சீதை வெகுநாள் அரண்ணியத்தில் வாசஞ் செய்துகொண் டிருந்து இராவணனால் இலங்கைக்குக் கொண்டுபோய்

மிகவும் வருத்தப்படுத்தப்பட்டு கடைசியில் சத்துருக்களை மடித்து அயோத்தி சென்று சவுக்கியமா யிருந்தா ளல்லவோ? லோபாமுத்திரா யென்பவள் அகத்தியமாமுனிக்கு வெகுநாள் மெய்வருந்தி சிசுருஷை செய்து நல்ல ஆகாரங்கூட யில்லாமல் கஷ்டப்பட்டு கடைசியில் நல்ல கீர்த்தியையும் சுகத்தையும் அடைந்தா ளல்லவோ? யயாதிமகாராஜாவின் மகளாகிய சுகன்னியென்பவள் சவனனென்னும் முனிவருக்கு காட்டில் வெகுநாள் சிசுருஷை செய்து நல்ல புண்ய லோக மடைந்து சவுக்கியப்பட்டா ளல்லவோ? தமயந்தியானவள் தன் கணவனாகிய நளமகாராஜனை யனுசரித்துக் காட்டிற்போய் வெகு சிரமத்தை யடைந்து கணவனையும் பிரிந்து அலைந்து முடிவில் சுகத்தை யனுபவிக்க வில்லையா? இப்படி எத்தனையோ ராஜகன்னிகைகள் வருந்தி சுகத்தை யடைந் திருக்கிறார்கள். அப்படியே நீயும் இன்னு முப்பது நாட்கள் கழிந்தவுடனே யாவரிலும் மேலாய் மகா சவுக்கியங்களை யனுபவிக்கப்போகிறாய். இந்தக்கொஞ்ச நாட்களை மாத்திரம் மனவலிமையோடு சகித்திரு. அப்போது நாமும் விசனத்தை யனுப வித்தோமா வென்று நினைக்கும்படி யிருக்கும் என்று வீமன் சொல்லியதைக் கேட்டு துரோபதி சொல்லுகிறாள். இனிமேல் சவுக்கியம் கிடைக்கட்டும், கிடைக்காமற் போகட்டும். இப்போது நேரிட்ட துக்கத்திற்கு எதுவும் சரியாகமாட்டாது. அந்த அற்பனாகிய கீசகன் என்னைச் சாதாரணமானவளாக நினைத்து புணர்ச்சியைக் குறித்து வலிமை செய்யவும், நான் ஐவர் கந்தருவருக்குப் பத்தினியா யிருக்கிறவள், அவர்களோ மிகுந்த பலபராக்கிரமங்களுள்ளவர்கள், அதி கோபமுடையவர்கள், அவர்களுடைய சத்துருக்கள் பிழைக்க மாட்டார்கள், அவர்கள் எல்லாந் தெரிந்தவர், எங்குஞ்சஞ்சரிக்க வல்லவர். ஆனதுபற்றி என்விஷயத்திற் செய்யுந் துன்பங்களை யறியாமற் போக மாட்டார்கள் என் றிப்படி பலவகையாய் நான் மறுத்துச் சொல்லவும், லக்ஷியம்பண்ணாமல் என் கையைப் பிடித்திழுக்க நான் திமிறிக்கொண்டு சபைக்கு வரப் பின்னேயோடிவந்து கூந்தலைப்பற்றி இழுத்துத் தள்ளிக் கால்களா லுதைத்தானே? இந்தத் துக்கம் ஆறுமோ? அந்தப் பாதகனை இப்போதே கொலை செய்தால் கிஞ்சித்து திருப்தியா யிருக்கும். அப்படி யில்லாமல் நமது அஞ்ஞாதவாசம் முடிகிறவரையில் சும்மா விருந்தால் என் கற்பை அவன் அழிப்பான். இந்தமானம் போன பின் நீங்கள் ஜயித்தா லென்ன? சும்மா விருந்தா லென்ன? ஆதலால் இப்போதே அவனைக் கொல்ல வேண்டும். நாளைக்கு உதயகாலத்தை அவன் காண்பானாகில் நான் உயிரை விடுவேன் என்று சொல்லி அவ

ன் மார்பின்மீது சார்ந்து கண்ணீரைப் பெருக்கக் கண்டு அந்த வீமன் அவளை அணைத்துச் சமாதானஞ் செய்து தன் வஸ்திரத்தின் நுனியாலே யவளது கண்ணீரைத் துடைத்து சத்துருவைக்குறித்து வெகு கோபத்தை யடைந்து உதட்டைக் கடித்து பற்களையும் நறநற வென்று கடித்து அப்படியே கீசகனைக் கொல்லுகிறே னென்று பிரதிக்கினை செய்தான்.

கேளும் ஜநமேஜய மகாராஜாவே? வீமன் இவ்வாறு பிரதிக்கினைசெய்து மறுபடியும் துரோபதியைப் பார்த்து, சமாதானமா யொரு வார்த்தை சொல்லுகிறான்.

வாராய் துரோபதி? நீ கீசகனைக்குறித்து கிஞ்சித்து மஞ்ச வேண்டிய தில்லை. அவன் மரித்தா னென்றே நினை. ஆனால் இப்போது விடியற்காலமனது பற்றி அவனைச் சங்கரிக்க முயற்சி செய்ய யுக்தமாயிருக்கவில்லை. அப்படி செய்வதனாலே நமது ரகசியம் கொஞ்சம் வெளிவிழும். அதனாலே தருமபுத்திர மகாராஜாவினுடைய சித்தம் கலங்கும். ஆகையால் இந்தவேளை பொறுத்திருந்து நாளைக்கு நான் சொன்னபடி செய்வாயாகில் அவனை நான் சித்தமாய்ச் சங்கரிக்கிறேன். அதாவது நாளைக்குச் சாயங்காலம் அந்தக் கீசகன் சுதேஷ்ணாதேவியின் மனைக்கு வருவான். அங்கிருக்கு முன்னைக் கண்டு இதமாய்ப் பேசவும் பேசுவான். அப்போது நீ அவனோடு சிநேகமுள்ளவளைப்போல் பேசு. என்ன பேசவேண்டு மென்றால், ஐய, நீர் என்மீதி லாசைப்படுவதற்கு முன்னேயே உம்மிடத்தில் எனக்கு மிகுந்த ஆசைதான். ஆனால் ஆண்பிள்ளைகளுடைய சித்தம் உறுதிப்பாடுடைய தல்ல. ஆதலின் உமது கருத்தைச் சோதிக்கிற நிமித்தம் இஷ்டமில்லாதவள் போல அபிநயித்தேன். நீர் பெண்கள் சுபாவம் கொஞ்சம் மறைவுள்ளதென்று அறியாமல் என்மீதிற் கோபித்தீர். அதனாலெனக்குக் கோபமில்லை. இப்போது நீர் என்னை விரும்பியதனாலே நான் மிகுந்த புண்ணியஞ் செய்தவ ளென்று நினைக்கத் தக்கவ ளாயினேன். ஆனால், நான் சொல்லும் பேச் சொன்றை நீர் செவியுற்றுக் கேட்டு அப்படி செய்யவேண்டும். அதென்ன வென்றால், என்பர்த்தாக்களாகிய கந்தருவர் இந்தச் செய்தி யறிந்தால் உமக்கும் எனக்கும் கேடு வந்து நேரிடும். அதற்காக வெளிப்படையான விடத்தில் நாம் பேசுவதும் தகுதியல்ல. மற்றென்ன செய்யவேண்டுமென்றால், நமது நாடகசாலையில் கன்னிகளெல்லாம் சாயங்காலத்துக்குள்ளாக நடனம் பயின்று வீட்டுக்குப் போவார்கள். இரவில் ஒருவரு மிருக்கமாட்டார்கள்.

சாதாரணமான பேர்களாவது ஒருவரும் அங்கேவருகிற வழக்கமில்
லை. அப்படி ஏகாந்த ஸ்தானமாகிய் அவ்விடத்தில் நீர் ரகசியமாய்
வந்திருந்தால் நானும் யாவரும் நித்திரை செய்யப் பார்த்து அவ்விட
த்தில் வருகிறேன். அங்கே நாமிருவரும் இஷ்டமானபடி விளையா
டுவோம். இப்படிசெய்வது யுக்தமாயிருக்கிற தென்று நீ சொல்லு.
அதைக் கேட்டு அவன் அங்கீகரித்து அப்படியே காம மோகத்தின்
மிகுதியால் அவ்விடம் வருவான். அப்போது நான் உன்னுடன் கூட
வந்து அவனை யமலோகத்திற் கனுப்புகிறேன் என்று சொல்லிய வீ
மன் பேச்சைக் கேட்டு துரோபதி மனக்களிப்புற்று அந்தப்புரத்தி
ற்கு வந்து தான் நித்தியமாய் சயனிக்கிற விடத்தில் சயனித் திருந்
தாள். இப்படியிருக்க, அவளது மனக்கலக்கம் போனது போல் அவ்
விரவும் போயிற்று. அவளுக்குச் சந்தோஷ முண்டானது போல் சூரி
யபிம்ப முதயமாயிற்று. அவள்முகம் மலர்ந்தது போல் தாமரைகள்
மலர்ந்தன. சூரியனது கிரணங்கள் நாற்றிசைகளிலும் பரவியதுபோ
ல் பறவைக ளெல்லாம் தமது கூடுகளைவிட்டு நாற்புறமும் பரவின.
வேதியர் முதலிய சகலவருணத்தாரும் வேதமோதுதல் முதலாகிய
தத்தமது தொழிற்களிற் பிரவேசித்தார்கள்.

இவ்வாறு அந்தக் கீசகனுடைய வாழ்நாட்களின் முடிவான
அந்ததினம் விளங்க அந்தத் துரோபதி நித்திரைவிட் டெழுந்து கீ
சகன் வரவையும் இரவையும் எதிர்பார்த்துக் கொண் டிருந்தாள்.
அந்தக்கீசகனோ பொழுது விடிந்தவுடனே நித்தியகருமங்களை முடி
த்து தங்கையாகிய சுதேஷ்ணையின் மனைக்குப் போனால் சைரந்தி
ரியை இன்னொருதரம் கண்ணுற்காணலாமே என்று நினைத்து அந்த
மனைக்குப் போனான். அவன் வருவதைக் கண்டு துரோபதி இடையா
ம லங்கே யிருக்கவே கீசகன் வெகு சந்தோஷ உல்லாசங்களோடு
அவளது சமீபத்திற் சென்று சொல்லுகிறான்.

வாராய் பெண்மணியாகிய சைரந்திரீ ? என்மனம் உன்னைவிட்
டுப் பிரியவில்லை. நீயே என்னுயி ரென்று சொல்லத்தக்கதாயிருக்கின்
றது. ஆனால் உன்னை நானுதைத்தேனே, அது என்மீதிற் பிழையே.
அதை நீ தயைசெய்து பொறுக்க வேண்டும். அப்படி நானுதைத்தது
ஒரு காரியத்திற்காக வென்று நினை. அதென்ன வென்றால் சபையில்
அரசனும் மற்றவரும் பார்த்துக் கொண்டே யிருக்கையில் நா னுன்
னை யுதைத்ததைக்குறித்து அரசன் என்னை யாதாகிலுஞ் சொன்னா
னா? சும்மாத்தானே இருந்தான். இதனால் நான் முன் உன்னோடு சொ

ல்லியபடி எனக்கு அரசன் பயப்படுகிறு னென்பது விளங்கிற்றல்
லவோ ? நான் மரியாதையினாலும், தயையினாலும், அந்த விராடராஜ
னைச் சிங்காதனத்தி லுட்கார வைத்திருக்கிறேன். ஆளுகையோ நா
னேசெலுத்தி வருகிறேன். இவ்வளவு மேன்மை பெற்றிருக்கிற என்
பேச்சை நீ யங்கீகரியாமற்/போவது நன்மை யன்று. அங்கீகரித்து ந
டந்தாயே யாகில் சகல சவுக்கியங்களும் உனக்குக் கிடைக்கும். யா
வரிலும் நீ மேலா யிருக்கலாம். இப்படியில்லாமல் பணிவிடைசெய்
துகொண்டு பிழைப்பது உனது ரூபலாவண்ணிய சவுந்திரியங்களு
க்கும் பருவத்திற்குந் தகுதியல்ல. நல்ல வீடுகளும் நாலு குதிரைகள் க
ட்டிய ரதங்களும், பல்லக்குகளும், திவ்ய வஸ்திராபரணங்களும்
இவைக ளெல்லாம் உனக்குத் தருகிறேன். வேண்டியபடி யனுபவி
என்று கீசகன் சொல்லியதைக் கேட்டு பாஞ்சாலியானவள் வீமன்
சொல்லச்சொன்னபடி நாடகசாலையில் ஒருவனாக வரவேண்டுமென்
று சொன்னாள். அதுகேட்டு கீசகன் மனதிற் சந்தோஷம் பொங்க
துரோபதியைப் பார்த்து அடி என்கண்மணியே? இப்பொழுதன்றோ
என் செவிகளுக்கு அமுதூட்டினாய்! இன்றைக்கன்றோ நான் நற்பிற
விபிறந்தேன்! என் தவங்க ளெல்லாம் இன்று தான் பயன்பட்டன!
அடி பெண்மணியே? நீ கட்டளை யிட்டபடிக்கு ஒருவனாகவே அந்த
நாடகசாலைக்கு வருகிறேன். உனக்கு நல்ல வஸ்திரங்கள், ஆபரணங்க
ள், புழுகு, சவ்வாது முதலாகிய பூச்சுகள், பூமாலைகள், நல்ல போசன
ம், பானம், முதலானவைகளை நானே கொண்டு வருகிறேன். அவைக
ளை யங்கீகரித்து என்கோரிக்கையைப் பயன்படுத்தவேண்டும். என்
மீது இங்ஙனமே யென்றும் கிருபையா யிருக்கவேண்டும் என்று கீச
கன் சொல்லக்கேட்டு சைரந்திரி சொல்லுகிறாள்.

வீரீர் ரசிக சிரோமணியே ? இவ்வாறாக என்மீதில் அதிக கிரு
பை வைத்திருக்கு முமக்குப் பிறந்தநாள்முத லிதுவரைக்கு மறியா
த சுகத்தை யுண்டாக்கு கிறேன். நீர் மனைக்குச் சென்று சாயங்காலமா
னவுடனே நான் குறித்த விடத்திற்கு வந்துசேரும். நானே உமக்குமு
ன்னமே அவ்விடம் வந்திருப்பேன். என்று துரோபதி சொல்லியதை
க்கேட்டு கீசகன் அப்படியே யாகட்டு மென்று சொல்லி தன் மாளி
கைக்குச் சென்று மங்கள ஸ்நானஞ் செய்து நல்ல வஸ்திராபரணங்
களைத் தரித்து நல்ல போசனத்தைப் புசித்து தேக மெல்லாம் புழுகு
முதலிய சுகந்தங்களைப் பூசி சிகைதனிலே புஷ்பசரங்களைத் தரித்து
வெகு உல்லாசத்தோடு அஸ்தமய காலத்தை எதிர்பார்த்துக்கொண்
டிருந்தான். துரோபதியோ ஸ்நானஞ் செய்து அலங்காரஞ் செய்து

கொண்டு இரவு வந்தபின் ஒருவருஞ் சஞ்சரியாமலிருக்கிற தருணத்தில் சுதேஷ்ணையின் அந்தப்புரத்தினின்றும் புறப்பட்டு வீமனிருக்குமிடஞ் சென்று நிற்க அந்த வீமன் இவளைப் பார்த்து அடிபாஞ்சாலராஜன் மகளே ? யான் சொல்லிய உபாயத்தின்படி செய்தாயோ? ஒருவேளை அப்படி சரிப்படாமற் போனாலும் வெளிப்பட்டாவது அவனைச் சங்கரியாமற் போகமாட்டேன். அதைக்குறித்து நீ சிந்தைப்படாதே. ஆனால் நமது அஞ்ஞாதவாசத்திற்கு இடை யூறுவருமே என்றஞ்சுகிறேன், ஆனாலு மாகட்டும். உனக்கு விரோதியா யிருக்கிற அவனைக் கொல்லாமற் போகமாட்டேன். கூடுமானமட்டில் ஏகாந்தமாய்க் கொலை செய்தால் நல்லது. அப்போதும் அவன் கூப்பிடுவானாகில் ஜனங்க ளிங்கே வந்து கூடுவார்களே? அப்படி கூடுஞ் ஜனங்களையுங் கொல்வேன். அன்றியும் இப்பட்டணத்தி லிருக்கும் யாவரையுங் கொன்று கவுரவருக்கு இச்செய்தி சொல்லுவா ரில்லாமற் செய்கிறேன். ஒருவேளை யாராகிலும் தப்பிப்போய் கவுரவருக்கு இச்செய்தி சொன்னாலென்ன செய்கிறதென்றால் உடனே போய் அந்தத் துரியோதனனாதி கவுரவரையுங் கொன்று அந்த ராச்சியம் இந்த ராச்சியம் இவ் விரண்டு ராச்சியங்களையும் நமது யுதிஷ்டிரருக்குக் கொடுக்கிறேன். இந்த அஞ்ஞாதவாசமே நமக்கு வேண்டுவ தில்லை என்று மிகுந்த கோபத்தோடு சொல்லிய வீமனைப் பார்த்து துரோபதி சொல்லுகிறாள்.

கேளும் வீரசிகாமணியே? நீர் சொல்லிய உபாயத்தின்படியே சொல்லி அந்தப் பாதகனை நாடகசாலைக்கு வரும்படி செய்திருக்கிறேன். அங்கே நீர் வந்து ஒருவருக்குந் தெரியாமலும் கூச்சலில்லாமலுங் கொல்லவேண்டும். அப்படி யல்லாமல் கோபாதிசயத்தால் வெளிப்படையா யிவனைக் கொல்வீராகில் அது யுதிஷ்டிரருடைய சித்தத்துக்கு மிகவும் துக்கமதுவா யிருக்கும். அப்போது அவர் என்மீதில் மிகுந்த கோபத்தை வைப்பார். இப்படி யாவதினால் நான் பதிவிரதை யாகாமற்போவேன். ஆனதுபற்றி நீர் வெளிவிழுகிற பக்ஷத்தில் நானுயிரை விடுவேன், சந்தேக மில்லை. மேலும் நீங்களும் பிரதிக்கினை செய்த அஞ்ஞாத வாசத்தை நிறைவேற்றாமல் பொய் சொன்னவர்களாவீர்கள். ஆதலால் நீர் மனம் பொறுத்து ரகசியமாகவே சங்கரிக்கக் கோருகிறேன் என்று சொல்லிய துரோபதியைப் பார்த்து வீமசேனன் நல்லது உன் மனதின்படியே யாகட்டும். இப்போது நான் நல்ல வெள்ளை வஸ்திரத்தினா லுடம்பை மறைத்துக்கொண்டு முன்னே நடக்கிறேன், நீ மெள்ள என் பின்னேவா. அந்த நாடகசாலையில்

உன்னை யோர்புறத்தில் வைத்து அதின் முன்புறத்தில் கட்டி லொன்றைப் போட்டு நான் முகத்தை மூடிக்கொண்டு படுத் திருக்கிறேன். அந்தத் துஷ்டன் என்னை நீ என்று எண்ணி கிட்டவருவா னல்லவோ? அப்போது அவனைப் பிடித்து மதயானை கரும்பைப்பற்றி முறிப்பதுபோல் முறிக்கிறேனென்று சொல்லி அப்படி முன்னே நடந்தான். துரோபதியும் பின்னே போய் காவற்கா ரிருக்கிற வழியை விட்டு வேறுவழியால் நாடகசாலையிற் பிரவேசித்து ஓர் கதவின் மறைவி லொளித்துக்கொண் டிருந்தாள். வீமசேனனும் சொன்னபடியே ஒரு கட்டிலின்மீது படுத்துக்கொண்டு முகத்தை உத்தரியத்தினால் மறைத்துக்கொண்டு கீசகன் வருகிறதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

இப்படி யிருக்க, அந்தக் கீசகன் துரோபதி சொல்லிய சமயம் வந்த தென்று உல்லாசத்தோடு வேண்டிய வஸ்துக்களை யெடுத்துக்கொண்டு அந்த சாலைக்கு வந்து வீமசேனனை துரோபதி யென்று நினைத்துக் கிட்ட வந்து அடி மயிலே, உனக்கு வேண்டுவன வெல்லாங் கொணர்ந் திருக்கிறேன். அவைகளை வாங்கிக்கொண்டு என்னைக் காத்தருள். இவ்வூரி லிருக்கும் ஸ்திரீக ளெல்லாம் என்னை மிகுந்த பலசாலி யென்று புகழ்வார்கள். அப்படிப்பட்ட நான் உன்னைத் தேடிவர நீ என்னை அலக்ஷியஞ் செய்யலாமோ? ரூபத்திலும், சாதுரியத்திலும், எனக்குச் சமானமான புருஷன் உலகத்தி லில்லை. ஆனால் எனது ரூப முதலிய குணங்கள் உன்னோடு சேருகிறதைப் பற்றியே பயன்பட்டன என்று கீசகன் சொல்லக் கேட்டு வீமன் துரோபதி சொல்வதுபோல் மெதுவாகிய குரலினாலே வாரீர் என் பிராணநாதனே, நீர் சொன்னபடிக்கு அடியாளுடைய ரூபலாவண்ணியங்களும் இன்றுதான் பயன்பெற்றன. அடியாளுடைய சாதுரிய முதலானவைகளைக்கண்டு சந்தோஷப்படப் போகிறீர் என்று சொன்னதைக் கேட்டு அந்தத் தொனி கண்ட விடஞ் சென்று கையினாற் றடவிப் பார்த்துக் கீசகன் திகைத்து ஓ கோ கோ! இதென்ன ஆச்சரியம்! அனிச்சமலரினு மென்மையாகிய அந்தத் துரோபதியின் தேகமில்லவே! இது கல்லினுங் கடினமா யிருக்கிறதன்றே? இதென்ன மாயமோ வென்று ஐயப்பட்டு நிற்க, வீமன் மெள்ள வெழுந்து பூமாலைகள்சுற்றி விளங்குகிற அவன் சிகையைப் பிடித்துத் தூக்கிக் கீழே தள்ளினான். தள்ளவே அந்தக் கீசகன் அஞ்சாமல் தன் னிரண்டு கைகளினாலும் அந்த வீமனை இறுகக் கட்டிக் கீழே தள்ளினான். இவ்வகையாய் அவ்விருவருக்கும் அந்தப் பாதி ராத்திரியில் பலமான யுத்தமுண் டாயிற்று. அப்

போது வீமனெழுந்திருந்து கீசகனைக் குடுமியிற் பிடித்துக்கொண்டு கன்னத்தில் அறைந்தான். அறையவே கீசகன் மிகவும் உக்கிரமாகிய கோபமுடையவனாகி வீமனை இரண்டு கைகளினாலும் அறைந்தான். வீமன் எழுந்திருந்து கீசகனைத் தள்ளிக் கால்களினாலுதைத்தான். அந்த உதையை லக்ஷியஞ் செய்யாமல் கீசகன் வீமனைக் கீழே தள்ளி யுதைத்தான். வீமனும் எழுந்திருந்து கூச்சல் இட்டால் தன் அஞ்ஞாதவாசத்திற்கு விரோதம் வருமென்று ஓசைப்படாமலிருக்கும்படி கெட்டியாய்க் கீசகனைக் குத்தினான். கீசகனும் தான் விபசாரஞ் செய்கிற் சங்கதி வெளிப்பட்டால் மிகவும் பழிப்புண்டாகுமென்று நினைத்து ஓசை யில்லாமலே வீமனைக் குத்தினான். இப்படி யொருவரை யொருவர் தள்ளியும், அடித்தும், உதைத்தும், குத்தியும், கிஞ்சித்தேனும் ஒருவராகிலும் சலிக்கவில்லை. இவ்வகையாய் மலைகள்போல் சலியாமல் நெடுநேரம் இருவரும் கைப்போர் செய்துவருகையில் வீமசேனனானவன் மிகுந்த கோபத்தை யடைந்து இரண்டு கைகளாலும் சத்துருவின்மார்பில் ஓங்கிக் குத்தினான். கீசகனும் தனது இரண்டு கைகளினாலே வீமன் சிரத்தின்மீது அறைந்தான். பின்பு வீமன் தனது முழு பலத்தைக்கொண்டு கீசகனைக் கீழே தள்ளி முழங்கால்களால் இடித்தான். அந்த இடியினாலே அவன் கொஞ்சந் தழதழத்து பிரமித்தவன்போல் நிற்க, அந்தச் சமயத்தில் வீமன் அவனது சிகையைப்பற்றிக் கிறுகிறுவென்று சுழற்றினான். அப்படி சுழற்றுமளவில் கீசகன் திமிறிக்கொண்டு வீமனை இரண்டு தோட்களில் பிடித்து சுழற்றிவிட்டான். அந்தச் சுழலினால் கொஞ்சமும் வருந்தாமல் வீமன் எழும்பி ஆகாசத்தி லிருந்து அந்தச் சத்துருவின் சிரத்தின்மீது குதித்துக் குடுமியைப் பற்றிக் கீழே தள்ளினான். அந்தக் கீசகன் விழும்போது வீமன் கழுத்தைக் கெட்டியாய்க் கட்டிக்கொண்டு அவனையுந் தள்ளிக்கொண்டே கீழே விழுந்தான். இவ்வகையாய் அவ்விருவரும் ஒரு முகூர்த்தகாலம் பலமாக யுத்தம் பண்ணிக் கீழே விழுந்து புரண்டு முழு பலங்களையும் காட்டினார்கள். அவர்கள் கூச்சலிடாமற்போனாலும் கல்லை நிகர்த்த அவ்விருவர்களின் தேகங்கள் அந்த மண்டபத்தில் தாக்குதலைப்பற்றி யொரு சத்த முண்டாயிற்று. அந்தச் சத்தம் யாவரும் மிகுந்த நித்திரையி லிருந்தபடியினாலே ஒருவர் செவியிலும் விழவில்லை. இப்படி யிருக்கையில் துரோபதியின் பெருமையையும் அவள் விஷயத்தில் சத்துரு செய்த அனியாயத்தையும் நினைத்து அடங்காத கோபாக்கினியால் தேக மெல்லாம் வேர்க்க அந்தச் சத்துருவைச் சிங்கம் அற்ப மிருகத்தைப் பிடிப்பதுபோற் பிடித்துக் கீழே தள்ளி அவன் மார்

பில் ஏறி உட்கார்ந்து குத்தினன். அப்படி யிருக்கையிலும் அந்தக் கீசகன் லக்ஷியுஞ் செய்யாமல் தன் னிரண்டு கைகளையும் பூமியில் தேய்த்து ஓங்கி வீமன் தலைமீதி லறைந்தான். அறையவே நெய் வார்த்து ஆகுதி செய்த அக்கினிபோல் ஜொலியாநின்ற கோபத்தினால் முகம் படபடர்க்க, அந்தத் துஷ்டனை அசையவொட்டாமல் அமுக்கிக்கொண்டு அந்நேரத்தில் தெய்வ பலத்தினால் வளர்ந்த தன் பாகுபலத்தினாலே அந்தக் கீசகன் குடுமியைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு நடுத்தலையில் வச்சிராயுதத்திற் கொப்பாகிய கைப்பிடியினாற் குத்தினன். குத்தவே அந்தக் கீசகன் தலை பிளந்து மல மூத்திரங்களை விட்டுக்கொண்டு வாக்கினாலு மூக்கினாலும் உதிரம் பெருக கண்கள் பிதுங்கி விழ மரணவேதனையினால் ஓ வென்று கதறி மரண மடைந்து தரையில் வீழ்ந்தான். வீழ்ந்தவுடனே வீமன் அவன் கால் கை தலை முதலானவைகளை முறித்து அவன் வயிற்றைப் பீறி அதி லடைத்து ஒரு மாமிசபிண்டம்போ லாக்கிவைத்து அந்தச் சாலையில் வெகுதூரத்தி லிருந்த விளக்கைக் கொணர்ந்து துரோபதியைக் கூப்பிட்டுக் காட்டிச் சொல்லுகிறான்.

கேளாய் அனலிற் பிறந்த பெண்மணியே? உன் சத்துருவாகிய கீசகன் இப்பாடுபட் டிருக்கிறான் பார்! உன் விஷயத்தில் இன்னும் யாராகிலும் துரோகஞ் செய்வார்களாகில் அவர்களுக்கும் இந்தக் கதிதான் நேரிடும். இனி நாம் பட்டணத்திற்குள்ளே போய்ச் சேரவேண்டு மல்லவோ? ஆதலாற் போவோம் வாவென்று அவளையழைத்துக்கொண்டு சமீபத்தி லிருக்கு மோர் தடாகத்திற் போய் ஸ்நானஞ் செய்து துரோபதியைப் பார்த்து மறுபடியுஞ் சொல்லுகிறான்.

கேளாய் பொற்கொடியே? உன்னைக் கீசகன் வலிமைசெய்து வந்த செய்தி சுதேஷ்ணை முதலானோருக்குத் தெரிந்திருக்கிறபடியினாலே நீ சும்மா வருவது யுக்தமன்று. மற்றென்ன செய்யவேண்டுமென்றால், நீ வெகு துக்கமுடையவள்போல் ஓடிவந்து காவற்காரரோடு கீசகனைக் கந்தருவர் கொன்றார்க ளென்று தெரியப்படுத்தி அப்புறம் வா. அதுவரைக்கும் நான் பட்டணத்தினுள்ளே சமீபத்திலிருக்கிற மடைப்பளியில் தூங்காம லுட்கார்ந்திருக்கிறே னென்று வீமன் சொல்லிய பேச்சைக் கேட்டு அந்தப் பாஞ்சால ராஜன் மகளானவள் ஓ வென்று அழுதுகொண்டே ஓடிவந்து அந்தக் காவற்காரனை யெழுப்பி, ஓ! காவற்காரரே? கீசகன் என்னைக் காதலித் தி

ருந்த செய்தி உங்களுக்குத் தெரியுமே? இன் றிராத்திரியில் அந்தக்
கீசகன் என்னை அழைத்துக்கொண்டு இவ்விடத்தில் வந்தான். அந்தச்
செய்தியை யறிந்து கந்தருவர் அவனைக் கொலை செய்தார்கள். இதை
யுங்களுக்குத் தெரிவித்தே னென்று சொல்லக் கேட்டு அவர்கள்
பந்தங்களைக் கொளுத்திக்கொண் டோடிவந்து பார்த்து பயத்தை
யடைந்து பட்டணத்து வாசற்காப்பாருக்குத் தெரிவித்தார்கள்.
அவர்களும் வந்து பார்த்து திகிலையும் விசனத்தையும் அடைந்து கீச
கன் மாளிகைக்குப் போய் அவன் தம்பிமார்களுக்கு இச்செய்தி தெரி
விக்க அவர்கள் அச்செய்தி கேட்ட மாத்திரத்தில் வயிற்றில் நெருப்பு
விழுந்ததுபோல் மிகுந்த துயரத்தை யடைந்து பரபரப்புட னோடிவ
ந்து பார்த்து தலைகளிலும் வயிறுகளிலும் புடைத்துக்கொண்டு அ
ழுது தலைகால் முதலான அங்கங்க ளொன்றுங் காணப்படாமல் பிண்
டாகாரமா யிருக்கிற அவன் தேகத்தைப்பார்த்து ஒகோகோ! இதென்
ன ஆச்சரியமா யிருக்கிறது. அளவில்லாத பலபராக்கிரமங்க ளுடை
யவரான நமது தமையனுரை இவ்வகையாய் யார் கொன்றுர்களோ?
இப்படிப்பட்ட பலசாலியையுங் கொல்லத்தக்க புருஷன் உலகத்திலி
ருந்தா னல்லவோ? நன்றுக யோசித்துப் பார்த்தால் இவனைக் கொன்
றவன் மனிதனுயிருக்க மாட்டான். கந்தருவனுகவே இருப்பான். இல்
லாவிட்டால் கை கால் சிரங்களை முறித்து வயிற்றிலடைக்க யார்வல்
லவனு யிருக்கிருன். இப்படிப் பட்டகாலமும் வந்ததல்லவோ? அந்
தக் கந்தருவனும் மோசமாய் இவனைக் கொன் றிருக்கவேண்டுமே யன்
றி நேராக யுத்தஞ்செய்து கொன் றிருக்க மாட்டான். நல்லது இவனை
ச்சம்ஸ்காரஞ் செய்ய வேண்டுமே யென்று சொல்லி அந்த உபகீசக
ர் அதற்கு வேண்டிய பிரயத்தினஞ் செய்துகொண் டிருக்குமளவி
ல் இவர்க ளென்ன செய்கிறுர்களோ வென்று பார்ப்பதற்கு திரௌப
தி யங்கே வந்து நின்றுகொண்டிருந்தாள். அப்போது அந்த உபகீசகர்
அவளைப் பார்த்து மிகுந்தகோப மடைந்து இந்தப் பாவிப்பெண்ணு
லல்லவோ சிங்க பலனுகிய நமது அண்ண னிறக்க லாயிற்று. ஆத
லால் இவளையும் அவனேடு சேர்த்துக் கட்டி தகனஞ் செய்துபோ
டுவோ மென்று நினைத்து விராடராஜ னிடத்திற்குச் சென்று சொ
ன்னுர்கள்.

கேளீர் மகாராஜாவே? நமது அந்தப்புரத்தி லிருக்கின்ற சைர
ந்திரியானவள் நமதுகீசகனைச் சம்போகிக்கிறே னென்று ஆசைகாட்
டி பட்டணத்திற்கு வெளியி லிட்டுக்கொண்டுபோய் தன் கணவராகி
ய கந்தருவனைக்கொண்டு கொல்வித்தாள். இனி யவளை யுயிரோடு

வைத்திருந்தால் நம்மை யாவரையும் முறையே கொல்விப்பாள். ஆ
னதுபற்றி அவளைக் கீசகன்சரீரத்தோடு சேர்த்துக் கொளுத்துகிறோ
மென்று சொன்னதைக் கேட்டு அரசன் அந்த உபகீசகரிடத்தில் பய
த்தினாலும், தன்னி ராச்சியத்திற்குக் காவலாயிருந்த சிங்கபல கீசகன்
மாண்ட விசனத்தினாலும், மதிமயக்கமுற்று அப்படியே செய்யுங்க
ளென்று சொன்னான். உடனே அந்த உபகீசகர் ஓடிவந்து சைர
ந்திரியை வல்லுவிற் பிடித் திழுத்து ஓர் கட்டிலின்மீது தள்ளி
அவள் தலைமயிரை யவிழ்த்து அந்த மஞ்சத்திற் சேர்த்துக் கட்டி,
கை கால்களையும் கயற்றினால் உறுதியாகக் கட்டி முன்னமே தேரின்
மீது கட்டியெடுத்துக்கொண்டு போகிற கீசகதேகத்தின் பின் சை
ரந்திரியையும் மயானத்திற்கு எடுத்துக்கொண்டு போனார்கள். அப்
போது அவள் கந்தருவரைக் கூப்பிடுவதுபோல் பாண்டவர்களின்
சங்கேதப் பெயர்களினாலே, ஓஜய, ஓவிஜய, ஓஜயந்த, ஓஜயச்சேன,
ஓஜயற்பல, என்று கூப்பிட்டு உங்களை நம்பிய என்னைக் காப்பாற்றா
மல் உபேக்ஷை செய்யலாமோ? நான் இப்போது படுங் கஷ்டத்தைப்
பார்த் திரங்கலாகாதோ? இந்தப் பாதகர் என்னைக் கீசகனோடு சேர்த்
து அக்கினியிற் றள்ளும்படியான முயற்சி செய்கிறார்களே! நான் இ
ப்படி தகாத வழியி லுயிர்விடலாமோ? இடிபோல் முழங்கு முங்கள்
கானோசைகளையும் மலைகளையும் பிளக்கத்தகுந்த புஜபலத்தையும் வா
யுவிலும் அதிசயப்பட்ட வேகத்தையும் முடராகிய இவர்களுக்குச்
சற்றே காட்டவொண்ணாதோ? என்றிப்படி யலர்த்தும் துரோபதியி
ன் குரலைக் கேட்டு வீமன் ஓ கோகோ! பிரமாதம் வந்ததென்று துடி
த்து எழுந்திருந்து வஸ்திரத்தை இடையில் கெட்டியாய்க் கட்டிக்
கொண்டு ஓசைப்படாம லடிகளை வைத்து வேகமாகவே நடந்து கோ
ட்டைமதிலை லக்ஷியஞ் செய்யாமற் றாண்டி மயானத்தை நோக்கி வந்
தான். அவன் வருகிற வேகத்தினாலே யொரு பெருங் காற்றுண்டா
கி அதனாலும் அவன் முழங்கால்கள், துடைகள், கைகள், தாக்கியதனா
லும் அநேக மரங்கள் முறிந்து வீழ்ந்தன. அன்றியும் வீமன் துரோப
திக்குத் தைரியம் வருதற்பொருட்டு சைரந்திரி? நீ பயப்படவேண்டா
மென்று கெர்ச்சனை செய்தான்.

இப்படி யிருக்க உபகீசகர் ஓகோகோ, இதென்ன பெருங்காற்
று வீசுகின்றது. மரங்களெல்லா முறிந்து வீழ்கின்றன. ஊழிகால மே
கத்தின் கெர்ச்சனை போன்ற முழக்க மொன்று கேட்கப்படுகின்றது.
இவைகளை நோக்கினால் இந்தச் சைரந்திரிக்குப் பார்த்தாக்களாகிய கந்
தருவர் வருகிறார்களென்று காண்கிறது. நமது அண்ணனை யவர்களல்
லவோ கொன்றார்கள். இப்போது நம்மையுங் கொல்வார்கள். ஆகையா

ல் இந்தச் சைரந்திரியைக் கட்டவிழ்த்து விட்டுப்போட்டு நாமோடி
ப் போவோம். அப்படி செய்தால் உயிர்தப்பும். இவளையும் கூட்டிப்போ
ட்டுக் கொளுத்துவதினாலே நம்முடைய தமையன் எழுந்து வரப்
போகிற தில்லையே? அப்படி யிருக்க நாமேன் வீணாய் உயிரை மாய்க்க
வேண்டும்? உயிரிருந்தால் உப்புஞ் சோறுந் தின்றாகிலும் பிழைக்கலாம்
என்று ஒருவரோ டொருவர் யோசித்துப் பேசிக்கொண்டு அப்படி
யே செய்வோம் என்று துணிந்து துரோபதியைக் கட்டவிழ்த்து
விட்டார்கள்.

இப்படி யிருக்குமளவில் வீமசேனனானவன் பெரிதான ஓர் பனை
மரத்தைப் பிடுங்கிக் கையி லெடுத்துக்கொண்டு காலதண்ட மேந்தி
வரும் இயமனோ வென்று சங்கைப்படும்படி யோடிவந்தான். வரவே
உபகீசகர் கண்டு மிகவும் பயமுற்று நகரத்திற்கு ஓடிப்போகவேண்டு
மென்று ஓட வாரம்பித்தார்கள். வீமனோ ஓடிப்போனவர்களைத் துர
த்தி மகா வேகத்தோடு பனைமரத்தைச் சுழற்றி யடித்து அவர்கள்
திசைகெட்டுத் தடுமாறும்படி செய்து ஒருவனையும் கோட்டைக்குள்
நுழையவொட்டாமல் இப்புறத்திலேயே யடித்துத் தள்ளினான்.

இவ்வாறு உபகீசகரை யெல்லாம் சங்கரித்துப் பின்பு அவர்கள்
பந்துக்க ளெல்லாரையும் மடக்கி ஓரடிக்குப் பத்து இருபது முப்பது
விழும்படி யடித்து அரசனுக்குச் செய்திசொல்வா ரில்லாமற் செய்
துவிட்டான்.

கேட்டீரோ, ஜனமேஜய மஹாராஜனே? இவ்வண்ணமாய்
வீமன் கீசகனுடைய தம்பிகள் முதலான பந்துக்களை யெல்லாம் து
ம்சம் செய்து சுடுகாட்டை நிரப்பி கழுகு, நரி, பேய் முதலானவை
களுக்கு விருந்து செய்து துரோபதியைக் கைகளா லணைத்துக்கொ
ண்டு நகரத்துக்குத் திரும்பி வருமளவில் அந்த துரோபதியைப் பா
ர்த்துச் சொல்லுகிறான்.

கேளாய் பாஞ்சாலி, உன்னைப்போலொத்த கற்புடைய மாதரு
க்கு ஆபத்து வாராது, வந்தாலு மெளிதில் நீங்கும். இதைக் குறித்து
பூர்வகாலத்து சரித்திர மொன்று சொல்லுகிறேன்.

முன் தேவராதனென் றொரு முனிவர் இருந்தார். அவருடைய
பாரியை மஹா பதிவிரதையா யிருந்தாள். அந்த ரிஷி அவளுடைய

கற்பைச் சோதனை செய்யும்பொருட்டு ஓ ரிராக்கத ரூபங்கொண்டு அவளை வலுவில் தூக்கிக்கொண்டு மஹா அர்ணியத்திற் சென்று அங்கே நூறுயோசனை தூரமுள்ள ஓர் மடுவின் கரையில் அவளைவிட்டு புணர்ச்சியின் பொருட்டு சாம தான பேதங்களாகிய மூவகை யுபாயங்களாலே வெகுவாய் கலக்கியும் அவள் சித்தங் கலங்காமல் ஒன்றிற்கு மெவ்வளவுஞ். சம்மதியாதிற் போகவே அவளைத் தரையில் தள்ளி பலவந்தத்தில் சம்போகஞ் செய்ய வாரம்பிக்க அப்போது மவள் கிஞ்சித்து மஞ்சாமல் இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு ஓ! தருமதேவதையே? இக்கால வரையிலும் நான் மனோவாக்குகாயங்களினால் ஓர் வழுவு மின்றி பர்த்தாவுக்குப் பணிவிடை செய்து கற்புடையவளா யிருந்தேனாகில் என் னங்கம் மார்பு வரைக்கும் கல்லாய்ப் போகக்கடவதென்று உரக்கக் கூப்பிட்டாள், அவ்வாறு கூப்பிடு மவளை அந்த ராக்ஷசன் வெருட்டி யடித்து மேல் விழப்போகையில் அவ ளங்கம் மார்பு வரையில் கல்லாகக் காணப்பட்டது. அது கண்டு அந்த முனிவர் இராக்கத ரூபத்தை விட்டு நிஜ ரூபத்தை யடைந்து தமது மனைவியை யணைந்து ஆலிங்கனஞ் செய்து அவளை நோக்கி அடி பெண்களிற் சிறந்தவளே? கற்பகமா யிருக்கு முன்றனுக்கு வேண்டுவன வெல்லாந் தந்து நானும் கற்பகமாக நினைக்கிறேன் என்று சொல்லி யநேக வரங்களைத் தந்து சந்தோஷமாய் அவளோடு தமதாசிரமஞ் சென்று வெகு நாட்கள் வாழ்ந்துகொண் டிருந்தார்.

கேட்டாயோ பெண்ணே, நல்லவர்க்கு மகா சவுக்கியங்கள் வருவதற்கு முன் அடையாளமாக ஆபத்துக்கள் வரும். அவைகளுக்கு அஞ்சி விசனப் படாம லிருக்கவேண்டும். ஆதலால் நேரிட்டிருக்கிற கஷ்டங்களுக்காக நீ விசனப்படாதே யென்று சொல்லிய வீமன் பேச்சைக் கேட்டுத் துரோபதி சந்தோஷமாய்க் கூடப்போனாள், என் றிப்படி கதை சொல்லிவரா நின்ற வைசம்பாயன முனிவரை நோக்கி ஜநமேஜய மஹாராஜன் வினவுகிறார்.

சுவாமீ வைசம்பாயன முனிவரே? தேவரீர் தேவராதருடைய மனைவியின் சரித்திரஞ் சொல்லியதைக் கேட்டு மிகவுஞ் சந்தோஷமாயிற்று. அவள் யார்? என்ன பெயருடைய்யவள்? அவளுடைய சரித்திரத்தைப் பரக்க வருளிச் செய்ய வேண்டு மென்று சொல்லக் கேட்டு வைசம்பாயனர் ஓ ஜநமேஜய மகாராஜாவே? அவள் பார்வதி தேவிக்குத் தோழி, ஜயை யென்கிற பேருடையவள். அவளது சரித்திரத்தைச் சவிஸ்தாரமாய்ப் பின்னாலே யொரு காரணத்தினாற்

சொல்லுவேன், இப்போது துரோபதியின் சரித்திரத்தைச் சொல்லு
கிறேன் கேளுமென்று சொல்லத் தொடங்கினார்.

வீமசேனனானவன் அந்தப்புரத்திற்குச் சமீபத்திற் போய் து
ரோபதியோடுகூட ஸ்நானஞ் செய்து அவளை நோக்கி அடியென்
பிராணநாயகி, உனக்கு அபகாரஞ்செய்யுஞ் சத்துருக்களை யெல்லாம்
ஒரு கணப்பொழுதிலேயே மடிப்பேன், நீயஞ்சாதே. சுதேஷ்ணை
யின் மனைக்குப் போய்ச் சேர் என்று சொல்லி தான் மடைப்பள்
ளிக்குப் போய்ச் சேர்ந்தான். அந்தத் துரோபதியும் அருணோதய
மாகி ஜனங்களெல்லாம் வீதிகளிற் சஞ்சரிக்குமளவில் யாரென்ன
சொல்வார்களோ, என்ன செய்வார்களோவென்று அச்சத்துடனே
வீதியிற் போனாள். அப்போது முறையாகவே சூரிய உதயமாகி
வர பட்டணத்து ஜனங்கள் கோட்டைக்கு வெளியில் வரும்
போது நாற்புறங்களிலும் உபகீசகர் முதலானோர்களுடைய சவ
ங்கள் விழுந்திருக்கக் கண்டு பயந்து பட்டணத்தி னுள்ளேயே போ
ய்ச் சேர்ந்தார்கள். இப்படி யிருக்க அரசன் விடிந்தவுட னெழுந்து
நேற் றிராத்திரியில் உபகீசகர் த்ரோபதியைக்குறித்து சொன்ன
காரிய மெப்படி யாயிற்றோ பார்க்கவேண்டு மென்று சாரனை யழை
த்து அச்செய்தி தெரிந்துகொண்டு வந்து சொல்லும்படி யேவ அ
வர்கள் போய் விசாரித்துப் பிணங்களாக இருக்கிற் கீசகனைப் பார்த்
து பயமும் ஆச்சரியமு முடையவர்களாகி அரசனிடத்திற்கு வந்து
கேளீர் மகாராஜாவே, உபகீசகரும் கந்தருவரால் முறிக்கபட்டு வீழ்
ந்து கிடக்கிறார்கள். பட்டணத்து ஜனங்களெல்லாம் அந்தப் பிண
ங்களைக் கண்டு பயந்து வெளிப் புறப்படாம லிருக்கிறார்கள். அந்தச்
சைரந்திரி யொருத்தி மாத்திரம் வீதியில் மெள்ள மெள்ள நடந்து
அந்தப்புரஞ் செல்கின்றாள். அவ ளின்னுஞ் சிறிதுகால மிவ்விடத்தி
லிருப்பாளாகில் இவ்வூரி லிருக்கின்ற யாவரும் மாண்டுபோவ ரெ
ன்பதிற் சந்தேக மில்லை. இது நாங்க ளறிந்த செய்தி. சமுகத்திற்கு
அறிக்கை செய்தோம் என்று சொல்லக் கேட்டு அரசன் சிந்தையுற்
றுக் கலங்கியிருக்குமளவில் மந்திரிகள் சொல்லுகிறார்கள். கேளீர்
மகாராஜாவே இந்தத் தூதர் சொன்னவை சரிதா னென்று தோற்று
கிறது. நமது இராச்சியத்திற்குக் காவலாய் பதினாயிரம் யானை பல
முடையவனாய் சிங்கபல னென்று பெயர் பெற்ற கீசகனை வதை செ
ய்த கந்தருவருக்கு இவ் வுபகீசகரைக் கொல்வது பெரிதன்று. அந்தச்
சைரந்திரி மிகவும் சுந்தரமுடையவளா யிருக்கிறாள். அப்படிப்ப
ட்ட அவளைக் கண்டால் மனிதர் மனம் கலங்காம லிராது. அப்படி

கலங்கினால் உயிர்ச்சேதம் நேரிடுகிறதாயிருந்தால் கொஞ்ச காலத்தில் இந்நகரம் பாழாய்ப்போகுமன்றோ? இவ்வளவு கேட்டிற்குக் காரணமாகிய அவளைச் சீக்கிரமாய் இவ்வூரை விட்டுப் போகும்படி துரத்திவிட்டால் க்ஷேம முண்டென்று தோற்றுகிறது, என்று மந்திரிகள் சொல்லிய சொல்லைக் கேட்டு விராடராஜன் அப்படியே செய்யவேண்டு மென்று கருதி தன் பத்தினியாகிய சுதேஷ்ணைக்குச் சொல்லி யனுப்பியதாவது, கேளாய் சுதேஷ்ணைதேவி! அந்த சைரந்திரியினாலே கீசகனும் உபகீசகரும் மாண்ட செய்தி தெரியுமே? இப்படி பொல்லாங்கு நேரிடும்படியாகிய அவளை இவ்விடத்தில் வைத்திருப்பதனால் வெகு அனர்த்தங்கள் இனிமேலும் வரும். ஆனதுபற்றி அவளை இந்த கிமிஷத்திற்கு எங்கேயாவது போய்ச் சேரும்படி அனுப்பிவிடு, யோசிக்க வேண்டாம். நம் மிராச்சியம் காவ லழிந்து போயிற்று. வெகு ஜனங்கள் வீணாய் மாண்டார்கள், என்று சொல்லி யனுப்பி கீசகருக்கு சாமக்கிரியை பண்ணும்படி யுத்தரவு செய்தான். அந்த உத்தரவின்படி கீசகருக்கு சாமகிரியைகளை அவர் பந்துக்கள் கூடி நடத்தினார்கள். அந்தத் துரோபதியோ மடைப்பள்ளிக்குச் சமீபத்தில் வந்து அங் குட்கார்ந் திருக்கின்ற வீமனைக் கண்டு கந்தருவர்களை நோக்கிச் சொல்கிறவள்போல் இரண்டு கைகளையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்தை நோக்கிச் சொன்னாள். ஓ! கந்தருவ ராஜரே? உங்களுக்கு அநேக நமஸ்காரஞ் செய்கிறேன். என் சத்துருக்களை நாசஞ் செய்து எனது கற்பைக் காத்த உங்களுக்கு நானென்ன கைம்மாறுசெய்ய மாட்டுவேன்? ஆகிலும் நான் இப்போது செய்த வந்தனத்தையே கைம்மாறாக அங்கீகரிக்கக் கோருகிறேன் என்று துரோபதி சொல்லியதைக் கேட்டு வீமன் புன்னகைகொண்டு கடைக்கண்ணால் பார்த்துக்கொண் டிருந்தான்.

இப்படி துரோபதியானவள் அச்ச மின்றியே கந்தருவரைத் துதித்துக்கொண்டு வீதியிற் செல்லும்பொழுது ஜனங்க ளெல்லாம் இவளைக் கண்டு கீசகர் மடிந்ததை நினைத்து இவளைப் பார்ப்பதற்குப் பயந்து ஒதுங்கிப் போனார்கள். பின்பு துரோபதி அந்தப்புரத்திற் பிரவேசிக்குமளவில் அங்கு அநேக கன்னிகைகளோடு கூட நிற்கும் அர்ச்சுனனைக் கண்டு கிட்டப் போனாள். அந்தக் கன்னிகைகளெல்லாம் துரோபதியை நோக்கி அடி சைரந்திரி, உனக்கு நேரிட்ட ஆபத்து நீங்கிற்றே யென்று க்ஷேமத்தை வினவ, அர்ச்சுனன் ஒன்று மறியாதவனைப்போல் இவளுக்கு என்ன உபத்திரவம் வந்த தென்று கேட்க, துரோபதி சொல்லுகிறாள், கேளாய் பிருகன்னளாய்?

உனக்குச் சைரந்திரியின் விசார மேதுக்கு? இராஜ கன்னிகைகளுக்கு நாட்டியம் பழக்கிக்கொண்டு நீ சவுக்கியமா யிருக்கிறுயே! உனக்கு மற்றை யார் எப்படி போனு லென்ன? உலகத்தில் சுகத்தை யனுபவித்துக்கொண் டிருக்கிறவர்கள் துக்கப்படுகிற ஜனங்களைக் கண்டாலும் தங்களைப்போலவே நினைப்பார்க ளல்லது விசனத்தை யறியார்கள். ஆனபடியினுலே நீ என்னைக்குறித்துச் சொல்லியதற்கு நான் ஆச்சரியப்பட வேண்டுவ தில்லை என்று சொல்லிய துரோபதியைப் பார்த்து பிருகன்னளை சொல்லுகிறுள். கேளாய் சைரந்திரி, நீதான் விசன மறியாதவள். ஏனென்றால் எனக்குச் சுக மிருக்கிறதாய் சொன்னு யல்லவோ? உலகத்தில் ஆணுகவாவது பெண்ணுகவாவது இருக்கிறவர்களுக்கு ஒருவேளை யில்லாவிட்டால் மற்றொரு வேளையிலாவது எவ்விதத்திலாவது சுக முண்டு. இரண்டு மில்லாத அலியாயிருக்கிறவனுக்கு எப்போதும் துக்கந்தானே! மூற் சனனத்துப் பாவத்தினுலே எனக்கு நேரிட்டிருக்கிற இந்த அலித்தன்மையை நோக்கி அல்லும் பகலும் தீயில் விழுந்தவள்போல் தவித்துக்கொண் டிருக்கிற எனக்கு யாருடைய சுக துக்கங்களைத்தான் விசாரிக்கவேண்டியிருக்கிறது? பொழுது விடிந்ததா பொழுது போயிற்று என்று நாள் கழித்துக்கொண் டிருக்கிறேன் என்று சொல்லியதைக் கேட்டு இவன் நபும்சக வேடம் பூண்டவ னுகையால் இவனை நாம் வெறுப்பது தகுதியல்ல வென்று எண்ணி அங்கிருந்து சுதேஷ்ணுதேவியினது மனைக்குச் சென்றுள். அப்போது அந்த சுதேஷ்ணுதேவி உடன்பிறந்தா ரிறந்த விசனத்தினுலே உடம்பு தெரியாமற் புரண்டுகொண் டிருந்தவள் எழுந்து தான் வலுவில் அவளைக் கீசகன் மனைக்கு ஏவியதனு லன்றோ இப்படிக்கு நேரிட்டதென்று நினைத்து இதைக் குறித்து இவள் நம்மைப் பரிகாசஞ் செய்வாளே யென்று மனதில் வெட்கி அவளைப் பார்த்துச் சொல்லுகிறுள்.

கேளாய் சைரந்திரி, உன்னை நா னித்தனை நாள் ஆதரித்து வைத்துக்கொண் டிருந்ததற்கு இவ்விராச்சியத்திற்குக் காவ லழியும்படிக்கும், நான் உடன்பிறந்தா ரில்லாம லிருக்கும்படிக்குஞ் செய்தாய், நன்றுயிற்று. உன்மீதிற் பழி யில்லை. விதிவச மப்படி யிருந்தது. உன்னுலே இன்னும் அநேகருக்கு இப்படிப்பட்ட கதி வருவதற்கு முன்னே நீ இவ்விடம் விட்டு எங்கேயாகிலும் போய்ச் சேரு. இனி ஒரு கணப்பொழுதும் நீ இங்கிருக்க யோக்கியை யல்லை. மனிதனுக்குச் சாபவியம் பெரிதாகையால் ஒருவேளை அரசன் உன்னைக் கண்டு கலங்கினுல் மிகுந்த கேடல்லவோ நேரிடும். ஆதலால் நீ இவ்வள

வோடேயே இவ்விடம் விட்டுப் போய்விடு என்று சொல்லிய ராஜபத்தினியைப் பார்த்து சைரந்திரி சொல்லுகிறாள். கேளாய் எம்பெருமாட்டி, என்னை நீ வயிற்றிற் பிறந்த மகளைப்போலே இத்தனை நாள்வரையில் காப்பாற்றி இப்போது அந்தரத்தில் விடலாமோ? தருமமும் இரக்கமு முள்ள உன்றனுக் கிது நியாயமோ? வேறு கதி யில்லாமல் உன்னை நான் சரணமென்று வந் தடைந்ததற்கு நடுவில் கைவிடலாமோ? என் கணவராகிய கந்தருவருக்கு இன்னம் பதின்மூன்று நாட்கள் வரைக்கும் அந்தச் சாப மிருக்கிறது. அதுவரைக்கும் நானும் இப்படியே விரதத்தோ டிருக்கவேண்டு மானதால் நீ மனது பெரிதுபண்ணி இந்தக் கொஞ்ச காலமும் காப்பாற்றுவாயாகில் உனக்கும் உன் பர்த்தாவுக்கும் உன் னிராச்சியத்திற்கும் மிகுந்த க்ஷேமமும் மேன்மையு முண்டாகும். என் கணவர்கள் அப்படிக்குச் செய்வார்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தையும் நற்குணங்களையும் முன்னமே யுணர்ந்திருக்கிறே னன்றோ? என்று சொல்லிய சைரந்திரியின் பேச்சைக் கேட்டு ராஜபத்தினியானவள் இவ ளிஷ்டப்படி செய்யாமல் துரத்திவிட்டால் அதினால் ஏதாகிலும் தீங்கு வருமோ என்னமோ வென்று நினைத்து அவளைப் பார்த்து அடி சைரந்திரி? ஆனால் நீ இன்னுஞ் சிலநாள் வரையி லிங்கே யிரு. உன் பர்த்தாக்களோடு சொல்லி எங்களுக்கு நன்மை செய்வி. அப்படிக்கு நீ செய்தால் அதனாலே இப்போது உன்னிடத்தி லிருக்கிற கோபம் சாந்தமாகும் என்று சொல்லியதைக் கேட்டு துரோபதி மனமகிழ்ச்சியோடு அந்தப்புரத்தில் முன்போல் வாசமா யிருந்தாள்.

---

## கோக்கிரகண சரித்திரம்.

---

இவ்வகையாய் பாண்டவர் விராடநகரத்தில் சத்துருக்களாகிய கீசகரை ஜயித்து ஒரு குறைவு மில்லாமல் அஞ்ஞாதவாசம் பண்ணிக்கொண்டிருக்குமளவில் விராடமகாராஜன் கீசகன் மடிந்ததை நினை

த்து. ஓகோ கோ? நம திராச்சியத்திற்கு ஒரு தீங்கு நேரிடாம லிருக்கும்படி காத்துவந்த சேனாபதியாகிய கீசகன் மடிந்தானே! இனி நாமெப்படி சத்துருக்களை வெல்லுவோம்? இனி சத்துருக்கள் நம திராச்சியத்தின்மீது பாய்வார்களே? ஆனபடியினாலே அப்படிப்பட்ட பலசாலியாகிய மற்றொரு சேனாபதியை சம்பாதிக்க வேண்டுமென்று மனக்கவலைகொண் டிருந்தான். அந்தக் காலத்தில் தேசங்களிலெல்லாம் கீசகன் ஒரு ஸ்திரீ நிமித்தியமாய் கந்தருவரால் கொல்லப்பட்டா னென்கிற செய்தி பரவிற்று.

---

## துரியோதனாதிக ளாலோசனை.

---

இப்படி யிருக்க அஸ்தினா பட்டணத்தில் துரியோதனன் பாண்டவர் செய்தி அறியும்பொருட்டு அனுப்பி யிருந்த தூதர் தேசங்களெல்லாந் திரிந்து எங்கும் பாண்டவர் செய்தி தெரியாமல் வந்து துரியோதனனைப் பார்த்து பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், திரிகர்த்தர், முதலான பேர்களும் மந்திரிகள் சேனாபதிகள். இன்னும் அநேகம் பரிவாரங்களும் சூழ்ந் திருக்கையில் சொல்லத் துவக்கினார்கள். கேளீர் ராஜாதி ராஜ ராஜ பரமேசுவரா? சகல தேசங்களிலும் சகல பட்டணங்களிலும் அரண்ணியங்களிலும் பருவதங்களிலும் குகைகளிலும் புதர்களிலும் தீவுகளிலும் சமுத்திரக்கரைகளிலும் இன்னும் பலவிடங்களிலும் தேடினோம், எங்கும் பாண்டவர் செய்தி யகப்பட வில்லை. ஒருவரும் சஞ்சரியாத விடங்களிலும் தேடிப்பார்த்தோம். அவர்களின் அடிகளையாகிலும் கண்டுபிடித்தால் அவர் போன விடங் காணலா மென்றும் பார்த்தோம். பலசாதிக் கூட்டங்களில் அந்தந்த வேடந்தரித்துக் கூடிப் பார்த்தோம். எவ்வகையாய்ப் பார்த்தும் அவர்களுடைய சரித்திரம் ஒன்று மகப்பட வில்லை. ஆதலாலே அவர்க ளெங்கேயோ நசித்ததாய்த் தோற்றுகிறது. இருந்தால் எப்படியாவது தெரியாமற் போகாது. சுத்தமாய்த் தெரியாம லிருக்கிறபடியி

ஞலே அவர்கள் யாவரும் நாச மடைந்தார்க ளென்று நிச்சயிக்க வேண்டும். இதற்குச் சந்தேகமில்லை. இனி நீர் சிந்திக்கவேண்டுவ தில்லை. சகல ராச்சியங்களும் சகல சம்பத்துகளும் சகல மேன்மைகளும் உமக்கே உரியனவாயின. ஆகையால் இஷ்டப்படி அரசு செலுத்திக்கொண்டு சகல போகங்களையும் அனுபவியும். ஆனல் நாங்கள் ஒரு அதிசயமாகிய செய்தி கேட்டிருக்கிறோம். அதை விண்ணப்பஞ் செய்கிறோம், கேட்டருளவேண்டும். மச்சதேசத்தில் விராடமஹாராஜனுக்கு மைத்துனனும் சேனதிபதியுமா யிருந்த கீசக னென்பவன் அடிக்கடி நமது சினேகிதரான திரிகர்த்தரோடு போரிட்டு ஜயித்து நம்மையும் உபத்திரவப்படுத்திக் கொண்டிருப் பானே? அவனை யறிவீ ரன்றோ? அவ னெப்படிப்பட்டவ னென்றால், மிகுந்த மனவூக்க முடையவன், மகா பல பராக்கிரமங்க ளுடையவன், நீதிகளை நன்றாயறிந்தவன், போர்செய்யு முறைகளைச் செவ்வையாய்க் கற்றவன், அழகினலே பெண்களின் மனதைக் கலக்க வல்லவன், சிங்கபல னென்று புகழ் பெற்றவன், அப்படிப்பட்ட அவன் அந்தப்புரத்திலே ராஜபத்தினியி னிடத்தி லிருந்த ஒரு சைரந்திரியைக் காதலித்து அவளைப் புணரும்பொருட்டு ஓரிடத்திற் போனபோது இரவில் அவளது கணவராகிய கந்தருவராலே சங்கரிக்கப்பட்டான். அன்றியும் அவனுடைய தம்பிமார் நூற்றைந்து பேர்க ளுண்டு. அவர்களும் அந்தக் கந்தருவராலேயே கொலை செய்யப்பட்டார்கள். இந்தச் செய்திதான் உலகத்தி லெல்லாம் பிரசித்தமா யிருக்கிறது. கேளீர் மகாராஜாவே, நமக்கு நெடுநாளைய சத்துருவாகிய கீசகன் தம்பிமார்களோடு கூட நாசமடைந்து போனபடியினலே உம்முடைய அரசாட்சிக்கு ஓர் தீங்கு மில்லை. ஆகையால் அச்ச மின்றி இவ்விராச்சியத்தையும் எங்களையும் காத்தருளும். இனி பாண்டவரைத் தேடவேண்டிய முயற்சி வேண்டாம். உமது திருவடியாணைப்படி நாங்கள் எங்கும் பல வகைகளினலுந் தேடினேம், அவர் பரலோகஞ் சேர்ந்த படியினலேதான் எவ்வளவும் அகப்படவில்லை. இதுதான் நாங்கள் செய்யும் விண்ணப்பம். இனி எங்களுக்கு என்ன கட்டளை யிடவேண்டுமோ அதை இட்டருளும், என்று தூதர் சொல்லிய பேச்சைக் கேட்டுத் துரியோதனன் சொல்லுகிறான். கேளுங்கள் தூதரே, நீங்கள்மாத்திரம் மனக் களிப்போடு இவ்விதமாகச் சொன்னீர்க ளல்லது நா னதைக் கேட்டு எவ்வளவும் சந்தோஷப் படவில்லை. மிகவும் விசனத்தை யடைகிறேன். மகாபல பராக்கிரமசாலிகளான பாண்டவர்கள் இந்தப் பூமியில் எங்கேயாகிலும் இருப்பார்களே யல்லது இறந்திருக்கமாட்டார்கள். அவர்களுடைய சாமர்த்தியத்தையும் செய்கையையும் நீங்

கள் நன்ரு யறியமாட்டீர்கள். அவர்கள் பிரதிக்கினை செய்த அஞ்ஞாதவாச காலம் வெகுவாய்க் கழிந்தது. இன்னுங் கொஞ்சந்தான் இருக்கிறது. இந்தக் கொஞ்ச காலத்தையும் ரகசியமாகவே கழித்து வந்துவிடுவார்களென்று நினைக்கிறேன். அப்படி வருவார்களாகில் நமக்கு மிகுந்த தீங்குண்டாகு மென்பதற்கு சந்தேக மில்லை. ஆதலால் இன்னும் நன்ருய்த் தேடி யவர்களை இந்த காலத்துக்குள் கண்டு பிடிக்கவேண்டும். உங்களாலே அவ்வளவு செய்யக் கூடவில்லையே? அவர்க ளகப்படவில்லை யென்று நீங்கள் சொன்ன செய்தியை கேட்கும்போது என் வயிறு பகிலென்று பற்றி யெரிகிறது. ஓ! தூதர்களே, நீங்கள் சொல்லிய கீசகன் சரித்திரத்தினுலே நானென்ன யோசிக்கிறே னென்ருல் பாண்டவர் விராட பட்டணத்திலேயே மறைந்து வாசஞ் செய்கிருர்கள். அந்த கீசகனைச் சங்கரித்தவன் வீமனு யிருக்க வேண்டும். மற்ெருருவனும் அவனைச் சங்கரிக்க வல்லவ னில்லை. நீங்கள் இவ்வளவு சொல்லி வெகுமதி பெற வந்தீர்கள். நான் உங்களுக்குக் கொடுத்து வருஞ் சம்பளத்தையே நிறுத்த யோசிக்கிறேன். நீங்கள் மிகவும் புத்தி மான்க ளாகாமையாலே இதைக் கண்டுபிடிக்காமற் போனீர்கள் என்று பெரு மூச்செறிந்து சொன்ன துரியோதனனைப் பார்த்துக் கர்ணன் ஒரு வார்த்தை சொன்ஞன்.

கேளாய் துரியோதனு, இந்தத் தூத ரிருக்கட்டும். கெட்டிக்காரரான வேறு தூதரை யழைத்து வெகு தந்திரமாய் அவர்களைத் தேடும்படி கட்டளை யிடவேண்டும். அவர்கள் எங்கேயாகிலும் மாறுவேடம் பூண்டு சுகமாகவே இருப்பார்கள். அவர்களை வெகு சீக்கிரத்தில் கண்டு பிடித்துவரும் தூதருக்கு நல்ல வெகுமதிகள் கொடுப்போம். அப்படிப்பட்ட தூதரைச் சீக்கிரம் அனுப்பு என்று கர்ணன் சொல்லியதைக் கேட்டு துச்சாதனன் சொல்லுகிருன்.

இப்போது கர்ணன் சொல்லிய பேச்சு சரிதான். ஆனுல் அந்தப் பாண்டவர் சுகமா யிருந்தவர்க ளானபடியினுலே கஷ்டப்பட்டு அஞ்ஞாதவாசஞ் செய்யமாட்டார்கள். மடுவில் வீழ்ந்தோ மிருகங்களின் வாயிலகப்பட்டோ காட்டுத்தீயி லகப்பட்டோ இன்னுமெவ்விதமாகவோ மரண மடைந்திருப்பார்களே யல்லது பிழைத்திருக்க மாட்டார்கள். ஆகிலும் நா மிருக்கவேண்டிய ஜாக்கிரதையி லிருக்க வேண்டு மானதால் சாரரை விட்டுத் தேடவேண்டுவது யுக்தந்தான். வேதியருக்கு வேதம் கண், அரசருக்கு சாரர் கண், பசுக்களுக்கு

மூக்கு கண். ஆனபடியினாலே நாம் அவசியம் சாரனைக்கொண்டு யாவு மறியவேண்டும். ஆனதுபற்றி கர்ணன் சொல்லியபடி சீக்கிரம் சாரரை யனுப்பும். ஒருவேளை யந்தப் பாண்டவர் காடுகளில் வாசஞ் செய்யும் இராக்கதர், அசுரர், முதலானேரோடு கர்வத்தினாலே சண்டைசெய்யப் போய் மடிந்தார்களோ? அல்லது தீவாந்தரங்களிற் போய் அவ்விடத்து அரசனை வென்று சுகமாய் அரசாண்டுகொண்டிருக்கிறார்களோ? இல்லா விட்டால் எங்கேயாகிலும் மனுஷ்ய சஞ்சார மில்லாத விடத்தில் ஒரு குகையிற் சென்று யோகிகள் போல் ஏகாந்தமாய் வாசமா யிருக்கிறார்களோ ? இன்னபடியென்று நமக்குத் தெரியாமையாலே செய்தி தெரிந்துகொள்ள வேண்டுவது முக்கியமா யிருக்கிற தென்று துச்சாதனன் சொல்லி நிறுத்தியபின் துரோணாசாரியர் ஒரு வார்த்தை சொன்னார்.

கேளாய் துரியோதன மஹாராஜனே, சூரராயும், சகல சாஸ்திரங்களை யறிந்தவர்களாயும், புத்திசாலிகளாயும், ஜிதேந்திரியராயும், சத்தியவான்களாயும், தருமவான்களாயும், ஒற்றுமை யுள்ளவராயு மிருக்கிற பாண்டவர்கள் மரணமடைந் திருப்பார்க ளென்று எவ்வளவு மெண்ணக்கூடாது. ஏனென்றால், அவர்களில் மூத்தவராகிய தருமபுத்திரர் தர்ம நிஷ்டையும், அன்பும், பொறுமையும், அழுக்காறின்மையும், இப்படிப்பட்ட நற்குணங்க ளெல்லா முடையராகி தம்பிமாரிடத்தில் மிகுந்த அன்போடு காலத்திற் கேற்றபடி நடக்கவேண்டியவைகளுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லுவார். அந்தத் தம்பிமார்களோ அவர் கிறிய கோட்டைத் தாண்டாமல் நடப்பார்கள். ஆனதுபற்றி அவர்களுக்குப் பிராணபயம் நேரிடாது. மேலும் அவர்கள் தேவதைகள் அசுரர் முதலான யாவரையும் ஜயிக்கவல்லவர்கள். ஆகையால் அவர்கள் பரலோக மடைந் திருப்பார்கள் என்கிற நினைவை மாற்றி மேன்மையோ டிருக்கிறார்க ளென்றே நினைத்து மனதில் அச்சத்தோடு அவர்களைக் கண்டுபிடிக்கும்படியாகிய முயற்சிகளைச் செய். அவ்வைவரில் அர்ச்சுனன், அசகாயசூரன், மகாரதன், மூன்று லோகங்களையும் ஒருவனாகவே ஜயிக்க வல்லவன், அவனோடு எதிர்த்து யுத்தம் பண்ணும்படியான வீரன் நமது சேனைகளில் ஒருவனுமில்லை. ஊழிகாலத்து இயமனுக்கு ஒப்பாய் கதாயுதத்தைக் கையிலேந்தி கர்ஜிக்கும் வீமசேனனையும் சண்டப் பிரசண்டமாக பல்வகை யுத்தங்களையும் நடத்தும்படியாகிய இரட்டையரையும் வெல்லத்தக்கவர்தான் யா ரிருக்கிறார்கள்? தருமபுத்திரர் வெகுண்டு நோக்குவாராகில் மூவுலகங்களையு மெரிக்கத்தக்க அக்கினிபகவானும் சாம்பலா

ய்ப்போவான். அவருடைய மகிமைகள் விஸ்தாரமுண்டு. ஆகையாலே அவர்களுடைய அஞ்ஞாதவாச காலம் முடிகிறதற்குள்ளே எவ்வகையினாலாவது கண்டுபிடித்தால் நீ சுகப்படலாம். இல்லாவிட்டால் வெகு அனர்த்தங்கள் நேரிடும். இதை யோசித்து கெட்டிக்காரராகிய சாரரை விடுத்துத் தேடிவரும்படி செய் என்று துரோணாசாரியர் சொல்லியதைக் கேட்டு கவுரவருக்குப் பிதாமகராகிய பீஷ்மாசாரியர் சொல்ல வாரம்பித்தார்.

கேளாய் துரியோதனா, இப்போது துரோணாசாரியர் சொல்லிய பேச்சு யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதா யிருக்கிறது. அந்தப் பாண்டவர் பன்னிரண்டு வருஷம் கடினமாகிய வனவாசத்தை செய்து நிறைவேற்றினார்கள். மிகவும் கடினமாகிய அஞ்ஞாதவாசத்தையும் முக்காலே மூன்று வீசமும் நிறைவேற்றினார்கள். மற்றதையும் நிறைவேற்றி வருவார்கள். இப்போது எங்கேயோ சுகமா யிருக்கிறார்களே யல்லது மரணமடைந்தார்க ளென்று சொல்வது எவ்வளவும் நம்பத்தக்க தல்ல. ஏனென்றால் எங்கே தருமமும் சத்தியமு மிருக்கிறதோ அங்கேதான் ஜய மிருக்கும். தருமபுத்திரர் மிகவும் தருமாத்துமா வானபடியினாலே அவருடைய பாதங்களைச் சேர்ந்திருக்கும் பாண்டவருக்கு ஒரு குறைவும் நேரிடாது. சத்துருவினிடத்தி லிருந்தாலும் நற்குணங்கள் கொண்டாடும்படியா யிருக்கும். குருவினிடத்தி லிருந்தாலும் குற்றங்கள் இகழத்தக்கவையா யிருக்கும். ஆகையால் யதார்த்தத்தைச் சொல்லுகிறேன். அந்தத் தருமபுத்திரன் மிகவும் தருமவானானபடியினாலே அவன் வாசஞ் செய்யும் தேசம் எப்படி யிருக்கு மென்றால் காலத்தில் மழை பெய்யும்படியானதாயும், நற்புத்தியுள்ள ஜனங்களுள்ளதாயும், தானதருமங்கள் மிகுந்ததாயும், பூரண தக்ஷிணைகளோடு யாகங்கள் நடக்கும்படியானதாயும்; அகாலங்களிலும் பூத்தும், காய்த்தும், பழுத்து மிருக்கிற விருக்ஷங்க ளுள்ளதாயும், நித்திய சந்தோஷிகளான ஜனங்க ளுள்ள தாயும் சகல சவுக்கியங்களுக்குக் காரணமாயு மிருக்கும். அந்தத் தேசத்தில் திருடர் பயமாவது ரோகபயமாவது அகால மிருத்யுபயமாவது இப்படிப்பட்ட தீமை ஒன்று மிராது. பசுக்கள் நாளுக்கு நாள் சந்ததி விருத்தியாகி அதிகமாகப் பால் கறக்கும். குதிரைகள் வேகமான நடையுடையனவும் அழகுள்ளனவுமா யிருக்கும். சகல வித்தைகளும் விருத்தியாகும். ஸ்திரீகள் மங்கிலிய மிழக்கமாட்டார்கள். இப்படிக்கு எந்தத் தேச மிருக்கிறதோ அந்தத் தேசத்தில் பாண்டவ ரிருக்கிறார்க ளென்று சித்தமாய் நம்பலாம்.

ஆனல் அந்தத் தருமபுத்திரருடைய மகிமையை முனிவரும் நன்ரு
யறியமாட்டார்கள். அப்படி யிருக்க இந்த அற்பராகிய சாரர் எவ்வி
தமா யறிவார்கள்? ஆகையால் நீ இவர்களைக்கொண்டு அவரைக் கண்
டுபிடித்து அவர் விரதத்தைக் குலைக்க நினைக்கிறது நிறைவேற
மாட்டாது. மற்றென்ன செய்யலா மென்ருல் லவுகிகத்திலும் வை
தீகத்திலும் நல்ல சாமர்த்திய முடையவர்களாகிய யோக்கியமான
மனிதரை யனுப்பி அவரைக் கண்டால் காணலாம். அநேக காரண
ங்களினுலும் அவர்களை இந்த அஞ்ஞாதவாசகாலத்திற்குள்ளே கண்
டுபிடிக்கிறது வருத்த மென்று நினைக்கிறேன். ஆகிலும் நாம் சும்
மா இராமல் தகுந்த ஜனங்களை அனுப்பி தேடச் செய்வது சரிதான்
என்று பீஷ்மர் சொன்ன பின் கிருபர் சொல்லத் தொடங்கினர். கே
ளாய் துரியோதன மஹாராஜனே? வீஷ்மாச்சாரியர் சொன்னது சரி
தான். உலகத்தில் சத்துரு தனக்குத் தாழ்ந்தவனு யிருந்தாலும் சூரனு
யிருக்கிறவன் அவனை உபேக்ஷை செய்யலாகாது. அப்படி யிருக்க
சூரரும் சகல சாஸ்திரங்களை யறிந்தவருமாகிய பாண்டவரை உபே
க்ஷை செய்யலாமோ? நீ உன் சாமர்த்தியத்தையும் அவர்களுடைய
சாமர்த்தியத்தையும் அவர்கள் செய்த பிரதிக்கினைகளையும் சிந்தித்
துப் பதருமல் கெட்டிக்காரராகிய சாரரைக்கொண்டு அவர்க ளிரு
க்கு மிட மறிந்து போய் சமாதானமோ யுத்தமோ இரண்டி லொன்
றைச் செய். அவர்கள் தாம் செய்த பிரதிக்கினையைச் சித்தமாய் நிறை
வேற்றுவார்களே யல்லது சும்மா அகப்படமாட்டார்கள். இது நிச்
சயம், மேலும் அவர்களின் பலத்திற்கும் நமது பலத்திற்கும் வெகு
தாரதம்மிய முண்டு; ஆனதால் அவர்களோடு போர் செய்யுங் கருத்
தை மாற்றி சந்தி செய்யு முயற்சியோடிரு. இதுதான் நல்வழி யென்று
எனக்குத் தோற்றுகிறது என்று கிருபாசாரியர் சொல்லியதைக் கே
ட்டு துரியோதனன் ஒரு கணப் பொழுது ஆலோசித்து ஒரு வார்த்தை
சொன்னன்.

கேளீர் கிருபாசாரியரே? பெரியோர் சொல்ல நானெரு செய்தி
கேட் டிருக்கிறேன். அதாவது, வீமசேனன், கீசகன், நான், ஜராசந்
தன், பகாசுரன், இவ்வைவரும் பதினயிரம் யானை பலமடைந்தவர்
கள். எங்களில் ஒருவனை யொருவன் கொன்ருல் கொல்லலாமேயல்
லது மற்றொருவனும் கொல்லமாட்டான். இது சத்தியமான வார்த்
தை. இப்படி இருக்க கீசகனைச் சங்கரித்தவன் கந்தருவன் என்கிற
பேச்சை எப்படி நம்பலாம்? சயிரந்திரிக்காக ராத்திரி காலத்தில் கந்
தருவன் கீசகனைக் கொன்று னென்கிற செய்தியினலே அந்தச் சயிர

ந்திரி துரோபதிதான், கந்தருவன் வீமன்தான், சந்தேகமில்லை. ஆ
கையால் பாண்டவர் விராடபட்டணத்தி லிருக்கிறார்க ளென்று நி
ச்சயமாய் நினைக்கிறேன். மூவுலகங்களிலும் அந்தக் கீசகனைச் சங்கரி
க்கத் தக்கவ னொருவனு மில்லை. இதை யறியாமல் பாண்டவர் மரண
மடைந் திருப்பார்க ளென்று துச்சாதனன் சொன்னதும், அவர்களை
ஜயிக்கக்கூடா தென்று துரோணாசாரியரும் நீரும் சொல்லியதும்,
அவர்க ளிருக்கு மிடத்தை யறியக்கூடா தென்று பீஷ்மாசாரியர்
சொல்லியதும் இதுக ளெல்லாம் அங்கீகரிக்கத் தக்கவையா யிருக்க
வில்லை. அவர்களை வெல்வதற்கு, கத்தியும், கேடயமும், சேனையும்
வேண்டுவ தில்லை. மற்றென்ன செய்யவேண்டு மென்றால் திரிகர்த்த
ராஜாவாகிய சுசர்மாவைச் சில சேனைகளோடு கூட்டி யனுப்பி அந்த
விராடபட்டணத்திற் போய் பசு மந்தைகளை மடக்கும்படி செய்தால்
பாண்டவர் அந்தத் தேசத்துக்குள் எங்கே யிருந்தாலும் அந்த ராஜா
வுக்கு உப பலமாகச் சண்டைக்கு வருவார்கள். அப்போது அவர்களைக்
கண்டுபிடித்து நீங்கள் செய்த பிரதிக்கினையின்படி அஞ்ஞாதவாசம்
நிறைவேற வில்லையே யென்று சொன்னால் சத்திய சந்தரான தரும
புத்திரர் சரி யென் றொப்புக்கொண்டு தம்பிமார்களோடு மறுபடியும்
வனவாசம் போவார். நாம் சுகமாய் அரசாண்டுகொண் டிருக்கலாம்.
இது தெரியாமல் நீங்கள் வெவ்வேறு யோசனைகளைச் சொன்னீர்கள்.
பீஷ்மர் சொன்னபடி அந்த மச்சநாடுதான் செழிப்பா யிருக்கிறதாய்
சாரராலே தெரியவந்திருக்கிறபடியினாலே பாண்டவர் அங்கே
யே வாசமா யிருக்கிறார்கள். ஆனால் இப்போது செய்ய வேண்டுவதெ
ன்ன வென்றால் நம்முடைய சுசர்மா கது மென் றெழுந் திருந்து சில
சேனைகளோடு கூட அந்நகரத்திற்குத் தென் புறத்திற் போய் பசுமா
ட்டு மந்தைகளைத் தகையவேண்டும். இதுதான் எனக்குத் தோற்றிய
யோசனை என்று துரியோதனன் சொன்னதைக் கேட்டு அந்த சுசர்மா
வானவன் துச்சாதனனையும் கர்ணனையும் பார்த்து ஒரு வார்த்தை
சொன்னான். நமக்குச் சத்துருவா யிருந்த கீசகன் மடிந்த செய்தி கேட்
க எனக்கு மிகுந்த சந்தோஷ முண்டா யிருக்கிறது. ஏனென்றால் அ
வன் முன்னே அடிக்கடி நம்மைத் தொந்தரவு பண்ணிக்கொண் டிரு
ப்பா னன்றோ? அப்போது நம்மில் யாரும் அவனை ஜயிக்கமாட்டாமற்
போனார்களே? அப்படிப்பட்ட சத்துரு தெய்வ கதியினால் மாண்டபடி
யினாலே விராடராஜன் பல மில்லாம லிருக்கிறான். இந்த வேளையில் எ
னக்குச் செலவு கொடுத் தனுப்பினால் அவனது மந்தைகளை யெல்லா
ம் மடக்கி அதற்காக சண்டைக்கு வரும் வீரரை யெல்லாம் அடித்து
அவனுடைய யானைகள் குதிரைகள் பொக்கஷங்கள் யாவையும் கொ

ன்னை யடித்து வருகிறேன். முன்னாலே என்னைச் சேனைகளோடு கூட்டி யனுப்பி நீங்களும பின்னாலேயே வருவீர்களாகில் பாண்டவரைக் கண்டு மறுபடியும் வனவாசம் போக்கி வரலாம், என்று சுசர்மா சொல்லியதைக் கேட்டு கர்ணன் துரியோதனனோடு சொன்னதாவது, இப்போது சுசர்மா சொன்ன பேச்சு அங்கீகரிக்கத் தகுந்ததா யிருந்தாலும், பீஷ்மர், துரோணர் முதலான பெரியோர்களுடைய தாற்பரியத்தின்படி நடக்க வேண்டுவது அவசியமா யிருக்கிற தாகையால் அவர்களோடு இதைச் சொல்லி அவர்க ளனுமதிப்படி செய்யவேண்டும். பாண்டவர் உயிரோ டிருக்கமாட்டார்க ளென்று தோற்றுகிறது. இருந்தாலும் தும்சஞ் செய்துபோடுவோம். எப்படியும் இப்போது விராட நகரத்தின்மீதில் தண்டெடுக்கவேண்டுவது அகத்தியந்தான் என்று கர்ணன் சொல்லியதைக் கேட்டு துரியோதனன் தன் தம்பியாகிய துச்சாதனனை யழைத்து வாராய் தம்பி துச்சாதனா, நாமிப்போது பெரியோர்களோடு யோசித்துச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு மச்சதேசத்தின் மீது பாயவேண்டி யிருக்கிறது. அந்த விராடராஜன் அந்தக் கீசகனைக்கொண்டு அடிக்கடி நம்மை உபத்திரவப்படுத்தி வந்தானல்லவோ? அதற்காக நாம் அவனுக்குத் தண்டனை செய்யும்படியாகிய காலம் நேரிட்டதென்று துரியோதனன் சொல்லக் கேட்டு துச்சாதனன் அந்த க்ஷணத்தில் சதுரங்க சேனையைக் கூட்டி பீஷ்ம துரோணாதிகளாகிய பெரியோர்களோடு யோசனை செய்து அவர்களும் சம்மதித்தபடியினாலே அதிக சந்தோஷத்தோடு திரிகர்த்த ராஜனை முன்னே யனுப்பித் தான் பின்னே திரண்ட சேனைகளோடு புறப்பட்டான்.

## தென்புறத்து மாடுபிடிச் சண்டை.

புறப்பட்டு திரிகர்த்த ராஜனும் அவனும் வேதசாஸ்திர கோஷமும் மங்கள வாத்திய கோஷமும் மலிந்து எங்கும் சாலைகளும் சோலைகளும் தடாகங்களும் விளங்கி சொர்க்க வாசிகளின் மனதையும் இழுக்கும்படியான அழகு பொருந்திய மச்சநா டடைந்து அதற்கு ஒரணியாய் விளங்காநின்ற விராடநகரத்தின் தென் பக்கத்தில் தண்

டிறங்கினார்கள். பின்பு சுசர்மாவானவன் விராடராஜனுடைய பசு மந்தைகள் நிறைந்திருக்கு மிடங்களை யெல்லாம் பார்த்து மனதில் வெகு சந்தோஷத்தோடு துச்சாதனனை நோக்கிச் சொல்லுகிறான்.

கேளாய் துச்சாதனா, இந்த நாட்டி லிருக்கிற செழிப்பையும் இதில் வேண்டியமட்டும் புல் மேய்ந்து வளர்ந்திருக்கிற பசுக்களையும் பார்த்தாயோ? அகத்தியமாய் இவைகளை நாம் மடக்கிக்கொண்டு போக யத்தினப்பட்டால் அந்த விராடராஜன் சண்டைக்கு வருவான். அவன் இந்தப் புறத்தில் யுத்தத்திற்கு வரப் பார்த்து துரியோதனன் முதலானவர்கள் வட பக்கத்திற் போய் அங்கிருக்கிற பசு மாடுகளை மடக்கினால் மிகுந்த சங்கடம் நேரிடுமானதால் இராஜனுக்கு உதவியாய் பாண்டவர் வந்து சேருவார்கள். அப்போது நமது இஷ்டம் சித்திக்கும். ஆனபடியினாலே நாம் கிருஷ்ணபக்ஷ நவமியாகிய இந்தத் தினத்திலேயே இங் கிருக்கிற மந்தைகளை மடக்குவோம் என்று திரிகர்த்தன் சொன்னதைக் கேட்டு துச்சாதனன் சரி யென்று அங்கீகரித்து அப்படிக்குச் செய்யும்படி அவனுக்கு உத்தரவு கொடுத்து தான் பீஷ்மாதிகளோடு சேர்ந்து வட பக்கத்திற் செல்ல மன முடையவனாகி சேனைகளை இரண்டு பங்காய்ப் பிரித்துவைத்துப் புறப்பட்டான். புறப்பட்டு பீஷ்ம துரோண துரியோதனாதிக ளிருக்கு மிடம் வந்து அவர்களோடு இந்த யோசனையைச் சொல்லி அவர்க ளெல்லாம் நன்றென்று சம்மதிக்க அவர்களோடுகூட துரியோதனனை முன்னிட்டுக் கொண்டு அந்த நவமியன்றைக்கே அந்நகரத்தின் வட புறம் போய்ச் சேர்ந்தான். அன்றைக்குப் பாண்டவருடைய அஞ்ஞாதவாசம் பூரணமாயிற்று. அதை யறியாமல் துரியோதனாதிகள் பாண்டவரை அஞ்ஞாதவாசத்துக்குள்ளே கண்டுபிடிக்கப்போகிறோ மென்று வெகு சந்தோஷத்தோடு சேனையை இறக்கினார்கள். சுசர்மாவானவன் கவுரவ ரெல்லாம் உத்தர பாகத்தில் வந்து சேர்ந்த செய்தியைச் சாரரால் அறிந்துகொண்டு பசுக்கூட்டத்தை மடக்கச் சேனையை யெழுப்பினான். அப்போது பேரிகைகள், காகளங்கள், சங்கங்கள், தம்பட்டங்கள் முதலான வாத்தியங்கள் ஒலிக்க, கத்திகள், ஈட்டிகள், சூலங்கள், கேடயங்கள் முதலான ஆயுதங்க ளெல்லாம் பளபளவென்று விளங்க, கவச கிரீட குண்டலங்கள் வெயி லிறைக்க, ஓர்புறத்தில் குதிரைகளின் கனைத்தலும், மற்றோர் புறத்தில் யானைகளின் கர்ச்சனைகளும், மற்றோர் புறத்தில் தேருருளைகளின் முழக்கமும், மற்றுமோர் புறத்தில் வீரருடைய சிங்க நாதங்களும் எழும்பி திசைகளைச்

செவிடுபடுத்த, திரிகர்த்தசேனையானது எழுந்து பசு மந்தைகளைத் துரத்தி மடக்க வாரம்பித்தது. ஆரம்பிக்கவே அந்தப் பசுமாடுகளெல்லாம் பயந்து வீரிட்டுக்கொண்டு மூலைக்கு மூலை யோட அந்தச் சேனு ஜனங்கள் துரத்தித் துரத்திப் பிடித்து மடக்கினார்கள். இப்படியிருக்கும்போது அந்த மந்தைக்ளின் மேய்ப்பாராகிய கோபாலர் குண்டாந்தடிகள், எறியீட்டிகள், வல்லயங்கள், பட்டாக் கத்திகள், இவை முதலான ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு அந்தச் சேனைகளின்மீது பாய்ந்து சில்லை வெட்டிக் குத்தி முறித்துத் துண்டித்துத் தள்ளினார்கள். அந்தக் கோபாலர் இவ்வாறு பராக்ரமிக்கக் கண்டு திரிகர்த்தர் வெகுவாக வெகுண்டு விற்களை வளைத்து நாரிகளைப் பூட்டி சரமாரி பொழிப்வே இடையர் நிற்கமாட்டாமல் கையற்றவரும், காலற்றவரும், முடிபற்றவரும், அடியற்றவருமாகிப் பரிதவித்து மூலைக்குமூலை இழிந்த் எரி வெள்ளம்போல் சிதறி யோடி பட்டணத்தினுள்ளே புகுந்து அரசன் சபைக்குப் போனார்கள். திரிகர்த்தரோ ஜயித்தோமென்று சிங்கநாதமும் சங்கநாதமும் செய்து பசுக்களைத் தாங்களிருக்கு மிடத்திற்குக் கொணர்ந்து கூட்டமாகச் சேர்த்துக் காவலில் வைத்தார்கள். இப்படியிருக்க அரசன் சபைக்குப் போன கோபாலர் சகல பரிவாரங்களுஞ் சூழ சிங்காதனத்தில் வீற்றிருக்கும் விராடமகாராஜனைப் பணிந்து சொல்லத் தொடங்கினார்கள். சுவாமீ ராஜாதிராஜனே, சுசர்மா முதலாகிய திரிகர்த்தர் சேனைகளோடு கூட வந்து தென்புறத்தி லிருக்கின்ற நமது பசு மந்தைகளை மடக்கிக்கொண்டு போனார்கள். நாங்களும் ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு கூடுமானமட்டும் போரிட்டோம். இட்டும் அவர்கள் கூட்டம் மிகுமானதினாலும் சூர ரானதினாலும் அவர்களை வெல்லமாட்டாமல் அவர் விடுத்த அம்புகளினால் தேக மெல்லாம் துளைபட்டு எதிர் நிற்கமாட்டாமல் ஓடிவந்து உமக்குத் தெரிவித்தோம். அறுபதினாயிரம் பசுக்களை கொள்ளை கொண்டார்கள். ஆகையால் ஆலசியஞ் செய்யாமல் நமது சேனைகளைச் சன்னுகப்படுத்தி மகாராஜாவே புறப்பட வேண்டும், என்று கோபாலர் விண்ணப்பஞ் செய்ததைக் கேட்டு விராடராஜன் மந்திரிகளையும் சேனாதிபதிகளையும் நோக்கி ஒரு வார்த்தை சொன்னான்.

வாராய் சேனாதிபதி, இடையர் சொல்லிய பேச்சைக் கேட்டாயே? ஆகையால் ஆலசியஞ் செய்யாமல் நம்முடைய சேனைகளைச் சன்னுகப்படுத்தி என் ரதத்தையும் சித்தஞ்செய்வி. அந்தத் திரிகர்த்தரோடு யுத்தஞ்செய்து வெற்றி கொள்ளவேண்டும் என்று அரசன் சொ

வ்வியதைக் கேட்டு சேனாதிபதியானவன் அப்படியே நால்வகைச் சேனைகளையும் சித்தப்படுத்தி சாரதியோடு சொல்லி ரதத்தை யலங்கரித்து திவ்யமாகிய குதிரைகளைக் கட்டிக்கொண்டு வந்து நிறுத்தி எல்லாம் சித்தமாயிற் றென்று அரசனுக்குத் தெரிவித்தான். பின்பு சதானீக னென்கிறவன் நல்ல இருப்புத் தகடுகளைக் கூட்டி மிகுந்த வேகத்தோடு எய்யப்பட்ட ஆயுதங்களும் உட்புகுதாம லிருக்கும்படி தைத்து மேலே நவரத்தினங்க ளிழைத்த பொற்றகடுகள் போட்டு பலமாகவும் அழகாகவும் நிருமிக்கப்பட்ட திவ்ய கவசத்தைக் கொண்டுவந்து தன் தமையனாகிய விராடராஜனுக்குக் கொடுத்தான். அந்த அரசன் அந்தக் கவசத்தைப் பூண்டு வில், அம்புப்புட்டில், கத்தி, தடி முதலான ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு அந்த ரதத்தின்மேலேறிப் புறப்பட்டான். பின்பு அவனுடைய மூத்த குமாரனாகிய சங்க னென்கிறவன் பொன்னாற் செய்து தாமரை செங்கழுநீர் முதலிய மலர்களைப்போல் சித்தரித்து விளங்காநின்ற கவசத்தைப் பூண்டு தேரின்மேலேறி சண்டைக்குப் புறப்பட்டான். இவ்விருவரையுஞ் சூழ்ந்து அநேகம் படைத்தலைவர்கள் சாதிக் குதிரைகளின்மீதேறி கத்திகளும், ஈட்டிகளும், பளபள வென்று விளங்கப் புறப்பட்டார்கள். இன்னு மநேக ராஜகுமாரர் தேர்களின்மீதேறி கைகளில் விற்களைப் பிடித்து அட்டகாசத்தோடு அரசனுக்கு முன்புறத்தில் நடந்தார்கள்.

இவ்விதமாய் பரிவாரங்களோடு விராடமகாராஜா புறப்பட, கங்கபட்டரானவர் அவ் வரசனை நோக்கி கேளீர் மகாராஜாவே, நமது மடப்பள்ளியி லிருக்கிற வல்லன் மகாபலசாலி யென்கிறது உமக்குத் தெரியுமே? அவனுக்கு வில் வித்தை முதலான யுத்தஞ் செய்யும் வகைகள் கொஞ்சம் தெரியும். அப்படியே தந்திரீபாலனும் தாமக்கிரந்தியும் கொஞ்சித்துச் சண்டை வகை கற்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் தருமபுத்திர ரிடத்தி லிருக்கும்போது கவுரவரோடுகூட ஆயுத வித்தைகளை அப்பியாசஞ் செய் திருக்கிறார்கள். நானும் அவ்வித்தையைக் கொஞ்சித்து கற்றிருக்கிறேன். ஆகையாலே எங்களுக்கும் தேர்களும் ஆயுதங்களும் கொடுக்கும்படி கட்டளையிட்டால் எங்களாலே கூடுமானமட்டும் யுத்தஞ் செய்கிறோம். எங்களுக்கு ரக்ஷகராகிய நீர் சண்டைக்குப் புறப்படும்போது நாங்கள் சும்மா விருப்பது தகுதி யன்று. ஆகையால் தயை செய்து ஆயுத வாகனங்களைக் கொடுக்கக் கோருகிறேன் என்று சொல்லக் கேட்டு விராடன் தன் தம்பியாகிய சதானீகனைக் கூப்பிட்டு கங்கபட்டர் சொன்ன பேச்சைச் சொல்லி

கேளாய் தம்பி, வல்லன் முதலாகியபேர்களைக் கண்டபோதே இவர்கள் வீரபுருஷரா யிருப்பார்க ளென்று நினைத்தேன். இப்போது கங்கபட்டர் சொல்லினாலேயும் அவர்கள் வீரரென்று தெரிகிற தன்றோ? எப்படியாகிலு மிருக்கட்டும். தேர்களையும் ஆயுதங்களையும் கொடுப்போம். அதனாலே கேடொன்றும் நேரிடாது என்று தமையன் சொல்லியதைக் கேட்டு சதானீகன் பாண்டவர் நால்வருக்கும் திவ்ய ரதங்களையும் வில் முதலிய திவ்யாயுதங்களையும் கொடுத்தான். அவர்கள் அவ் வாயுதங்களை யேந்தி தேர்கள்மீ தேறி அரசனோடுகூட சண்டைக்குப் புறப்பட்டார்கள். அப்போது திவ்யாலங்காரம் பொருந்திய பாண்டவர்க ளேறி நடத்திய தேர்கள் எல்லாத் தேர்களுக்கும் முன்னே வேகமாக ஓடின. பாண்டவர்கள் திவ்ய வஸ்திரங்களாலும் சந்தனங்களாலும் புஷ்பங்களாலும் அலங்காரம் பொருந்தி கைகளில் ஆயுதத்தைப் பிடித்து வெகு உல்லாசமாக கர்ச்சித்துக்கொண்டு போனார்கள். பின்பு தகுந்த சூரரா லேறி நடத்தப்பட்டு சஞ்சரிக்கிற பர்வதங்களைப் போல் யானைகள் போயின. விராடராஜனுக்குப் பின்னே சதானீகன் முதலான அவன் தம்பிமார்க ளெல்லாம் சேனைகளால் சூழப்பட்டுப் போனார்கள். அந்த யுத்த யாத்திரையில் அரசனுக்கு முன்னும் பின்னும் பதினாயிரம் வீரர் சூழ்ந்து போனார்கள். அரசனுக்குப் பின்னே எண்ணாயிரம் தேர்கள், ஐயாயிரம் யானைகள், இருபதினாயிரங் குதிரைகள், லக்ஷம் காலாள்கள், இன்னு மநேகம் ராஜகுமாரரும் புறப்பட்டார்கள்.

இவ்வகையாய் விராடமஹாராஜனுடைய சேனை வசந்த காலத்தில் சம்பூர்ணமாய்ப் பூத்த காடுபோல் விளங்கித் தூளிகளால் பத்து திசைகளையு மறைத்துக்கொண்டு பட்டணத்துக்கு வெளியில் வந்தது. அப்போது சூரியன் அஸ்தமயத்துக்குச் சமீபமா யிருந்தான். அந்த வேளையில் விராடமஹாராஜனுடைய சேனையானது வெள்ளம் புரண்டு வருவதுபோல் வந்து திரிகர்த்தசேனையின்மீது பாய்ந்தது. பாயவே அவ் விருசேனைகளுக்கும் பலமான யுத்தமுண்டாயிற்று. அதெப்படி யிருந்ததென்றால் ஊழிகாலத்தில் ஒரு கடலோடு மற்றொருகடல் மோதுவதுபோ லிருந்தது. அப்படி கைகலந்து யுத்தமுண்டாகும்போது ஒரு கோஷமும் தூளும் எழும்பிற்று. அந்த கோஷமானது சமுத்திரம் உலகத்தை முழுதும் இரைந்துகொண்டு வருகிறதோ வென்று யாவரும் சந்தேகிக்கத்தக்கதா யிருந்தது. அந்தத் தூளியோ வென்றால் அஸ்தமயகால மானபடியினாலே இருள் வந்து கம்மிக்கொண்ட தென்று நிச்சயிக்கும்படி யிருந்தது. அதில் வீரர்

பிரயோகித்த அம்புகள் ஆகாசத்திற் கிளம்பி கீழே விழும்போது ஆகாசத்திற் பறக்கும் பக்ஷிகளும் கண் வாய் மூக்குகளில் தூள் நிறைந்து வேதனைப்பட்டு கீழே விழ அவைகளுக்கு மிவைகளுக்கும் வேற்றுமை தெரியாம லிருந்தது. யானைகள் இருப்புலக்கைகளை யெடுத்துக் கொண்டு மதத்தால் மெய் மறந்து ஒன்றின்மே லொன்று விழுந்து முறிக்கவும் படையாளிகள் பல ஆயுதங்களாலே ஒருவரை யொருவர் துண்டாடவும் இரண்டு சேனைகளிலும் ஒரு முகூர்த்த நேரத்துக்குள் பிணப் போர்கள் குவிந்தன.

அன்றியும் தூள் கிளம்பி கம்மிக்கொண் டிருக்கிற அந்த வானத்தில் எழும்புகின்ற ஆயுதங்கள் இருளில் சஞ்சரிக்கின்ற மின்மினிபோல் விளங்கின. அல்லாமலும் ஆயுதங்கள் எழும்புகிறதும் உடனே தலைகள் கிரீட குண்டலங்களோடு கீழேவிழ்கிறதும் ஒரு விடத்தில் புழுகு பூசி தோள்வளைகள் அணிந்து விளங்குகின்ற புஜங்கள் ஆயுதங்களோடு சரிந்து விழுகிறதும் மற்றொரு விடத்தில் இருப்புலக்கை பிடித்த துதிக்கைகளோடு பிறைபோல் விளங்குந் தந்தங்களுள்ள யானைத்தலைகள் எழும்புகிறதும் கடிவாளங்களோடு குதிரைத் தலைகள் எழும்புகிறதும் முறுக்கிவிட்ட மீசை தாடிகளோடும் உருட்டி விழித்த கண்களோடும் வெருட்ட நெறித்த புருவங்களோடும் பற்களா லழுந்தக் கடித்த உதடுகளோடும் சுத்த வீரருடைய முடிகள் தெறித்து எழும்புகிறதும் அவை எழும்புகிற வேகத்தினால் வசந்தந் தெளித்ததுபோல் உதிரங்கள் நாற்புறங்களில் சிந்துகிறதுமாகி யிருந்தது. இப்படி வெகு கோரமாகிய யுத்தம் நடந்துவர தருமாத்துமாவாகிய தருமராஜன் தம்பிமார் மூவரோடு திரிகர்த்தருடைய படைக்கு எதிரிற் போய் நின்று சிதறிக் கலந்து சண்டை செய்கின்ற தமது சேனையைச் சேர்த்து கருட வியூகமாக்கி அதின் தலையில் தா மிருந்து இரண்டு சிறகுகளிலும் இரட்டையரையும் வாலில் வீமனையும் வைத்து தீக்ஷணமான பாணங்களைப் பிரயோகித்து எதிரி சேனைகளைச் சின்னபின்னமாக அடித்து தும்சஞ் செய்தார். இப்படி சண்டப்பிரசண்டமாக யுத்தஞ் செய்து ஒரு முகூர்த்த காலத்தில் பதினாயிரம் ரதங்களை மடித்தார். அதெப்படியென்றால், வீமன் நாலாயிரம் தேர்களை அதின் குதிரைகள் சாரதி வீரன் முதலானவரோடு பொடியாக்கினான். நகுலனும் சகாதேவனும் சேர்ந்து இரண்டாயிரம் தேர்களை நாசஞ்செய்தார்கள். தருமபுத்திரர் தாமே இரண்டாயிரம் தேர்களைத் தும்சஞ் செய்தார். சதானீகனும் சங்கனும் இரண்டாயிரம் ரதங்களைச் சூரணமாக்கிக் குவித்தார்கள்.

இவ்வகையாய் விராடசேனையாலே திரிகர்த்த சேனை வெகு
வாய் நஷ்டப்பட்டு தாவரிக்கமாட்டாமல் நிற்க விராடராஜ குமாரனா
கிய சங்கன் வெகு உச்சாகத்தோடு எதிரி சேனைக்கு முன்புறத்தில்
நின்று பலமான யுத்தத்தைச் செய்தான். அப்போது அவனை யனுச
ரித்து மதிராசுவ னென்கிறவனும் சதானீக னென்கிறவனும் யுத்த
களத்தின் முன்புறத்தில் வந்து நின்றுகொண்டு அம்புகளைவிடுத்து
எண்ணூறு தேர்களை பொடித்தார்கள்.

இவர்களிப்படியிருக்க, விராட மஹாராஜன் மற்றோர் புறத்தில்
பிரவேசித்து கொடுமையான நாராசங்களைப் பிரயோகித்து நூறுயா
னைகளையும் ஆயிரங் குதிரைகளையும் அன்பது ரதங்களையும் சில வீரரை
யு மடித்தான். இப்படிக்கு தன் சேனை வெகுவாய் நஷ்டமாகவே
திரிகர்த்தராஜன் அதிக பொருமை கொண்டு தன் சேனைக்கு முன்புற
த்தில் நின்று விராடனோடு யுத்தஞ்செய்யத் தொடங்கினான். தொட
ங்கவே காட்டில் இரண்டு சிங்கங்களுக்கு யுத்த முண்டானது போல்
அவ்விரண்டு அரசருக்கும் மஹாயுத்த முண்டாயிற்று. அந்த யுத்தத்தி
ல் விராடராஜன் கூர்மையுள்ள நான்கு அம்புகளை விடுத்து சுசர்மா
வினுடைய நான்கு தேர் குதிரைகளையும், இரண் டம்புகளினாலே
சாரதியையும், மூன் றம்புகளினாலே கொடிமரத்தையும், அடித்துத் த
ள்ளி ஐந்து பாணங்களைப் பிரயோகித்து அந்த சுசர்மாவை வெலு
வெலுக்கும்படி யடித்தான். அடிபட்ட மாத்திரத்திலே அந்தத் திரிகர்
த்தராஜன் வெகு வேகமாய் வில்லை வளைத்து நாணிபூட்டி தீக்ஷண்
யமாகியும் கழுகின் சிறகுகள் கட்டியு மிருக்கிற ஐந்து பாணங்களைப்
பிரயோகித்து விராடனை மார்பி லடித்தான். இப்படி இரண் டரசரும்
உடம்பு தெரியாமல் போர் செய்யு மளவில் இரண்டு சேனைகளினு
மிருக்கின்ற சூரர் பராக்கிரமித்து ஒருவரோ டொருவர் பலமான
யுத்தஞ்செய்யத் துவக்கினார்கள். அப்போது இருள் மூடிக்கொ
ண்டதனாலும் தூட்க ளெழும்பி வியாபித்ததனாலும் வீரருக்குத்
தன்னுடையவனென்றும் பிறருடையவனென்றும் தெரியாமல் மய
க்க முண்டாகி வலிமையோடு ஆயுதங்களைப் பிரயோகஞ் செ
ய்யத் துணிவில்லாம லிருந்தது. ஆகிலும் யுத்தம் நடவாம லிரு
க்கவில்லை.

இப்படியிருக்க அவ்விரண்டு பாளையத்தாருக்கும் உபகாரமாக
சந்திரன் நிலாப்படத்தை விரித்து உதயமாயினான். அப்போது சுசர்
மாவும் அவன் தம்பியாகிய சுவர்மாவும் அநேக பாணங்களை யெய்து

விராடனையும் அவன் சேனையையும் முறிய அடித்தார்கள். அந்த மச்ச நாட்டரசனும் சகியாமல் சத்துருக்கள் பிரயோகித்த பாணங்களைப் பொறுத்துக்கொண்டு வெகு கோபத்தை யடைந்து அந்தத் திரிகர்த்த ரிருவரையும் தேரில் நிலைபெறவொட்டாமல் பாணங்களையும் பிரயோகித்தான். பிரயோகிக்கவே திரிகர்த்த ரிருவரும் இரதத்தை விட்டுக் கீழே குதித்து பெரிய கதாயுதங்களைக் கையி லெடுத்துக்கொண்டு விராட ராஜனது இரு புறங்களிலு மிருந்த சேனைகளை யடித்து விலக்கி தேரின் கிட்ட வந்து லாகவத்தினு லெழும்பி விராடனைக் கீழே இழுத்து கைப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு வந்து தங்கள் தேரின்மீது உட்காரவைத்து தங்கள் சேனையின் நடுவிற் கொண்டு போனார்கள். கொண்டு போகவே மச்சராஜ சேனை தைரிய மற்று ஹாஹா வென்று கூவிக் கொண்டு திசைதோறு மோடிற்று. திரிகர்த்த சேனை சந்தோஷத்தினால் சிங்கநாதஞ் செய்து பின் றொடர்ந்து துரத்திற்று. அப்போது ஒரு முகூர்த்த காலவளவில் இரண்டு சேனைகளினின்று முண்டாகிய சந்தோஷ கோஷமும் விசன கோஷமும் ஊழிகாலத்துக் கடலொலி போல் முழங்கிற்று. இவ்வாறாக மச்சராஜன் படை யோடுகிறதையும் திரிகர்த்த ராஜன் படை துரத்துகிறதையும் ஆரத்தி லிருந்த தருமபுத்திரர் பார்த்து ஓடிவந்து வீமனைக் கூப்பிட்டுச் சொல்லுகிறார். பார்த்தாயோ வீமசேனா, நமக்கு ரக்ஷகனாகியும் பரோபகாரியாகியும் தருமாத்துமாவாகியு மிருக்கிற விராட மஹாராஜனை சுசர்மா பிடித்துக் கொண்டு போனானே! இந்த வேளையில் நாம் உபேக்ஷையா யிருப்பது நியாயமல்ல. ஆதலால் நீ இந்தச் சேனையை ஓட வொட்டாமல் நிறுத்தி அரசனை விடுவிக்கவேண்டும் என்று தமையனார் சொல்லியதைக் கேட்டு வீமன் வாரீர் மஹாராஜாவே, இதோ ஒரு நிமிஷத்தில் அந்தத் திரிகர்த்தனையும் அவர் சேனையையும் நாசஞ் செய்து அரசனை விடுவிக்கிறேன். அதற்கு உபாயம் என்னவென்றால் இதோ பெருங் கிளைகள் அநேகஞ் சூழ்ந்து பெரிய விருக்ஷமொன்று காணப்படுகிறதே, இதை வேரோடு பிடுங்கிக்கொண்டு சற்றுநேரம் போர் செய்யும்படி கட்டளையிட வேண்டும் என்று சொல்லக் கேட்டு தருமபுத்திரர் கேளாய் தம்பி, நாம் அஞ்ஞாத வாசமா யன்றோ இவ்விடம் வந்திருக்கிறோம். அது முடிகிறதற்கு இன்னுஞ் சில கால மிருக்கின்றது. இப்படி இருக்க நீ மரத்தைப் பிடுங்கிக்கொண்டு சண்டை செய்வாயாகில் இப்படிப்பட்ட சாமர்த்திய முள்ளவன் வே றில்லாமையாலே உன்னை வீமனென்றே நிச்சயித்து நம்மைக் கண்டுபிடிப்பார்கள். ஆனதால் நீ தேர்மே லிருந்து சாதாரணமாக யுத்தஞ் செய்தே அரசனை விடுவிக்க வேண்டும் என்று

அண்ணல் கூறியதைக் கேட்டு வீமன் அப்படியே செய்கிறேனென்று ஓடுகின்ற சேனைகளை யெல்லாம் நிறுத்தி கூட்டிக்கொண்டு போய் சந்தோஷத்தினாற் கோலாகலப்பட்டுக்கொண் டிருக்கிற சேனைக்கு பகைவர் எதிரில் நின்று வில்லி லம்புகளைத் தொடுத்து பிரளயகால வாயுபோல் பராக்கிரமித்து எங்கும் அம்புகள் கம்மிக் கொள்ளும்படி விடுத்தான். தருமபுத்திரரும் நகுல சகாதேவர்களும் அவனுக்கு உப பலமாகப் போய் சரமாரி பொழிந்தார்கள். இப்படியாகவே திரிகர்த்த சேனைத் தலைவர் தங்கள் படைகளை ஒரு முகமாகத் திருப்பிக்கொண்டு தங்களுடைய முழு வல்லமைகளோடு பல வாயுதங்களினாலும் பலமான யுத்தஞ் செய்தார்கள். அவ்விரண்டு சேனைகளும் பராக்கிரமித்து யுத்தஞ் செய்தாலும் பாண்டவருடைய உப பலத்தினாலே மச்சராஜ சேனை மிகுந்த உச்சாகத்தோடு யுத்தம் பண்ணினதனாலே எதிரி சேனை இளைத்தே வந்தது. அந்த யுத்தத்தில் வீமன் இரண்டாயிரம் தேர்களையும், தருமபுத்திரர் ஆயிரந் தேர்களையும், நகுல சகாதேவர்கள் ஆயிரம் தேர்களையும், நாசஞ் செய்தது மன்றி அநேகந் தலைவராகிய வீரரையும் மடித்தார்கள். அன்றியும் தருமபுத்திரர் சில நேரம் இவ்வகையாய்ச் சேனைகளோடு யெதிர்த்து யுத்தஞ் செய்து பின்பு தமது ரதத்தை சுசர்மாவின் சமீபத்தி லோட்டி தனுசை வளைத்து வேகமும் கூர்மையு முள்ள பல வகை யம்புகளைத் தொடுத்து பூரண பலத்தோடு அவன் மீதிற் பிரயோகித்தார். அந்தத் திரிகர்த்த ராஜனும் சிங்கமானது அற்ப மிருகத்தை லக்ஷியம் பண்ணாதது போல் தன்னை லக்ஷியம் பண்ணாமல் அம்புகளை விடுக்கா நின்ற தருமபுத்திரர்மீது கொடுமையுள்ள சர்ப்பங்களுக் கொப்பாகிய அநேக பாணங்களைப் பிரயோகஞ் செய்து பின்பு மிகவும் தீக்ஷண்ணிய மாகிய பத்து பாணங்களைப் பிரயோகித்தான். அவைகள் காலகூடவிஷம்போல் சீறிக்கொண்டு பஸ்மம் பண்ணும்படியாக வரக் கண்டு தருமபுத்திரர் அஞ்சாமல் வச்சிராயுதத்துக்குச் சமானமாகிய ஐந்து பாணங்களைப் பிரயோகித்து அந்தப் பத்து பாணங்களையும் அறுத்துத் தள்ளி நான்கு அர்த்த சந்திர பாணங்களாலே அவன் குதிரைகளையும் இரண்டு கர்ணி பாணங்களினாலே சாரதியையும் பூமியின்மீது விழச் செய்தார். இப்படியாகவே சுசர்மா மிகவும் இளைப் படைந்து தயிரிய மில்லாமல் நாற் றிசைகளிலும் வெரள வெரள விழித்துக் கொண்டிருக்கையில் அவனுக்கு உப பலமாக இருந்த சோணசுவ னென்கிறவன் அஞ்சி தூர ஓடிப் போனான். அந்தச் சமயத்தில் விராடராஜன் பெரிய கதாயுதத்தை யெடுத்து தன்னைப் பிடித்துக்கொண்டு வந்த சுசர்மாவை ஓங்கி யடித்து

அந்த அடியினாலே அவன் வெலு வெலுத்து இருக்கக் கண்டு இரதத்தினின்றுங் கீழே குதித்து மூப்புடையவனா யிருந்தாலும் யவ்வன புருஷன்போல் வெகு கம்பீரமாக அந்தக் கதாயுதத்தைச் சுழற்றி சத்துரு சேனைகளில் அநேகங்களை முறிய அடித்துத் தள்ளினான். இப்படி யிருக்க மிகுந்த பாகுபலமுள்ள வீமசேனன் தேரினின்று மிறங்கி யோடிவந்து திரிகர்த்த ராஜனுடைய குடுமியைப் பிடித்து சிங்கம் முயலை இழுத்துக்கொண்டு போவதுபோலும் பூனை எலியை இழுத்துக்கொண்டு போவதுபோலும் இழுத்துக்கொண்டுபோய் தன் தேரின்மீதி லேற்றி காவலில் வைத்தான்.

இவ்வகையாய் சுசர்மா வீமன் கையில் அகப்பட்டுக்கொள்ளவே அவனுடைய சகல சேனைகளும் பயந்து ஓ வென்று அலறிக்கொண்டே நாற்றிசைகளிலு மோடின. அப்போது விராடமகாராஜன் அந்தக் கதையினாலேயே தனக்கு நேர்ப்பட்ட அநேக வீரரை மடித்துத் தன் சேனைக்குள் வந்து இரதத்தி லேறி இராகுவினால் விடப்பட்ட சந்திரன்போல் விளங்கினான். அப்போது மச்ச சேனையில் ஒரு கோலாகல சத்த முண்டாயிற்று. இவ்வகையாய் வீமன் சுசர்மாவைப் பிடித்து சந்திரோதயமா யிருந்தாலும் ஒருவருக்குந் தெரியாம லிருக்கும்படி அவனைத் தன் தேரிற் கட்டிக் கொணர்ந்து தன் தமையனாரிடத்திற்கு வந்து உமது கட்டளையின்படி அரசனை விடுவித்தது மன்றி சத்துருவையுங் கொணர்ந்தேன், இதோ பாருமென்று காட்ட அவர் வெகு சந்தோஷத்தை யடைந்து தம்பிக்கு அநேக ஆசிர்வாதங்களைச் செய்தார். விராடனும் தன்னை விடுவித்ததற்கு மிகவு மனக் களிப் படைந்து அந்தப் பாண்டவ சிங்கத்தை வெகுவாகத் துதித்தான். இப்படிக்கு விராடராஜ பக்ஷத்தார் அன் றிராத்திரியில் வெற்றிகொண்டு அச்ச மின்றி அங்கேயே வாசஞ் செய்தார்கள். இப்படி யிருக்குமளவில் விராடராஜன் தருமபுத்திர ரிடத்திற்கு வந்து நமஸ்காரஞ் செய்து வாரீர் கங்கபட்டரே, சந்நியாசியாகிய உமக்கு இப்படிப்பட்ட பராக்கிரமமும் ஆயுதப் பயிற்சியும் இருப்பதைக் கண்டு எனக்கு மிகவு மாச்சரிய முண்டாயிருக்கிறது. வல்லன் முதலானோருடைய வல்லமை இந்த யுத்தாரம்ப காலத்தில் நீர் சொல்லியும் எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. இப்போது பார்த்தால் நீர் வெகுவாய் ஒளித்துச் சொன்னீ ரென்று நினைக்கிறேன். வல்லன் மல்லரோடு போர் செய்யக் கண்டிருந்தும் அவனைச் சாதாரணமாக நினைத்தேனே யல்லது இவ்வளவு பராக்கிரமசாலி யென் றறியாமற் போனேன். இப்போது நா னொன்று சொல்லுகிறேன், கேளும். இந்த

மச்சநாட்டை உமக்குக் கொடுக்கிறேன். நீர் அரசாட்சி செலுத்திக்
கொண்டு என்னையும் என் குடும்பத்தையும் ரக்ஷித்தருளும். நானோ
மூப்படைந் திருக்கிறேன். என் மக்களோ சாமர்த்தியம் போதாதவ
ரா யிருக்கிறார்கள். நீர் சகல கலைகளையு முணர்ந்த சந்நியாசியானதி
னாலும் பராக்கிரமசாலி யானதினாலும் அரசாளக் குறை வில்லை. மே
லும் சுசர்மாவைக் காவலிற் போட்டபடியினாலே அந்தச் சேனைக
ளெல்லாம் வெகு பொருள்களை யுத்த பூமியிற் போட்டுவிட்டு ஓடிப்
போயின. அந்தப் பொருளை யெடுத்து நீரே வல்லன் முதலான மூ
ன்று வீரருக்கும் மற்றை வீரருக்கும் உம திஷ்டப்படி பரிசுகொ
டும். இவ் விராச்சியமும் அதிலுள்ள எல்லாப் பொருளும் உமதே
யென்று சொன்னான். அதைக் கேட்டு தருமபுத்திரர் சந்தோஷப்பட்டு
அரசனை நோக்கி கேளீர் மகாராஜாவே, எங்களுக்கு ரக்ஷகராகிய உம
க்கு ஜயம் வந்ததே எங்களுக்கு சகல சம்பத்தும் வந்தாற்போ லாயி
ற்று. உமது ஊழியக்காரராகிய எங்களுக்கு ஒன்றுங் கொடுக்கவே
ண்டுவ தில்லை. நெடு நாளாய் உமது கிருபையினாலே சகல போகபாக்
கியங்களையும் அனுபவித்து வருகிற எங்களுக்குப் புதிதாய் என்ன
கொடுக்கவேண்டும்? இப்போது நீர் செய்யவேண்டுவ தென்னவெனி
ல், உமது குமாரனாகிய சங்கனை மங்கள வாத்தியங்களோடும் பரிவா
ரங்களோடும் பட்டணத்திற்கு அனுப்பி வெற்றிபெற்ற செய்தியை
முழுதிலுந் தெரிவித்து சீக்கிரத்தில் சகல வாத்தியங்களும் வேசிக
ளும், பாடகரும், வந்திகளும், இஷ்டரும், வேதியரும், இவர்க ளெ
ல்லாம் மங்கள வஸ்துக்களை யெடுத்துக்கொண்டு உமக்கு எதிர்கொ
ண்டு வரும்படி செய்யக் கட்டளை யிடும். அன்றியும் நமது பட்டண
த்தில் ராஜவீதிக ளெல்லாம் வர்சனையுள்ள நீர் தெளித்து மலர் தூ
வி தோரணங்களும் கொடிகளும் கட்டி தீபங்க ளேற்றி அலங்கரி
க்கப்படும்படி கட்டளையிடும். நீர் உதயகாலத்தில் சகல பரிவாரங்க
ளோடு பட்டணத்திற் பிரவேசியும். உமக்கு ஒருகுறைவு மில்லை
என்று தருமபுத்திரர் சொல்லியதைக் கேட்டு விராடமகாராஜன் தூ
தரை யழைத்து பட்டணத்தை யலங்கரிக்கும்படி முன்னே எவி
சங்கனையும் அனுப்பி சகலமும் சித்தமாகும்படி கட்டளையிட்டு கங்
கபட்டரை யழைத்து கேளீர் கங்கபட்டரே, நமது பராக்கிரமத்தை
யறியாமல் சுசர்மா யுத்தத்துக்கு வந்தான். அந்த அபராதத்துக்கு நீர்
வல்லனைக்கொண்டு சிக்ஷை செய்வித்தீர். இனி யவனை விட்டுவிடும்.
அவன் துரியோதன னிடத்திற்குப் போய்ச் சேர்ந்து சுகமா யிருக்கட்
டும் என்று சொன்னான். அப்போது கங்கபட்டர் அரசனைநோக்கிச்
சொல்லுகிறார். ஓய், மகாராஜாவே? உமக்கு எது இஷ்டமோ அதைச்

செய்யலாம். என்னைக் கேட்கவேண்டுவ தென்ன வென்று சொல்லி வீமனைக்கொண்டு சுசர்மாவை விடுவித்தார். அந்தச் சுசர்மா சத்துருவின் கையி லகப்பட்டபடியினாலே யிருந்த நாணத்தை யடைந்து துரியோதன னிடத்திற்குப் போக மன மில்லாமல் நடுவழியில் ஆலோசித்துக்கொண் டிருந்தான்.

---

## வடபுறத்து மாடுபிடிச் சண்டை.

---

இவ்வண்ணமாய் விராடமகாராஜன் பாண்டவருடைய சகாயத்தினாலே சத்துருக்களை ஜயித்து பசு மந்தைகளை யெல்லாம் முன்போலச் சேர்த்து மேய்ப்பவர் வசத்தி லொப்புவித்து அதிக சந்தோஷத்தோடு பொழுது விடிகிறவரைக்கும் அங்கேயே வாசமா யிருக்குமளவில், துரியோதனாதிகள், பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமன், கர்ணன், முதலாகிய பேர்களோடு கூடிக்கொண்டு அந்தப் பட்டணத்திற்கு வட புறத்தி லிருந்த பசு மந்தைகளை மடக்க வாரம்பித்தார்கள். மடக்கி யோட்டவே அவைகளை மேய்ப்பவராகிய கோபாலர் பொறுமை கொண்டு சகல வித ஆயுதங்களையு மெடுத்துக்கொண்டு கவுரவ சேனையின்மீது பாய்ந்து வெகு நேரம் தைரியமாக யுத்தஞ் செய்தார்கள். ஆகிலும் அசுவத்தாமன், கர்ணன், சகுனி இம்மூவரும் பொழிந்த சரமாரிக்கு எதிர்நிற்கமாட்டாமல் பின் வாங்கினார்கள். அது கண்டு அந்தக் கோபாலருக்குத் தலைவனா யிருந்த பிருகச்சேன னென்பவன் இரதத்தின்மீதி லேறிக்கொண்டு பின் வாங்கிய கோபாலரைத் தைரியமாய் நிற்கச்செய்து சத்துரு சேனையின்மீது சரமாரி பொழிந்தான். அதனாலே அந்தக் கவுரவசேனையில் அநேகங்கள் மடிந்தன. அது கண்டு அசுவத்தாமன் முதலிய மூவரும் அதிக கோபாவேசங் கொண்டு விற்களைக் குண்டலங்களைப்போல் வளைத்துக் காதளவு மிழுத்து அம்புகளைப் பிரயோகித்து ஆகாச மென்றும், பூமி யென்றும், திக்கென்றும், சேனை யென்றும், தேர் குதிரை வீர ரென்றும், ஒன்றுந் தெரியாம லிருக்கும்படி மறைத்தார்கள். அப்போது சகலமான கோபாலரும் ஒருவரோ டொருவர் சேராமல் ஓடிப்போனார்கள். அந்தப் பிருகச்சேனனும் சரமாரியாகிய அந்தகாரத்தி லகப்பட்டு ஒன்றுந் தெரியாமல் திக்பிரமைகொண்டு அம்புகளினால்

தேகத்திற் பட்ட காயங்களைச் சகிக்கமாட்டாமல் அந்தத் தேரோடே யே ஓடி பட்டணத்துக்குள் பிரவேசித்து அரசன் தென்புறத்தில் யுத்தத்திற்குப் போயிருக்கிறபடியினாலே ராஜகுமாரனாகிய உத்தர னைக் கண்டு பணிந்து சொல்ல ஆரம்பித்தான். கேளீர் ராஜகுமார னே, இப்போது துரியோதனாதிகள் வந்து நமது பட்டணத்திற்கு வட புறத்தி லிருக்கிற பசு மந்தைகளை மடக்கிக்கொண்டு போக ஆ ரம்பித்தார்கள். அப்போது நானும் மற்றைக் கோபாலரும் சேர்ந்து கூடுமானமட்டும் போர் செய்தோம். ஆகிலும் மகா வீரராகிய அவர்க ளின் பலாதிசயத்திற்கு எதிர் நிற்கமாட்டாமற் போனோம். ஆனப டியினாலே மகாராஜாவுக்கு இச்செய்தி தெரிவிக்க வந்தேன். அவர் தென்புறத்தில் திரிகர்த்தரோடு யுத்தஞ் செய்யப் போயிருக்கிறபடி யினாலே உமக்குத் தெரிவித்தேன் என்று சொல்லி உத்தரகுமாரனுக்கு உச்சாக மெழும்படி சில வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தான். கேளீர் ராஜகுமாரரே, நீர் வயதிற் சிறியவரா யிருந்தாலும் சவுரிய தை ரியங்களில் மிகவும் பெரியவரா யிருக்கிறீர், இதை நான் சும்மாச் சொ ல்லவில்லை. உமது பிதா சபையி லிருக்கும்போது சில வேளைகளில் உ ம்முடைய குணங்களையும் பராக்கிரமங்களையும் எடுத்துப் புகழக் கே ட்டிருந்து நான் இப்போது கொஞ்சஞ் சொன்னேன். நீர் உமக்குள் ளே குமுறிக்கொண் டிருக்கிற வீரத்தை வன்னி மரமானது தனக் குள் அடங்கி இருக்கிற அனலை அன்னிய வஸ்து தன்மீதி லுரா யும்போது வெளியிடுவதுபோல் இந்தச் சமயத்தில் வெளியிடவே ண்டும். ஆதலால் விரைவாகவே எழுந்து இரதத்தின்மீதி லேறிக்கொ ண்டு இந்திரதனுசுக் கொப்பாகிய தனுசைக் கையிற் பிடித்து இடி க்குச் சமானமாகிய பாணங்களை விடுத்து மலைகளுக் கொப்பாகிய பீஷ்மர் முதலானோரைச் சிதறும்படி செய்யும். உமது பாண வேகத் தைச் சகிக்க அந்தக் கவுரவருக்கு எவ்வளவும் வல்லமை யில்லை. ஆத லால் சத்துரு சேனையாகிய கடலிற் புகுந்து சவுரியமாகிய மந்தர கிரியினா லதனைக் கலக்கி கீர்த்தியாகிய அமுதத்தை யெடுத்து நம து பக்ஷத்தாராகிய தேவர்களை களிக்கச் செய்யும். நீர் அப்படிப்ப ட்ட பெருமைபெற இதுதான் காலம். உபேக்ஷைசெய்யவேண்டாம். சத்துருக்களைச் சயித்து பசு மந்தைகளைத் திருப்பிக்கொண்டு ஜய கோஷத்தோடு வரு மும்மை திரிபுர சங்காரஞ் செய்து வெற்றி பெ ற்ற பரமசிவனைத் தேவர் துதித்ததுபோல் நாங்கள் துதிக்கும்படி செ ய்யும். பொற்பட்டங்கள் விளங்கும்படியாகவும் சத்துருக்கள் திக்பிர மைகொண் டஞ்சும்படியாகவும் புற்றி லிருந்து சர்ப்பங்கள் புறப்படு வது போல் உமது வில்லினின்றும் புறப்படும் ஜங்காரஞ் செய்யுஞ் சி

றகுகளோடுகூடியும் பாணங்களாலே சத்துருக்களுடைய யானை குதிரை தேர் முதலானவை சூர்ணமாக்கப்படக் கண்டு நாங்கள் சந்தோஷப்படும்படி செய்யும். நாணாகிய தந்தியோடு கூடிய உமது வில்லாகிய வீணையின் தொனியாகிய இசையைக் கேட்டு பூதங்களும் பிரேதங்களும் பிசாசங்களும் மனங்களித்துக் கூத்தாடி விருந்துண்ணும்படி நீர் செய்யவேண்டும். உமது குலத்திற்கும் பிதாவுக்கும் மிகப் பெருமை வரும்படியாகிய காலம் நேரிட்டிருக்கிறது. ப்ராக்கிரமமாகிய பெருங் காற்றிலகப்பட்டு பகைவராகிய செத்தைகளெல்லாம் திசைகளிற் பறக்கக் காணும்படியாகிய வேளை இதுதான். ஆதலால் ஓ! ராஜகுமாரனே? கைலாச பருவதத்திற்குச் சமானங்களாயும் வாயுவேக முடையனவாகியுமிருக்கிற குதிரைகளையும் சத்துருக்களாகிய யானைக்குட்டிகளை வெருட்டும்படியாகிய சிங்கமுக அடையாளமுள்ள கொடியையும் தேரிற் கட்டும்படி கட்டளையிட்டு அந்தத் தேரில் நல்ல முகூர்த்தத்திலேறும். பிரகாசமாகிய கவச கிரீட குண்டலங்களை யணிந்து சகல ஆயுதங்களையும் நிறப்பிக்கொண்டு நல்ல சாரதியினால் ஓட்டப்பட்ட தேரினுருளைகளின் தொனியினாலே பகைவருடைய மன மிடியும்படி செய்யும். உமது முகசோதியை நோக்கும்போது நீர் அவசியம் வெற்றி பெறுவீரென்று நினைக்கிறேன். நீர் மச்சநாட்டரசர்களின் தலைவனென்று பெரும்புகழுடைவீர் என்று பிருகச்சேனன் பெண்கள் கூட்டத்தினடுவில் தன்னைப் புகழ்ந்ததைக் கேட்டு உத்தரகுமாரனானவன் கள்குடித்த பேய்போல் உடம்பு தெரியாமல் சந்தோஷம் பூரித்து அந்த மடப் பெண்கள் மெச்சும்படி கோபாலர் தலைவனை நோக்கிச் சொல்லுகிறான்.

கேளாய் பிருகச்சேனா, அந்தக் கவுரவர் என் பராக்கிரமத்தை அறியாமல் மகாராஜா இல்லாத வேளையில் போனால் ஜயித்துப் பசுக்களையோட்டிக்கொண்டு போகலாமென்றெண்ணி யல்லவோ வந்தார்கள்? அந்த மூடருடைய செருக்கை ஓர் நொடியில் நாசஞ் செய்கிறேன். தேவேந்திரன் அசுரரை ஜயித்து வருவதுபோல் நான் சத்துருக்களை ஜயித்து யாவருங் கொண்டாடும்படியாகப் பட்டணத்திற் பிரவேசிப்பேன். எங்கள் தகப்பனார் கொஞ்சம் பயித்தியக்கார வேலை செய்தார். என்னவென்றால் இவ்விடத்திலே சில சேவகர் சாரதி முதலான பேர்கள் ஒருவருமில்லாமலிருக்கும்படி யாவரையும் அழைத்துக்கொண்டு போய்விட்டார். ஆனால் எனக்கு ஒருவருடைய சகாயமும் வேண்டுவதில்லை. நான் அசகாய சூரன். ஆகிலும் ஒரு

சாரதி மாத்திரம் வேண்டி யிருக்கிறது; அந்தச் சாரதியும் மிகவும் சாமர்த்திய முள்ளவனா யிருக்கவேண்டு மென்கிறது மில்லை. பேருக்குச் சாரதி யென் றிருந்தாற் போதும். அப்படிப்பட்டவன் கூட இப்போது ஒருவனு மில்லா திருக்கிறதினாலே மகாராஜாவை வெறுக்கும்படி யிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அற்ப சாரதியை வைத்துக்கொண்டே நான் யுத்தஞ் செய்து பீஷ்மர் முதலானோ ரெல்லாம் இவன், அர்ச்சுனனுக்குச் சமானமானவ னென்று நினைக்கும்படி செய்வேன். என் சாமார்த்தியத்தை நீங்களும் நன்றா யறிவீர்கள். என்னைக் காணும்போதே அவர்கள் அர்ச்சுனனைக் கண்டாற்போல் நடுநடுங்கிப் போவார்கள். சத்துருக்கள் நமது பசு மந்தைகளை மடக்கினார்க ளென்கிற பேச்சைக் கேட்டது முதல் எனது கைகளும் மனமும் பதைக்கின்றன. சாரதி யிருந்தால் இவ்வளவு காலத்திலேயே அவர்களை வென்று வந் திருப்பேன்; இல்லையே என்ன செய்வேன்? என்று உத்தர குமாரன் சொன்னதைக் கேட்டு அருகி லிருந்த துரோபதியானவள் அர்ச்சுனன் பெயரை யெடுத்ததைக் குறித்து பொறாமை கொண்டு ராஜ குமாரியான உத்தரையைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னாள்.

கேளாய் ராஜகுமாரி, உங்களுக்கு நாட்டியம் பயிற்றுகின்ற பிருகன்னளை இருக்கிறாளே? இவளுக்கு சாரத்தியஞ் செய்யத் தெரியும். முன்னே அர்ச்சுனன் காண்டவ வன தகனஞ் செய்தபோது இவள் சாரதியா யிருந்தாள். இவளது சாரத்திய சகாயத்தினாலேதான் அர்ச்சுனன் தேவர்களையும் வென்றான். ஆகையால் இவளைச் சாரதியாக வைத்துக்கொண்டு போனால் உன் தமையன் கவுரவரை வெற்றி கொள்வதிற் சந்தேகமில்லை. ஆனால் அவள் தனக்கு இந்த வித்தை தெரியு மென்பதை வெளியிடாள்; ஆனதுபற்றி உத்தரகுமாரனே போய் அவசரத்தையுஞ் சொல்லி யழைத்தால் ஒருவேளை வருவள்; ஆகையால் அவனே போய் அழைத்து அவளைச் சாரதியாக வைத்துக்கொண்டு யுத்தத்துக்குப் போகலாம் என்று சொல்லக்கேட்டு உத்தரையானவள் தன் தமையனிடத்தில் வந்து சைரந்திரி சொல்லிய செய்தியை சவிஸ்தாரமாகச் சொல்லி அவளை நீயே போ யழை யென்று சொன்னாள். அது கேட்டு உத்தரன் சைரந்திரி முதலான பேர்களும் கேட்கும்படி யொரு வார்த்தை சொன்னான். அதாவது, பிருகன்னளை நபும்சகையானபடியினாலே நான் போ யழைக்க மாட்டேன். அப்படி எனக்கு விரத முண்டு. ஆகையால் அவள் இங்கே வரும்படி செய்யவேண்டும் என்ற இந்த பேச்சைக் கேட்டு ராஜகுமாரனைப் பார்த்து சைரந்திரி சொல்லுகிறாள்.

கேளீர் ராஜகுமாரரே? ஆபத்து காலத்தில் விரத நியமத்தைத் தவிர்த்தால் குற்றமில்லை யென்று பெரியோர் சொல்லுகையாலே நீரே போய் அவளை யழைப்பது உத்தமம். அப்படி மன மில்லாவிட்டால் உமது உடன் பிறந்தாளையாகிலும் அனுப்பி யழைத்துவரச் செய்யும். சங்கீத வித்தையில் மாணாக்கியாகிய இந்த உத்தரையினிடத்தில் அவளுக்கு மிகவும் அன்புண்டாகையால் இவள் பேச்சை யவள் மறக்க மாட்டாள் என்று சொன்னதைக் கேட்டு குமாரன் அவளை யழைத்துவரும்படி தங்கைக்குக் கட்டளை யிட்டான்.

இப்படி யிருக்க துரோபதி முன்னாக சரே லென்று அர்ச்சுனனிடத்துக்குப் போய் நடந்த செய்திகளை யெல்லா மறிவிக்க அவன் மனைவியை நோக்கி அடி துரோபதி. நமக்கு இப்போது அஞ்ஞாதவாசந் தீர்ந்து போயிற்று, இனி சுகமாய் நாம் வெளிப்புறப்பட்டு யுத்தம் பண்ணலாம். ஆனபடியினாலே உத்தரையைச் சீக்கிரம் இவ்விடம் வரச்செய் என்று சொல்லியதைக் கேட்டு துரோபதி உத்தரை யிருக்குமிடம் வந்து சேர்ந்தாள். அந்த வேளையில் அந்த ராஜ கன்னிகையானவள் தன் பாங்கிகளோடுகூட அர்ச்சுன னிருக்கு மிடஞ் சென்றாள். அப்போது அர்ச்சுனனானவன் பூரண சந்திர விம்பத்தோடொத்த முகமும், கருநெய்தற் பூபோன்ற கண்களும், முல்லை யரும்புகளைப் போலிருக்கிற தந்தங்களும், கொவ்வைக் கனியோடொத்த அதரமும், மின்னற் கொடிக் கொப்பாகிய தேகமு முடையவளாய் நவரத்தினாபரணங்களினாலே சுற்றிலும் பிரகாசித்துக் கொண்டு அன்னப் பேடுபோல் அசைந்தாடி நடந்துவந்த ராஜகுமாரியைக் கண்டு அர்ச்சுனன் புன்னகைகொண்டு சொல்லுகிறான். வாராய் ராஜகுமாரி, நீ இந்த வேளையில் இவ்வளவு தூரம் தளிர் போன்ற பாதங்கள் கொப்பளிக்கும்படி நடந்துவந்த காரண மென்ன? என்னா லாகவேண்டுவதேதாகிலும் மிருந்தால் எனக்கு அங் கிருந்தே கட்டளை யிடலாமே? அனிச்சம் பூப்போல் மெதுவாகியும் உருக்கிய தங்கம் போல் பிரகாசமுள்ளதாகியு மிருக்கின்ற உன் தேக மெல்லாம் சோரும்படி இவ்வளவு தூரம் வரலாமோ? உன் முகத்தைப் பார்த்தால் ஏதோ பயத்தினாலே இராகுவுக்கு அஞ்சிய சந்திரனைப் போலும் சந்திர கிரணம் பட்ட தாமரை மலர்போலு மிருக்கின்றது. தாமரைமலர் போன்ற உனது கண்கள் கலங்கி சிவந் திருக்கின்றன. யானைத்துதிக்கை போலும் வாழைமரம்போலும் விளங்காநின்ற உன் துடைகள் நடுக்கமுற் றிருக்கின்றன. கொவ்வைக்கனிபோ லிருக்கின்ற உன் னிதழ் உலர்ந்து காணப்படுகின்றது. மிடற்றிலிருந்து ஓசை யிடையற்று வருகின்றது. ஆத

லால் ஏதோ ஆபத்தினால் உன் மனங் கலங்கி யிருக்கின்றதுபோல் தோற்றுகின்றது. அதை எனக்கு அறிவிக்கவேண்டும் என்று பிருகன்னளை சொல்லக் கேட்டு உத்தரையானவள் குன்றிப்போகாநின்ற மிடற்றோசையினாலே சொல்லத் தொடங்கினாள்.

கேளாய் பிருகன்னளாய், எனக்கு உன்னோடு சொல்லக் கூடாத ரகசியமென்ன இருக்கிறது? இப்போது நேரிட்டிருக்கிற சங்கடத்தைக்கேள். என் தகப்பனாராகிய விராடமகாராஜன் பட்டணத்துக்குத் தென் திசையில் திரிகர்த்தரோடு யுத்தத்திற்குப் போ யிருக்கிறார். இந்தச் சமயத்தில் கவுரவர் தண்டெடுத்து வந்து நமது நகரத்திற்கு வடபுறத்தி லிருக்கிற பசு மந்தைகளை யோட்டிக் கொண்டு போகிறார்கள். இந்தச் செய்தியை கோபாலர் இப்போதுதான் அறிவித்தார்கள். அதுகேட்டு என் தமையன் யுத்தத்திற்குப் புறப்பட நினைத்து சாரதியொருவனு மில்லாமையாலே சிந்தைபட்டுக்கொண் டிருக்கு மளவில் சைரந்திரியானவள் முன்னே அர்ச்சுனன் காண்டவ தகனஞ்செய்தபோது நீ யவனுக்கு சாரதியா யிருந்தா யென்றும் இப்போது உன்னைச் சாரதியாய் வைத்துக்கொண்டு போனால் என் தமையனுக்கு ஜயம் சித்தமாய் வருமென்றுஞ் சொன்னாள். அதுகேட்டு என் தமையன் உன்னைச் சீக்கிரம் இட்டுக்கொண்டு வரும்படி என்னை யனுப்பினான். ஆகையால் நீ என்னிடத்தில் பிரீதிவைத்து இப்போதே வந்து என் தமையனுக்குச் சாரதியா யிருக்கவேண்டு மென்று உத்தரை சொல்லக் கேட்டு அர்ச்சுனன் சந்தோஷத்தோடு சொல்லுகிறான்.

கேளாய் உத்தராய், என்னைக் காப்பாற்றுநின்ற பிரபுவாகிய விராடமகாராஜனது மகளும் எனக்குப் பிரிய மாணுக்கியு மாகிய உனக்கு நான் வலுவில் உபகாரஞ் செய்யவேண்டி யிருக்க நீ பிரார்த்தித்த பின்னும் செய்யாம லிருப்பேனோ! அன்றியும் உன் பேச்சை எப்போதும் மறுதலிக்கமாட்டேன். ஆகையால் அங்ஙனமே சாரத்தியஞ் செய்கிறேன். நீ யஞ்சாதே, இதோ நான் புறப்பட்டு உத்தரகுமாரனிடத்துக்குப் போகிறேன். நீ பின்னாலே மெள்ள நடந்துவா வென்று சொல்லி சரோலென்று எழுந்து ராஜகுமார னிருக்கு மிடம் போய்ச் சேர்ந்தான். அந்த ராஜகுமாரியும் மின்னற்கொடி மேகத்தைப் பின்றொடர்ந்தாற்போல் அர்ச்சுனனைப் பின்றொடர்ந்து போனாள். அந்த உத்தரன் அர்ச்சுனன் தன் சமீபத்தில் வரக் கண்டு அவனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

வாராய் பிருகன்னளாய், இத்தனை நாள் உன்னை யறிந்திருந்தும் உன் சாமர்த்தியங்களை யறியாம லிருந்தது எனக்கு மிகவும் வியாகுலத்தை யுண்டாக்குகின்றது. நீ காண்டவ தகனத்தின்போது கிரீடியாகிய அர்ச்சுனனுக்குச் சாரத்தியஞ்செய்த செய்தி இன்றுதான் எனக்குச் சைரந்திரியால் தெரியவந்தது. இப்போது மகா சூராராகிய கவுரவர் நமது பசுக்களை யபகரிக்க வந்திருக்கிறார்கள். மகாராஜா இவ்விடத்தில் ஒருவனையும் வைக்காமல் திரிகர்த்தரோடு யுத்தஞ்செய்ய யாவரையும் அழைத்துக்கொண்டு போ யிருக்கிறார். ஆதலால் இந்தச்சமயத்தில் நீ எனக்குச் சாரத்தியஞ் செய்யவேண்டும். வேறு சாரதி யிருந்தாலும் நீயே எனக்குச் சாரதியா யிருக்க எனக்கு இஷ்டமா யிருக்கிறது. ஏனென்றால் இந்திரன் முதலிய தேவரைச் சயிக்குங்காலத்தில் அர்ச்சுனனுக்கு நீ யல்லவோ உதவியா யிருந்தாய்! ஆனதுபற்றி இந்திரனுக்கு மாதலிபோலவும், சூரியனுக்கு அருணன்போலவும், பரசுராமருக்குச் சுமுகன்போலவும், தசரதனுக்குச் சுமந்திரன்போலவும், எனக்கு நீ சாரதியா யிருக்க நான் பகைவரை வெற்றிகொள்ளக் கருதி யிருக்கிறேன். உனக்கு இவ்வித்தை தெரியுமென்கிறதைக் கேட்டு எனக்கு மிகவும் சந்தோஷமாயிற்று என்று உத்தரன் சொல்லக் கேட்டு பிருகன்னளை புன்னகையோடு அவனை நோக்கி ஐயா, ராஜகுமாரனே? நான் கன்னிகைகளுக்கு ஆடல் பாடல்களைக் கற்பிக்க வல்லவனே யல்லது சாரத்தியஞ்செய்ய வல்லவனல்லேன். அசகாய சூரனாகிய அர்ச்சுனன் அங்கமா யென்னை வைத்துக்கொண்டாரே யல்லது என் சாமர்த்தியத்தைக் கண்டு வைத்துக்கொண்டவ ரல்லர். உமது கட்டளையை நான் மீறமாட்டேன். ஆகிலும் எனக்குத் தகுந்த பணிவிடை கட்டளை யிட்டால் அங்ஙனம் நடந்துகொள்ளுகிறேன் என்று பிருகன்னளை சொல்லியதைக் கேட்டு குமாரன் பிருகன்னளாய், உன் சாமர்த்தியத்தைச் சைரந்திரியால் நான் நன்று யறிந்திருக்கிறேன். அதைக்குறித்து நீ யொன்றுஞ் சொல்லவேண்டாம். நீயே சாரதியா யிருக்கவேண்டு மென்று எனக்கு மன திருக்கிறபடியினாலே நீ யதை யங்கிகரித்து கவசத்தை யணிந்துகொள் என்று சொல்லி திவ்யமாகிய சுவர்ண கவசத்தை யழைப்பித்துக் கொடுத்தான். பிருகன்னளை யதை வாங்கி ஐய நானிப்படிப்பட்ட கவசத்தை யெப்போதும் தரித்ததில்லையே என்று சொல்லி அதைத் தலைகீழாகத் தரித்தான். அதைக் கண்டு கன்னிகைகளெல்லாம் கல்லென்று சிரித்தார்கள். உத்தரன் மாத்திரம் சிரியாமல் அதைச் சரியாய்ப் பூட்டினான். பின்பு தேரில் குதிரைகளைக் கட்டி ஆயுதங்களை யதில் வைக்கும்படியாய்க் கட்டளையிட்டான்.

அதற்கு அர்ச்சுனன் அப்படியே குதிரைகளைக் கட்டி ஆயுதங்களை முறை பிறழ்வாக வைத்தான். அது கண்டு ராஜகுமாரன் புன்சிரிப்புகொண்டு அவைகளை வைக்கு முறை தெரிவித்து அங்ஙனம் வைக்கச் செய்தான்.

இவ்வாறு யுத்த யாத்திரைக்கு ரதஞ் சித்தமான உடனே உத்தரன் ரதத்தின்மீது சாரதியை முன்ன மேறும்படி கட்டளையிட்டுப் பின்னே தான் ஏறினன். அப்போது உத்தரை முதலான கன்னிகைகள் பிருகன்னளையைப் பார்த்து பிருகன்னளாய்! ராஜகுமாரன் அந்தக் கவுரவரை ஜயித்த பின்பு அவர்க ளணிந்துகொண் டிருக்கிற உயர்ந்த ஆபரணங்களையும் பட்டு வஸ்திரங்களையும் நீ எங்களுக்குக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும். அவைகளாலே நாங்கள் எங்களுடைய பதுமைகளுக்கு அலங்காரஞ் செய்து விளையாடவேண்டுமென்று அபேக்ஷையுற் றிருக்கிறோம் என்று சொல்லக் கேட்டு அவர்களை நோக்கி பிருகன்னளை கன்னிகைகளே? ராஜகுமாரன் அவர்களை ஜயித்த பின்பு அப்படியே கொண்டுவருகிறேன். நீங்கள் எங்களுக்கு ஜயம் வரும்படி பிரார்த்தியுங்கள் என்று புன்னகைகொண்டு சொன்னன். அது கேட்டு அந்தக் கன்னிகைக ளெல்லாம் பிரார்த்தித்த விதமாவது அர்ச்சுனன் காண்டவவனத்தை எரிக்கச் செய்யும்போது தேவர்கள் எதிர்க்க எப்படிப்பட்ட ஜயத்தை யடைந்தாரோ? இந்திரன் அசுரர்மேற் பாய்ந்து எப்படிப்பட்ட ஜயத்தை யடைந்தாரோ? மகாவிஷ்ணு பலிசக்கிரவர்த்தியை யடக்க நினைத்து எப்படிப்பட்ட ஜயத்தை யடைந்தாரோ? அப்படிப்பட்ட ஜயத்தை நம்முடைய ராஜகுமாரன் அடையக்கடவன் என்று கன்னிகைகள் கூறிய மங்கல வசனத்தைக் கேட்டு அர்ச்சுனன் மிகவும் சந்தோஷித்துப் புறப்பட்டு குதிரைகளை நடத்தினன். நடத்தவே அந்தக் குதிரைகள் வாயுவேக மனோவேகமா யோடின. அப்போது சாரதி ராஜகுமாரனைப் பார்த்துச் சொல்லுகிறன்.

பாரும் ராஜகுமாரனே? நமது ரதம் இப்போது வெகு வேகமா யோடுகிறது. ஆனபடியினலேதான் ஒரு வஸ்துவைக் கண்டு அதை இன்ன தென்று நிதானிப்பதற்குள் அதைக் கடந்து வெகு தூரம் போகிறோம். இன்னும் கணப்பொழுதில் யுத்தபூமியைக் காண்போம் என்று சொல்லிக்கொண்டே யிருக்கையில் ரதம் யுத்த பூமிக்கு அருகில் வந்து நின்றது. அப்போது மயானத்தில் வன்னிமரத்திற்குக் கொஞ்சம் சமீபத்தில் ஓர் சமுத்திரம் இருக்கிறதுபோல் வந்தி

நங்கியிருக்கிற கவுரவசேனையையும் அதில் மலைகள்போன்ற தேகமும், ஈட்டிகள்போன்ற தந்தங்களு முடையனவாய் கர்ச்சித்துக்கொண்டிருக்கிற மதயானைகளையும் கழுத்தைத் தூக்கி சிவந்த கண்களை யுருட்டி மொறப்பாய் நோக்கிக்கொண்டு சத்துருக்கள் தலைகளை இவ்வாறு மிதிப்போ மென்று காட்டுகிறதுபோல் கால்களைத் தூக்கித் தூக்கித் தரையைக் கொத்திக்கொண்டு வெருவும்படி கனைத்துக்கொண் டிருக்கிற குதிரைகளையும் அதிக கோபத்தோடு சீறிக்கொண் டிருக்கிற சர்ப்பங்களைப்போல் விளங்காநின்ற பல் வகை யாயுதங்கள் நிறைந் திருக்கின்ற தேர்களையும் சிங்கங்கள்போலவும் புலிகள்போலவும் பராக்கிரமித்து அட்டகாசஞ் செய்துகொண் டிருக்கிற வீரரையும் பார்த்து அதிக பய மடைந்து உத்தரகுமாரன் திக்பிரமைகொண்டு உடம்பெல்லாம் வேர்த்து நடுக்க முற நாவு ஈரமற்று பேசக்கூடாமற் குளறிப்போக தொனி யெழும்பாமல் சாரதியைப் பார்த்துச் சொல்லுகிறான்.

கேளாய் பிருகன்னளாய் ? நான் இதுவரையிலும் உயுத்தகளத்தைக் கண்டதில்லை. ஆனால் யானை குதிரை முதலானவை சேர்ந்து யுத்தத்திற்காக நிற்கிறதைச் சித்திரத்திற் கண் டிருக்கிறேன். அதனாலே இப்படிதா னிருக்கும் யுத்தகள மென்று நினைத்து யுத்தத்திற்கு வந்தேன். யுகாந்த காலத்தில் சமுத்திரம் பொங்கி வந்தா லெப்படி யிருக்கு மென்று சொல்லுகிறார்களோ அப்படி மிகவும் பயங்கரமா யிருக்கிற இந்தச் சேனையைப் பார்க்கக்கூட எனக்கு சக்தி யில்லை. தேவேந்திரன் தேவசேனைகளோடு வந் தெதிர்த்தாலும் ஜயிக்கக்கூடாத இந்தச் சேனையைச் சிறுவனாகிய நான் என்னமாய் ஜயிப்பேன்? இதுவரையில் நான் இப்படிப்பட்ட சேனையைக் கண்டதே இல்லை. நம்முடைய பட்டணத்தில் யானைகள், குதிரைகள், தேர்கள், வில் முதலிய ஆயுதங்கள் இவைக ளெல்லாம் இருக்கின்றனவே? இவைகள் அம்மாதிரி யன்றி வேறு சிர்ஷ்டிபோ லிருக்கின்றன. ஆதலால் இவைகளால் யுத்தஞ் செய்யும்படியாகிய இந்தக் கவுரவரோடு நா னென்னமாய் யுத்தம்பண்ணமாட்டுவேன்? இனி நா னிவ்விடத்தில் ஒரு நிமிஷமு மிருக்கமாட்டேன். சீக்கிரமாய் தேரைப் பட்டணத்துக்குத் திருப்பு. சுகமாய் அந்தப்புரத்தில் வாசஞ் செய்துகொண் டிருக்கிறேன். தேகம் சத மல்ல. அப்படிப்பட்ட தேக மிருக்குமளவும் கூடுமான சுகபோகங்களை யனுபவிக்காமல் நாசஞ் செய்வது நியாய மல்ல. இன்னுஞ் சில நேர மிங்கேதானே இருப்பேனாகில் மரிப்பேன். ஆதலால் என்னை அந்தப்புரங் கொண்டுபோய்ச் சேர்த்தாயாகில் உன

க்கு மிருந்த புண்ணிய முண்டு என்று பல தரம் சொல்லிய உத்தர குமாரனைப் பார்த்து அர்ச்சுனன் அவனுக்குச் சமாதான முண்டாகு ம்படியாகிய வார்த்தைகளைச் சொல்ல வாரம்பித்தான்.

கேளீர் ராஜகுமாரனே? நீர் நல்ல க்ஷத்திரிய வமிசத்திற் பிறந் து இப்படிப்பட்ட பேச்சுக்களைச் சொல்லலாகாது. க்ஷத்திரிய குமா ரனு யிருக்கிறவன் சவுரிய தைரியங்களோடு கூடி யிருக்கவேண்டும். அப்படி யில்லாமற்போனுல் அவன் பத ரென்றே சொல்லப்படுவான். ஆகையால் நீர் பேர்பெற்ற விராடராஜாவின் குமாரரா யிருந்து யுத் த காலத்தில் சேனையைக் கண் டஞ்சுவது தகுதி யல்ல. தைரியத்தை விடலாகாது. இப்படிப்பட்டகாலத்தில் போகங்களின்மீது கருத்தை வைக்கலாகாது. அந்த ஆசையை விடும். ஊக்கமுடையராய் சத்துரு க்களை யெதிர்த்துப் போர்செய்து ஜயித்து உமது பசுக்களைத் திருப்பி க் கொண்டுபோம். மனிதனுக்கு ஊக்கமுடைமைதான் வெற்றியை யும் செல்வத்தையும் கொடுக்கும். அதில்லாமற்போனுல் யாவும் போ ய்விடும். நல்லது ஆகட்டும். நீர் இப்போது சும்மா பட்டணத்துக் குப் போனுலும் போகங்கள் உமக்குக் கிடைக்கமாட்டா. எப்படியெ ன்றுல், சத்துருக்கள் பலவான்க ளானதால் இன்று பசுக்களையும், நா ளை குதிரைகளையும், நாளைன்று யானைகளையும், நாலாம் நாள் பொக்க சத்தையும் இப்படிக்கு யாவையும் கவர்ந்துகொண்டு போவார்கள் சந்தேகமில்லை. அப்புறம் உமது ஸ்திரீகளையும் கொண்டுபோவார் கள். இவ்விதமாய் எல்லாவற்றையும் அபகரித்துப் பின்பு இராச்சிய த்தையும் பிடுங்கிக்கொண்டு அடித்துத் துரத்திவிட்டால் உமக்கு எந்தப் போகம் கிடைக்கும்? மேலும் உயிரைப் போக்கினுலும் போ க்குவார்கள். இப்படி யிருக்கையாலே வீணுய் யாவையும் இழந்து சாசுவதமாகிய அபகீர்த்தியை யடைந்து உயிர் விடுவதைக்காட்டி லும் இப்போது எதிர்த்து யுத்தஞ் செய்து உயிரை விடுவது நன் றேயாம். சத்துருவின்மேல் யுத்தஞ் செய்யப் போனுல் ஜய மென்ப தும் அபஜய மென்பதும் சந்தேகத்தி லிருக்கும். இப்படி யன்றி பயந்து பின்னிடைந்தால் அபஜய மென்பது நிச்சயமாய் நேரிடு கிறதல்லவோ? இவ்விரண்டில் எது நன்மையாய்த் தோற்றுகிறது நீரே ஆலோசித்துப் பாரும்? ஆதலால் நீர் தைரியத்தை விடாமல் ச த்துருக்களின் மேற் பாய்வதே நன்மை யென்று சொல்லிய சாரதியை நோக்கி ராஜகுமாரன் சொல்லுகிறுன்.

கேளாய் சாரதி, நீ சொல்லிய தெல்லாம் சரிதான். ஆனுலும் நா ன் சிறுவன். யுத்தத்திற் போய் அப்பியாச மில்லாதவன். இப்படிப்பட்

ட நான் சத்துருக்களுடைய பலத்தை யறியாமல் துர்ப்புத்தியால் நானொருவனே போய் வெற்றிகொள்வே னென்று பேதைகள் மெய்ச்சச் சொன்னேன். அற்பனாகிய ஒரு திரிகர்த்த ராஜாவை வெல்லுகிற நிமித்தம் என் தகப்பனார் அநேக சேனைகளையும் வீரரையும் கூட்டிக்கொண்டு போனா ரல்லவோ? இப்போ திங்கே வந்திருக்கிறபேர்கள் அந்தத் திரிகர்த்தனைக் காட்டிலும் பதின்மடங்கு அதிசயமாகிய பலபராக்கிரமங்க ளுடையவர். இதோ பார்! வீஷ்மர், துரோணர், அசுவத்தாமன், கிருபர், கர்ணன், துரியோதனன், விவிம்சதி, சித்திரசேனன், பாஹ்லிகன், சோமதத்தன், பூரிச்சிரவன், துர்மர்ஷணன், துச்சாதனன், சகுனி, இப்படிப்பட்ட பேர்க ளெல்லாம் வந் திருக்கிறார்களே! இவர்களில் ஒவ்வொருவருடைய சக்திக்கே நான் போதாதவனாயிருக்க சமுத்திரம் போன்ற பெரும்படையுடையவராகிய இந்த மகாவீரர் கூட்டத்தோடு நா னெப்படி போரிட மாட்டுவேன்? இந்தச் சேனையிலிருந்து எழும்புகின்ற கர்ச்சனையைக் கேட்டும்போதே என்னுயிர் நிலைவிட்டுப் பேருகின்றதே, நானென்ன செய்வேன்? இதைக் காணும்போதே அச்சத்தினால் உடம்பெல்லாம் மயிர்க்குச்சடைந்து வேர்த்து நடு நடுங்குகின்றது. உதடு உலர்ந்து போகின்றது. மார்பு திடுதிடென் றடித்துக் கொள்கின்றது. நான் சொல்லுகிறது பொய்யென்று தோற்றுகிறதாகில் என்மார்பிற் கை வைத்துப் பார். ஆதலால் இந்த வேளையில் என் னுயிரைக் காப்பாற்றுவா யாகில் உன்னைக் காட்டிலும் எனக்கு உத்தமமான மித்திரன் வேறில்லை என்று வெகு வாய்ச் சொல்லிய அந்த ராஜகுமாரனைப் பார்த்து மறுபடியும் அர்ச்சுனன் சொல்லுகிறான்.

ஓய் ராஜகுமாரா, நீர் சொல்லிய பேச்சைக் கேட்க எனக்கு எவ்வளவும் சமாதான மில்லை. வெகு முயற்சியோடு நீரு நாமு மிங்கே வந்து என்ன காரியஞ் செய்தோம்? ஒரு கணப் பொழுதாகிலும் சண்டை யென்று செய்தோமா? எவ்வகையினாலாவது பசு மந்தைகளையாகிலும் திருப்பிக் கொண்டோமா? சத்துருக்களுடைய சேனையையாவது இப்படி இருக்கிறதென்று நன்று யறிந்தோமா? அங்கிருந்து ஆயுதங்களைச் சன்னாகஞ் செய்துகொண்டு தேர்மீதி லேறி இங்கே வந்து கூட்டமா யிருக்கிற படையைப் பார்த்த மாத்திரத்தில் வெருண்டு பின் னிடைந்து ஓடிப் போனால் ராஜகுலத்திற் பிறந்தவனுக்கு ஆண்மை யென்பதெங்கே இருக்கிறது? யாராகிலும் ராஜகுமார ரிச்செய்தி கேட்டால் நகைப்பார்களே! அதனால் மிகுந்த அபகீர்த்தி யுண்டாகு மல்லவோ? அதனோடு எப்படி பிழைத் திருக்கலாம்?

இவை யெல்லா மிருக்கட்டும். நீர் அந்தப்புரத்தில் யாவருக்கும் முன்னிலையில் கவுரவரை யெல்லாம் நா னொருவனே ஒரு நொடியில் ஜயித்து வருகிறே னென்று சொல்லி வந்தீரோ? மறுபடியும் அவர்கள் முன்னிலையி லென்னமாய்ப் போகத் துணிகிறீர்? அந்தக் கன்னிகளெல்லாம் உம்மை மிக வற்பமாய் நினைத்துப் பரியாசஞ் செய்வார்களல்லவோ? அந்த மடப் பெண்களும் இழிவாய்ப் பரிகாசஞ் செய்வதைப் பொறுத்துக்கொண்டு பிழைத்திருப்பதில் என்ன பிரயோசனத்தைச் சிந்தித் திருக்கிறீர்? ஒரு பிரயோசனமு மில்லை. ஆகையால் நீர் மனதில் தைரியத்தை நிறுத்தி ஜாதித்தன்மையான சவுரியத்தை முன்னிட்டுக்கொண்டு யுத்தஞ் செய்வீராகில் கீர்த்தியும் பிரயோசனமு முண்டு, அஞ்சாதேயும். உமக்கு ஜயம் வரும் என்று அர்ச்சுனன் சொல்லியதைக் கேட்டு உத்தரனானவன் கேளாய் பிருகன்னளாய்? நம்முடைய பசு மந்தைகளைக் கொள்ளை கொண்டாலும் கொள்ளட்டும், சூரர் நகைத்தாலும் நகைக்கட்டும், அந்தப்புரத்தி லிருக்கும் கன்னிகள் பரிகாசஞ் செய்தாலும் செய்யட்டும், இத்தனை சூரர் முன்னிலையில் சண்டைக்குப் போய் நான் வலுவி லுயிரைத் துறக்கமாட்டேன். சீக்கிரத்தில் தேரைத் திருப்பு என்று முறையிட, அர்ச்சுனன் மறுபடியும் கூறினான்.

கேளும் ராஜபுத்திரரே? மனிதனுக்கு ஆறிலுஞ் சாவு, நூறிலுஞ் சாவு. இது தெரிந்திருக்கிறதல்லவோ? இப்படி யிருக்க ஜாதி தருமமாகிய சவுரியத்தை முன்னுக்குக் கொண்டு வராமல் அதைரியப் படலாமா? இம்மை மறுமைகளில் மிகுந்த நஷ்டத்தை யுண்டாக்கும்படியான அபகீர்த்தியைச் சம்பாதிக்க வேண்டாம். நீர் பின் னிடைவதனாலே உமக்கு நாளுக்கு நாள் மிகுந்த குறைவு நேரிடும். முடிவில் அளவற்ற துன்பங்களை யனுபவிக்கவேண்டி வரும். போகத்தையும் உயிரையும் சதமாய் நினையாதேயும். தைரியசாலிக்கு ஜயம் சித்தமாய் வரும். நீர் ஆயுதங்களையும், சேனைகளையும், பார்த்து பயப்படுகிறது தகுதி யன்று. தேகத்தில் எப்படிப்பட்ட ஆயுதங்கள் தாக்கினாலும் யானை குதிரை முதலானவை தன்மேல் விழுந்தாலும் லக்ஷியம் பண்ணாமலிருக்கவேண்டுவ தல்லவோ, க்ஷத்திரியனுடைய கடமை யென்று சொல்லி தேரை யுத்த பூமிக்கு எதிரே நடத்தினான். நடத்தவே உத்தரகுமாரன் ஏதடா இந்தச் சாரதி நம்மை வலுவில் யுத்த பூமிக்குக் கொண்டுபோய் ஆட்டுக் கிடாவைப் பலி கொடுப்பதுபோல் அந்த யுத்த பூமிக்குப் பலி யிடுவன்போல் கருதுகிறது. என்ன செய்வோம்? மரத்தின் பிளப்பில் பீசத்தைவிட்டு முளையைப் பெயர்த்த வானரம்

போல் அறியாமல் இவன் வசத்தி லகப்பட்டுக்கொண்டோமே? எப்படியாகிலும் இந்த வேளையில் உயிரைத் தப்பித்துக்கொண்டால் நன்றென்று நினைத்து மனம் தத்தளித்து முகம் வாடி உழைத்துக்கொண்டு இதுதான் நல்ல உபாய மென்று நிச்சயித்து கையிற் பிடித்திருந்த வில்லம்புகளைத் தேரி லெறிந்து இறங்கி பட்டணத்தைப் பார்த்து ஓடினன். ஓடவே அர்ச்சுனனும் குதிரைக் கடிவாளத்தைத் தேரிற் கட்டிப்போட்டு தானும் கீழே குதித்து அரசன் மகனைப் பிடிக்கும்படி யோடிக்கொண்டே சில பேச்சுக்களைச் சொன்னன்.

ஓ! ராஜகுமாரரோ, நீ ரென்ன மிகவும் பயித்தியக்கார காரியஞ் செய்கிறீர்? உயிர்விட்டு மரிக்க அஞ்சி உயிரோடு மரிக்கிறீர். உமது குலத்திற்கும் அடுத்தவர்களுக்கும் மாருத தலை யிறக்கத்தைத் தேடுகிறீர். உமது பிதாவை துக்கக் கடலி லாழ்த்துகிறீர். அநேக நாளாய் வெகு மேன்மையோடு வாழ்ந்த உமது வமிசத்தை இன்று அபகீர்த்தியாகிய இருள் கவ்விக்கொள்ளச் செய்கிறீர். ஐயோ! இராஜகுலத்திற் பிறந்த உமக்கு இப்படிப்பட்ட அதைரியமெங் கிருந்து வந்தது? உமது வாழ் வெல்லாம் வீணய்ப் போயிற்றே! ஈரிட்டுப் பிரயோசனங்களும் பாழாய்ப் போகும்படியாகிய காலம் வந்ததே! உமக்கு சாரதியாய் வந்த எனக்கும் தலை யிறக்க முண்டாயிற்றே? இப்படிக்கு பயப்படலாமா? உயிரை அவ்வளவு மேலாக நினைக்கலாமா? சத்துருக்கள் ஜயிப்பதே சத மென்று நம்பலாமா? இப்படி யோடிப் பிழைப்பதைக்காட்டிலும் போர்க் களத்திற் சென்று வீரனுடைய ஓரம்பின லுயிரை விட்டால் இம்மையிற் கீர்த்தியும், மறுமையிற் சுவர்க்கமும் சாசுவதமாய்க் கிடைக்குமே? ஓய், உத்தரகுமாரரோ? ஓடாதேயும், வாரும் பயப்படாதேயும், யுத்தகளத்திற் போவோம், கையிலானமட்டும் யுத்தஞ் செய்வோம். அவர்க ளுயிர்களோடு நமது பசு மந்தைகளைக் கிரகித்தாற் கிரகிப்போம். அப் பசு மந்தைகளோடு நமது உயிர்களையும் சத்துருக்களுக்கு ஒப்புவித்தா லொப்புவிப்போம். அதிர்ஷ்ட முள்ளபடி யாகிறது. நல்லது இச்செய்தியை உமது பிதா கேள்வியுற்றபின் குலத்துக் கெல்லாம் அபகீர்த்தியைச் சம்பாதித்த பிள்ளையை வைத்துக் குலாவச் சம்மதிப்பாரா? அவர் வெகு மானியும் சூரரு மாயிற்றே? ஆகையால் சகல விதங்களினலும் தீமையே விளைகிறபடியால் நீர் மனதை நிலைநிறுத்தித் திரும்பி வந்து தேரிலுட்கார்ந்து கையி லாயுதம் பிடித்து இருமாந்து ரண களத்திற் சென்று சிங்கம்போல் கர்ச்சனை செய்யும் என்று பல வகையாய்ப் பேசிக்கொண்டே இருஷ்ண சர்ப்பம்போன்ற தலை மயிர்ப் பின்னல் பூமி

யிற் புரள சிவந்த வஸ்திரம் அவிழ்ந் தவிழ்ந்து போக கைகளால் தூக்கி ராஜகுமாரனைக் கூப்பிட்டுக்கொண் டோடிய அர்ச்சுனனை கவுரவசேனையி லிருக்கிற பேர்க ளெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு இதென்ன ஒற்றைத் தேர் பட்டணத்தி லிருந்து வந்தது. அதி லிருந்து ஒரு சிறுவன் குதித் தோடுகிறான். அவனைப் பிடிக்க ஒருத்தி யோடுகிறாள். அவளுடைய நடையையும் குரலையும் உயர்ந்து பருத் திருக்கிற தோட்களையும் பார்த்தால் புருஷ னென்று சொல்லும்படி யிருக்கிறது. வேஷத்தைப் பார்த்தால் ஸ்திரீ யென்று சொல்லும்படி யிருக்கிறது. இவர்கள் யாரோ தெரிய வில்லை. எவனாகிலும் ராஜாவா யிருந்தால் யுத்தத்துக்கு வந்து சேனையைக் கண்டு பயந் தோடுவானா? அந்தப் பெண்பிள்ளைக் கிருக்கிற அவ்வளவு தைரியம், அந்தச் சிறுவனுக்கு இல்லைபோற் காண்கிறது. இப்படிப்பட்ட பேதை யாரோ? இந்தப் பெண்பிள்ளை யாரோ? இப்பேதைச் சிறுவனுக்கு என்னவாக வேண்டுமோ? அவளுடைய சாமர்த்திய மெப்படிப்பட்டதோ? ஒன்றும் தெரியவில்லை. இதுகளை யெல்லாம் நன்று யறியவேண்டுமென்று ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டு சிலர் நகைத்தார்கள், சில ரிரங்கினார்கள், சிலர் செய்தி யறியும்படி முயன்றார்கள், சில ராச்சரியப் பட்டார்கள்.

இவ்வாறாக சேனைச் சனங்க ளெல்லாம் கலங்கி கண்களை யவ்விருவர்மீதே வைத்து சித்திரப் பதுமைகள்போல் சற்று மசைவில்லாம லிருக்க துரோணாசாரியர் இச்செய்தி தெரிந்து அவர்களை யுய்த்து நோக்கி ஓடுகிறவன் இராஜ குமார னென்றும் பிடிக்கப் போகிறவன் அர்ச்சுன னென்றும் மனதில் கொஞ்சம் சந்தேக முற்றவராகி பீஷ்மனைப் பார்த்துச் சொல்லுகிறார். பாரும் ஐயா, இதோ ஓடுகிற ராஜகுமாரனைத் துரத்திக் கொண்டு போகிற தேர்ப்பாகன் அகங்காரத்தினாலே சமய சந்தி யறியாமல் ஒருவனாக நம்மை ஜயிக்கும் பொருட்டு வருகிறானே இது தகுதியோ? இப்படி வந்தால் நாம் பயப்படுவோமோ? இவன் கம்பீரத்தைப் பாரும், தேவேந்திரன் போல் விளங்குகிறான் என்று த்ரோணர் சொல்லக்கேட்டு பீஷ்மரானவர் அந்த குறிப்பை யறிந்து அர்ச்சுனன் அஞ்ஞாதவாசந் தீரு முன்னே யுத்தத்திற்கு வருகிறா னென்றிவர் சந்தேகிக்கிறார், இந்தச் சந்தேகத்தைத் தீர்ப்போ மென்று கருதி தாமும் குறிப்பாய்ச் சொல்லுகிறார்.

கேளீர் ஆசாரியரோ? சத்துருக் களுக்கிடமாகிய எல்லையைக் கடந்து வந் திருக்கிறோம். நமது பராக்கிரமத்தைக் காட்டுகிறதற்கு இது

தான் சமயம். ஆனபடியினலே பயப்பட வேண்டுவ தில்லை என்று பீ
ஷ்மர் சொல்லியதைக் கேட்டு ஆசாரியர் அர்ச்சுன னவன் தனது
அஞ்ஞாதவாசந் தீர்ந்துதான் யுத்தத்திற்கு வருகிறான். அவன் வெளி
ப்பட்டு வர வேண்டிய காலந்தான். ஆகையால் இந்தப் பயம் அவனு
க்குத் தேவையில்லை யென்று தெரிந்துகொண்டவராகி தன் சமீபத்
தி லிருக்கிற படைத் தலைவனை நோக்கிச் சொல்லுகிறார்.

ஓ! வீரர்களே? நீங்கள் அங்கே ஓடுகின்றவர் யாரோ வென்று
சந்தேகிக்க வேண்டுவ தில்லை. விராட ராஜகுமாரன் நம்மைக் கண்டு அ
ஞ்சி தேரினின்றுங் குதித் தோடுகிறான். அவனைப் பிடித்துத் தேரிலே
யஜமான னென்று ஸ்தாபித்து யுத்தஞ் செய்து நம்மை ஜயிக்கவேண்
டு மென்கிற கருத்தினலே அசகாய சூரனாகிய அர்ச்சுனன்தான் பி
ன்னே டோடுகிறான். இதுவே நிச்சயம். அதெப்படி யென்றால் நீண்
டு பருத் துயர்ந் திருக்கிற கைகளினாலும் பருத் துயர்ந் திருக்கிற கண்ட
த்தினாலும், மதயானைக் கன்று போன்ற நடையினாலும், மேகம்போ
ன்ற கண்டத் தொனியாலும் தெரிய வருகிறது. அன்றியும் அதிரத
மகாரத ரநேகரோடு கூடியதாய் வெகு கொடுமையான திமிங்கில மு
தலிய ஜல ஜந்துக்க ளோடு கூடி கரை புரண்டு வாநின்ற கடலோ
டொத்த இந்தக் கவுரவசேனைக் கெதிரே மன வலியுட னெதிர்த்து வ
ரும்படியானவன் அந்த அர்ச்சுனனே யல்லாமல் மற் றொருவன் வரமா
ட்டான். இந்தச் சேனையைக் கண்டால் தேவேந்திரனும் அஞ்சுவா
னல்லவோ? ஆனால் அவன் பெண் வேடந் தரித் திருக்கையாலே உ
ங்களுக் கடையாளந் தெரிய வில்லை. அவனை அர்ச்சுன னென்று நிச்
சயமாய் நம்புங்க ளென்று துரோணாசாரியர் கூறக் கேட்டு கர்ணன்
சொல்லுகிறான்.

ஓய் ஆசாரியரே? நீர் சொன்னது சரிதான். ராஜா சகல சேனைக
ளோடு தென்புறத்திற் சண்டைக்குப் போ யிருக்கிறபடியினலே நா
ம் இந்தப் பக்கத்தில் வந்து பசுக்களை மடக்கின சமாசாரத்தைக் கோ
பாலரா லறிந்து பேதமையாலே நம்மைத் தா னொருவனாகவே ஜயிக்க
லா மென் றெண்ணி நபும்சக ரூபியாகிய அர்ச்சுனனைச் சாரதியாக
வைத்துக் கொண்டு சண்டைக்கு வந்த உத்தர குமாரன் நமது சே
னையைப் பார்த்து பயந் தோடுகிறவன் போலவே தோற்றுகிறது. பி
டிக்கப் போகிறவன் அர்ச்சுனன் போலவே தோற்றுகிறது. ஆகிலும்
அந்த அர்ச்சுனன்தான் மஹா வீரராகிய இத்தனை பேர்களையும் ஒருவ
னாக எப்படி வெல்ல மாட்டுவான்? நல்லதாகட்டும். நாம் இப்போது சு

ம்மா யிராமல் யுத்த சன்னுத்தரா யிருக்கவேண்டும் என்று சொல்லிய கர்ணனைப் பார்த்து கிருபாசாரியர் சொல்லுகிறார்.

கேளாய் கர்ண ? அந்த அர்ச்சுனன் மிகவும் சூரனும் தைரிய சாலியு மானபடியினாலே விராட புத்திரனை யழைத்துக்கொண்டு ஒருவனாக யுத்தத்துக்கு வந்தான். நாமும் நீ சொன்னபடி யுத்தஞ் செய்தால் ஊழின்படி, ஜயமோ ? அபஜயமோ ? வர வேண்டுவது வரட்டும். அதற்காக நாம் சும்மா யிருப்பது நன்மை யன்று என் றுரைத்ததைக் கேட்டு துரியோதன மகாராஜன் சொல்லுகிறான்.

வாராய் கர்ண! இந்தச் சேனையி லிருக்கிற உங்களுக்குள் ஒவ்வொருவருடைய பராக்கிரமத்திற்கு தேவேந்திரனும் எதிர் நிற்கமாட்டான். இப்படிப்பட்ட உங்களை அந்த அர்ச்சுனன் ஜயிக்க எவ்வளவும் சமர்த்த னல்லன். ஆகையால் அந்த அர்ச்சுனனை அல்லது அவனுக்குத் துணையாய் வரும் கண்ணனையானாலும் உங்களு தவிபெற்ற நானொருவனே யுத்தகளத்தில் அடித்துத் தள்ளுகிறேன். மகா பல பராக்கிரமசாலிகளாகிய நீங்கள் அவனுக் கஞ்சி பேசலாமோ வென்று சொல்லக் கேட் டிருந்த சேனா ஜனங்கள் அர்ச்சுனனது சவுரியத்தைச் சிந்தித்து ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து சொல்லிக்கொண்டதாவது அந்த அலி ரூப முள்ள புருஷன் அர்ச்சுனனாகவே யிருந்து இப்போது யுத்தத்திற்கு வந்தால் இந்த நம்முடைய சேனையி லிருக்கிறவர்களில் ஒருவனும் பிழைத்துப் போகமாட்டான். இது நிச்சயம். நாம் யாவரும் ஒரே காலத்தி லிந்தப் பூமிக்குப் பலியாக வேண்டிய கால மிதுவே நேரிட்ட தென்று தோற்றுகிறது. இந்தத் துரியோதனாதிகள் யாரு மில்லாத விடத்தில் அசுவமேத யாகஞ் செய்கிறார்களே யல்லது அந்த சுத்தவீரனைக் கண்டால் பறந்தோடிப் போவார்கள். இப்படிக்கு எத்தனை தரமோ கண்டிருக்கிறோ மல்லவோ? நன்றாக யோசித்துப் பார்த்தாலும் அந்த மஹாபுருஷனுக் கெதிரே நின்று வெற்றி பெறும்படியான சூரன் நம்மில் ஒருவனும் காணப்பட வில்லை. பீஷ்மாதிகளும் பின்வாங்கிப் போவார்களே என்று சொல்லி மனதி லச்சத்தை யடைந் திருந்தார்கள்.

இப்படி யிருக்க அந்த அர்ச்சுனனானவன் நூறடிகள் தாண்டிப் போகாமுன்னமே ஓடுகின்ற அந்த உத்தரகுமாரனைத் தலை மயிரைப்பிடித்து இழுத்துக்கொண்டு வந்தான். வரும்போது அந்த ராஜகு

மாரன் திகிலடைந்து கண்ணீர் தாரைதாரையாய் வடியதேவிக்கே வி யழுதுகொண்டு அர்ச்சுனனைப் பார்த்து வாராய் பிருகன்னளாய், என்னை வலுவி லிழுத்துக் கொண்டுபோய் யுத்த பூமிக்கு இரையாக்குவதனால் உனக்கென்ன பயன்? இப்படி செய்யாமல் என்னை விட்டுவிடுவாயே யானால் உனக்கு மிகுந்த புண்ணியம் கிடைப்பது மன்றி நான் அநேகம் பணங்களையும் தருகிறேன். அன்றியும் என்னிடத்தில் அதிக விலை பெற்ற எட்டு வைடூரியங்க ளிருக்கின்றன. அவைகளையும் இன்னும் சில ரத்தினங்களையும் பத்து யானைகளையும் இருபது குதிரைகளையும் சில வேலைக்காரிகளையும் ஒரு கிராமத்தையும் தருகிறேன். இவைகளை யெல்லாம் கைக்கொண்டு நீயும் சுகமாய் வாழலாம். நானு மந்தப்புரஞ் சேர்ந்து சுகமா யிருப்பேன். யுத்த களத்திற் போனால் நான் மாத்திரமே யல்ல, நீயுஞ் சாவாய். கேளாய் பிருகன்னளாய், உனக்கு உயிரும் செல்வமும் லக்ஷிய மில்லாம லிருந்தாலும் என் னுயிரைக் காப்பதனால் புண்ணியம் கிடைக்கு மல்லவோ? உன்னைக் கும்பிடுகிறேன், உன் பாதங்களைத் தஞ்சமென் றடைகிறேன், என்னை விட்டுவிடு என்று புலம்பிய ராஜகுமாரனைப் பார்த்து அர்ச்சுனன் புன்சிரிப்புகொண்டு சொல்லுகிறான்.

கேளாய் ராஜகுமாரா? நீ வெகு ஜனங்களுக்கு முன்னிலையில் அந்தக் கவுரவர் யாவரையும் நானே வெற்றி கொள்வே னென்று உறுதியாய்ச் சொல்லி இப்போது அவர்களைக் கண்டு ஓடுகிறது தகுதியல்ல. அப்படி செய்வது உனக்கு மாத்திரமே யல்ல, எனக்கும் வெகு அவமானமா யிருக்கிறது. ஆகையால் நீ வந்து தேரின்மீதி லுட்கார்ந்து சாரத்தியஞ் செய்துகொண் டிரு. நான் ரதிகனா யிருந்து ஊழிகாலத் திடிபோன்ற அம்புகளினால் சத்துருக்களை மடித்து இந்த பசுக்களை நகரத்திற்குத் திருப்புகிறேன். நா னிப்படி செய்ய உனக்கு சமாதான மில்லாமற் போனால் நீயாகிலும் வில் லெடுத்து கொடுமையான அம்புகளை விடுத்து சத்துருக்களைப் பறக்கடித்துப் பசுக்களை யோட்டிக்கொண்டு போ. எவ்வகையி லாகிலும் சத்துருக்களை வென்று பசுக்களை ஓட்டிக்கொண்டு பட்டணம் போகவேண்டுமே யன்றி சும்மாய் போக லாகாது. எப்படியும் அவர்களை நாமே ஜயிப்போம், சந்தேக மில்லை. அதனாலே அகண்ட மண்டலாதிபத்தியம் நமக்குக் கிடைத்து சகல போகங்களையும் இடையூ றின்றி நா மனுபவிக்கலாம். பெருமையையும் புகழையு மடையலாம். அல்லது யுத்தகளத்தி லடிபட்டு வீழ்ந்து உயிரை விட்டாலும் சூர னென்று மாறாத புகழ் பெற்று சுவர்க்கஞ் சென்று மேலான சுகங்களைப் பெறலாம். பின் வாங்கி

யோடினல் இரண்டு மிழக்கவேண்டி வரும். ஆகையால் பல தடவை நான் சொல்லிய இந்தப் பேச்சுக்களை கேட்டு நீ மனதில் தைரிய முடையவனுகி தேரின்மீ துட்கார்ந்து ஆயுதங்களைப் பிரயோகஞ் செய். உனக்கே ஜயம் வரும். அதேதென்றல் ஒரு ரகசியஞ் சொல்லுகிறேன் கேள். நான் எவனுக்குச் சாரதியா யிருக்கிறேனே அவனுக்கே ஜயம் வரும்படி எனக்கு ஒரு அனுக்கிரகமுண்டு. அதனாலேதான் நானுன்னை இவ்வளவு கட்டாயஞ் செய்கிறேன், நீ பயப்படாதே. இவ்வளவு கேட்டும் உனக்குத் தைரிய மில்லாமற் போனல் தேரி லுட்கார்ந்து சாரத்தியஞ் செய். நான் பகைவரை வெல்லுகிறேன் என்று அர்ச்சுனன் உத்தரனுக்கு மன வலி வரும்படியாகிய பேச்சுகளைச் சொல்லிக்கொண்டே இழுத்துக்கொண்டு வந்து அவனைத் தேர்மீ திருத்தி அந்த மயானத்தி லிருக்கும் வன்னி மரத்தின் சமீபத்திற்குத் தேரை யோட்டினன். அப்போது அவனைப் பார்த்து பீஷ்மர் முதலானோ ரெல்லாம் நமக்கு ஜயம் வரமாட்டா தென்று நிச்சயித்துக்கொண்டார்கள். துரோணசாரியார் தமது சேனையில் காணப்பட்ட அபசகுனங்களைக் காட்டி துரியோதனுதிகளுக்குச் சொல்லுகிறார்.

பாருங்கள் கவுரவரே ? இதோ பெருங் காற்றின லெழுப்பப்பட்ட தூளிகள் சாம்பல் போன்ற நிற முடையனவாய் திசைகளை ம் றைக்கின்றன. மேகங்களும் செந்நிற முடையனவாய் ஊழிகாலத்தி லுறுமுவதுபோல் பயங்கரமாக உறுமுகின்றன. சூரருடைய கத்திகள் உறைகளினின்றும் நழுவுகின்றன. நரிகள் சூரியனுக்கு எதிராக ஊளையிடுகின்றன. குதிரைகளின் கண்களினின்றும் நீர் வடிகின்றது. மதயானைகளுக்கு மதஜலதாரை அடங்கிப் போயிற்று. காற் றில்லாமலிருக்கையிலும் நமது தேர்களிற் கட்டி யிருக்கின்ற கொடிச்சீலைகள் நடுக்க முறுகின்றன. இப்படிக் கெல்லாம் நமது சேனைகளில் அபசகுனங்கள் காணப்படுகிறபடியினலே நமக்கு வெற்றியைக்குறித்துச் சந்தேகிக்கவேண்டி யிருக்கிறது. ஆகையால் நீங்க ளெல்லாம் அர்ச்சுனனல் அவமானத்தை யடையாம லிருக்கும்படி ஜாக்கிரதையா யிருங்கள். அலக்ஷியஞ் செய்யவேண்டாம் என்று சூரரைப் பார்த்துச் சொல்லி பின்பு பீஷ்மரை நோக்கி ரகசியமாய் கேளீர் கவுரவ பிதாமகரே ? இப்போது நம்மை எதிர்த்து வருகின்ற வீரன் இராவணனது உத்தியான வனத்தை யழித்தவனைத் துவசமாகக் கொண்டவனும் வெள் வேலை மரத்தின் நாமதேயத்தை யுடையவனும் மலைகளின் சிறகுகளை யறுத்தவனது மகனுமாகியவ னன்றோ? அவனை நா

மெப்படி ஜயிக்கமாட்டுவோம்? அவன் காரிய வசத்தினாலே பெண்
வேடம் பூண்டு தன் மகிமைகளை அடக்கிக்கொண் டிருக்கிறான். அப்
படி இருக்க வேண்டிய காலமும் கழிந்ததுபோல் காண்கிறது என்று
சொல்லிய பேச்சைக் கேட்டு பீஷ்மாசாரியரும் அது சரிதான். நன்று
க யோசித்து எண்ணிப் பார்த்தால் ஒரு வருஷமும் பூரணமாக ஆய்
விட்டது. இனி யவன் பய மில்லாமல் வந்து யுத்தஞ் செய்து ஒரு
முகூர்த்தகாலத்தில் இந்தச் சேனையை மடித்துப் பசுக்களைத் திருப்
பிக்கொண்டுபோய் விராடராஜனைச் சந்தோஷப் படுத்துவான். சந்
தேக மில்லை, நாமோ இருப்பிடம் விட்டு வெகு தூரம் இந்தச் சேனை
களைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறோம். கால கதியின்படி நடக்
கிற தென்று சொன்னார். அது கேட்டு துரோணர் துரியோதனனை
யழைத்துச் சொல்லுகிறார்.

கேளாய் துரியோதனா, இப்போது நம்மோடு சண்டைக்கு அர்
ச்சுனனே நபும்சக வேடத்தால் தன்னை மறைத்து வருகிறான். அவ
ன் நமது சேனைகளை யெல்லாஞ் சிதற அடித்து வெற்றி பெறுவதில்
ஐயப்பட வேண்டுவ தில்லை. நம்மில் அவனை வெல்லும்படியானவ
னொருவனு மகப்பட வில்லை. அவனுடைய சாமர்த்தியத்தைப் பல த
ரமுங் கண்டிருக்கிறோ மல்லவோ? அவன் ஆதியில் துரோபதியின்
சயம்வரத்தில் வீராதிவீரராகிய அரசர்க்கும் அசாத்தியமாகிய வில்லை
வேடிக்கையா யெடுத்து வளைத்து நாணேற்றி அம்பை விடுத்து
அந்த மச்ச யந்திரத்தை யறுத்துத் தள்ளினா னன்றோ? அதன் பின்
நீயும் மற்று மநேக அரசரும் சேர்ந்து சண்டைக்குப் போனபொழு
தும் துருபதனோடு சண்டை செய்தபொழுதும் உங்களைப் பஞ்சுக
ளைப் பெருங் காற்று பறக்கடிப்பதுபோல் பறக்கடித்தா னன்றோ? பின்
பு ஸ்ரீகிருஷ்ணனைச் சகாயமாக வைத்துக்கொண்டு இந்திரன் முத
லான தேவர்களையும் வெற்றிகொண்டு காண்டவ வனத்தை அக்கினி
பகவானுக்குக் கொடுத்தா னல்லவோ? தீர்த்த யாத்திரை செய்தபோ
து சுபத்திரையைக் கலியாணஞ் செய்ததைச் சம்மதிக்காமல் எதிர்
த்துவந்த யாதவரை ஜயித்தா னல்லவோ? யாகத்திற்காக வடதிசை
யிற் சென்று சகல ராஜாக்களையும் மேருவின் பாரிசத்தி லிருந்த தே
வர் கந்தருவர் முதலானோரையும் ஜயித்து அளவற்ற பொருள்களைக்
கொணர்ந்து தமையனுக்கு சாம்பிராச்சிய பட்டாபிஷேகஞ் செய்
வித்தா னல்லவோ? வனவாசத்தில் திரிபுரங்களை யெரித்த ருத்திர
மூர்த்தியை ஜயித்து பாசுபதாஸ்திரம் பெற்றா னன்றோ? இந்திர
னுக்குச் சகாயமாக இரணியபுரத்தி லிருந்த நிவாதகவசரை நாசஞ்

செய்தானல்லவோ? அன்றியும் சித்திரசேனனாற் கட்டுண்ட உன்னை விடுவித்தானல்லவோ? இப்படிப்பட்ட திர்ஷ்டாந்தங்களினாலே அவனுக்குச் சமானமாகிய வில்லாளி உங்களிற் காணப்படவேயில்லை. இவன் காண்டீவத்தை யெடுத்துக்கொண்டு போர் செய்ய வந்தால் நாம் வெற்றி பெறுவது சந்தேகமுள்ளதுதான். நீங்களோ அவனுக்குப் பல்வகையாய் அபராதஞ் செய்திருக்கிறீர்கள். அதனாலே அவன் மனங் கொதித்து வருகிறான். இப்போது நாம் தப்பித்துக் கொள்ளும்படியான உபாயமேதாகிலு முண்டாவென்று கேட்ட துரோணாசாரியனைப் பார்த்து கர்ணன் துரியோதனனுக்கு அனுகூலமாகச் சொல்லுகிறான்.

ஓய் ஆசாரியரே? உமது சுபாவம் ஆதி முதல் யாவருக்குந் தெரிந்துதானிருக்கிறது. அர்ச்சுனனிடத்தில் உமக்கு பக்ஷமதிகமாயுண்டு. அவனையே சிறப்பித்து அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறீர். என்னிடத்திலும் துரியோதனனிடத்திலு மிருக்கிற சௌரிய தைரிய முதலிய குணங்களில் பத்திலொரு பங்கும் அர்ச்சுனனிடத்தி வில்லை. இப்படியிருக்க நீர் சும்மா தோத்திரஞ் செய்கிறீர். எதிர்த்து சண்டைக்கு வருகிற சத்துருவை யாராகிலும் புகழ்வார்களா! இது வீரருக்குத் தகுதி தானா? அவன்தானாகட்டும் அல்லது தேவேந்திரன்தானாகட்டும் அம்புகளை விடுத்து அவனைக் கண் விழிக்கவொட்டாமற் செய்ய மாட்டுவேன் என்று கர்ணன் சொல்லக் கேட்டு துரியோதனன் சொல்லுகிறான். நா மிப்போது எதிரியின் பல பராக்கிரமங்களைச் சிந்திக்கவேண்டுவதேன்? ஜணப்பன் வீட்டுக் கோழி தானே விலங் கிட்டுக் கொண்டதுபோல் அந்த அர்ச்சுனன் நமது கையில் தானே அகப்பட்டுக் கொண்டான். எப்படி யென்றால், அஞ்ஞாதவாசமாகிய ஒரு வருஷத்துக்குள் அவர்களை நாம் கண்டுபிடித்தால் மறுபடியு மவர்கள் பன்னிரண்டு வருஷம் காட்டுக்குப் போய் ஒரு வருஷம் அஞ்ஞாதவாசஞ் செய்யும்படி யன்றோ ஆதியில் உடன்படிக்கை நடந்திருக்கிறது. இப்போது நாம் அவர்களைக் கண்டுபிடிக்கத்தானே இவ்விடம் வந்தோம். தேடப்போன ஒஷதி காலிற் சுற்றிக்கொண்டதுபோல் அந்த அர்ச்சுனன் தானே வெளிப்பட்டு வந்தானாகில் சுலபமாய் அவனை ஜயிக்கும்படி யாயிற்று. இவ்வாலே பாண்டவர் யாவரும் மறுபடி வனவாசத்துக்குப் போகும்படி நேரிட்டது. இதைக்காட்டிலும் நமக்கு ஜயம் வேறு வேண்டுமோ? நாம் சுகமாயரசாளக்குறை யில்லையே? அல்லது அவன் முன் செய்த பிரதிக்கினையைத் துறந்து பலத்தினாலே ஜயிக்க வந்தாலும் லக்ஷியமில்லா

மல் வெல்வோம். அல்லது அந்தத் தேவேந்திரன் மகனுக்குச் சகாய
மாய் நபும்சக ரூபத்தைத் தரித்து நம்மோடு யுத்தத்துக்கு வருகிறதா
யிருந்தாலும் அவன் தான் நமக்கு எவ்வளவு லக்ஷியம்? ஆகையால் இப்
போது பகைவரை வெல்லுதற்பொருட்டு எள்ளளவும் நமக்கு மனக்
கலக்கம் வேண்டுவ தில்லை என்று சொல்லக் கேட்டு பீஷ்மர், து
ரோணர் முதலானோ ரெல்லாம் அந்தத் துரியோதனனுடைய புத்தி
உபாயம் தைரியம் முதலான குணங்களைக் கொண்டாடினார்கள். இங்
கே இப்படி யிருக்க அர்ச்சுனன் விராட புத்திரனைத் தேரின்மீ தே
ற்றிக்கொண்டு வன்னிமரத்தி னருகிற் சென்று அவனைப் பார்த்து
ஒரு வார்த்தை சொன்னான். அப்பா ராஜகுமாரா, இதோ இந்த வன்
னிமரத்தின்மீதில் பாண்டவர்களுடைய ஆயுதங்க ளெல்லாம் வைக்க
ப்பட் டிருக்கின்றன. ஆதலால் நீ இதின்மே லேறி அவைகளில் உத்
தமமாயும் சகல சத்துருக்களும் பயப்படும்படியானதாயு மிருக்கி
ன்ற காண்டீவ மென்னும் வில்லைக் கொணர்ந்து என் கையிற் கொடு.
இந்தத் தேரி லிருக்கின்ற விற்க ளெல்லாம் என் புஜபலத்தைப் பொறு
க்கமாட்டா, இந்தச் சேனையைச் சீக்கிரத்தில் தும்சஞ் செய்ய
கருவியாக மாட்டா. இந்த அம்புகளும் சூக்ஷுமங்களாயும் வலியற்
றனவாயு மிருக்கிற படியினாலே பலசாலிக ளான அந்தச் சத்து
ருக்களின் தேகங்களைப் பிளக்க மாட்டா. ஆகையால் அதை யெடு
த்து என் கையிற் கொடு. அதெப்படி யிருக்கு மென்றால், ஓர் பனை ம
ரப் பிரமாண முள்ளதாய் அநேகம் பொற் கட்டுகள் போட்டதாய்
ஜொலித்தலோடு கூடி எல்லா ஆயுதங்களிலும் மேலானதாய் விள
கும் என்று அர்ச்சுனன் சொல்லியதைக் கேட்டு உத்தரன் சொல்
லுகிறான். பிருகன்னளாய், பூனைக்குப் பயந் திருக்கிற எலிக்கு சர்
ப்பத்தைக் காட்டுவது போல் கவுரவ சேனையைக் கண் டஞ்சி உன்
வலிமையினால் தேரி லுட்கார்ந்த எனக்கு மனதினால் நினைக்கவுங்
கூடாத பாண்டவர்களின் ஆயுதத்தைக் காட்டுகிறாயே, நா னெப்
படி சகிப்பேன்? நல்ல தாகட்டும், பாண்டவருடைய ஆயுதங்கள்
இங்கே வந்த விதமென்ன? அது உனக்குத் தெரிந்த விதமென்ன?.
பார்த்தால் பிரேதம் போல் காணப் படுகிறது. அந்த அருவருக்கும்
படியாகிய வஸ்துவை இராஜ குமாரனாகிய நா னெப்படி தொடுவேன்?
என்னை நீ இந்தக் காரியத்தி லேவ வேண்டாம் என்று சொல்லிய
உத்தரனைப் பார்த்து அர்ச்சுனன் சொல்லுகிறான்.

கேளாய் ராஜ குமாரா, இழிவான தொழிலைச் செய்யும்படி
உன்னை நான் ஏவ இல்லை. பிரேதத்தை மேலே கட்டியிருக்கிறதே

யன்றி உள்ளே திவ்யமாகிய ஆயுதங்கள் வைக்கப்பட் டிருக்கின்றன. ஆகையாலேதான் அந்த வேலையில் உன்னை யேவினேன். நீ சந்தேகப்படாமல் அந்தப் பிரேத சர்மத்தை யவிழ்த்து அதி லிருக்கு மாயுதத்தை எடு என்று அரச்சுனன் கூறக் கேட்டு அந்த உத்தரன் தேரிலிருந்து இறங்கி அந்த மரத்தின் மேலேறி மேலே சுற்றி யிருந்த பிணத்தோலை யவிழ்த்து அதினுள்ளே ஜொலித்துக் கொண் டிருக்கிற ஆயுதங்களைக் கண்டு பயப்பட்டு கண்களை மூடிக்கொண்டு அர்ச்சுனனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ பிருகன்னளாய், என்னைப் புலியின் வாயிற் கையிடச் சொல்லுகிறாயே, உதய மாகாநின்ற சூரியனைப்போலவும், சீறுகின்ற சர்ப்பங்களைப்போலவும், அணுகக்கூடாம லிருக்கிற இவ் வாயுதங்களைத் தொட எனக் கஞ்சுத லுண்டாகின்றது. இதைக் காணும்பொழுதே உடம்பில் மயிர்கள் சிலிர்த்துக்கொள்கின்றன. சொல்லக்கூடாத தேஜசுடைய பாண்டவ ரெடுக்கும்படியாகிய இவ் வாயுதங்களை நானெடுக்க வல்லவனோ? இதைப் பார்ப்பதற்கும் எனக்குத் தைரிய மில்லை, என்ன செய்வேன்? என்று சொல்லி சற்று நேரம் சும்மா யிருந்து மறுபடியுஞ் சொல்லுகிறான்.

ஓ பிருகன்னளாய், இந்தத் தோலை அவிழ்த்த மாத்திரத்தில் நல்ல பகற் காலத்துச் சூரியனைப்போல் இவ்வாயுதக் கூட்டம் கண்களைப் பறிக்கின்றது. குரூர சர்ப்பத்தைத் தீண்ட எப்படி பய முண்டாகுமோ அப்படி இதைக் கையினால் தீண்ட பயமுண்டாகிறது. நல்லதாகட்டும். நீ என் வினாக்களுக்கு விடை தரவேண்டும். இதில் பொன்னினால் மலர்களும், பறவைகளும் சித்திர மெழுதப்பட்டு ஜொலிக்கிற அக்கினி போல் சிறப்பாய் ஒரு வில் விளங்குகின்றது. இது யாருடைய வில்? பூரண சந்திரன்போல் பிரகாச முள்ள வச்சிர வைடூரியங்க ளிழைக்கப்பட்டு பொன்னினால் தாமரை மலர்களோடு கூடிய மரங்களாய் சித்திரிக்கப்பட்டதாய் இந்திர தனுசுக்கு ஒப்பாகி ஒரு தனுசு காணப்படுகின்றது. இது யாருடைய தனுசு? மிகுந்த நீட்சியுள்ளதும், காட்சியினாலேயே பகைவர் அஞ்சும்படி யானதும், சொர்ணத்தினால் விருஷப சித்திரங்கள் செய்யப் பட்டது மாகி விளங்காநின்ற இந்த வில் யாருடையது? மின்னற் கொடி போன்ற பிரகாச முடையதும், மச்சங்களும் அன்னங்களும் சித்திரமாய் எழுதப்பட்டு பின் புறத்தில் கவசம் பூண்ட வீரனைப் போல் சித்திர மெழுதப்பட்டதும், நல்ல தங்கத்தினாற் செய்த நுனியுடையதும், கறுத்த

மானின் தோலுக்குச் சமானமாக விளங்குகின்றதுமாகிய இந்த வில் யாருடையது? நல்ல தங்கத்தினல் புலிகள்போலவும் மயில்கள் போலவும், சித்திரங்கள் செய்யப்பட்டு கருநெய்தற் பூப்போன்ற நிறமுடையதாய் விளங்காநின்ற இந்தத் தனுசு யாருடையது? நஞ்சுமிழும்படியானவையும், அனலுமிழும்படியான நேத்திரங்களை யுடையதாய் யாவரும் அஞ்சும்படி சீறிக்கொண்டு பெருமூச் செறியும் பாம்பைப்போ லிராநின்ற கூர்மையாகிய அம்புகளினல் நிறைந்தனவுமாகிய இவ் விரண்டு அம்புப் புட்டில்கள் இருக்கின்றவே இவை யாருடைய அம்புப் புட்டில்கள்? கால தண்டத்துக்கு ஒப்பாய் சத்துருக்களைப் பொடியாக்கும்படியான வலிமை பொருந்தி பொற்பட்டங்களால் அலங்கரிக்கப்பட் டிருக்கிற இந்தக் கதாயுதம் யாருடையது? மறு வற்ற பூரண சந்திரன் போல் நிலவை யுமிழும்படியானதும், கருநெய்தற் போன்ற நிறமுடைத்தானதும், கருநெய்தற் போன்ற நிறமுடையதும், கண்ணினல் காணக்கூடாத முனையுடையது மாகிய இந்தக் கத்தி யாருடையது? ஓகோகோ, பிருகன்னளாய்! இதில் மற்றொரு கத்தி இருக்கின்றது. இதெப்படி யிருக்கிற தென்ருல், சிங்கத்தின் தோலாலே சுற்றப்பட்டு மிகுந்த நீட்சியுள்ளதாய் மின்னற்கொடிபோல் பளபளப்பினல் கண்களை சிதற அடிக்கும்படியானதாய் எப்படிப்பட்ட வலிமையான தேகத்தையும் மெதுவாய்த் தாக்கினலும் துண்டாடும்படியானதாய் மலைபோன்ற மத யானையையும் ஓர் நொடியில் சிதைக்கத் தக்கதாயும் விளங்கு கின்றது. இந்தக் காண எனக்கு மிகுந்த ஆச்சரிய முண்டாகிறது. இது எந்த மகா வீரனுடைய கையை அலங்கரிக்குமோ தெரியவில்லை. இவைகளை யெல்லாம் எனக்கு சொல்ல வேண்டும். அன்றியும், இவை இந்த மரத்தின் மீது வர வேண்டிய காரண மென்ன? இதையும் சொல்லவேண்டு மென்று சொல்லிய உத்தரனுக்கு அர்ச்சுனன் விடை தருகின்ருன்.

கேளாய் ராஜகுமாரா? நீ முதலில் ஒரு தனுசைக் கண்டு பயப்பட்டா யல்லவோ? அந்தத் தனுசு அர்ச்சுன னுடையது. அது தேவ நிர்மாண முள்ளது. அதின் மகிமைகள் விஸ்தார முண்டு. அதை ஆதியில் பிரமதேவர் ஆயிரம் வருஷங்கள் தரித் திருந்தார். பின்பு தேவப் பிரமாணத்தினல் அறுபத்து நாலு வருஷம் வரைக்கும் தேவராஜன் தரித் திருந்தார். அதற்குப் பின்பு சந்திரன் ஐயாயிரம் வருஷங்கள் தரித்திருந்தார். அவர் கையி லிருந்து வாங்கி வருணபகவான் நூறு வருஷங்கள் தரித் திருந்தார். பின்பு அக்கினிபகவான் அந்த வில்லை வரு

ணனிடத்திலிருந்து வாங்கி அர்ச்சுனனுக்கு அனுக்கிரகஞ் செய்தார். இதற்குக் காண்டீவ மென்று பேர். இதை அந்த அர்ச்சுனன் அறுபத்தஞ்சு வருஷம் தரித் திருப்பான். இதின் வரலாற்றையும் சொன்னேன். இன்னும் கேள். அதின் பக்கத்தில் மிகவும் நீட்சியுள்ளதாய் காணப் படுகிறதே, அது வீமசேனனுடைய வில் அவனுடைய பலத்துக்கு இசைந்தது. புலிகள் சித்திரிக்கப் பட்டு நவரத்தின மயமாய் ஜொலிக்கிறதே அந்த வில் மகாராஜாவாகிய யுதிஷ்டிரருடையது. அதோ சிங்கத்தின் தோலினால் தைக்கப்பட் டிருக் கின்றனவே, அவ்விரண்டு தூணீரங்களும் அந்த மகாராஜாவினுடையனவே. அவைகளின் சமீபத்தில் கறுத்துக் காணப்படுகிற தனுசு நகுல னுடையது. பளபளப்பாய் விளங்குகிற தனுசு சகாதேவனுடையது. அதின் பக்கத்தில் கூர்மையான அம்புகளுள்ளதாய் காணப் படுகிறதே, அந்தத் தூணீரம் வீம சேனனுடையது. அந்த அம்புகள் மலைகளையும் பிளக்கும். வெகு கொடுமையான பாணங்களோடு கூடிய அவ்விரண்டு அம்புப் புட்டில்களும், அர்ச்சுனனுடைய அம்புப் புட்டில்கள், பூரண சந்திரனைப் போலே பிரகாசியாநின்ற கத்தி வீமனுடையது. ஆச்சரியப்படும்படியான மற்றொரு கத்தி அர்ச்சுன னுடையது. அந்தக் கதாயுதம் வீமசேனனுடையது. இதினாலே எத்தனையோ மகாவீரரைச் சயித் திருக்கின்றான். இதைக் கையி லேந்திய அவனுக்கு காலதண்டமேந்தி வரும் இயமனும் நிக ரல்ல. அந்த கதாயுதத்தின் பக்கத்தில் விளங்குகின்ற ஈட்டியைப்பார்! சத்துருக்களின் உயிரைக் கவர வாயைத் திறந்து கொண் டிருக்கிறது போல் காணப்படுகிறதே, அது அர்ச்சுனனுடையது. அதின் சமீபத்தி லிருக்கிறதே ஒரு ஈட்டி அதைப்பார்! சூரிய கிரணத்துக்குச் சமானமாகி வெகு தீக்ஷணமாகியு மிருக்கிற தல்லவோ? அது சகாதேவனது. அதனாலே சகாதேவன் வெகு சூரரை வென் றிருக்கிறான். அதைப் பிடித்து அவன் யுத்தத்துக்குப் போனால் வச்சிராயுத முள்ள தேவேந்திரனும் எதிர்நிற்க மாட்டான்.

பார்த்தாயோ ராஜகுமாரா! இவைக ளெல்லாம் பாண்டவர்களின் திவ்யாயுதங்க ளென் றறி. இவைகளுள் காண்டீவ மென்னும் சிறந்த வில்லை யெடுத்து என் கையிற் கொடு. அவைகளைக் கண்டு சர்ப்பங்களைப் போல் நினைத்து நீ யஞ்சாதே. பாண்டவர்களுடைய மகிமையினாலே அவை அன்னியருக்குப் பயங்காரமாய்த் தோற்றுகின்றன என்று சொல்லக் கேட்டும் மூடனாகிய அந்த உத்தரன் இவன் அர்ச்சுன னென்று அறிய மாட்டாமல் மறுபடியும் அவனைப் பார்த்துச் சொல்லுகிறான்.

ஓ பிருகன்னளாய்! நான் கேட்ட வினாக்களுக்குள் முக்கியமாகிய வினாவுக்கு நீ விடை தாராம லிருக்கிறாய். அந்த மகானுபாவராகிய பாண்டவர்களுக்கு நான் உடன் பிறந்தாள் மகனாகவேண்டும். ஆகையால் அவர்களுடைய சரித்திரத்தைக் கேட்க மிக விருப்பமுற்றிருக்கிறேன். அன்றியும், அவர்கள் மகா தருமசாலிகள், வெகு புகழ் பெற்றவர்கள், அவர்களில் மூத்தவராகிய யுதிஷ்டிரர் சகல கலைகளையும், சகல தருமங்களையு முணர்ந்தவர், தருமத்தை விடாதவர், சத்திய சந்தர்; எல்லா அரசர்களுக்கும் தலைவராக முடிசூட்டப் பட்டவர், சகல லக்ஷணங்களும் பொருந்தியவர். அப்படிப்பட்ட மகாபுருஷன் இப்போது எங்கே இருக்கிறார்? வீமன் முதலிய சுத்தவீரர் நால்வரும் எங்கே யிருக்கிறார்கள்? கற்புடைய மங்கையர்க் கரசியாகிய அந்தத் துரோபதி எங்கே யிருக்கிறாள்? அவர்கள் இந்த ஆயுதங்களை இங்கே வைக்க வேண்டிய தென்ன? இது உனக்குத் தெரிந்த வித மென்ன? இதை எனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்ட விராட குமாரனை நோக்கி அர்ச்சுனன் புன் சிரிப்பு கொண்டவனாகி சொல்ல ஆரம்பித்தான்:

கேளப்பா உத்தரகுமாரா? இனி யுனக்கு ஒளித்துச் சொல்வதிற் பயனில்லை. ஆதலால் மெய்யான செய்தி சொல்கிறேன் கேள். நீ எவனை சகலமு மறிந்தவ னென்றும் மகா தரும சீலனென்றும் சொன்னாயோ, அந்த யுதிஷ்டிர மகாராஜனே கங்கப் பட்ட னென்று நாமதேயம் தரித்து உன் தகப்பனாரோடு சூதாடிக்கொண் டிருக்கிறார். வல்ல னென்று பேர் வைத்துக்கொண்டு உங்களுக்கு உருசியான கறிகளும், பாயசங்களும், பணியாரங்களும்; இன்னும் பல் வகை உணவுகளும் சமைத்துப்போட்டுக்கொண் டிருக்கிறவனே வீமசேனன். குதிரைகளுக்கு அதிபதியா யிருக்கிற தந்திரிபால னென்கிறவனே நகுலன். மாடுகளுக்கு அதிபதியா யிருக்கிற தாமக்கிரந்தி என்பவன்தான் சகாதேவன். சைரந்திரியே துரோபதி. அவளுக்காக கீசகனையும், அவன் தம்பிமாரையும், வீமசேனனே சங்கரித்தான். நான்தான் அர்ச்சுனன். நான் இவ்வளவு காலம் குறிப்பாய்ச் சொல்லிய பேச்சினாலும், என் தைரிய கம்பீரங்களினாலும், நீ அறியமாட்டாமற் போனாய். சமயம் வந்தபடியினாலே ஒளியாமற் சொன்னே னென்று சொல்லிய பேச்சைக் கேட்டு உத்தர குமாரன் திகைத்திட்டு ஒன்றுந் தோற்றாமல் சித்திரப் பதுமைபோல் சற்று நேரம் நின்று அச்சத்தினால் மூடிக்கொள்ளாநின்ற கண்களைத் திறந்து அர்ச்சுனனை உற்று நோக்கி ஒரு பேச்சு சொன்னான்.

ஓய் ராஜகுமாரரே, நீர் சொல்லிய பேச்சைக் கேட்க எனக்கு வெகு ஆச்சரியமா யிருக்கின்றது. நீர் இவ்வளவு சொல்லியும், எனக்கு நம்பிக்கை வர வில்லை, நீரே அர்ச்சுன ஞகில் உம்மை மற்றொரு வினு கேட்கிறேன். அதற்கு விடை தரவேண்டும். அதென்னவென்றால் அர்ச்சுனனுக்குப் பத்து நாமதேயங்க ளுண் டல்லவோ? அவை இன்னவென்றும், இன்ன காரணங்களினால் வந்தன வென்றும், நீர் சொல்லவேண்டு மென் றுரைக்கக் கேட்டு அர்ச்சுனன் சொல்லுகிறான்.

கேளாய் உத்தரகுமாரா? எனக்கு சூலபாணியாகிய பரமசிவனுடைய அனுக்கிரகத்தினாலே பத்து நாமதேயங்கள் கிடைத்திருக்கின்றன. அவையாவன, அர்ச்சுனன், பற்குனன், பார்த்தன், கிரீடி, சுவேதவாகனன், பீபச்சு, விஜயன், ஜிஷ்ணு, சவ்வியசாசி, தனஞ்சயன், என்பவைகளேயாம்; அவைகளுள் முன்பு சரீர பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும், கார்த்த வீரியனுக்கு ஒத்திருக்கிறபடியினாலே அவன் பேராகிய அர்ச்சுனனென்கிற சொல் எனக்கும் பே ராயிற்று. உத்தர நக்ஷத்திரத்திற் பிறந்தது பற்றி பற்குனனென்று பேர் பெற்றேன். என் தாயாராகிய குந்திக்குப் பிரதை என்று பேருண்டு அவள் வயற்றிற் பிறந்ததனாலே பார்த்தனென்கிற பேர் உண்டாயிற்று. தேவேந்திரன் கொடுத்த திவ்யமாகிய பொற்கிரீடத்தை யுத்தத்தில் தரிக்கின்றே னானதுபற்றி கிரீடியென்கிற பேர் பெற்றேன். கைலாசப் பருவதம் போன்ற ரூபமுள்ள வெள்ளைக் குதிரைகள் என்து தேரிற் கட்டப்பட் டிருக்கு மாதலால் சுவேத வாகனனென நாமதேய மடைந்தேன். யுத்தத்திற் சென்றால் அஞ்சாமல் யாவரும் அஞ்சும்படி நிற்றலாலே பீபச்சு என்று நாமதேய மடைந்தேன். காலகேயர் முதலிய மகா சூரரையும் சகாய மில்லாமல் ஜயித்தது பற்றி விஜயனென்கிற நாமதேயம் வந்தது. எனது தமையனார் தேகத்தில் யுத்த மில்லாத காலத்தில் உதிரங் காணும்படி யாராகிலுஞ் செய்தக்கால் அவனை உயிரோடு விடுகிற தில்லையென்று பிரதிக்கினை செய் திருக்கிறே னாகையால் ஜிஷ்ணு வென்று பேர் பெற்றேன். வலக் கையாலே எய்வதுபோல் இடக் கையாலும் அம்புகளை எய்வே னாகையால் சவ்வியசாசி யென்கிற பேருண்டாயிற்று. உத்தர குருவரையிற் சென்று தேவரையுங் கூட வென்று கப்பம் வாங்கிவந்தபடியினாலே தனஞ்சயனென்கிற நாமதேய மடைந்தேன்; கேளாய் உத்தரகுமாரா, இதுவு மன்றி முன்பு நான் காண்டவ வனத்தை எரிப்பித்தபோது முப்பத்து முக்கோடி தேவ

தைகளோடு சண்டை செய்து அவர்களா லடிபட்டுத் தரையில் விழுந்திருக்க திரிமூர்த்திகளும் என்னிடத்துக்கு வந்து மூர்ச்சை தெளிவித்து சமீபத்தில் ஸ்ரீகிருஷ்ண னிருக்க அவனைப்போல் நீல நிறமுள்ள எனக்கும் கிருஷ்ண னென்கிற நாமதேயத்தைக் கொடுத்தார்கள். ஆக பதினொரு நாமதேயங்கள் தேவர்களின் அநுக்கிரகத்தினாலே எனக்கு வந்தன. இவ்வகையாய் மும்மூர்த்திகளும் என்னை மூர்ச்சை தெளிவித்து கிருஷ்ண னென்கிற நாமதேய மளித்து இன்னும் வேண்டுவனவாகிய வரங்களைக் கே ளென்று கட்டளை யிட்டார்கள். அப்படியே நான் அவர்களைக் கைகூப்பி சுவாமிகளே, உங்களுடைய அஸ்திரங்களும் மற்று முள்ள அஸ்திரங்களும் அடியேனுக்குத் தோற்றும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டு மென்று கேட்டேன். அப்படியே அவர்கள் அனுக்கிரகஞ் செய்தார்கள். அவ் வனுக்கிரகத்தினாலே நிவாத கவசனையும் மூன்று கோடி தானவரையும் சங்கரித்து தேவேந்திரனுக்குச் சந்தோஷ முண்டாக்கினேன். அதனாலே இந்திரன் சந்தோஷித்து சிறந்ததாகிய ஒரு கிரீடத்தைக் கொடுத்தான். அதைத் தரித்து மிகுந்த தேஜசுடையனாகி நடுக் கடலில் இரணியபுரத்தி லிருந்த அறுபதினாயிரம் கந்தருவரைச் சங்கரித்து அவர் கையி லகப்பட்ட துரியோதனனை விடுவித்தேன். அக்காலத்தில் அந்தக் கந்தருவருக்கு உப பலமாக வந்த பதினாயிரம் கந்தருவரையும் யா னொருவனாகவே வெற்றி கொண்டேன். தேவர்கள் செய்த அனுக்கிரக பலத்தினாலே எத்தனை சத்துருக்க ளெதிர்த்தாலும் பயமில்லை. இது எனது சரித்திரம். எறக்குறையச் சுருக்கமாகச் சொன்னேன். இதனாலே நீ என்னை அர்ச்சுன னென் றறிந்து அச்சத்தை விட்டு தயிரியமாய் கவுரவரோடு யுத்தஞ் செய்யும்படி முயலாநின்ற எனக்குச் சாரத்தியஞ் செய். உன்னைச் சத்துருக்கள் கையி லகப்படும்படி யான் பார்க்கமாட்டேன். இந்தத் துரோணர், கிருபர், பீஷ்மர், அசுவத்தாமா, கர்ணன், துரியோதனன் முதலான எல்லாச் சூரரையும், அவர்களுடைய நால் வகைச் சேனைகளையும் ஒரு முகூர்த்தத்தினுள்ளேயே ஜயித்து உனது பசு மந்தையைத் திருப்பிக்கொண்டு வருகிறேன். நீ பின்னிடாமல் நில் என்று அர்ச்சுனன் சொல்லக் கேட்டு விராடராஜன் மகன் வெகு களிப் படைந்து அர்ச்சுனனுக்குச் சாஷ்டாங்கமாகத் தெண்ட னிட்டு கைகூப்பிச் சொல்லுகிறான்.

ஓய், வீரசிகாமணியே? இன்று எனது பிறவி பயன்பட்டது. யான் பெற்ற பேறு யார் பெறுவார்? உல கெங்கணு மேறிய மகா கீர்த்தியுள்ள உமது அனுக்கிரகத்துக்குப் பாத்திர னாகும்படி யான்

என்ன தவஞ் செய்தேனோ? சவுரிய தயிரிய காம்பீரிய சாதுரியாதி மகா குணங்களுக்கெல்லாம் நிதிபோன்ற உங்களுக்கு அஞ்ஞாத வாசஞ் செய்யவேண்டி அற்பராகிய எங்கள் கீழிருக்கும்படி நேரிட்டதற்கு மிகவும் விசனப்படுகிறேன். குலத்தினாலும், குணத்தினாலும், ஒழுக்கத்தினாலும், புகழினாலும், பெருமையினாலும், சிறந்த உங்கள் விஷயத்தில் அறியாமையாலே மூடராகிய நாங்கள் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்தருளவேண்டும். அன்றியும் நீர் எனக்கு நல்லம்மானுகையால் எவ்வளவும் மனக் கலக்க முறாமல் எங்களைக் காத்தருளவேண்டுமென்று கோருகிறேன். அடியேன் கவுரவரை ஜயிக்கிறேனென்று அறியாமையாலே சொன்ன பிழையையும் பொறுத்து அவர்களை ஜயித்து பசு மந்தைகளைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். என் மானத்தைக் காக்கவேண்டும். யானெங்கே? மகா வீரராகிய கவுரவரெங்கே? அவருக்கும் எனக்கும் சிங்கத்துக்கும் நரிக்குமுள்ள தார தம்மிய மிருக்கிறது. எனக்கு நெடு நாளாய் உமக்குச் சாரத்தியஞ் செய்ய வேண்டுமென்கிற கோரிக்கை இருந்தது. அது இன்று தெய்வச் செயலாய் நிறைவேறும்படி யாயிற்று. ஆதலால் நான் வெகு சந்தோஷத்தோடு உமக்குச் சாரத்தியஞ் செய்கிறேன் என்று சொல்லிய உத்தரனை அர்ச்சுனன் மிகவும் சிலாகித்துச் சொல்லுகிறான்.

கேளாய் ராஜ குமாரா, இந்தக் கவுரவ சேனையி லிருக்கிற இத்தனை சூரரும் எனது பாண வேகத்தைச் சகிக்க மாட்டாமல் ஓடுவார்களே யன்றி என்னை வெல்ல மாட்டார்கள். இதை நீ நம்பு. சீக்கிரமாய் மரத்தின்மீதிருக்கிற எனது காண்டீவத்தையும், கத்தியையும், ஈட்டியையும், தூணீரங்களையும் கொண்டுவந்து இந்தத் தேரில் வைத்து குதிரைகளை நடத்து. ஓர் நொடியில் இவர்களின் முடிகள் தரையில் விழச் செய்கிறேன் என்று சொல்லக் கேட்டு உத்தரன் ஓய் மகா ராஜாவே, உமக்கு நபும்சக வேஷம் என் வந்தது? அதைச் சொல்ல வேண்டும் என்று கேட்க அர்ச்சுனன் சொல்லத் தொடங்கினான்.

கேளாய் ராஜ குமாரா, முன்பு நானொரு காரணத்தினாலே தேவலோகத்தில் வாசஞ் செய்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு நாள் சபையில் ஊருவசி நாட்டியஞ் செய்தாள். அது சிங்கார சாஸ்திரத்தின்படி வெகு அழகா யிருந்ததுபற்றி யான் கண் கொட்டாமல் உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தேன். அது கண்டு தேவேந்தி

ரன் அவளை என்னிடத்துக்கு அனுப்பினான். அவள் ஏகாந்தத்தில்
என்னிடத்திற்கு வந்து தன்னை யங்கீகரிக்கும்படி வேண்டினாள். அ
தற்கு நான் பிரமசரிய விருதத்தி லிருக்கிறவ னாதலாலும் நீ என் பி
தாவாகிய இந்திரனுக்குப் பெண்டாட்டியா யிருப்பதனால் எனக்கு
மாதா வாயினா யென்பதனாலும், உன்னை யான் சேரே னென்று சொ
ல்லி அவளுக்கு நமஸ்காரஞ் செய்து அபிவாதனமுஞ் செய்தேன்.
அதிகண்டு அவள் கோபித்து நீ நபும்சகனாய்ப் போகக்கடவா யெ
ன்று சபித்தாள். இச்செய்தி இந்திரன் கேள்வியுற்று என்னை யழை
த்து நீ யஞ்சாதே. அவள் சபித்ததும் உனக்கு ஒரு காலத்தி லுபயோ
கமாகவே இருக்கு மென்று சொன்னான், அந்தப்படி அந்தச் சாபம்
இந்த அஞ்ஞாத வாசத்துக்குத் துணையா யிருந்து ஒழிந்தது. இனி எ
ன்னை நபும்சக னென் றெண்ணக் கூடாது என்று சொல்லியபின்
உத்தரன் சொல்லுகிறான்.

வாரீர் மகா ராஜாவே, நீர் என்னிடத்தில் உள் ளன்புடையவரா
ய் உமது ரகசியமாகிய சரித்திரத்தையும் எனக்குச் சொன்னபடியினா
லே எனக்கு மிகுந்த நம்பிக்கை பிறந்து பயம் நீங்கிற்று. இனி திக்குப்
பாலகருக்கு மஞ்சேன் என்று சொல்லி ஆயுதங்களை யெடுத்துக்கொ
ண்டுவந்து தேரில் வைத்துக் குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்து
விரைவாய்த் தேரை நடத்தச் சித்தமானான். அப்போது அர்ச்சுனன்
தேரி னின்று மிரங்கி தேவர்களைக் குறித்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்
செய்து பின்னலை யவிழ்த்து மயிர்களை வெள்ளை வஸ்திரத்தினாலே
சேர்த்துக் கட்டி உடைகளையும் ஆண்மைக் குரியபடி கட்டிக்கொ
ண்டு தேரி லேறி காண்டீவத்தை நீண்ட புஜத்தினால் தாங்கி நாணே
ற்றி நாணோசை கொண்டான். அவ் வோசையினாலே ஊழிகாலத்
திடி முழக்கங் கேட்டாற் போல் யாவரும் மனங் கலங்கி வெருவும்
படி யாயிற்று. அப்படிப்பட்ட நா ணோசையைக் கேட்டு சவுரவர்,
கருடனுடைய மிடற்றோசை கேட்ட சர்ப்பங்கள் போல் நடு நடுங்
கி நின்றார்கள். இப்படி யிருக்க அர்ச்சுனன் தனது ரத முதலிய
வைகள் இப்போ திவ்விடத்தில் வரவேண்டு மென்று அக்கினி பக
வானை மனதில் தியானித்து துதிக்க அந்த ரத முதலானவை எதி
ரே தோற்றின. அது கண்டு பார்த்தன் மன மகிழ்ந்து சிங்கக் கொடி
யுள்ள உத்தரன் தேரினின்று மிறங்கி தன் அண்ணன் தம்பிமார்களு
டைய ஆயுதங்களை யெல்லாம் முன்போலவே கட்டி வன்னிமரத்தி
ன்மீது வைத்து அந்த மரத்தைப் பிரதக்ஷணஞ் செய்து தனது கா
ண்டீவ முதலான ஆயுதங்களோடு தன் தேரி லேறி மேற்கு முகமாய்

ப் புறப்பட்டான். புறப்பட்டு சந்திர மண்டலம்போல் விளங்கும்படியான தேவதத்த மென்கிற சங்கை யெடுத் தூதினான். ஊதவே அந்தத் தொனியினாலும், காண்டீவ தொனியினாலும், கொடியி லிருக்கிற வானரத்தின் அட்டகாசத் தொனியினாலும், பத்து திசைகளும் செவிடு பட்டன. உத்தர குமாரனும் மூர்ச்சை யடைந்தான். அது கண்டு அர்ச்சுனன் அவனுக்கு மூர்ச்சை தெளிவித்து தேறுதலை வெகுவாய்ச் சொல்ல உத்தரகுமாரனும் மூர்ச்சை தெளிந்தவனாகி பாண்டவ வீரனைப் பார்த்து, ஓய் மகாராஜாவே, நான் யானைகள் குதிரைகள் இவைகளின் தொனிகளையும் பேரிகை முதலிய வாத்தியங்களின் சத்தத்தையும் வெகுவாய் கேட் டிருக்கிறேன். ஆகிலும் இப்படிப்பட்ட சத்தத்தை யொரு காலத்திலும் கேட்ட தில்லை. இது உலகத்தைப் பிளக்கிறாப்போ லிருக்கிறதே! அன்றியும் தேர்களுக்கு அடையாளமாகக் கொடியி லொரு மிருக முதலானவை இருக்கிற துண்டு. ஆனாலும் உமது துவசத்தின் வானரத்தைப்போல் அட்டகாசஞ் செய்யக் கண்ட தில்லை. இதைக்கண்டு கௌரவரோ நடுநடுங்கும்போது நா னெப்படி நடுங்காம லிருப்பேன்? உமது நாணோசையினாலே என் செவிகளுக்கு மற்றொன்றுங் கேட்கவில்லை. ஆகையால் இத்தனை வீராதி வீரராகிய உமக்கு நானெப்படி சாரத்தியஞ் செய்ய மாட்டுவேன்? என்று சொல்லி வெருள வெருள விழித்து காண்டீவத்தையும், தேரையும், அர்ச்சுனனது தோளையும் பார்க்காநின்ற விராட குமாரனை, அர்ச்சுனன் சமாதானப் படுத்திச் சொல்லுகிறான்.

கேளாய், உத்தரா, நீ ஒன்றுக்கு மஞ்சவேண்டாம். எனது வீரத்தன்மை சத்துருக்களுக்குப் பயங்கரமாக இருக்குமேயன்றி மித்திரருக்கு அங்ஙன மிராது. ஆதலால் நீ தைரியமாய் தேரின்மீ தூட்கார்ந்து சாரத்தியஞ் செய். நான் சத்துருக்களை யொரு கொடியில் ஜயிக்கிறேன். பகைவர் மன[illegible] பிளக்கும்படி அடிக்கடிக்குச் சங் கெடுத்தூதுவேன், நாணோ[illegible]ளுவேன், சிங்கநாதஞ் செய்வேன், இவைகளுக்கு நீ யஞ்[illegible]களை உறுதியாய்ப் பிடித்து நடத்து என்று சொல்ல[illegible]ங்கை யெடுத்துப் பூரித்தான். அந்தத் தொனி கேட்க பி[illegible]னர், முதலானோர் சரீரங்களில் மயிர் சிலிர்த்துக் கொண்ட[illegible] அப்போது அர்ச்சுனன் சங்கைப் பூரித்தவுடனே வில்லை நாணோசைகொண்டு தன் தேருக்குக் காவலா யிருக்கின்ற பூதங்களை யட்டகாசஞ் செய்யும்படி யேவினான். ஏவவே அதுகளும் அட்டகாசஞ் செய்ததுகள். இவ்வகையாய் சங்கத் தொனியும், தேரின் தொனியும், நாணின் தொனியும், அட்டகாசத் தொ

னியும், கலந்து எழும்பக் கேட்டு துரோணாசாரியர் துரியோதனனை யழைத்துச் சொல்லுகிறார்.

வாராய் துரியோதனா? இதோ கேட்கிற சங்கநாத சிங்கநாத முதலியவற்றை நிதானித்து பார்க்கும்போது அர்ச்சுனன் வருகிறானென்று நன்றாய்த் தெரியவருகிறது. ஆதலால் நாமெல்லாம் வெகு ஜாக்கிரத்தையா யிருக்க வேண்டும். ஏமாறலாகாது. அதற்காக நமது சேனைகளை மூன்று பிரிவாய்ப் பிரித்து பசுக்களைக் காக்க ஒரு பிரிவும் போரிட ஒரு பிரிவும் யாவையும் சுற்றிவந்து காக்க ஒரு பிரிவுமாய் வைக்க வேண்டும். அதில் சுற்றிலும் காக்க வைக்கப்படும் பிரிவில் சுத்த வீரரே இருக்க வேண்டும். இதோ பார் நமக்கு அநேக அபசகுனங்கள் காணப் படுகின்றன. இதனாலே வெகு ஜனங்கள் யுத்தத்தில் மடியுமென்று தோற்றுகிறது என்று ஆசாரியர் சொல்லக் கேட்டு துரியோதனன் மனதில் திகிலடைந்து பீஷ்மர் பக்கத்திற் சென்று சொல்லுகிறான்.

வாரீர் குருபிதாமகரே, இப்போது யுத்தத்துக்கு அர்ச்சுனன் வருகிறதாய் ஆசாரியர் சொல்லுகிறார். நிதானித்தால் நாமும் அப்படியே நினைக்க வேண்டியதா யிருக்கிறது. இந்த வேளையில் எனக்குத் தோற்றுகிற தென்ன வென்றால் உங்கள் முன்னிலையில் பிரதிக்கினை செய்தபடிக்குப் பாண்டவர் அஞ்ஞாதவாசத்தை நிறைவேற்றாமலே வெளியில் வந்தார்களல்லவா? நாமோ அவர்களைக் கண்டுபிடிக்கத்தானே இவ்விடம் வந்தோம். தெய்வ கதியாய் அப்படியே யானதனாலே நமது அபீஷ்டமே நிறைவேறிற்று. ஆதலால் நாம் வீணாய் யுத்தஞ்செய்யவேண்டுவ தென்ன? பாரும் பீஷ்மரே, முன்னம் நமது தூதர் இவ்விட மெல்லாம் தேடியும், அவர்களைக் கண்டுபிடிக்க மாட்டாமற் போனார்களே! பாண்டவர் சகாய மில்லாவிட்டால் மகா சூரனாகிய சுசர்மாவை விராடன் வெல்லமாட்டுவானா? அந்த யுத்தம் இராக்காலத்தில் நடந்தபடியினாலே பாண்டவரைக் கண்டுபிடிக்கக் கூடாமற்போயிற்று. இப்போதும் எனக்கொரு சந்தேக மிருக்கி[illegible]. இதோ வருகிறவன் விராட ராஜனோ? அவன் மக[illegible]வேறொரு வீரனோ? பாண்டவர் பின்னாலே வருகிறார்களோ! [illegible]யகளிலொன்றும் தோறவில்லை. அல்லது அர்ச்சுன னொருவனே வருகிறானோ? இதை நிச்சயமா யறியவேண்டும். என் மனதி லிருக்கிற நிச்சயத்தைச் சொல்லுகிறேன் கேளும். முப்பத்து முக்கோடி தேவதைகளோடு கூடி தேவேந்திரன் வந்தாலும் அவனையும் யுத்த களத்தில் தள்ளாமல் பட்டணத்துக்குப் போகிற தில்லை. மஹாவீரராகிய நீர், துரோணர், முதலானவர்கள்

சகாயம் பெற்றும் சுயமே மஹாவீரனுயு மிருக்கின்ற யான் இந்த அர்ச்சுன னொருவனுக்கு அஞ்சும்படி யிருக்குமோ? இது தெரியாமல் நீங்கள் சத்துருவைத் துதிக்கிறீர்கள். நாம் தேசாந்தரத்தில் வெகு சேனைகளை கொண்டுவந்து பின் னிடைகிற தென்பது மிகவு மிழிவுக்குக் காரணமாகும். வீருடைய தீரத்தைத் துதித்துச் சொல்ல வேண்டுமாலும் கேட்கவேண்டு மாலும் பட்டணத்தில் போசனஞ் செய்து உப்பரிகைகளின்மீது உல்லாசமா யிருக்கும் போது சொல்லவேண்டுமே யன்றி அஸ்திரங்களையும் சஸ்திரங்களையும் ஒன்றின்மே லொன்ருய்ப் பிரயோகிக்க வேண்டியபோது சொல்ல லாகாது. இப்போது சேனைக்கு உச்சாக முண்டாகத் தக்கதாய் சொல்வது நியாயமே யல்லது பக்ஷபாதத்தினுல் பகைவனைப் புகழ்தல் நியாய மல்ல, அதனுலே மஹா சூரருக்கும் சவுரியம் மழுங்கிப் போகும். கேளீர் பீஷ்மரே, யுத்த காலத்தில் சத்துருவைப் புகழ்வதும் போசன காலத்தில் அன்னத்தின் குண தோஷங்களைச் சொல்வதும் பிராமணருடைய இயல்பான குணம். ஆதலால் அவர்களை யோசனை கேட்பது தகுதி யல்ல. நீரு மவரோடு சேர்ந்தவர்தா னென்று சொல்லி பின்பு கர்ணனைப் பார்த்துச் சொல்ல வாரம்பித்தான். வாராய் கர்ணு? துரோணர் முதலானோ ரனைவரும் அர்ச்சுனனையே புகழ்கிறார்கள். ஆனதால் இவர்களைக்கொண்டு நமது காரியம் நிறைவேருது. நீயோ அசகாய சூரன். இப்போது எதிர்த்து வராநின்ற சத்துருவை வென்று இந்தப் பசு மந்தைகளை நமது நகரத்திற் கோட்டிக்கொண்டு போக முயல்வாயாக. இங்ஙனஞ் செய்யாவிடில் நமக்கு நெடிய அபகீர்த்தி உண்டாகும். சந்தேகமில்லை யென்று துரியோதனன் சொல்லிய பேச்சைக் கேட்டு கர்ணன் சொல்லுகிறுன். கேளாய் துரியோதனு? இந்த அர்ச்சுனனுக்கு துரோணர் முதலானுர் பயப்படுகிருர் போல் காணுகிறது. உனக்கும் அங்ஙனமே அச்ச முண்டா யிருக்கிறது போல் காண்கிறது. ஆகட்டும் நீங்க ளெல்லா மிப்போது சண்டைக்கு வர வேண்டாம். பசு மந்தைகளை யோட்டிக்கொண்டு நகரம் போய்ச் சேருங்கள். அல்லது இவ்விடத்திலேயே தூரத்தில் தேர்கள்மீ திருந்து யான் செய்யும் யுத்தத்தின் வேடிக்கை பாருங்கள். இப்பூமண்டல மெல்லாம் இருபத்தோர் தலைமுறை அரசர் குலந் தரிக்க வொட்டமற் கோடாரியினுற் றுணித்திட்ட சுத்த வீராகிய பரசுராமர் வந்தாலும் மலைகளின் சிறகுகளை வச்சிரத்தினுற் றுணித்திட்ட தேவராஜன் வந்தாலும் சக்கரத்தினுல் அசுரர் குலம் நீறுபடச்செய்த கண்ணன் வந்தாலும் முன் வைத்த காலைப் பின் வைக்காமற் போரிட்டு வெல்லமாட்டுவேன். அப்படி யிருக்க இவ் வர்ச்சுனனை வெல்வது அருமை யல்

ல. ஆனால் அவன் நிவாதகவசகாலகேயர்களை ஜயித்தா னென்கிற
புகழை வகிக்கின்றான். அதனாலே யா னஞ்சேன். முன்னமே இவ்வர்
ச்சுனனுக்கு அஞ்சாத யான் பதின் மூன் றாண்டளவில் காய் கிழங்கு
களைத் தின்று காட்டி லலைந்து திரிந்து இளைத் திருக்குங் காலத்தி
லஞ்சுவேனோ! ஒரு முகூர்த்தத்தி னுள்ளே கழுகின் சிறகு கட்டி
பொற் பட்டங்க ளணிந்த கூர்மையாகிய எனது பல வகை யம்புக
ளும் ஆகாசத்தை நிறைத்து மின்மினிகள் போலவும் பறவைகள்
போலவும் காணப்படுவதையும், எனது நாணோசை கேட்க மூவுலக
த்தாரும் ஊழிகாலத் திடி முழக்க மென மயங்கி நடுநடுங்குவதையும்,
நான்கு வெள்ளைக் குதிரைகளும் சாரதியும் வானரக்கொடியும் தே
ரும் அந்தக் காக்காநின்ற பூதங்களும் எனது கணைகளுக் கிலக்கா
கிச் சிதைந்து மூலைக்குமூலை போய்விழ கையிற் பிடித்த வில்லும்
தேகத்திற் பூண்ட கவசமும் தோளி லணிந்த அம்புப் புட்டிலும் சூர
ணமாக்கப்பட்டு விழ தரையில் வீழ்ந்து வெருள வெருள விழித்துக்
கொண்டு உடம் பெல்லாம் புளக முற்று நடுநடுங்க அர்ச்சுனன் ப
ரிதவிப்பதையும், காண்பீர்கள். பரசுராம மாமுனியின் மாணாக்கனாகி
ய எனது அஸ்திரங்களின் வலிமை பொறுக்க யார் தாம்! ஓ! துரி
யோதன மகாராஜனே, நெடு நாளாய் உன் மனதிற் குடிகொண் டிரு
ந்த விசனம் இன்றே நீங்கும்படியான காலம் வந்து விட்டது என்
றிப்படி வெகுவாய் தன்னைப் புகழ்ந்து சொல்லிய கர்ணன் பேச்
சைக் கேட்டு நீதி யறிந்தவராகிய கிருபாசாரியர் கூற லுற்றார். வா
ராய் கர்ணா, நீ சொல்லிய பேச்சினால் உன தறியாமையே வெளிப்ப
டுத்தப்பட்டது. எவன் கால தேசங்களையும் தன் பலம் சத்துருபலங்
களையும் யோசியாமல் சாகசமாய் யுத்தத்தில் செல்லுகிறானோ அ
வன் தடையின்றி சத்துருவின் கையி லகப்படுவான்; நீயும் அப்படி
யே யத்தினப் படுகிறாய். துரோபதியின் சுயம்வரத்தில் அர்ச்சுன
னொருவனாகவே கவுரவரைத் துரத்தி யடித்தபோதும், அரணியத்தி
ல் இந்தத் துரியோதனன் சித்திரசேனன் கையி லகப்பட்டுக்கொ
ண்டபோதும், இன்னும் கவுரவருக்குப் பல வாபத்துக்கள் நேரிட்ட
போதும், உன்து சவுரிய மெங்கே போயிருந்ததோ தெரியவில்லை! நீ
எப்போ தாகிலும் அர்ச்சுனனோடாவது அவனோடு போர்செய்து
தோற்றவரோடாவது போர் செய் திருந்தால் உனக்கு அர்ச்னனு
டைய மகிமை தெரிந்திருக்கும். அவனுடைய மகிமைகளிற் சில
சொல்லுகின்றேன் கேள். அதாவது, சுபத்திரைக்காகப் பலராமன்
முதலிய யாதவரை யெல்லாம் அலக்ஷியஞ் செய்து வெற்றி
கொண்டான். முப்பத்து மூன்று கோடி தேவரோடுகூட காண்

டவ வனத்தைக் காக்கும்பொருட்டு வந்த தேவராஜனைப் புறங்காட்டி யோடச் செய்தான். சூலபாணியாகிய முக்கண் மூர்த்தியையும் மண்டை பிளக்க வடித்து பாசுபதாஸ்திரம் பெற்றான். இந்திரனாலும் வெல்லப்படாத நிவாதகவச காலகேயரை ஒருவனாகவே சங்கரித்தான். இப்படிக்கு அவனுடைய சாமர்த்தியங்களில் ஒவ்வொன்றையும் நினைக்க ஆச்சரியமா யிருக்கின்றது. இப்படிப்பட்ட அர்ச்சுனனை நா னொருவனாகவே ஜயிக்கிறே னென்று நீ சொல்லிய பேச்சைக் கேட்க அதினு மாச்சரியமா யிருக்கின்றது! கேளப்பா கர்ண, கோபித் திருக்கிற கிர்ஷ்ண சர்ப்பத்தின் வாயிற் கைகொடுத்து அதின் விஷப் பல்லைப் பிடுங்க வாகிலும் பிடுங்கலாம். காட்டிற் றிரிகின்ற மதயானையின்மீது மாவெட்டி யில்லாமல் ஏறி நடாத்தினாலும் நடாத்தலாம். ஜொலிக்கின்ற கனலை எடுத்து விழுங்கினாலும் விழுங்கலாம். அர்ச்சுனனைப் போரில் வெல்வது கூடாது. ஆதலால் நீபாறுங்கல்லைக் கழுத்திற் கட்டிக்கொண்டு கடலை நீந்த முயலாதே. பீஷ்மர், துரோணர், முதலானோரைக் காட்டிலும் நீ சூர னல்ல. அர்ச்சுனனோ அசகாய சூர னாதலால் இத்தனை கவுரவரையும் ஒருவனாகவே எதிர்த்து வருகிறான். அது கண்டு புலியைப் பார்த்துப் பூனை சூடிக் கொண்டதுபோல் நீ யெதிர்த்துப் போவது தகுதி யல்ல. ஆதலால் நா மித்தனை பேரும் ஒன்றாய்ச் சேர்ந்து பராக்கின்றி யுத்தஞ் செய்தோ மாகில் ஊழின்படி வெற்றியோ தோல்வியோ வந்தது வரட்டும் என்று கிருபர் சொல்லக் கேட்டு கர்ணன் கோப மடைந்தவனாகி அவரை நோக்கி ஓய் கிருபாசாரியரே, உங்களுக் கெல்லாம் அர்ச்சுனனிடத்தினின்று மிகுந்த பய முண்டா யிருக்கிறது. ஆதலாலே, அவனை புகழ்ந்து என்து மன வலியைக் கெடுக்கிறீர்கள். ஆகிலும் யான் அதற் கஞ்சுவ தில்லை. நீர் சுகமாய் யுத்தத்தை விட்டு உமது ஜாதித்தொழிலாகிய யாசகத்தையும் பிராமணார்த்தம் சாப்பிடுவதையுஞ் செய்யப் போம். யா னிருந்து அர்ச்சுனன் பிரயோகிக்கும் சகல அஸ்திரங்களையும் எதி ரஸ்திரங்களால் தடுத்து வெற்றிகொண்டு வருகிறேன். எனது புஜ பலத்தையும் அஸ்திர பலத்தையும் நீ ரறிய மாட்டீர். அருமையான பார்க்கவாஸ்திரத்தை யான் பிரயோகித்தால் இப்பூமண்டல மெல்லாம் ஓர் கணப்பொழுதிற் சாம்பலாய்க் குவியும். அப்படி யிருக்க இவ் வர்ச்சுனனை யான் வெல்வது வருத்தமோ? தெரியாமல் தோற்றினபடி யெல்லாம் பேசுகிறீர் என்று உதடு துடிக்கச் சொல்லிய பேச்சைக் கேட்டு அசுவத்தாமா மிகுந்த கோப முடையவராகி துரியோதனனைப் பார்த்துச் சொல்ல வாரம்பித்தார்.

வாராய் துரியோதனா? நாம் சேனைகளைக் கூட்டிக்கொண்டு இங்கே வந்து ஒரு காரியத்தையுஞ் சாதிக்காமல் வீணா யொருவரோடொருவர் கலகப்படுகிறது தகுதியா யிருக்க வில்லை. இந்தக் கர்ணன் தன்னை வெகு பராக்கிரமசாலி யென்று சொல்லி வீர வாதஞ் செய்கிறானே! இவனால் எதாகிலு மாகுமா? அப்படிக் கிவன் சூரனாயிருந்தால் பாண்டவரைச் சயித்து இராச்சியத்தை யுனக்குக் கொடுக்க லாகாதா? அதை விட்டு தருமத்திற்கும் நியாயத்திற்கும் விரோதமாகச் சூதாடி என் ஜயித்தீர்கள்? அரசன் தன் பலத்தினால் சத்துருக்களை வெற்றிகொண்டு இராச்சியத்தைப் பெற்றா லல்லவோ பெருமையாக விருக்கும்? சூதாடி ஜயிப்பது மோசமான வழியே யல்லது தருமமும் சவுரியமு மாகமாட்டாது. பாண்டவரைச் சயிக்கவேண்டு மென்று யத்தினப்பட் டிருப்பீர்களாகில் இக்காலத்தில் உங்கள் பெயர் மாத்திரந் தானிருக்கும். வெல்லும்படியாகிய வல்லமை யுள்ளவன் ஒருவரோடு சொல்லி வெல்ல மாட்டான். அக்கினி யொருவரோடு சொல்லித் தகிக்கிற தில்லை. சூரியன் ஒருவரோடு சொல்லி இருளைப் போக்கடிக்கிற தில்லை. ஆதலால் (யாருமில்லா விடத்தில் அச்வமேதயாகஞ் செய்கிறது போல்) பாண்டவ ரில்லா விடத்து வாயில் வந்தபடிட் டுப் பினத்தினால் யாருங் கேட்பாரில்லை யல்லவோ? நீ இந்த கர்ணனுடைய பேச்சையும் சகுனியினுடைய பேச்சையுங் கேட்டு பாண்டவரைக் கபடமாகச் சூதில் ஜயித்து அவரது கற்புடைய மனையாளாகிய துரோபதியைப் புஷ்பிணியா யிருக்குங் காலத்தில் சபைதன்னி லிழுத்து அவமானஞ் செய்தீர்களே! இது சூரர் செய்கையோ? இப்போது அப்படி பாசிகை யுருட்டுங் கால மல்ல. வச்சிராயுதத்திற் கொப்பாகிய அம்புகளை யெய்யும்படியான காலம் வந்திருக்கிறது. ஆதலால் அவரது சக்தியை யறியாமல் குதிக்கிற பேர்களெல்லாங் குதிக்கட்டும். (துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா) துரோணாசாரியர், கிருபாசாரியர், மஹாசூரர், வெகுநீதிகளை யறிந்தவர்கள். மெய்யான வார்த்தையைச் சொன்னார்கள். அதைக் கேளாமல் பாவியான கர்ணன் அவர்களைத் தூஷித்தான். நீயு மதை யனுசரித் திருக்கிறாய். ஆதலால் யான் ஆயுத மெடுப்ப தில்லை. சகுனியுங் கர்ணனுமே யுத்தஞ் செய்யட்டும். அக்கினிச் சுவாலைக் கொப்பாகிய அர்ச்சுனனுடைய பாணங்களுக்கு யார் எதிர்நிற்கப் போகிறார்களோ பார்க்கப் போகிறேன் என்று சொல்லி வாயை மூடிக்கொண்டார்.

கேளீர் ஜனமேஜய மஹாராஜாவே? இப்படி அசுவத்தாமா சொல்லியபின் பீஷ்மர், துரியோதனனுக்கு இதத்தைச் சொன்னார்.

கேளாய் துரியோதனா, ஆசாரியரும், ஆசாரிய குமாரரும், சகலத்தை யும் அறிந்த பேர்கள். ஆகையால் அவர்கள் சொல்லிய பேச்சை நிச் சய மென்று நன்னவேண்டும். கர்ணன் சொல்லிய பேச்சோ க்ஷத் திரிய தருமத்திற்கு ஒத்ததா யிருக்கின்றது. ஆகிலும் பெரியோ ரைப் பழிப்பது பெரும் பாவ மானதால் மிகவு மழகா யிருக்க வில்லை. தேச காலங்களையும் பலாபலங்களையும் அறிந்தே யுத்தஞ் செய்யவே ண்டும். அர்ச்சுனனுடைய பலத்தை நன்று யறிந்த குருபுத்திரர் சொ ல்லிய பேச்சு உன் மனதிற் கிசைய வில்லை. எப்படிப்பட்ட பேருக் கும் சமயத்தில் புத்தி மயங்கிப் போகும். ஆகையால் நீ கர்ணன் பே ச்சைக் கேட்டு அர்ச்சுனனை எளிதில் ஜயிக்கலா மென்று நினைக்கி றாய். இது பின்னாலே தெரியும் என்று சொல்லி அசுவத்தாமாவை நோக்கிக் கைகூப்பிக்கொண்டு சொல்ல வாரம்பித்தார்.

சுவாமீ ஆசாரிய குமாரரோ? இந்தக் கர்ண னிவ்வளவு சொல்லிய தெல்லாம் உங்களுக்கு வீர மதிகப்படவேண்டு மென்கிற கருத்தினா லேயே யன்றி வேறு காரணத்தா லல்ல. ஆதலால் நீங்க ளிவ்வபரா தத்தைப் பொறுத்துச் சிஷ்ராகிய அடியேங்களிடத்தில் கிருபை செ ய்து ரக்ஷிக்கவேண்டும். சகல அஸ்திர சஸ்திரங்களையு மறிந்த மகா வீராகிய நீங்க ளிந்தக் காலத்தில் விரோதப்படுவது தகுதி யல்ல. அர் ச்சுனன் காண்டீவத்தை யெடுத்து யுத்தத்துக்கு வந்தால் உங்களை த்தவிர எதிரே நிற்கும்படியானவர் யா ரிருக்கிறார்கள்? ஆகையால் நாம் அர்ச்சுனனிடத்தில் அவமானப்படாம லிருக்கும்படி காத் தரு ளவேண்டும் என்று பீஷ்மர் சொல்லிய பேச்சைக் கேட்டு அசுவத்தா மாவானவர் பீஷ்மரே இந்தக் காரியத்திற் கென்னை வேண்டுவ தேன்? எனக்குக் கோப மொன்று மில்லை. இந்தக் கர்ணனும் துரியோதனனு ம் ஆசாரியரை நிந்தித்தபடியால் அவர்கள் பொறுத்தா லெனக்குச் சம்மதிதா னென்று சொன்னார். அந்தப் பேச்சைக்கேட்டுத் துரியோ தனனும் கர்ணனும் ஆசாரியர்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அடியேங்கள் செய்த பிழை பொறுத் தருளவேண்டு மென்று பிரார் த்தித்தார்கள். உடனே பீஷ்மரும் ஆசாரியரைப் பொறுக்கும்படி வே ண்டிக்கொண்டு துரியோதனனுக்கும் கர்ணனுக்கும் புத்தி சொல் ல வாரம்பித்தார்.

கேளாய் துரியோதனா, நீ யுத்த மில்லாமல் பாண்டவரை ஜயிக் கலா மென் றொரு யோசனை சொன்ன யல்லவோ? அது வுன் னறியா மையினால் விளைந்ததே யல்லது வே றல்ல. அவர்கள் பிரதிக்கினை செ

ய்தபடி பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு வருஷம் அஞ்ஞாத வாசமும் குறைவின்றி நிறைவேற்றிய விதத்தைச் சொல்லுகிறேன் கேள். பகவானுடைய ஆக்கினையினால் காலசக்கிரஞ் சுழன்று வருகின்றதல்லவோ? அதின் வசத்தில் அகப்பட்ட சூரியன் முதலிய கிரகங்களுடைய சாரபேதத்தினால் ஏறக்குறைய ஐந்து வருஷங்களுக்கொரு தரம் அதிக மாசம் வருகின்ற கணக்குப்படிக்கு இப்போது இரண்டு மாசமும் பன்னிரண்டு நாளும் அதிகமா யிருக்கின்றது. அதுகளைக் கூட்டி நேற்றுதயத்திற்கே பதின்மூன்று வருஷம் நிறைந்தன. அதனாலேதான் அர்ச்சுனன் வெளிப்பட்டு யுத்தத்திற்கு வருகின்றான். நீங்கள் அது தெரியாமல் பேசினீர்கள். பாண்டவர் ஒரு போதும் பிரதிக்கினையைத் தப்பமாட்டார்கள். அநியாயமாய் அயலார் சொத்தைக் கவரமாட்டார்கள். ஆகையால் அவர்களுக்கு அபஜயம் வராது. ஆகிலும் நாமெல்லோரும் ஒன்றாகக் கூடி கையிலானமட்டும் யுத்தஞ் செய்வோம். அவர்களோ பூமண்டலத்தை யெல்லாஞ் ஜயிக்கமாட்டுவார்கள். ஆதலால் எனக்குத் தோற்றுகிற தென்னவென்றால், அவர்களுக்குக் கொடுக்கத்தக்க பங்குகளைக் கொடுத்துச் சமாதானஞ் செய்துகொண்டால் உனக்கு நன்மை யுண்டாகும் என்று பீஷ்மர் சொல்லக் கேட்டுத் துரியோதனன் சொல்லுகிறான்.

வாரீர் பிதாமகரே, நீர் கடைசியில் சொல்லியது எனக்கு எவ்வளவுஞ் சமாதான மில்லை. பாண்டவருக்கு இராச்சியத்தில் ஒரு பங்காவது ஒரு கிராமமாவது அல்லது கொஞ்சம் பொருளாவது நானொன்றுங் கொடுக்க மாட்டேன். யுத்தத்திற்கே முயற்சியா யிருக்கிறேன். நீங்களும் அப்படியே இருக்கவேண்டுமே யன்றி வேறு கருத்து கொள்ளலாகாது என்று சொல்லியதைக் கேட்டு துரோணாசாரியர் சொல்லலுற்றார்.

வாராய் துரியோதன, நாங்களனைவரும் உனக்கு இதத்தைச் சிந்திக்கிறவர்களா யிருக்க எங்கள் பேச்சை நீ கேட்கிறதில்லை. இப்போது பீஷ்மர் சொல்லியபடி செய்வது நன்மை யென்று எனக்குத் தோற்றுகிறது. உனக்கப்படி செய்ய மனமில்லாம லிருக்கிறபடியால் மற்றொரு பேச்சு சொல்லுகிறேன், அதின்படியாகிலும் நடத்தவேண்டும். அதென்னவென்றால், நமது சயினியங்களை மூன்றாகப் பிரித்து அதிலோர் பிரிவில் நீ சாவதானமாக இரு. நாங்களொரு பங்கை அழைத்துக்கொண்டு சண்டைக்குப் போகிறோம். மற்றோர் பங்கு பசு மந்தையைக் காத்துக்கொண் டிருக்கட்டும். நாங்கள் தேவேந்திரன் வந்தாலு

ம் அஞ்சாமலெதிர்த்துப் போரிடுகிறோம் என்று சொல்லக் கேட்டு யாவரும் சம்மதித்தார்கள். பின்பு பீஷ்மர் சொல்லுகிறார். ஆசாரியர் சொல்லியபடி நாம் யுத்தத்திற்குக் கொண்டுபோகிற மூன்றிலொரு பங்கு சேனைக்கு நடுவில் ஆசாரியரும், வடபுறத்தில் ஆசாரிய புத்திரரும், தென்புறத்தில் கிருபாசாரியரும், காவலாக விருக்கவேண்டும். விகர்ணன், சகுனி, துச்சகன், துர்முகன், இந்நால்வரும் ஆசாரியருக் கிரு புறங்களிலு மிருக்கவேண்டும். கர்ணன் சேனைக்கு முன் புறத்தி லிருந்து காக்கவேண்டும். நான் பின்புறத்தி லிருந்து எல்லாச் சேனைகளையுங் காத்துவருகிறேன். இப்படி யாவரும் கட்டாய்ச் சேர்ந்து சென்றால் அர்ச்சுனனை ஜயிக்கலாம் என்று வீஷ்மர் சொல்லக் கேட்டு யாவருஞ் சந்தோஷித்தார்கள். பின்பு சேனையி னுள்ளே வச்சிர வியூகமும், அதைச் சூழ பதும வியூகமும், அதைச் சூழ அர்த்தசந்திர வியூகமும் கட்டிக்கொண்டு நடந்தார்கள். அதி னடுவில் வேதிகை யடையாளம் போட்ட துவசத்தா லலங்கரிக்கப்பட்ட ரதத்தில் துரோணரும் பின் புறத்தில் பனை யடையாளம் போட்ட துவசமுள்ள ரதத்தில் பீஷ்மரும் விளங்கினார்கள். இப்படி யிருக்க அர்ச்சுனனுக்குங் கவுரவருக்கும் நடக்கப்போகிற மகா யுத்த வேடிக்கையைப் பார்க்கவேணு மென்று இந்திரன், அக்கினி, இயமன், வருணன், குபேரன், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் முதலாகிய சகலமான தேவதைகளும் விமானங்களாலே ஆகாசத்திற் சபையொன்று ஏற்படுத்தி அதில் வெண் குடை வெண் சாமரங்கள் முதலான விருதுகளோடுகூட இனிது வீற்றிருந்தார்கள். அன்றியும் அந்தச் சபையில் சுவர்க்கவாசம் பெற்ற அஷ்டகன், வசுபத்திரன், திருகன், நகுஷன், மாந்தாதா, சிபி, புரூரவன், கார்த்தவீரியன், பரதன், பகீரதன், ஸகரன், தசரதன், அரிச்சந்திரன், பாண்டு, இவர் முதலாகிய மஹாராஜரும் தங்கள் விருது பரிவாரங்களோடு விளங்கினார்கள். அன்றியும் கந்தருவர் முதலானோர் பாடவும், அரம்பைய ராடவும், வெகு விநோதமா யிருந்தது. அப்படி யிருக்க அர்ச்சுனன் பத்துத் திசைகளும் எதி ரொலிக்கச் போகும்படியான தேரின் கோஷத்தினாலே எதிரிகள் மனம் நடுங்கும்படியாக வெகு வேகமாய்க் கவுரவசேனைக்கெதிராகச் சென்று தன் சாரதியாகிய உத்தரனை நோக்கி கேளாய் உத்தரகுமாரா, இந்தக் கவுரவர் துரியோதனனை நாம் காணாம லிருக்கும்படி மறைத்துக்கொண்டு வருகிறார்கள். ஆதலால் நாம் நேரான சத்துருவாகிய துரியோதனனைக் காண்கிற வரைக்கும் பசு மந்தையை வலம் வரும்படி தேரை நடத்து. முன்னம் மந்தைகளை மடக்கி சுவாதீனஞ் செய்துகொள்ளுவோம். இப்படி செய்தால் உடனே துரி

யோதனன் அகப்படுவோன். இப்படிக்குச் செய்யாமல் முன்னம் பீஷ்மர் துரோணர் முதலானவரோடு போர் செய்ய முயன்றால் எளிதில் துரியோதனனைக் காணக்கூடாது, மந்தையை மடக்கவுங் கூடாது. ஆதலால் இப்போது பசு மந்தையைச் சூழத் தேரை விரைவாய் நடத்து என்று சொல்லி வில்வி லம்புகளைத் தொடுத்து பீஷ்மாசாரியர், துரோணாசாரியர், கிருபாசாரியர், இவர்களுடைய பாதங்களில் இவ்விரண்டு பாணங்களால் நமஸ்காரஞ் செய்து இவ்விரண்டு பாணங்களால் காதுகளுக்குச் சமீபத்தில் குசலம் வினவினான். அப்போது பீஷ்மர், துரோணர், முதலானோர் மகா சூரனாகிய அர்ச்சுனன் வெகு நாட்களுக்குப் பின் காணப்பட்டதனால் வெகு சந்தோஷமாயிருக்கின்றது. அவன் தருமசீலனும் புத்திசாலியு மானதால் நம்மைக் கும்பிட யத்தனித்துச் சமீபத்தில் வர அசந்தர்ப்பமானதுபற்றி நமஸ்கார பாணங்களையும் க்ஷேமத்தை வினவும்படியான பாணங்களையும் ஏவினான். ஆதலால் இவனே ஜயத்தை யடைவான், சுகமாக விருப்பான். இவன் பிரதிக்கினை செய்தபடி நிறைவேற்றி திவ்யமான கவச குண்டலாதிகளை யணிந்து திவ்யாயுதங்களோடு கூடி அக்கினிபோல் பிரகாசிக்கிறான் என்று ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டார்கள். அர்ச்சுனனும் விரைவில் பசு மந்தையின் சமீபத்தில் வந்து சாரதியைப் பார்த்துச் சொல்லுகிறான். ஓ, உத்தரகுமாரனே? துரியோதனன் இருக்கு மிடத்தைச் சீக்கிரத்திற் கண்டுபிடிக்கவேண்டும். கண்டமாத்திரத்தில் சிங்கம் அற்ப மிருகத்தையெப்படி பிய்த்து அதி னுதிரத்தைப் பானம் பண்ணுமோ அப்படியே என் னம்பானது அந்தப் பாவியி னுடலைப் பிய்த்து ஆவியைக் குடிக்கும்படி செய்வேன். இவ னொருவன் மாண்டால் இவன் தம்பிமார்களும் துஷ்டனான சகுனியும் மாண்டாப்போ லாவார்கள். சூரரான அநேக ராஜாக்கள் யுத்தத்தில் உயிர் விடாமல் பிழைப்பார்கள். பீஷ்மர் துரோணர் முதலானோருக்கும் க்ஷேம முண்டாகும். ஆதலால் அவனைக் கண்டுபிடிக்கச் சேனைக்குள் நுழைவோமென்றால் சேனையின் முன்புறத்தில் கர்ணன் முதலானோ ரிருக்கிறார்கள். நடுவி லாசாரியரும், பார்சுவங்களில் கிருபரும், அசுவத்தாமாவு மிருக்கிறார்கள். பின் புறத்தில் பாட்டனா ரிருக்கிறார். இன்னுஞ் சுற்றிலுஞ் சால்வன், விருஷசேனன், சவுபலன் முதலானோர் காத்துவருகிறார்கள். ஆதலால் சேனையிற் புகுந்து விரைவில் துரியோதனனைக் காணக்கூடாது. நான் இவர்களோடு சண்டை செய்துகொண் டிருந்தால் துரியோதனன் பசுக்களை யோட்டிக்கொண்டு பட்டணம் போய்ச் சேருவான். ஆனதுபற்றி துரியோதனனைக் காணுமளவும் பசு மந்தை

யைச் சூழவே ரதத்தை நடத்திக்கொண் டிரு என்று சொல்லி காண்டீவத்தில் கூர்மையும் கொடுமையுமான அம்பைத் தொடுத்தான். அந்தக் குறிப்பைக் கண்டு பீஷ்மர் கவுரவரைப் பார்த்து கேளுங்கள் கவுரவரே? இப்போது சிங்கம் நரியைத் தேடுவதுபோல் அர்ச்சுனன் துரியோதனனைச் சங்கரிக்கவேண்டு மென்று தேடிக்கொண்டு நம்மை வலம் வருகிறான். இவனை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் ருத்திரமூர்த்தியும் தவிர மற்றொருவரும் தடுக்கமாட்டார்கள். ஆதலால் நாமெல்லாம் துரியோதனனுக்கு அபாயம் நேரிடாமலிருக்கும்படி சூழ்ந்துகொண்டு அர்ச்சுனனை யெதிர்க்கவேண்டு மென்று சொல்லி யாவரும் ஒருங்கே அர்ச்சுனன்மேல் பாய முனைந்தார்கள். அந்த வேளையில் அர்ச்சுனனும் இடைவிடாமல் மேகம் மழை பொழிவதுபோல் சர மாரி பொழிந்தான். பொழியவே ஆகாசம் பூமி ஒன்றுந் தெரியாமல் இருள் கம்மிக்கொண்டதுபோலாகிக் கவுரவ சேனையிலிருக்கும் வீரர் தேகமெல்லாந் துளைபட்டு நடுநடுங்கினார்கள். மலைகள் சரிந்து வீழ்ந்தாற்போல் யானை குதிரை முதலானவை கண்டங் கண்டமாய் சரிந்து வீழ்ந்தன. அப்போது அர்ச்சுனனுடைய கைகள் அம்பெடுத்தல் தொடுத்தல் விடுத்தல்களை ஏக காலத்தில் செய்கின்றனபோலிருந்தன. இப்படிப்பட்ட பராக்கிரமத்தையும் லாகவத்தையுங் கண்டு துரோணர் முதலாயினோர் ஆச்சரியப்பட்டுச் சிலாகித்தார்கள்.

இப்படிக்குச் சேனைக ளெல்லாம் தட்டுக்கெட்டுத் தடுமாறிக் கொண் டிருக்க அர்ச்சுனன் சங்கத் தொனி செய்தான். செய்யவே பசுக்க ளெல்லாம் அந்தத் தொனியினாலும் சிங்கநாதங்களினாலும் பூதங்களுடைய அட்டகாசங்களினாலும் வெருண்டு வாள்களைத் தூக்கிக்கொண்டு பட்டணத்தை நோக்கி ஓடின. அது கண்டு அர்ச்சுனன் இதுதான் சமயமென்று கோபாலரை யழைத்துப் பட்டணத்திற் கோட்டிக்கொண்டு போகும்படி கட்டளையிட்டு ரதத்தை வடபுறத்தில் ஓட்டச்சொல்லி உத்தரனுக்கு நியமித்தான். அவனுமப்படியே தேரை விரைவில் நடத்தினான். பின்பு கவுரவ ரெல்லாம் அர்ச்சுனன் ஓடி வருவதைக் கண்டு ஆயுதங்களைச் சித்தப்படுத்திக்கொண்டு பிரளயகால மேகக் கூட்ட மென்னும்படி எதிர்த்து ஓடினார்கள். அர்ச்சுனன் அநேக பாணங்களைப் பொழிந்து அவர்களை வரவொட்டாமல் தடுத்தான். அந்தச் சமயத்தில் கோபாலர் பசுக்களை யோட்டிக்கொண்டு பட்டணத்திற்குப் போனார்கள். பசுக்கள் பட்டணஞ் சேரவே அர்ச்சுனன் மனக் களிப் படைந்து இனித் து

ரியோதனனைச் சங்கரிக்க வேண்டுமென்று முயல்வதைக் கண்டு கர்ணன், பீஷ்மர், துரியோதனன், இவர் மூவரும் தனித்தனியே ஆயிர வாயிரம் இரதங்களோடு அர்ச்சுனனைச் சுற்றிக்கொண்டார்கள் அது கண்டு அந்தப் பாண்டவ வீரன் உச்சாகத்தையே யடைந்து சாரதியைப் பார்த்துச் சொல்லுகிறான். இதோ பார் இந்தக் கவுரவ சேனைகளுக்கு நடுவில் சுவர்ணவேதிகை யடையாளம் போட்ட உன்னதமான துவசத்தா லலங்கரிக்கப்பட்டுச் சிவந்த குதிரைகளா லிழுக்கப்பட்டு வருகிறதே தொன்று காணப்படுகிறதே அதுதான் எனக் காசாரியரும் சகல சாஸ்திரங்களு மறிந்தவரும் மகா சூரரும் கவுரவருக்கு இதத்தைச் சிந்திக்கிறவரு மாகிய துரோணாசாரியரது. நாமவரிடத்திற்குப் போய் தரும யுத்தஞ் செய்யவேண்டும். அவர் முன்னம் அம்பை விடுத்தால் பின்னை அம்பை விடுப்பேன். ஆதலால் அவரோடு யுத்தஞ் செய்கிற வரைக்கும் தேரை மெள்ள நடத்து. அதோ ரிஷபத் துவசத்தோடு விளங்காநின்ற தேர் காணப்படுகிறதே, அது நமக் காசாரியராகிய கிருபாசாரியரது. அவர் துரோணாசாரியருக்குச் சமானமானவர், எங்கள் பிதாவுக்கு உயிர்த்தோழர். அதோ சிங்கத் துவசத்தோடு விளங்குகிறதே அந்தத் தேர் என்னாசாரிய குமாரராகிய அசுவத்தாமரது. அவர் பிதாவிலு மதிசயப்பட்டவர். இவர்களோடு யுத்தஞ் செய்யும்போதும் தேரை மெள்ள நடத்தவேண்டும். நாவற் பழக்கொத்தை யேந்திய யானை யடையாளம் பெற்றிருக்கிற தேர் கர்ணனது. அவன் வில்லாளிகளுக்குள் முதன்மையானவன். என்னிடத்தில் மிகுந்த பொறாமை யுள்ளவன். பரசுராமருடைய சிஷன். சகல சாஸ்திரங்களையும் அறிந்தவன். இவனுடைய பலத்தைப்பற்றித் துரியோதனன் எங்களைக் காட்டில் ஓட்டினான். இவனோடு யுத்தஞ் செய்யும்போதுதான் என் பராக்கிரமம் நன்றாய் வெளிப்படும். அப்போது நீ தேரை விரைவாய் நடத்துவாயாக. அதோ பார், சர்ப்பக்கொடியோடு கூடிய பெரிய தேர் இருக்கிறதே அதுதான் துஷ்டனாகிய துரியோதனனது. அவனோடு யுத்தஞ் செய்வதற்குத் தேரை மிக விரைவில் ஓட்டுவாயாக. அதோபார், வைடூரியம் போன்ற நிறம் பொருந்தி ஐந்து கிளைக ளுள்ள வோர் பனைமர வடையாள முடைத்தான *துவசத்தோடு கூடி யொரு ரதம் விளங்குகிறதே அது கவுரவகுல பிதாமகராகியும் துரியோதனனுடைய சேனைகளுக் கெல்லாம் ஆதாரமாகியு மிருக்கின்ற பீஷ்மாசாரிய ருடையது. அவர் மஹாரதருக்குத் தலைவரா யிருக்கிறவர். பரசுராமரோடு யுத்தஞ்செய்து வெற்றிபெற்றவர். அவரோடு கடைசியில் யுத்தம் செய்வோம். கீழ்ச் சொல்லிய துரோணர் முதலாயினோரோடு யுத்தஞ் செய்யும்

போது நான் சொல்லிய விதமாய்த் தேரை நடத்துவாயாக என்று சொல்லி கர்ணன்மீது பார்வையைச் செலுத்திப் புறப்பட்டான்.

இவ்விதமாய் கர்ணனைக்குறித்து வெகு வேகமாய் வருகிற அர்ச்சுனனைக் கண்டு அசுவத்தாமன் கர்ணனோடு சொல்லுகிறான். கேளாய் கர்ணா, நீ எந்த அர்ச்சுனனைச் சபை நடுவிலே வெகுவாய் தூஷித்துப் பரியாசஞ்செய்தாயோ அந்த அர்ச்சுனன் உன்மீதிற் பாய்ந்து வருகிறான் பார். ஒரு நிமிஷத்துக்குள்ளே அவன் சிங்கம்போல் கர்ச்சித்துக் காண்டீவத்தை வளைத்து நீயும் உன் சேனையும் பறந்து போகும்படி சர மாரி பொழிவான். உன் கொக்கரிப் பெல்லாம் அப்போ தெரியும். அர்ச்சுனன் எனக்கு நிகரல்ல வென்று சும்மா தற்புகழ்ச்சி செய்தாயே அதைக் கிரியையினால் காட்டவேண்டும். அந்த மஹாவீரன் பாண வருஷத்தினாலே உன்னை ரதத்தோடு கீழே தள்ளுகிறதற்கு முன்னமே ஜாக்கிரதைப்படவேண்டும். சக்தி யில்லாம லிருந்தால் சகுனியோடு கூடிக்கொண்டு சொக்கட்டானாடு. இன்னும் யாரையாகிலும் மோசஞ் செய்ய முயற்சி செய். இப்போது அர்ச்சுனன் உன்மீதில் சொக்கட்டான் காய்களை யெறிய மாட்டான். கூர்மையான அம்புகளைத்தான் எறிவான் என்று அசுவத்தாமா சொல்லியதைக் கேட்டுக் கர்ணன் மனம் பொறுக்காமல் ஆசாரிய குமாரனைப் பார்த்து ஓய் அசுவத்தாமரே, நான் பிராமண குலத்திற் பிறந்தவனாகில் யுத்தத்திற்கஞ்சுவேன். க்ஷத்திரிய தருமத்தை யனுசரித்து கையில் விற்பிடித்திருக்கையில் அஞ்சுவேனோ? இந்த அர்ச்சுனனாகட்டும் அல்லது ஸ்ரீ கிருஷ்ணனாகட்டும் நான் கிஞ்சித்தேனும் அஞ்சுவேனென்று நினையாதேயும். இப்போது அந்தத் தேவேந்திரன் எதிர்த்து வந்தாலும் பரிவாரங்களோடு அவனை இந்த யுத்த பூமியிற் சயனிக்கச் செய்யாமல் திரும்பமாட்டேன். என் பராக்கிரமத்தின் அதிசயத்தைக் கண்டு ஆச்சரியப்படப் போகிறீர். அதற்குக் குறி யிருக்கின்றது பாரும். யுத்தத்திற் செல்கின்றவருக்கு முகத்தில் மலர்ச்சியும் தொனி யீனமாகாமல் கம்பீரமாகியு மிருந்தால் அவசியம் ஜயம் வரும். எனக்கிப்போது அப்படியே இருக்கின்றது பாரும். ஆகையால் பயத்தை விட்டு நான் செய்யும் யுத்தத்தைப் பார்த்துச் சந்தோஷித்திரும் என்று சொல்லிய பேச்சைக் கேட்டுத் துரியோதனன் சிந்தையுற்று துரோண பீஷ்மாதிகளைப் பார்த்துச் சொல்லுகிறான்.

கேளீர் பெரியோரே, தெய்வ கதியை யா ரறியலாம்? அர்ச்சுனன் விராட பட்டணத்தி லிருந்ததை யறிந்தால் முன்னமே விராடரா

ஜனது சொத்துக்களைக் கவர்ந்துகொண்டு மறுபடியும் பாண்டவரைக் காட்டிற்குத் துரத்தலாமே? அதைக்குறித்து இப்போது யோசித்துப் பயனென்ன? இனியப்படி செய்கிறதற்கு அசாத்திய மாயிற் றல்லவோ? பெரியோராகிய உங்களுக்கு என்ன யோசனை தோற்றுகின்றதோ அறிகிலேன், எனக்குத் தோற்றுகின்ற யோசனையைச் சொல்லுகிறேன். இந்தச் சமயம் ஆயுதங்களினாலே பராக்கிரமத்தை வெளிப்படுத்தும்படியான தாகையால் காண்டீவத்தை யேந்தி எதிரே வந்திருக்கிற அர்ச்சுனனை எதிர்க்க வேண்டும். அப்படி செய்யாமல் திரும்பினால் மிகுந்த அபகீர்த்தி யுண்டாகு மல்லவோ? அப்படி யன்றி யுத்தஞ் செய்தக்கால் ஜயமோ, அபஜயமோ, எது வந்தாலும் க்ஷத்திரிய தருமத்திற்கு விரோத மில்லாம லிருக்கும். ஆனதுபற்றி நீங்களெல்லாம் பின் வாங்காம லிருக்கவேண்டும் என்று துரியோதனன் சொல்லிய பேச்சைக் கேட்டு பீஷ்மர் முதலானோ ரனைவரும் நல்லதென்று அங்கீகரித்து அர்ச்சுனனைச் சூழ்ந்துகொண்டார்கள். சூழ்ந்துகொள்ளவே அர்ச்சுனன் ஏமாறாமற் றேரை நடத்தும்படி தன் சாரதிக்குக் கட்டளையிட்டு வீரத்தன்மையை மேற்கொண்டு கர்ச்சித்தான். அது கண்டு கவுரவ சேனையி லிருக்கும் அநேகர் யானைகள் மீதும், குதிரைகள்மீதும், ஏறிக்கொண்டு பீஷ்மர், துரோணர், கிருபர், கர்ணன், அசுவத்தாமா, இவ்வைவரையும் முன்னிட்டுக்கொண்டு தத்தம் சக்திக்கு ஏற்றபடி ஆயுதங்களைப் பிரயோகித்தார்கள்.

இவ்விதமாய் மலையின்மீது மேகங்கள் மழைத் தாரைகளை வருஷித்தாற்போல் தன்மீது கவுரவ வீரர் வருஷித்த ஆயுதக்கூட்டங்களினாலே தன் தேர் முதலானவை மறைக்கப்பட்டிருக்கக் கண்டு அர்ச்சுனனானவன் சகிக்காமல் சூரியன் தன் கிரணங்களினாலே மூடுபனியை நீக்குவதுபோல் அவ்வாயுதக் கூட்டத்தைத் தன் பாணங்களினால் சிதைத்து நீக்கி வெகு வீராவேசங் கொண்டு வில்லைக் குண்டலம்போல் வளைத்து ஒருவரும் காணக்கூடா திருக்கும்படி அம்புகளை யெடுத்துத் தொடுத்து ஒன்று பத்து ஆயிரம் பதினாயிர மென விடுத்தான். விடுக்கவே அவ்வம்புகள் கவுரவ சேனையிற் புகுந்து சின்னபின்னமாகத் துணித்ததுகள். அப்போது துரோணர் முதலானோரும் அர்ச்சுனனைத் தடுக்க முயன்று வல்லமை யில்லாதவர்களாகிக் காட்டுத் தீயைக் கண்ட மிருகங்களைப்போல் அவன் சமீபத்திலும் நிற்க மாட்டாமல் ஒதுங்கி நின்றார்கள். இப்படியாகவே, குதிரைகள், யானைகள், வீரர்கள், என்னும் சகல சைனியங்களிலும், சில கை முறிந்தன.

சில கால்முறிந்தன, சில தலை யுடைந்தன, சில மார்பு பிளந்தன,
சில வீழ்ந்து ஹாஹாகாரம் பிறந்து இதென்ன ஊழிகாலமோ?
இல்லாவிடில் அம் புருவங் கொண்டு இடிகள் விழுமோ? என்றும் இ
வன் அர்ச்சுன னல்ல காலயமனோ? காலாக்கினி ருத்திரனோ? அகா
ல மிர்த்துவோ? யாரோ தெரிய வில்லை யென்றும், அர்ச்சுனன் ஒரு
வனே இத்தனை பாணங்களை எப்படி பிரயோகிப்பான்? பிரயோகித்
திருக்கமாட்டான். இந்திரன் மகனாகிய அவனுக்குச் சகாயமாக எல்
லாத் தேவர்களுங் கூடி ஆகாசத்தினின்றும் சரமாரி பொழிகின்ற
னர்போலும் என்றும், ஐயோ! இப்படி பாதவிக்கும் எங்களைக் காப்
பாற்றும்படியான வீரன் ஒருவனையுங் காணோமே? ஓ பீஷ்மரே?
ஓ துரோணரே? எங்களை யெல்லாம் வீணாய் மடிக்கவா யத்தினப்
பட்டீர்கள். உங்களுக்குச் சவுரியமே யில்லை. வீணாய்ப் பேர் பெற்றீ
ர்கள். நாங்க ளடைந்த கதியை உடனே நீங்கள் அடையப்போகிறீ
ர்கள் என்றும், பலவிதமா யலர்த்தி உயிர் விட்டன. இவ்வாறு
சேனைகளெல்லாம் கூட்டங் கூட்டமாய் மடிய, உதிரங்கள் ஆறாக
வோட, பிண நாற்றம் முழுதிலும் வியாபிக்க, ஆகாசமும் பூமி
யும் அம்புகளினால் இருளடைய, கவுரவ வீரர் ஒன்றுந் தோற்றாமல்
வெருண்டு நிற்கக் கண்டு கிரீடியாகிய அர்ச்சுனனானவன் அட்டகா
சஞ் செய்து சங்கெடுத்துப் பூரித்து துரோணாசாரியார்மீது எழுப
த்துமூன்று பாணங்களையும், சகுனியின்மீது எண்பது பாணங்களை
யும், துச்சகன்மீது பத்துப் பாணங்களையும், துச்சாதனன்மீது
பதினொரு பாணங்களையும், கிருபாசாரியார்மீது நாற்பது பாணங்க
ளையும், பீஷ்மாசாரியார்மீது அறுபது பாணங்களையும் பிரயோகித்
து கர்ணனைக் கண்டு வெகு கோப மடைந்து ஓரம்பினால் அவன்
கிரீடத்தை வீழ்த்தி நாலம்புகளால் அவனது நான்கு குதிரைகளை
யுங் கொன்று ஓ[illegible]ர்த்தசந்திர பாணத்தினால் அவன் சாரதியின் சிர
த்தை யறுத்து மற்றொரு பாணத்தினால் அவன் வில்லை முறித்து
மிகவுங் கூர்மையாகிய ஒரு பாணத்தை அவன் மார்பிலே பிரயோகி
த்தான். அந்தப் பாணம் மார்பில் உருவியதனால் கர்ணன் பதைபதைத்
து வெது வெதுத்துத் தரையில் வீழ்ந்து வாயினால் உதிரத்தைக்
கக்கிக்கொண்டு கிடந்தான். அது கண்டு கவுரவசேனைகள் மிகவும்
பயங்கொண்டு மூலைக்கு மூலை யோடின. இப்படி பராக்கிரமித்த
அர்ச்சுனனுக்கு ஜயகாலமானதுபற்றி குதிரைகள் மேடென்
றும் பள்ள மென்றும் வித்தியாச மில்லாமல் வெகு நேராய்த் தே
ரை இழுத்தன. சாரதிக்கும் சமயத்திற்குத் தக்கபடி நடத்தும்ப
டியான மிகுந்த வல்லமை யுண்டாயிற்று. அப்போது அர்ச்சுனனு

ணைய பராக்கிரமத்தினால் கவுரவ சேனா சமுத்திரம் அல்லோல கல்லோலமானது கண்டு ஆகாசத்தி லிருந்த தேவர் முதலானோர் ஆச்சரியப்பட்டு பூமழை பெய்தார்கள். பின்பு பீஷ்மர் முதலானோர் கர்ணனுக்கு நேரிட்ட அபாயத்தைக் கண்டு சீதோபசாரங்கள் செய்து அந்த மூர்ச்சையை அவனுக்குத் தெளிவித்துப் சிதறிப்போன சேனைகளுக்குச் சமாதானஞ் சொல்லித் திருப்பிக்கொண்டு வந்து இந்திரனாலும் பேதிக்கக்கூடாதபடி வியூகமாகக் கட்டி அர்ச்சுனனை ஜயிக்கும்படியாக முயன்றார். அது கண்டு அந்தத் தேவேந்திர குமாரன் விராடபுத்திரனை நோக்கிச் சொல்லுகிறான். பார்த்தாயோ உத்தரகுமாரா! சிதறிப்போன கவுரவசேனை உறுதியான வியூகமாகி மஹா வீரரால் காக்கப்பட்டு நம்மீதில் பாய்கின்றது. இதைச் சீக்கிரமாகத் துரத்தி யடிக்கவேண்டும். அன்றியும் நம்மா லடிபட்டு விழுந்த கர்ணன் மறுபடி யெழுந்து பெரிய தேரின்மீது ஏறி வருகிறான் பார்! அவன் கவுரவராஜனாகிய துரியோதனனைப் பற்றியிருப்பதனால் வெகு கர்வ மடைந்து நமக்கு மிகுந்த அபகாரங்களைச் செய்தவன். ஆதலால் அவனை இப்போதே பதாதியாக்கி வதைக்க நினைக்கிறேன். நீ அஞ்சாமலும் இளைப்பைப் பாராட்டாமலும் தேரைச் செவ்வையாய் நடத்து என்று சொல்லக் கேட்டு அந்த உத்தரகுமாரன் வெகு இறுமாப்போடு தேரை நடத்தினான். இப்படிக்கு புலியானது ஓர் விருஷபத்தை நாடிப் பாய்ந்து வருவதுபோல் அர்ச்சுனன் கர்ணனை நாடிவருவதைக் கண்டு சித்திராங்கதன், சித்திரரதன், சங்கிராமசித்து, துச்சகன், சித்திரசேனன், துர்முகன், விகர்ணன், துச்சாதனன், சகுனி, சோணன், முதலாகிய அநேக வீரர் வாயுவேக மநோ வேகமான குதிரைகள் கட்டிய தேர்களின்மீது ஏறிக்கொண்டு பாண வருஷம் வருஷித்துக்கொண்டு கர்ணனுக்கு உபபலமாக வந்து அர்ச்சுனனை எதிர்த்தார்கள். அது கண்டு நாரதனாகிற தந்திரியோடுகூடி கனுக்க ளாகிற மெட்டுவரிசை யுள்ளதாய் அம்புகளாகிய முடுக்காணிகளைப் பொருந்தி விளங்காநின்ற காண்டீவமாகிய வீணையை எடுத்து மிருத்துவுக்கு பிரீதியா யிருக்கும்படி நாணோசையாகிய பாட்டைப் பாடினான். அதனாலே எதிர்த்து வந்த வீரரெல்லாம் திக்பிரமைகொண்டு நிற்க, விகர்ண னென்பவன் பொறுமை யிலானாகித் தனது தேரை விரைவாய் நடத்தி அர்ச்சுனனுக் கெதிரே வந்து நின்று தீக்ஷணமான பாணங்களை வருஷித்தான். அதை அர்ச்சுனன் கிஞ்சித்தேனும் லட்சியஞ் செய்யாமல் அந்தச் சத்துரு எடுத்த பாணங்கள் தன்னிடம் வந்துசேராமுன்னமே ஓ ரர்த்த சந்திரபாணத்தைப் பிரயோகித்து அவன் வில்லையும் கொடியையும் அறுத்துத் தன்

ளினன். அதனாலே அந்த விகர்ணன் தேரைத் திருப்பிக்கொண்டு ஓடிப் போனான். இவ்வகையான அர்ச்சுனனது பராக்கிரமத்தைக் கண்டு பொறாமை கொண்டு கர்ணனுடைய தம்பியாகிய சத்துருந்தபனெ ன்பவன் எதிர்த்துவந்து பல வகையான பாணங்களைச் சொரிந்தான். பார்த்தனானவன் அவைகளை யெல்லாம் ஓர் நொடியில் அம்புகளினால் துண்டந் துண்டமாக அறுத்துத் தள்ளி மிகவும் கொடுமையான ஐ ந்து பாணங்களினாலே சத்துருந்தபனையும் அவன் சாரதியையும் அ டித்தான். அந்தப் பாணங்கள் அவ்விருவர் தேகங்களையும் துளைத்து க்கொண்டு பூமியிற் பாயா முன்னமே அவ்விருவரும் பெருங் காற்றி னால் முறிக்கப்பட்ட மரங்கள் போல் கீழே வீழ்ந்து உயிரை விட்டா ர்கள். அது கண்டு கவுரவ சேனையி லிருந்தபேர்கள் பெருங் காற் றடி க்கு மளவில் வாழைமரங்கள் எப்படி நடுங்குமோ அப்படி நடுங்கினா ர்கள். பார்த்தனோ அந்தச் சமயத்தில் ஒரே தடவையில் அநேக அம்பு களை யெய்து எல்லா வீரர்களையும் அடித்தான். அதனாலே அநேக வீ ரர் கவசங்கள் பிளந்து காயங்களை யடைந்து வேதனை பொறுக்க மாட்டாமல் இமயமலையின் தடங்களில் குளிர் பொறுக்க மாட்டாம ல் யானைகள் தேகம் குன்றி எப்படி கூப்பிடுமோ அப்படி கூப்பிட் டுக்கொண்டு தரையில் வீழ்ந்தார்கள். அப்போது கர்ணனுடைய ம ற்றோர் தம்பியான சோணசுவனென்பவன் வில்லைக் குண்டலம்போ ல் வளைத்துக்கொண்டு விரைவாய் அர்ச்சுனனுக் கெதிரே ஓடிவந்தா ன். அப்படி யோடிவந்த அந்தச் சோணசுவனுடைய வேகத்தை இரு கரைகளும் புரண்டுவருமோ ராற்றின் வெள்ளத்தைப் பெரிய அணை போட்டுத் தடுத்தாற்போல் பாணங்களைப் பிரயோகித்துத் தடுத்து நாலு அர்த்த சந்திர பாணங்களினாலே அவனுடைய நாலு குதிரைக ளையும் அறுத்துத் தள்ளினான். அது கண்டு சங்கிராமசித்தென்ற கர் ணனுடைய தம்பியானவன் சோணசுவனுக்கு உப பலமாக வந்து எ திர்த்தான். எதிர்க்கவே அர்ச்சுனன் ஓ ர்ர்த்தசந்திர பாணத்தைப் பி ரயோகித்து கர்ணன் கண்களுக் கெதிரேயே அந்தச் சங்கிராமசித்தி னுடைய சிரத்தை அறுத்துத் தள்ளினான். அது கண்டு கர்ணனானவ ன் தன் தம்பிகளுக்கு அர்ச்சுனன் செய்த தீங்கைச் சகியாமல் மனங் கொதித்து பிரளய காலாக்கினிபோல் ரூபங் கொண்டு அர்ச்சுனனு க்கெதிராக வந்து காளபிருஷ்ட மென்கிற தன் வில்லை வளைத்து நா ணி பூட்டி. நாணோசை கொண்டு அநேக பாணங்களைத் தொடுத்து பன்னிரண்டு பாணங்களினால் அர்ச்சுனனையும், நான்கு பாணங்களி னால் அவன் குதிரைகளையும், ஒரு பாணத்தினால் அவன் சாரதியையு ம், அடித்தான். அர்ச்சுனனோ அதனாலே மிகுந்த கோப முடையவனா

சி இரு கைகளாலும் சர மாரி பொழிந்து கர்ணனை எதிர்த்தான். இவ்விதமாய் சிங்கங்களுக்கு ஒப்பாகிய அந்த மகாவீர ரிருவருக்கும் யுத்தம் நேரிட்டதைக் கண்டு மற்ற வீர ரெல்லாம் ஆயுதபாணிகளாகி தங்கள் தங்கள் வாகனங்களி னின்று வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தார்கள். அந்த வீரர் இருவரும் ஒருவர்மே லொருவர் அநேக பாணங்களை வருஷிக்கிறதும் எதிரி வருஷிக்கிற பாணங்களைத் தடுக்கிறதும் ஒருவரை யொருவர் ஜயிக்கும்படியான சந்தி பார்க்கிறதும் இடம் வலமாகச் சுற்றி மோசஞ் செய்கிறதுமாக பல யுத்த விளையாட்டுகளை விளையாடினார்கள்? இப்படி யிருக்கையில் அர்ச்சுனன் கர்ணனுடைய தேர் குதிரை முதலானவை காணப்படாம லிருக்கும்படி சரங்களினால் மறைத்து, சங்கத்தொனி செய்தான். அது கண்டு பீஷ்மர் முதலானோரும், ஹாஹா என்றார்கள். கர்ணனோ ஒரு க்ஷணத்துக்குள்ளே அந்தச் சரங்களைப் பொடியாக்கி பனியை யகற்றிவந்த சூரியன் போல் விளங்கி தன் சங்கத்தை எடுத்துப் பூரித்தான். பூரிக்கவே கவுரவசேனையில் சந்தோஷத்தினால் அட்டகாசமும் கை கொட்டலும் பேரிகை முதலான வாத்திய முழக்கமும் உண்டாயின. இப்படி கவுரவசேனை கோலாகலப்படக் கண்டு அர்ச்சுனனானவன் தீக்ஷணமான பாணங்களைக் கர்ணன்மீதில் எய்து அவனுக்கு மூர்ச்சை யுண்டாகும்படி செய்து அவனைச் சூழ்ந்திருக்கிற சேனைகளை யெல்லாம் பின்னிட்டுப் போகும்படி அடித்து இதுக்குள்ளே மூர்ச்சை தெளிந்தெழுந்த கர்ணனைப் பார்த்துச் சொல்லுகிறான். அடா கர்ணா! முன்னே நீ சூதாடுஞ் சபையில் துரியோதனனோடு கூடிக்கொண்டு என்னைத் தூஷித்துக் கொக்கரித்துத் துரோபதியை அவமானஞ் செய்தாயல்லவோ? அதனாலே நீ சூரனாகமாட்டாய். ஆண்மை யுண்டாகில் இப்போது என்னோடு யுத்தஞ் செய்யவேண்டும். செய்வையாகில் உன்னைப் பதிவிரதையைப் பழித்த பாவத்திற் கீடான பயனை யடையும்படி செய்வேன். உன் கண்ணுக் கெதிரே உன் தம்பிமாரை நான் கொலைசெய்யப் பார்த் திருந்தும் ரோஷமும் வெட்கமு மில்லாமல் உன்னுயிரைக் காப்பாற்ற முயலுகிறாயே! இது விற் பிடித்தவனுக்குத் தகுதியோ என்று அர்ச்சுனன் நிந்தித்ததைக் கேட்டு கர்ணன் சொல்லுகிறான். அடா அர்ச்சுனா! நீ சூரனாகில் வாயால் பிதற்றமாட்டாய். உனக்கு ஆண்மையும் வீரமு முண்டாயிருந்தால் என்னோடு சண்டை செய்து காட்டவேண்டும். இவை இல்லாமையாலே யல்லவோ முன்னம் துரோபதிக்குச் செய்த அவமானங்களைப் பொறுத்துக்கொண் டிருந்தாய். அடா மூடா! பிரதிக்ஞை செய்தபடி அஞ்ஞாதவாசத்தை நிறைவேற்றுதற்கு முன்னமே ஆயுதத்தைப் பிடித்துக்கொண்

டு வெட்கமில்லாமல் வெளியில் வந்தது மன்றி என்னையும் தூஷிக்கிறாயே! இப்போது உனக்கு உபபலமாக முப்பத்து முக்கோடி தேவர்களோடுகூட தேவராஜன் வந்தாலும் அவனைப் பரிவாரங்களோடு இந்த ரணக்களத்துக்கே பலியாக்குவேன் என்று சொல்லி மனக் கொதிப்போடு கொடுமையான பாணங்களை அர்ச்சுனன் மீதில் வருஷித்தான். அர்ச்சுனனோ அந்தப் பாணங்களையெல்லாம் பாதி வழியிலேயே தன் னம்புகளினாலே பொடியாக்கிக் குவித்துக் கர்ணனுடைய உடம்பெல்லாம் பாணங்களினாலே பொத்தினான்.

இவ்வகையாய் சத்த வீர ரிருவருக்கும் மகா யுத்தம் நேரிடும்போது பூமியும் ஆகாசமும் பாண மயமாகக் காணப்பட்டது. சூரியனும் ஒளி மழுங்கி நின்றான். வாயுவும் வீசமாட்டாமல் நின்றான். பாணங்களின் வேகங்களினாலே அநேக ஜந்துக்கள் மாண்டன. வானத்தில் அபசகுனங்களான குறிகள் பல காணப்பட்டன. இப்படியிருக்குமளவில் அர்ச்சுனன் விடுத்த பாணங்களினாலே தன் வில்லானது முறியக் கண்டு கர்ணனானவன் மிகுந்த கோப மடைந்து ஓர் சத்தியென்னு மாயுதத்தை யெடுத்து அர்ச்சுனன்மீதிற் பிரயோகித்தான். அர்ச்சுனனும் அந்தச் சத்தியை அநேக அம்புகளினாலே துணித்துத் தள்ளினான். இதற்குள்ளே கர்ணனானவன் வேறு வில்லை யெடுத்து வளைத்து நாணிபூட்டி அநேக பாணங்களைத் தொடுத்து நான்கு பாணங்களினாலே அர்ச்சுனனது நான்கு குதிரைகளையும் ஆறு பாணங்களினாலே அவன் சாரதியையும் பத்து பாணங்களினாலே அனுமத்துவசத்தையும் அறுபது பாணங்களினாலே அர்ச்சுனனையும் அடித்து அக்கினி காட்டை எரிக்க எத்தனப்படுவது போல் அர்ச்சுனனை யெரிக்கவேண்டுமென்று யத்தனப் பட்டான்.

இப்படியிருக்க, சங்கத்தொனியாகிய இடிமுழக்க முள்ளதும் வானரத் துவசமாகிய மின்னற் கொடியோடு கூடியதும் அம்புகளாகிய மழைகளைப் பொழிகின்றதுமாகிய அர்ச்சுனனாகிய காளமேகமானது கோபமாகிய வுலர்ந்த விறகோடு கூடி சிவந்த விழிகளாகிய சுவாலைகளை வீசிக்கொண்டு அம்புகளாகிய நெருப்புப் பொறிகளை விசிறுகின்ற கர்ணனாகிய அக்கினியை யவித்தது. எப்படியென்றால் அந்தக் கர்ணன் தன் முழு சாமார்த்தியமும் விளங்கும்படி பல வகை யம்புகளையும் ஓய்வில்லாமல் பிரயோகிக்கிறபோது அந்த வேகத்தை இலேசாய் தடுக்கக் கூடாமையாலே அர்ச்சுனன் அதிக கோபாவேசங்

கொண்டு கர்ணனைச் சங்கரிக்கவேண்டு மென்று பிரம்மாஸ்திரத்தை ஓ.ரம்பிலே சந்தானஞ் செய்து விட்டான். விடவே அவ்வஸ்திரமானது அநேக கோடி சூரியனைப்போல் ஜொலித்துக்கொண்டு வரக் கண்டு அந்தக் கர்ணன் சுபாவமாய் அஸ்திரங்களுக் கஞ்சாதவனானலும் பிரம்மாஸ்திரத்தி னிடத்திற் பய மில்லா திருக்கும்படி வரம் பெற் றிருந்தாலும் அந்த அஸ்திர மகிமையினலும் அர்ச்சுனனுடைய அஸ்த லாகவத்தினலும் அதற்கு பதிலாக அஸ்திரப் பிரயோகஞ் செய்யத் தனக்குத் தோன்றாமையாலும் அர்ச்சுனனுடைய பாணங்களைச் சகிக்கக் கூடாமையினலும் யாவரும் பார்த்துக்கொண்டே யிருக்கையில் அந்த ரண களத்தை விட்டு ஓடிப்போனன்.

கேளீர் ஜநமேஜய மகாராஜாவே ? இவ்வகையாய் மகா வீரனும் அஸ்திர சாமர்த்திய முள்ளவனு மாகிய கர்ணன் அர்ச்சுனனுக்கு முன் னிற்கமாட்டாமல் யுத்தகளத்தை விட்டோடிப்போகவே அர்ச்சுனனவன் இள நகை நகைத்து விராடகுமாரனைப் பார்த்து கேளாய் ராஜகுமாரா, சுத்த வீர னென்று பேர் பெற்ற கர்ணன் நமக்குத் தோற்று ஓடினபடியினலேயே நாம் வெற்றி பெற்றோம். ஆகையால் சத்துருக்களின் மனம் நடுநடுங்கும்படியாக சங்கத்தைப் பூரிக்கவேண்டும். இனி நீ மனந் தளராமல் மகா ரதராகிய துரோணசாரிய ரிடத்திற்குத் தேரை நடத்து. அவரோடு யுத்தம் பண்ணி அவ ரனுக்கிரகத்தையும் கீர்த்தியையும் சம்பாதிக்கவேண்டும் என்று சொல்லி பிரளய காலத்து மேக முழக்கத்திற் கொப்பாய் சங்கத்தை யெடுத் தூதி தனுசில் அஸ்திரங்களைத் தொடுக்க யோசித்தான். இப்படி யிருக்க உத்தரனனவன் இதுகளை யெல்லாங் கண்டு மனந் தளர்ந்து அர்ச்சுனனைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறான்.

கேளீர் மகாராஜாவே, முன்னமே நான் உம்முடைய காண்டீவத்தையும் அதின் நாணேசையையும் சங்கத் தொனியையும் கேட்டு திகி லடைந் திருக்கிறேன். இப்போது விசேஷமாக உமது பராக்கிரமம் ஜொலிப்பதையும் அஸ்திரப் பிரயோக லாகவத்தையும் அடிக்கடி சங்கத்தொனி குணத்தொனிகள் செய்வதையுங் கண்டு உடல் நடுக்கமுறக் கைகால்கள் வெலுவெலுக்க ஒன்றுந் தோற்றாம லிருக்கிறேன். ஆனதனலே நா னுமக்கு இனி சாரத்தியஞ் செய்யமாட்டேன். தைரியமும் சாமர்த்தியமு முள்ள சாரதியைத் தேடிக்கொள்ளும் என்று சொல்லிய உத்தரனைப் பார்த்து அர்ச்சுனன் சொல்லுகிறான். ஏது உத்தரகுமாரா, உனக்கு இத்தனை அதைரியம்! க்ஷத்திரிய

வமிசத்திற் பிறந்து எனது பேச்சுகளைக் கேட்டு என்னாலே காக்கப் பட்டுக்கொண் டிருக்கிற உனக்கு இப்படிப்பட்ட கெட்ட குணம் இருக்கக்கூடாது. பயப்படாதே. மனதை உறுதிப்படுத்திக்கொள். உன்னையே சாரதியாக வைத்துக்கொண்டு இந்தச் சமுத்திரத்தைக் கலக்குகிறேன். இப்போது தீவரமாய் துரோணாசாரியருடைய ரதத் தின் சமீபத்தில் நமது ரதத்தை நடத்து; அவரோடு நான் வெகு விநோதமாய் தரும யுத்தம் பண்ணுவேன். அவரும் என்னோடு அப் படியே யுத்தஞ் செய்வார். அந்த மகானுபாவர் வேதசாஸ்திர புராண முதலிய சகல கலைகளையுங் கற்றவர். நீதியிலும் புத்தியிலும் பிருகஸ் பதிக்கு மதிசயப்பட்டவர். தனுர்வித்தையைச் சாங்கமாகக் கற்றவர். பெருமை பெற்ற சகல அஸ்திரங்களையும் பிரயோகிக்க வல்லவர். என்னிடத்தில் மிகவும் வாச்சலிய முள்ளவர். இப்படிப்பட்ட ஆசா ரியரோடு க்ஷத்திரிய தருமத்தை யனுசரித்து யுத்தஞ் செய்யவேண் டுவதே நியாயம். இதுதான் அவருடைய அனுக்கிரகம் பெறுதற்கு முக்கிய காரணம். ஆதலால் நீ செங்குதிரைகள் கட்டிய தேரி னிட த்திற்கு வெண்குதிரைகள் கட்டிய தேரை நடத்து. கர்ண யுத்தத்தி லும் அதிசயத்தை அவ் யுத்தத்திற் காணுவாய் என்று சொல்லக் கேட்டு உத்தரன் மன வுறுதிகொண்டு தேரை யப்படியே துரோணரி டத்திற்கு நடத்தினான். துரோணரும் தனக்கு முக்கிய சிஷனும் சூர னுமாகிய அர்ச்சுனன் தன்னோடு யுத்தத்திற்கு வரக் கண்டு சந்தோ ஷப்பட்டு தமது தேரை அர்ச்சுனன் தேருக் கெதிரிற் கொண்டுவ ந்து நிறுத்தினார். அப்போது அர்ச்சுனன் அவருக்குச் சாஷ்டாங்க மாக தெண்ட னிட்டு சுவாமி, என் னாசாரியரே? சிஷனை நான் தே வரீருடைய கிருபா கடாக்ஷ பலத்தினாலே வனவாசத்தையும், அஞ் ஞாத வாசத்தையும், நிறைவேற்றி தேவரீர் திருவடிகளைக் காணும் படியாகிய பாக்கியத்தைப் பெற்றேன். ஆசாரியரும் மகா பராக்கிர மசாலியு மாகிய தேவரீரோடு யுத்தஞ் செய்ய முயல்வது பலவகை யிலும் அநியாயமா யிருந்தாலும் யுத்தகளத்தில் வீரனுக்கு முன் வந் து யுத்தஞ் செய்யாமற் போவது க்ஷத்திரியனுக்கு அதரும மென்று பெரியோர் சொல்வதற்கு அஞ்சி இங்ஙனம் சாகசஞ் செய்யத் துணி ந்தேன், பொறுத் தருளவேண்டும். ஆகிலும் முன்னுதாய் தேவரீர் என்மீதில் அம்பை விடுத்தால் பின்னே நானும் அம்பை யெடுக்கலா மென்று நினைக்கிறேன். உம்மை வெல்வது மிகவும் அசாத்திய மெ ன்பது தெரியாமல் வர வில்லை. மற் றெதற் கென்றால், தேவரீ ரனுக்கி ரகம் பெறவேண்டு மென்று வந்தேன் என் றிப்படி சொல்லி தன் சங்கத்தை யெடுத் தூதினான். துரோணர் அர்ச்சுனன் பேச்சைக்

கேட்டு வெகு சந்தோஷப்பட்டு அவனுக் கெதிராக நின்று தன் வி
ல்லை வளைத்து இருபத்தொரு பாணங்களைத் தொடுத்து பிரயோகம்
பண்ணினார். அர்ச்சுனனும் இருபத்தொரு பாணங்களினாலேயே
அந்தப் பாணங்களைத் துண்டித்துத் தள்ளினான். அது கண்டு துரோ
ணாசாரியர் கிஞ்சித்து கோபத்தை வகித்து ஆயிரம் பாணங்களை வி
டுத்து அர்ச்சுனனுடைய தேரை மறைத்தார். அப்போது பார்க்கின்
றவர்களுக்கு அர்ச்சுனனைக்குறித்து திகி லடையும்படியா யிருந்தது.
அவ் வர்ச்சுனன் ஒரு க்ஷணத்திற்குள்ளாகவே அவைகளைச் சிதற
வடித்து அநேக மர்மிர பாணங்களினாலே துரோணாசாரியரை மறை
த்துச் சிங்கநாதஞ் செய்தான். துரோணர் அவைகளை யறுத்துத்
தள்ளினார். இவ்வகையாய் அவ் விருவரும் தங்கள் சாமர்த்தியங்க
ளெல்லாம் வெளிப்பட யுத்தஞ் செய்யும்போது இரண்டு ரதங்களும்
ஒன்றோ டொன்று நெருங்கியிருந்தபடியினாலே குதிரைகளும் து
வசங்களும் ஒன்றோ டொன்று யுத்தஞ் செய்கின்றனபோற் காணப்
பட்டது. அது பார்க்கின்றவர்களுக்கு வெகு விநோதமா யிருந்தது.
இப்படி யிருக்க துரோணாசாரியர் வெகு வேகத்தோடு கூடி அக்கி
னிச் சுவாலைகள்போன்ற அநேக வாயிரம் பாணங்களை ஓய் வில்லா
மல் பிரயோகித்து அர்ச்சுனனுக்கு மூச்சு விடவுங் கூடாம லிருக்கு
ம்படிக்கு வருஷித்தார். அந்தப் பாண வருஷத்தினாலே அர்ச்சுனனு
டைய தே ரிருக்கு மிடங்கூட தெரியாமல் ஆகாசமும் பூமியும்
நிறைந் திருந்தது. அது கண்டு தேவர் முதலானோர் துரோணாசாரிய
ருடைய சாமர்த்தியத்தை மிகவும் சிலாகித்தார்கள். உடனே அர்ச்
சுனன் கிரணங்களினாலே பனியை நீக்கி வெளிப்படும் சூரியனைப்
போல் அந்தச் சரக்கூட்டைத் தனது சரங்களினாலே நீக்கி வெளிப்
பட்டு கோபாவேசங் கொண்டு எடுத்தலுந் தொடுத்தலுந் தெரியாம
லிருக்கும்படி ஓர் கணப்பொழுதில் அளவற்ற அம்புகளை யெய்து
துரோணாசாரியருடைய ரதத்தை மறைத்தான். அப்போது அர்ச்சு
னனுடைய சாமர்த்தியத்தையும் மிகவும் கொண்டாடினார்கள். இவ்
விதமாக அந்த சூர ரிருவரும் ஒருவர்மீதி லொருவர் ஆக்கினே
யாஸ்திரம், வருணாஸ்திரம், அயிந்திராஸ்திரம், வாயவியாஸ்திரம், மு
தலான நானாவித அஸ்திரங்களைப் பிரயோகிக்கிறதும் பிரதி யஸ்தி
ரங்களைத் தொடுக்கிறதுமாக வெகு பயங்கரமான யுத்தஞ் செய்யவே
சகல ராஜாக்களும் வெகு பய மடைந்து அவ் யுத்தகளத்தை விட்
டோடிப்போனார்கள். அன்றியும் பெருங் காற் றடிக்குமளவில் நெரு
ங்கிய தோட்டத்தில் காய்க ளுதிர்ந்து, சில கிளைகள் முறிந்து,
சில நடுவில் முறிந்து, சில வேரோடு பெயர்ந்து சில மரங்கள் நாச

மடைந்தாற் போல அந்தச் சேனையில் யானை குதிரை தேர் காலாள் வீர னென்னு மிவ வெல்லாம் கை யற்று, கா லற்று, மார் பிளந்து, தலை யுடைந்து, இடை முறிந்து, விழுந்ததுபற்றி ஊழிகாலத்து லோகம்போல் அந்தப் பூமி பயங்கரமாகவும் அருவருப்பாகவும் இரங்கத்தக்கதாகவு மாயிற்று. இப்படி யிருக்க ஆகாசத்தில் ஒரு கோஷமுண்டாயிற்று. அ தென்ன வென்றால், இந்த லோகத்தில் துரோணருக்குச் சமானமான சூரனும், தயிரியசாலியும், அஸ்திர சாமர்த்தியமும், அஸ்த லாகவமு முள்ளவன் ஒருவனு மில்லை. அப்படிப்பட்டவரை யெதிர்த்து அவருடைய பாணங்கள் வீணாகும்படி செய்யா நின்ற இவ் வர்ச்சுனனுடைய சாமர்த்தியத்தை என்ன வென்று சொல்லலாம்! ஓ கோ கோ! இவனை வெல்ல யார் திறம் ? அதற்காக இந்தத் துரோணர் முயல்வது வீண். தேவேந்திரனையும் வெற்றி கொண்டவ னல்லவோ, இவ் வர்ச்சுனன் ? இன்றைக்கு என்ன முடி வாகுமோ ? உலகத்துக்கு என்ன அபாயம் வருமோ ? தெரிகிலோ மென்று தேவர் ஒருவரோ டொருவர் பேசியது கேட்டு துரோணரும் மனதில் இஞ்சித்து அச்ச முற்று அர்ச்சுனனுடைய பராக்கிரமத்தைப் புகழ்ந்து தமது பூர்ண சக்தியும் வெளிப்படும்படி பாணப் பிரயோகஞ் செய்ய வாரம்பிக்க, அர்ச்சுனன் அவருடைய சக்தி பராக்கிரமங்களைக் கண்டு வெகு ஆச்சரியமும் சந்தோஷமும் பொருந்தி இப்படிப்பட்ட இவரை நாம் ஒற்றைக் கையால் அம் பெய்கிற விதத்தினால் ஜயிக்கக்கூடாது. மற் றெப்படி யென்றால், நமது சவியசாசியென்கிற நாமத்தின் பொருளை ஆசரிக்க வேண்டு மென்று கருதி காண்டீவத்தை வளைத்து ஓர் புறத்தை மோவாய்க் கட்டையினாலும் மற்றோர் புறத்தைக் காலினாலும் அமுக்கிக்கொண்டு இரு கைகளினாலும் சரமாரி பெய்யத் துவக்கினான். துவக்கவே பூமி ஆகாசம் முழுதும் பாணங்கள் நிறைந்து வாயுபகவானுக்கும் கொஞ்சமும் அசையக்கூடா வண்ண மாயிற்று. அந்தகாரமானது பிரளய காலத்தில் மூடிக்கொள்வதுபோல் மூடிக்கொண்டது. இவ்விதமாய் அர்ச்சுனன் மென்மேலும் பராக்கிரமம் விருத்தி யடைந்து சரங்களைச் சொரியுமளவில் துரோணாசாரியர் கை கால்களை யசைக்கவும் மூச்சு விடவும் சக்தி யில்லாதவராகி திக்பிரமை கொண்டு ஸ்தம்பம்போல் சும்மா நின்றுவிட்டார். அப்போது சரக் கூட்டங்களினாலே துரோணாசாரியருடைய ரதமே மறைக்கப்பட்டிருந்தபடியினாலே சகலமானபேர்களும் துரோணாசாரியருக்கு அபாயம் நேரிட்ட தென்று நினைத்து ஹாஹா வென்று கத்தினார்கள். அது கண்டு இந்திரன் முதலானோர் அர்ச்சுனன்மீதில் பூமழை பெய்

தார்கள். இப்படியிருக்க அசுவத்தாமாவானவர் தமது பிதாவுக்கு நேரிட்ட விபத்தைப் பார்த்து வெகு கோப மடைந்து வேகமான தேரின்மீதி லேறி பாண வருஷம் வருஷித்துக்கொண் டோடி வந்தார். இதற்குள்ளாக துரோணாசாரியரானவர் வில் கவச முதலானதுகள் அறுந்து தேக மெல்லாம் காய மடைந்து உதிரம் பெருக வேதனை பொறுக்கமாட்டாமல் யுத்த பூமியை விட் டோடிப் போனார். அர்ச்சுனனோ அசுவத்தாமாவின் வேகத்தைப் பார்த்து மிகவும் ஜாக்கிரதையாய் தேரை நடத்தி அவருடைய பாண வருஷத்தைத் தடுத்தான். தடுக்கவே மறுபடியும் அசுவத்தாமர் அநேக பாணங்களைப் பிரயோகித்தார். அர்ச்சுனனும் அவைகளைத் தடுத்து மற்றுஞ் சில பாணங்களினாலே வெலு வெலுக்க வடித்தான். இப்படி யொருவரோ டொருவர் முழு சாமர்த்தியமும் வெளிப்பட வெகு விநோதமாக யுத்தஞ் செய்யும் போது பாண வோசையானது மூங்கிற் காடு ஒன்றோ டொன்று இழையுங்கால் நெருப்புப் பொறிகளைச் சிந்திக்கொண்டு எப்படி சடசட படபட வென்று திக் கெல்லாம் வியாபிக்குமோ அப்படியே திக்கெல்லாம் வியாபித்தது. அந்த யுத்தத்தில் அசுவத்தாமர் சில அம்புகளை அஸ்தலாகவமா யெய்து பார்த்தனது நான்கு குதிரைகளையும் சாரதியையும் துசத்தையும் நன்றாக அடித்து வெகு சூக்ஷ்மமாகப் பார்த்து காண்டீவத்தின் நாரியை யறுத்து விட்டார். அந்த லாகவத்திற்காக தேவர்களும் மிக வாச்சரியப்பட்டார்கள். அந்தப் பார்த்தனோ அறுந்த நாரியையே முடிந்து கட்டிக் கொண்டு கோபத்தாலே புன்சிரிப்பு கொண்டு அநேகங் கூர்மையாகிய சரங்களை விடுத்தான். அசுவத்தாமர் ஆறடி பின்னிடைந்து வில்லைக் குண்டலமாக வளைத்துச் சரங்களைத் தொடுத்து அர்ச்சுனனது சரங்களை யறுத்துத் தள்ளினார். அது கண்டு அர்ச்சுனன் கூர்மையும் காந்தியும் பொருந்திய பல் வகை யம்புகளை யெய்து ஆசாரிய புத்திரனைக் கண்விழிக்க வொட்டாம லடித்து அவருடைய தேரின் குதிரைகளையும் கால்கள் முறியச்செய்து அவர் கையி லிருந்த வில்லை அ ண்டித்துச் சாரதியின் சிரத்தைப் பெருங் காற்று பனங் காயைத் துணித் தெறிவதுபோல் ஓர் அர்த்த சந்திர பாணத்தினால் தூரத்தில் தள்ளினான். பின்பு அசுவத்தாமர் மிகுந்த வேதனையையும் லக்ஷியஞ் செய்யாமல் சீக்கிரத்தில் மற்றொரு தேரின்மீதி லேறி மறுபடியும் யுத்தஞ்செய்ய வோடிவந்தார். அப்போது அவ்விருவருக்கும் ஆச்சரியப் படும்படியாகிய யுத்த முண்டாயிற்று. அதில் குருகுமாரர் அதிசயித்த கோப வேகத்தினாலே ஜொலிக்கின்ற அக்கினிபோன்ற அநேக வாயிரம் அம்புகளைப் பிரயோகித்து இருக்கு மிடமும் தெரியா

மவிருக்கும்படி மறைத்தார். மறைக்கவே கிரீடியானவன் அதிகமாக வெகுண்டு பிரளயகால மேகம் வருஷிப்பதுபோல் ஒரு முகூர்த்த காலம் பாணங்களை வருஷித்து அவருடைய குதிரைகள் ரதம் துசம் சாரதி முதலாயினவற்றைச் சூரணமாக்கி அவருடைய தேகமெல்லாம் சல்லடைக் கண்ணாய்ப் போகும்படி செய்தான். அவ்வசுவத்தாமரோ எதிரியின் வேகத்தைத் தடுப்பதற்கு முயன்று தன் னம்புப்புட்டிலி லிருந்த அம்புகளை யெல்லாம் பிரயோகித்து அதைத் தடுக்கமாட்டாமையாலும் தூணீரங்களில் அம்புக ளில்லாமற் போன படியினாலும் ஒன்றும் தோற்றாமல் திக்பிரமையாய் நின்றார். இவ்வகையாய் அசுவத்தாமாவும் தோல்வி யடைந்து நிற்கக் கண்டு மஹா சூர ராகிய கிருபாசாரியரானவர் யுத்த சன்னத்தராகி அர்ச்சுனனுக்கு எதிரில் வந்து நின்றார். அது கண்டு அர்ச்சுனனும் அதிக சந்தோஷத்தோடு தன் தேரையும் திருப்பி அவருக்கெதிராகக் கொண்டுவந்து நிறுத்தி கூர்மையான அம்புகளைப் பிரயோகித்து கிருபருடைய தேக முழுவதும் பிளக்கும்படி செய்தான். அதனாலே கிருபர் உதிரம் பெருகி நன்றாய்ப் பூத்த முருக்க மரம்போல் விளங்காநின்ற தமது சரீரம் கோபாக்கினியினால் அதிகமாக சிவந்து விளங்க வச்சிராயுதத்திற்கு ஒப்பா யிருக்கிற பல பாணங்களினாலே கிரீடியின் அங்கமெல்லாம் துளைப்படும்படியாக அடித்தார். அடிக்கவே அர்ச்சுனனும் மிகவும் வெகுண்டு ஓர் பிறையம்பை விடுத்து ஆசாரியரது கொடிமரத்தை யறுத்துத் தள்ளி மற் றநேக முள் ளம்புகளினாலே அவரது தேருக்குக் காவலான சந்திரகேது, சுகேது, சித்திராசுவன், மணிமான், முஞ்சமாலி, சேமவண்ணன், சுதன், அதிரதன், சுசேணன், அனிட்டன், நிருகேது, முதலிய வீரரை வீழ்த்தி, மறுபடியும் வேகமாகப் பதின்மூன் றம்புகளைத் தொடுத்து ஒன்றினால் நுகத்தடியையும், நான்கினால் குதிரைகளையும், ஒன்றினால் சாரதியின் சிரத்தையும், மூன்றினால் தேரினது திரிவேணு வென்னு முறுப்பையும் இரண்டினால் உருளைகளின் கன்களையும், ஒன்றினால் அவர் வில்லையும் அறுத்து மிகவும், தீக்ஷ்ணமாகிய ஓ ரம்பை அவர் மார்பு பிளக்கும்படி யெய்தான். இப்படியாகவே கிருபர் மகா மகிமை பொருந்தி விளங்காநின்ற ஓர் வேலாயுதத்தை யெடுத்துச் சுழற்றி விடுத்தார். அது சுவாலைகளோடு கூடி வரும் அக்கினிபோல் ஜொலித்துக்கொண்டு ஆகாசத்தில் வெகு வேகமாக வரக் கண்டு பார்த்தன் கிஞ்சித்து மஞ்சாமல் பிறையம்புகளை யெய்து அதைத் துண்டந் துண்டமாக அறுத்துத் தள்ளினான். தள்ளவே கிருபர், தமது சக்தி வீணானது கண்டு வெகுண்டு பக்கத்தி லிருந்த நெடிய கதாயுதத்தை யெடுத்து த

மது வல்லமை யுள்ளமட்டும் சுழற்றி விடுத்தார். அப்படி விடுக்கப்ப
ட்ட கதையானது திசைகளெல்லாம் ஜொலிக்கும்படி விளங்கிக்
கொண்டு ஊழிகாலத் தியமனுடைய காலதண்டமோ வென மயங்
கத்தக்க ரூப முடையதாய் சீறிக்கொண்டு வருகின்ற காளகூடசர்ப்
பம் போன்றதுமாய் ஆகாசத்தில் வராநின்ற கதையை அர்ச்சுனன்
இரண்டு அர்த்தசந்திர பாணங்களைப் பிரயோகித்துத் துண்டித்துத்
தள்ளினான். பின்பு ஆசாரியர் ஓர் கத்தியை விடுக்க அதையும் அர்ச்சு
னன் துணித்துவிட, மற்றோர் கத்தியைக் கையிலேந்தி தேரினின்றும்
குதித்து தன்னை நோக்கி யோடிவரக் கண்டு அர்ச்சுனன் தன்னைச்
சங்கரிக்கும்படியான முயற்சி ஆசாரியரிடத்தி லிருக்கிற தென வறி
ந்து வெகு நேரமாய் சில சரங்களினாலே அந்தக் கத்தியைத் துணித்
துத் தள்ளினான். தள்ளவே கிருபர் பொறுக்கக் கூடாத கோபாவே
சங் கொண்டு பற்களைக் கடித்துக் கொண் டோடி சமீபத்தி லிருந்த
அசுவத்தாமாவின் தேரி லேறி ஓர் வில்லைக் கையி லெடுத்து சரங்க
ளைத் தொடுக்க முயன்று தூணீரத்தில் கையிட அதில் சரங்க ளில்லா
திருந்தபடியினாலே தமது முயற்சி வீணானது கண்டு ஒன்றுந் தோற்
றாமல் கண்ணினா லெரிக்கிறவர்போல் அர்ச்சுனனை நோக்கி நின்
றார். இப்படி யிருக்க வீஷ்மர் துரோணரைப் பார்த்துச் சொல்லத்
தொடங்கினார்.

கேளீர் ஆசாரியரே? இப்போது அர்ச்சுனன் வெகு பராக்கிரம
ஆவேசமடைந்து கர்ணனையும், உம்மையும், அசுவத்தாமாவையும்,
கிருபரையும், மிகவும் எளிதில் ஜயித்து கர்ச்சித்து இன்னும் நமது
சேனையி லிருக்கும் வீரரை யெல்லாம் தும்சஞ் செய்ய முயல்கின்
றான். ஆதலால் அவனோடு நாம் ஒவ்வொருவராய்ப் போர் செய்யாமல்
யாவரும் ஒன்றாய்ச் சேர்ந்து பூர்ண சக்தியோடு போர் செய்தால் அவ
னை வெற்றிகொள்ளலா மென்று தோற்றுகின்றது. ஆகையால், நா
மியாவரும் சேர்ந்து போரிடுவோ மென்று சொல்லியதைக் கேட்டு
துரோணர் முதலானோர் அப்படியே சம்மதித்தார்கள். பின்பு பீஷ்ம
ர், துரோணர், கிருபர், அசுவத்தாமர், கர்ணன், மற்று முள்ள சூரர்
பலரும் கூடிக்கொண்டு சமுத்திரம் போன்ற சேனையோடுகூட வெகு
அட்டகாசமாய்ப் பெரிய பருவதத்தின்மீதில் சப்த மேகங்களுங் கூ
டி வருஷித்தாற்போல் பாணங்களை வருஷிக்கத் தலைப்பட்டார்கள்.
அப்போது அந்த மஹா வீர னொருவன்மீதி லொரு முகமாய்ப் பாய்
ந்த கவுரவ சேனையில் யானை குதிரைகளின் கர்ச்சனைகளும் வீரர்க
ளின் அட்டகாசங்களும் ஒன்றோ டொன்று தாக்குறு மாயுதங்களி

ணேசையும் பேரிகை முதலான வாத்தியங்களின் முழக்கமும் உண்டாகி திசைகளைச் செவிடுபடச் செய்தன. இவ்விதமாய்ப் பிரளய காலத்திற் பொங்கிவருங் கடல்போல் விளங்காநின்ற சேனையைக் கண்டு அர்ச்சுனனானவன் இது தான் நமது பராக்கிரமம் வெளிப்படும்படியான கால மென்று மிகுந்த மகிழ்ச்சி யடைந்து நடுப்பகற்காலத்தில் ஆயிரங் கிரணங்களை உலகத்தின்கண் பரப்பி விளங்கும்படியான சூரிய பகவானைப்போல் கண்ணெடுத்துப் பார்ப்பதற்கு மிசையாத தேஜசுள்ள பல வகை யம்புகளை யெய்துகொண்டு அந்த சேனைக்கு எதிரே வந்து நின்றான். அப்போது அந்த மஹாநுபாவனைக் கண்டு கவுரவவீரர்கள் ஆச்சரியம், பயம், பிரமை, இம்மூன்றையும் ஒரே காலத்தி லடைந்து நின்றார். அர்ச்சுனனோ அளவற்ற உச்சாகமடைந்து ஓய் வில்லாமற் சரமாரி பொழிந்தான். பொழியவே அந்தச் சயினியத்தி லுள்ள யாவரும் தனித்தனியே உத்தேசித்து விட்ட அம்புகளினாலே பொத் துண்டதைகாட்டிலும் அதிக வேதனை யடைந்து எவ னெவ னெந்தெந்த விதமாக யுத்தம் பண்ண முயன்றானோ அப்படி யப்படியே வாகனங்கள்மீதிலேயே சிலரும் தரையிற் சிலரும் ரணகளத்திற்குப் புறத்திற் சிலருமாக வீழ்ந்து மூர்ச்சை யடைந்தனர். சிலர் உயிர் விட்டனர், சிலர் அங்கச் சேத முண் டலர்த்தினர், சிலர் பெருங்காற்று வீசுமளவில் ஆகாசத்திற் பறந் தோடுங் குப்பை போ லானார்கள்.

கேளீர் ஜநமேஜய மஹாராஜாவே? அந்த அர்ச்சுனன் பதின் மூன்று வருஷகாலம் மிகுந்த துன்பத்தை யடைந்ததினாலும் பலவித அவமானத்தை யடைந்ததினாலு முண்டாகிய கோப மென்னும் ஊழிகாலத்தீயை அந்தச் சேனை யென்னும் போரி விட்டா னென்று சொல்லவேண்டுமே யல்லது அம்புகளை யெய்தா னென்று சொல்லவொண்ணாது. எனெனில், எள்ளுங்கூட இடையிற் புகாமற் சேனைகளினாலே முழுதும் நிறைந்திருந்த யுத்த பூமி ஒரு முகூர்த்த காலத்திற்குள்ளே வெறு வெளிபோலவும் சுடுகாடு போலவு மாயிற்று. முன்னிருந்த யானை குதிரைகளின் கர்ச்சனைக்குப் பதிலாக நாய் நரிகளின் ஊளையும் சூரர்களின் அட்டகாசங்களுக்குப் பதிலாகப் பேய்களின் கோலாகலமும் உண்டாயின. சிதைந்த சரீரங்களின் குப்பைகள் மலைகள்போ லிருந்தன. காகம் கழுகு முதலானவைகளுக்குச் சந்தோஷ காரணமான வுதிர வாறுகள் ஓடின. உயிரோடு விழுந்த சிலரும் தம்மேல் விழுந்த பிணக்கூட்டத்தினாலே யழுந்தி மரித்தனர், சிலர் சிவன் தப்பினாற் போது மென் றோடி ஒளிந்தனர். இவ்

வகையாய் அந்தச் சேனை சின்னபின்னமாய் சிதறி வீர ரெல்லாம்
பின் வாங்கக் கண்டு தேவேந்திர குமாரனாகிய பாண்டவோத்தமன்
சங் கெடுத்துப் பூரித்து சீக்கிரமாய் நான்கு பாணங்களைத் தொடுத்து
இரண்டு பாணங்களினாலே பீஷ்மரைப் பாத வந்தனஞ் செய்து மற்
றிரண்டு பாணங்களினாலே காதண்டையில் குசலப் பிரசினம் பண்
ணினான். அது கண்டு வீஷ்மர் அர்ச்சுனன் வெற்றி பெறுக வென்று
வாழ்த்தினார். இப்படி யிருக்க கர்ணனுடைய குமாரனாகிய விருஷ
சேன னென்பவன் மனம் பொறாமல் திவ்வியமான தேர்மீதி லே
றி வந்து வில்லைக் குண்டலம்போல் வளைத்துத் தனது அஸ்த
லாகவ மெல்லாம் வெளிப்படும்படி சரமாரி பொழிந்தான். அர்ச்சு
னனும் வெகு விளையாட்டாகவே தீக்ஷணமான அம்புகளை யெய்து
அந்தச் சரமாரி தடுத்து வச்சிராயுதத்திற் கொப்பாகிய வோ ரர்த்த
சந்திர பாணத்தை விடுத்து அந்த விருஷசேனனது வில்லைத் துண்
டித்து கோடை யிடியோ டொத்த ஐந்து பாணங்களை அவன் மார்
பிற் பாயும்படி யெறிந்தான். அந்த விருஷசேனன் அந்தப் பாணங்
கள் மார்பிற் பாயும்போது பதைபதைத்துத் துடிதுடித்துக் கைகால்
வெலு வெலுத்துக் கண்கள் மின்மினி பறந்து தேரினின்றுங் குதி
த்து ஓடிப்போனான். அது கண்டு அட்டகாசஞ் செய்து இறுமாந் தி
ருக்கிற அர்ச்சுனனைப் பார்த்து பொறுமைகொண்டு துச்சாதனன்,
விகர்ணன், விவிம்சதி, சகுனி, இவர் நால்வரும் வந்து வளைத்துக்
கொண்டு ஏக காலத்தில் பாணப் பிரயோகம் பண்ணினார்கள். அந்
தப் பாணங்க ளெல்லாம் வெகு வேகத்தோடு தன்மீதிற் பாய்ந்தா
லும் அர்ச்சுன மஹாராஜன் லக்ஷியம் பண்ணாமல் தனது கோபாக்
கினியின் சுவாலைக ளென்னும்படியான கொடிய பாணங்களைப் பிர
யோகித்து ஒரே காலத்தில் அந் நால்வருடைய துவசங்களையும் தே
ருருளைகளின் கண்களையும் குதிரைகளையும் விற்களையும் அறுத்துப்
போட்டான். போடவே அந் நால்வரும் அர்ச்சுனனுடைய சரவேக
த்தைச் சகிக்கமாட்டாமையாலும், வேறு வில்லெடுக்கும்படி சாவகா
சப் படாமையாலும், வந்த வழியே பார்த்து ஓடிப்போனார்கள். அ
தைக் கண்டு புன்சிரிப்புகொண்டு பார்த்தவனானவன் தின் சாரதி
யை நோக்கிச் சொல்லுகிறான். பார்த்தாயோ உத்தரகுமாரா? இவர்க
ளெல்லாம் என் முன் னின்று யுத்தஞ் செய்யமாட்டார்கள். மிகு
ந்த பொறாமை மாத்திர முள்ளவர்கள். ஆகையால், இவர்க ளிரு
க்கட்டும். அதோ தாளத்துவசம் விளங்காநின்ற பீஷ்மருடைய ரத
த்தின் சமீபத்தில் என் ரதத்தை யோட்டு. ஆனால் அவரோடு யுத்த
ஞ் செய்ய எனக்கு மன தில்லை. ஆகிலும் அவராய் முன்னே என்

மீதில் அம்புகளை யெய்தால் க்ஷத்திரிய தருமத்தை விடக்கூடா தாகையால் பின்னே நானும் அவர்மீதில் அம்பு எய்வேன். அவரோ பல பராக்கிரமங்களில் ஒப் பில்லாதவர். எங்களைப் பிதாவைக்காட்டிலு மதிகமான பரிவோடு வளர்த்து முன்னுக்குக் கொணர்ந்தவர். இந்தக் குரு வமிசத்திற்குச் சேகரம்போல் மிகவுங் கொண்டாடத் தகுந்தவர். பேரன்மாராகிய யாவ ரிடத்திலும் சமமாக விசுவாச முடையவரா யிருந்தாலும் என்னிடத்தில் அதிக விசுவாசம் வைத்திருக்கின்றவர். ஆனதால் எனது சாமர்த்தியத்தை வெளியிட்டு அவருக்குச் சந்தோஷ முண்டுபண்ணவேண்டும் என்று அர்ச்சுனன் சொல்லியதைக் கேட்டு உத்தரன் சந்தோஷத்துடனே தேரை பீஷ்மர் சமீபத்திற் கொண்டுபோய் நிறுத்தினான். பின்பு சாந்தனவ ரென்று சொல்லப்பட்ட பீஷ்மர் உதய பருவதத்தின்மீதில் விளங்காநின்ற சூரிய மண்டலம்போல் பிரகாசிக்கும்படியான குடையோடு கூடிய தமது திவ்ய ரதத்தை அர்ச்சுனனுக்கு எதிரே கொண்டுவந்து நிறுத்தி பயங்கரமான வில்லைக் கையி லேந்தி அளவற்ற சந்தோஷத்துடனே சங்கத்தொனி செய்தார். அது கண்டு அர்ச்சுனனும் சங்கத்தைப் பூரிக்க அந்தத் தொனிகளினாலே திசைக ளெல்லாம் எதிரொலிக்க விட, ஆகாசத்தில் தேவதைகள் இதுவரையில் நாம் பார்த்த யுத்த மெல்லாம் யுத்த மல்ல. இவ் விருவருக்கும் நடக்கப்போகின்ற யுத்தமே யுத்தம் என்று கோலாகலப்பட, அந்தத் தருணத்தில் பீஷ்மர் அர்ச்சுனனை யெதிர்த்தா ரென்று தைரிய மடைந்து சேனைத் தலைவரும் சங்கெடுத் தூதினார்கள். இப்படி யவ்வீர ரிருவரும் யுத்த சன்னாகமாக நிற்க, முதலில் பீஷ்மர் எட்டு பாணங்களைத் தொடுத்து வானரத் துவசத்தினமீது பிரயோகித்தார். அந்தப் பாணங்கள் மஹா பலமும் தீக்ஷணமு முள்ளவையானாலும் அந்தத் துவசத்தை யறுக்கச் சக்தி யில்லாமல் (மந்திர சித்தனைக் கடிக்க முயன்ற நாகங்கள் பல்லுடைந்து விழுந்தாற்போல்) கூர் மழுங்கி வீழ்ந்தன. மறுபடியும் பீஷ்மர் கொடுமையாகிய வெகு பாணங்களைத் தொடுத்து பாண்டவனது நான்கு குதிரைகள்மீதும் சாரதியின்மீதும் மார்பின்மீதும் விடுத்து இவை அர்ச்சுனனுக்குத் தீமை செய்யு மென்று நினைத்தார். அவைகளோ பாறைகளின்மீது வீழ்ந்த நீர்த் தாரைகளைப்போல் அணு அணுவாய்ச் சிதறிப்போயின. இப்படியாகவே அர்ச்சுனன் மிகுந்த கோபங்கொண்டு காண்டீவத்தில் பத்துப் பாணங்களைச் சந்தானம் பண்ணி பீஷ்மருடைய சாரதி முதலானவைகளை யடித்தான். மறுபடி சாந்தனவர் அநேக பாணங்களை அர்ச்சுனன்மீதில் விட அர்ச்சுனனும் அவர்மீதில் விட அவ் விருவருக்கு மி

வ்விதமாகவே வெகு நேரம் ஆச்சரியகரமாகிய யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் அவ் விருவரும் விடுத்த பாணங்களாலே பே ரிரு ளுண்டாகி அதில் பாணங்க ளொன்றுட னொன்று தாக்குறுவதினா லுண்டாகிய நெருப்புப் பொறிகள் மின்மினிகள் பறக்கின்றனபோற் காணப்பட்டன. அப்போது அர்ச்சுனன் மகா பராக்கிரம ஆவேசங் கொண்டு குண்டலம்போல் காண்டீவத்தை மண்டலாகார மாக்கிக் கொண்டு ராசி ராசியாய் பாணங்களைச் சாந்தனவர்மீதில் வருஷிக்க அவர் அவைகளைத் தமது பாண வருஷத்தினாலே யறுத்து விடுத்து அவன்மீதே விழச்செய்து மற்று மநேக பாணங்களை வருஷித்து, சத்துருவுக்கு அம் பெடுத்துத் தொடுக்கவும் கை வெறுவெறுக்கும்படியாக்கி அவன் தேர் முதலானவைகளோடு இருக்கு மிடமுந் தெரியாமற்போகும்படி செய்தார். அது கண்டு சகல தேவதைகளும் பீஷ்மனை மகா சாமர்த்தியவா னென்று புகழ்ந்தார்கள். சைனியத்திலிருந்தவர்களும் பீஷ்மனை மிகவும் புகழ்ந்து சந்தோஷத்தால் மிகவும் கோலாகலப் பட்டார்கள். கிரீடியோ அதற் கஞ்சாமல் யானையானது தன்மீதில் விழுந் திருக்குஞ் செத்தைகளை வெகு இலேசிலுதறி யெழுந்திருப்பதுபோல் ஒரு நொடியில் அவ்வளவு பாணஜாலங்களையும் பறக்கடித்து கர்ச்சித்து மகா தேஜோவ்வானாய் விளங்கினான். இப்படி இருவரும் அசாத்தியமாய் பாண வருஷங்களை வருஷித்துக்கொண் டிருந்தவர்கள் கேவல பாணங்களை வருஷிப்பதில் ஜயம் பெறுவது வருத்த மென்று நினைத்து. இந்திராஸ்திரம், அக்கினியாஸ்திரம், வாயுவாஸ்திரம், குபேராஸ்திரம், மேகாஸ்திரம், யமாஸ்திரம், வருணாஸ்திரம், பிரம்மாஸ்திரம், இப்படிப்பட்ட அஸ்திரங்களை யொருவர்மே லொருவர் பிரயோகஞ் செய்கிறதும் அவைகளை எதிரஸ்திரங்களால் தடுக்கிறதுமாக உலக மெல்லாம் நடுநடுங்க வெகுநேரம் யுத்தஞ் செய்து மறுபடியும் அம்புகளையே விடத் தலைப்பட்டார்கள். இப்படி யுத்தம் நடக்குமளவில் அர்ச்சுனன் லாகவமாய் ஒரு அர்த்தசந்திர பாணத்தினாலே வீஷ்மர் கையி லிருந்த வில்லைத் துண்டித்துத் தள்ள, அவர் உடனே வேறு வில்லைக் கையி லெடுத்துக்கொண்டு கணக்கில்லாமல் அர்ச்சுனன்மீதில் பாணங்களைப் பெய்ய அர்ச்சுனனும் அவைகளை வானத்திலேயே தன் பாணங்களினாலே சூர்ணமாக்கி பீஷ்மர் தேனை மறைத்துப் போட்டான். அந்தச் சந்தனு குமாரரும் பலவிதமாகிய அநேக பாணங்களைச் சொரிந்து தன்னைச் சூழ்ந் திருக்கிற சரக்கூட்டைச் சிதைத்து மற்று மநேக பாணங்களினாலே அர்ச்சுனனையும் பொத்தினார். அப்போது அர்ச்சுனன் காண்டீவத்தைக் குண்டலம்போ லாக்கி நெருப்புப் பொ

நிகளைச் சிந்தூல்படியாகிய பாணங்களைத் தொடுத்துக் காதளவு இழுத்து ஓய்வில்லாமல் விடுத்து கங்கையின் குமாருடைய தேருருளைக் காவற்காரரையும் தேரின் காவற்காரரையும் மற்று மவருடைய பரிவாரமா யிருந்தவர்களையும் கொன்று கீழே தள்ளி பீஷ்மருடைய பராக்கிரமத்தை விளக்கிக்கொண் டிருக்க, பீஷ்மரும் அவன் சாமர்த்தியத்தைக் கண்டு திகைத்து நிற்க, ஆகாசத்தில் சித்திரசேனனென்கிற கந்தருவராஜன் தேவேந்திரனோடு சொல்லுகிறான். பாரும் எங்கள் மஹாராஜாவே? உமது குமாரனாகிய பாண்டவ வீரன் மகா சூர ரென்று புகழ் பெற்ற பீஷ்மரையும் நிணக்கச் செய்து அவருடைய ரதாக்ஷகர் முதலாகிய வீரரையும் வீழ்த்தி கவுரவசேனையாகிய கடலையும் அல்லோல கல்லோலமாகக் கலக்கி பூமி ஆகாசமெல்லாம் அஸ்திரமய மாக்கி யுகாந்த காலத்து அக்கினிபோல் ஜொலிக்கிறான். இதுவரையில் இப்படிப்பட்ட சூரனை நான் கண்டதில்லை. எனக்கு மிகவு மாச்சரியமா யிருக்கிறது. கோட்டான்கள் ஜொலிக்கிற சூரியனைப் பார்க்கமாட்டாம லொளிப்பதுபோல் இங்கே இவனைக் கவுரவவீரரி லொருவரும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாமல் ஓடி ஒளிந்து தடுமாறுகிறார்கள், பாரும். ஓகோ என்ன சாமர்த்தியம்! என்ன சக்தி! என்ன பலம்! என்று சொல்லியதைக் கேட்டு இந்திரன் பேரானந்தத்தை யடைந்து கற்பகமலர் மழை பெய்யும்படி கட்டளை யிட்டான். அப்படியே தேவர் கற்பகமலர்களைப் பொழிந்தார்கள். அது அர்ச்சுனன் தேரின்மீது விழக் கண்டு அசுவத்தாமரானவர் கர்ணனை நோக்கி வாராய் கர்ணா, பாண்டவர் ஐவரையும் நானே வெற்றி கொள்வே னென்று சபை நடுவில் வெகு இறுமாப்பாய்ப் பேசி அர்ச்சுன னொருவ னாலேயே பங்க மடைந்து ஓடிவந்தாயே! அதிருக்கட்டும். இப்போது நமக் கெல்லாம் ஆதாரமாய் சவுரிய தைரிய பராக்கிரமங்களில் ஒப்பற்றவரா யிருக்கிற பீஷ்மர் அந்தப் பாண்டவ மிருத்து கையி லகப்பட்டுக்கொண்டு தடுமாறுகிறாரே! இப்போதாகிலும் உனக்குத் தைரிய மிருந்தால் போய் அவனோடு சண்டை செய். நானே வீர னென்று சும்மா தற்புகழ்ச்சி செய்து இப்போது உன் னுயிரைக் காக்கும்பொருட்டு ஓடி யொளிவதில் உனக்கு நாண முண்டாக வில்லையே? இது மிகவு மாச்சரியமா யிருக்கிறதென்று இகழ்ந்து சொல்லக் கேட்டு துரியோதனன் அவரைப் பார்த்து வாரீர் ஆசாரிய புத்திரரே ? சூரனுக்குத் தற்புகழ்வதும், யுத்தத்தில் துணிவு கொள்வதும், இயல்பே யாம். ஒரு வேளை தோல்வி யடைந்தாலும் அது குற்றமாக மாட்டாது. (ஆனைக்கும் அடி சறுக்கு மென்று) நீர் கேட்டதில்லையோ? ஆகையால் அடிக்கடி இகழ்ந்தால் வீர

னுக்கு உச்சாகம் மழுங்கி சக்தி வீணாய்ப் போகும். ஆனதுபற்றி நீர்
இந்தக் கர்ணனை அடிக்கடி யப்படி சொல்வது தகுதியல்ல வென்று
சொன்னான். இதிப்படி யிருக்க பீஷ்மாசாரியாரானவர் தமது ரதர
க்ஷகர் முதலாயினோர் மடிந்திருக்கவும் அர்ச்சுனனுடைய சாமார்த்தி
யத்தைக் கண்டு சற்று நேரம் ஆச்சரியப்பட்டு நின்று பின்பு கனுக்
களழுந்தியனவும், கழுகின் சிறகுகள் கட்டப்பட் டிருக்கின்றனவும்,
விஷலேபனஞ் செய்து மிகுந்த கொடுமையுங் கூர்மையும் வலுமை
யும் பொருந்தி ஜொலியா நின்ற நுனிமுட்களோடு கூடியனவும், இ
ருஷ்ண சர்ப்பங்கள் போன்றனவு மாகிய நாராச மென்னும் அம்புக
ளை அர்ச்சுனனுடைய இடது பக்கத்தில் பொத்தினார். அதனாலே
இரண்டு க்ஷணம் அர்ச்சுனன் வெகு வேதனையடைந்து மிகுந்த கோ
பமுடையவனாகி சில தீக்ஷண பாணங்களை யெய்து அவர் கையிற்
பிடித்திருந்த வில்லைத் துணித்துத் தள்ளி மறுபடியும் அவர் வேறு
வில் லெடுக்கக்கூடாமல் பாணப் பிரயோக பலத்தினாலே தடுத்து ம
ற்றும் பத்து பாணங்களைத் தொடுத்து அவர் மார்பில் விடுத்தான். அ
ந்தப் பாணங்கள், மார்பில் பாயவே பீஷ்மாசாரியர் துடித்து மூர்ச்
சை யடைந்து வச்சிராயுதத்தா லடியுண்ட பருவதம்போல் ரதத்தி
லேயே விழுந்தார்.

கேளீர் ஜநமேஜய மஹாராஜாவே? அவர் சுயேச்சையினால் மர
ண மடையும்படி வரம் பெற்றவ ராதலால் அந்தப் பாணத்துக்குத் த
ப்பினாரே யல்லது இல்லாவிட்டால் தப்பமாட்டார். இவ்விதமாய் கு
ரு வமிசத்துக்குப் பிதாமகராகியும், மகா ஞானியாகியும், பிதாவுக்கு
இஷ்டப்படி நடந்து பீஷ்ம ரென்று பேர்பெற்றவராகியும், மகா வர
ப்பிரசாதங்கள் பெற்றவராகியும், அஸ்திர சஸ்திரங்களில் ஒப்பற்
றவராகியும், சூரருக் கெல்லாம் சிரோமணியாகியும், தமது குருவாகி
ய பரசுராமரோடு சண்டை செய்து வெற்றி பெற்றவராகியும், விளங்
காநின்ற கங்காகுமாரர் தேர்த்தட்டில் சாயும்போது சகலமானபேரு
ம் மிகுந்த விசன மடைந்து ஹாஹா வென்று கூவினார்கள். அவரு
டைய சாரதியானவன் வெகு வேகமாய்த் தேரை யுத்த களத்தினின்
றும் பின்னுக்குக் கொண்டுபோய் அவருக்கு மூர்ச்சை தெளியும்படி
யாகிய பல் வகை சீதோபசாரங்களைச் செய்தான். இவ்வகையாய்
அர்ச்சுன னானவன் பீஷ்மரைச் சயித்து பின்பு கர்ண னிருக்கு மி
டத்தை நோக்கித் தன் தேரை நடத்தினான். அது கண்டு அசுவத்தா
மாவானவர் கர்ணனோடு சொல்லுகிறார். பார்த்தாயோ கர்ணா! அர்ச்சு
னன் வெகு வேகத்தோடு உன்மீதிற் பாய்ந்து வருகிறான்! உனக்குச்

சக்தி யிருந்தால் எதிரேபோ, இல்லாவிட்டால் மறைந்திரு, என்று அசுவத்தாமர் சொல்லியதைக் கேட்டு கர்ணனவன் அவரைப் பார்த்து வாரீர் குருபுத்திரரே, இந்த அர்ச்சுனன் மாத்திர மல்ல. மற்றைப் பாண்டவர் ஐவரும் ஸ்ரீ கிருஷ்ணனும் சேர்ந்து ஒரு முகமாய் எதிர்த்துவந்தாலும் நான் எதிரிற் போய் சண்டை செய்வேனே யல்லது பின்னுக் கிடைய மாட்டேன். ஜயம் வந்தாலும் வரட்டும். அபஜயம் வந்தாலும் வரட்டும். க்ஷத்திரியருக்கு இரண்டும் சகசந்தான். தெய்வ கதி யாருக்குத் தெரியும்? என்று சொல்லக் கேட்டு அசுவத்தாமர் மறுபடியும் அவனை நோக்கி, வாராய் கர்ண, நீ சொல்லிய வெல்லாம் சரியே. ஆனால் நான் சொல்லியதற்குக் கருத்தென்ன வெனில், நீ முன்பு சும்மா பாண்டவர் எனக்கு நிக ரல்ல வென்று சொல்லிக்கொண்டிருந்தாயே, அப்படியே இப்போதும் மனதில் நினைத்து அலக்ஷியஞ் செய்து யுத்தஞ் செய்யவேண்டா மென்பதும், அப்படிக்கு செய்தால் அபாயமே வருமென்பதும், ஆதலால் வெகு மதிப்போடு ஜாக்கிரதையாய் யுத்தஞ் செய்யவேண்டு மென்பதுமே யல்லது யுத்தஞ் செய்யவேண்டா மென்பதல்ல என்று கூறினார். பின்பு கர்ணனவன் வில் முதலியவற்றைச் சித்தப்படுத்திக்கொண்டு வெகு வேகமாகிய ரதத்தோடு அர்ச்சுனனுக்கு எதிரில் வந்து சரமாரி பொழிந்தான். அது கண்டு அர்ச்சுனனும் பாணங்களைத் தொடுத்து அந்தப் பாணங்களைச் சிதைத்து கர்ணனையும் அடித்தான். இப்படி யிருக்க கர்ணனொருவனா அர்ச்சுனன் கையி லகப்பட்டுக்கொண்டா னென்று அவனுக்குச் சகாயமாக, பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமர், இந்நால்வரும் வெகு வேகமாய் வந்து அர்ச்சுனனைச் சூழ்ந்துகொண்டு ஒவ்வொரு மயிர்க்காலுக்கும் ஒவ்வோரம்பு ஏறும்படி அநேக அம்புகளைப் பெய்தார்கள். பெய்யவே அர்ச்சுனன் மிகுந்த கோப மடைந்து அதனாலே ஒரு சிரிப்பு சிரித்து திவ்யாஸ்திர மென்னுமோராஸ்திரத்தைப் பிரயோகித்தான். பிரயோகிக்கவே உதய காலத்தில் சூரிய மண்டலத்தினின்றும் அநேக கிரணங்கள் புறப்பட்டு உலகமெல்லாம் வியாபிப்பதுபோல் அவ்வஸ்திரத்தினின்று மநேக பாணங்கள் புறப்பட்டு பீஷ்மர் முதலான வீரரையும் அவர் சேனையையும் வியாபித்தன. அதனாலே அந்தச் சேனையி லிருந்த யானை குதிரை முதலாகிய சதுரங்கங்களிலும் ஓர் விரற்கடை யிடங்கூட விடாமல் அம்புகள் ஏற, அச்சேனை சின்னபின்னமாய்ப் போய் சற்றும் அங்கே நிற்கமாட்டாமல் ஓ வென்று கதறிக்கொண்டு ஓடத் தலைப்பட்டது. மகாவீரரும் அந்தப் பாணங்களின் வேதனை பொறுக்கமாட்டாமல் பதைபதைத்துச் சேனையை நிறுத்தமாட்டாமற் போனார்

கள். இவ்வித மானதைக் கண்டு துரியோதனனென்பவன் மனதில் தை
ரிய மிழந்து நெஞ் சுலர்ந்து சோர்ந்து பெருமூச் செறிந்துகொண்
டு நின்றான். இப்படி யிருக்க அர்ச்சுனன் தனது சாரதியை நோக்கி,
கேளாய் உத்தரா, இவ ரனைவரும் நம்மாலே ஜயிக்கப்பட்டோடிப்
போனவர். மறுபடி இவரோடு போரிடுவதில் என்னபயன்? அதோ நி
ற்கின்றாரே குருகுமாரர் அவர் முன்னே பாணங்க ளில்லாமையா
லே ஓய்ந்தவர். ஆகையால் அவரோடு யுத்தஞ் செய்து அவருடைய
அஸ்திர சக்தியைப் பார்க்க விரும்புகின்றேன். தேரை அங்கே நடத்
தென்று சொல்ல, அவனும் அப்படியே தேரைக் கொண்டுபோய் நி
றுத்தினான். அப்போது கர்ணனென்பவன் துரியோதனனைப் பார்த்து,
பார்த்தீரோ மகாராஜாவே? அர்ச்சுனனென்பவன் என் னம்புகளின் வே
கத்தைச் சகிக்க மாட்டாமல் ஓடுகிறான். ஆகிலும் அவனை நான் உயி
ரோடு விடமாட்டேன் என்று வீர வாதஞ் சொல்ல அதைக்கேட்டு து
ரியோதனனும் மகிழ்ச்சியடைந்து நிற்க துரோணாசாரியார் நகைத்
துச் சொல்லுகிறார். கேளாய் கர்ண, நீ மஹா புத்திசாலி. ஆதலால் அ
ர்ச்சுனன் ஓடிப்போன காரணத்தை நன்று யூகித்தாய். ஆனால் பயந்
தோடுகிறவன் சேனையையும் வீரரையும் கண்திறக்கவொட்டாமலு
ம், கையெடுக்கவொட்டாமலும், அம்புகளை யெய்து தோற்கடித்து
ப் போகிறதை யா னிதுவரையிலும் கண்டதில்லை. நீ மாத்திரம் கண்
டிருக்கிறாயோ! சரிதான்! நான் சொல்லுகிறதைச் சாவதானமாய்
க்கேள். அவன் தேவேந்திர குமாரனானதால் தோற்றோடிப்போனவ
ரோடு யுத்தஞ் செய்ய நாணமுற்று அப்படி யாகாத அசுவத்தாமனோ
டு யுத்தஞ் செய்யப் போகிறான். இந்தவேளையில் நீ போய்த் தடுத்தா
யாகில் உயிரோடு திரும்பமாட்டாய். அவ னிப்போது துரியோதன
ன்மீது திரும்பாம லிருந்தது தெய்வச் செயலே யல்லது வேறல்ல.
இதுதான் நமக்கு நல்ல காலம். நாம் வந்த காரியங்களும் நிறைவே
றின. எப்படி யென்றால், நம்மாலே கவரப்பட்ட பசுக்க ளெல்லாம்
விராடராஜன் பட்டணம்போய்ச் சேர்ந்தன. நாமும் உயிரோ
டு பிழைத்தோம். ஆதலால் இதுவே நமக்கு ஜயம். ஒருவேளை அவசி
யமாக யுத்தஞ் செய்யவேண்டு மென்கிறகருத் திருந்தால் நீ மாத்திரம்
போ. நீயும் தனித்துப் போகாதே. சேனையைக் கூட்டிக்கொண்டு
போ. அப்படி போனால் ஒருவேளை மீந்தாலும் மீளுவாய் என்று ஆசா
ரியர் சொல்லிய பேச்சைக் கேட்டு கர்ணன் மனதில் வெட்கி போரி
ல் கருத்தை விட்டுச் சும்மா யிருந்தான். அசுவத்தாமனோடு யுத்தத்
திற்குப் போன அர்ச்சுனனோ உத்தர குமாரனைப் பார்த்து பாராய்
உத்தரகுமாரா, இந்தக் கவுரவ சேனை யெல்லாம் மிகவும் நிலை

டைந் திருக்கின்றது. மகா சூரரும் என் சமீபத்தில் வர மிகவும் அஞ்சி நிற்கிறார்கள். இந்தப் படையை உலர்ந்த காட்டைத் தீ யெரிப்பது போலெரித்து விடுகிறேன். நீ கூச்ச மில்லாமல் தேரை நன்றாய் நடத்து. மலை குறுக்கே வந்தாலும் பிளந் தெறிகிறேன், நீ சிந்தியாதே, முன்னே நான் இந்திரனுக்குச் சகாயமாக நிவாதகவச காலகேயாதிகளைச் சங்கரித்தேன். இவர்கள் அவர்களி லொருவனுக்குச் சமானமாக மாட்டார்கள். அன்றியும் பசுபதியி னிடத்தினின்றும் பாசுபதாஸ்திரத்தையும், இந்திரனிடத்தி னின்றும் அயிந்திராஸ்திரத்தையும், அக்கினியி னிடத்தினின்றும் ஆக்கினேயாஸ்திரத்தையும், இப்படியே மற்றைத் தேவரிடத்தினின்றும் மற்றை யஸ்திரங்களையும், பெற்றேன். ஆதலால் என்னை வெல்வது இவர்களுக்கு மிகவு மசாத்திய மாகும் என்று சொல்லவே அந்த விராடபுத்திரன் சந்தோஷித்துத் தேரை நன்றாய் நடத்தினான். இப்படியிருக்க துச்சாதனன், விகர்ணன், விவிம்சதி, துச்சகன், இந்நால்வரும் அசுவத்தாமருக்கு உப பலமாக வந்து அர்ச்சுனனைச் சூழ்ந்துகொண்டு தீக்ஷணமாகிய பாணங்களைப் பிரயோகித்துப் பலமாக யுத்தஞ் செய்யத் தொடங்கினார்கள். அப்போது சூரனாகிய துச்சாதனன் குரூர சர்ப்பங்கள் போன்ற அறுபது பாணங்களைத் தொடுத்து பற்குனனுடைய இடது பக்கம் பிளந்து போகும்படி விடுத்து ஒரு பாணத்தினாலே விராட புத்திரனையு மடித்தான். அதனாலே பற்குனன் கோப மடைந்து ஒரு அர்த்தசந்திர பாணத்தினாலே சத்துருவின் வில்லை யறுத்து ஐந்து பாணங்களை யவன் மார்பிற் பாயும்படி யெய்தான். எய்யவே துச்சாதனன் மார்பிற் பாய்ந்த அம்புகளின் வேகத்தைச் சகிக்கமாட்டாமல் திகி லடைந்து வந்த வழி பார்த் தோடிப்போனான். அந்தச் சமயத்தில் அர்ச்சுனன் அநேக முள்ளம்புகளைப் பெய்து சேனைகளைக் கலக்கினான். அப்போது விகர்ணன் அக்கினியைப்போல் ஜொலித்து கணக்கில்லாத பாணங்களை ஓய் வில்லாமல் அர்ச்சுனன்மீதும் அவன் குதிரை சாரதிகளின்மீதும் வருஷித்தான். அர்ச்சுனன் அதை லக்ஷியஞ் செய்யாமல் வெகு தீவிரமாக அநேக பாணங்களைப் பிரயோகித்து அவைகளையும் தடுத்துச் சத்துருவின் நெற்றியையும் பிளக்கச் செய்தான். அதனாலே அந்த விகர்ணன் மிகுந்த நோ யடைந்து நெற்றியி லுதிரம் பெருக தேரைத் திருப்பிக்கொண் டோடிப் போனான். இவ் வகையாய் அண்ணன் தம்பிக ளிருவரும் தோற்றோடிப்போது மனஞ் சகியாமல் மிகவும் மானிகளாகிய விவிம்சதியும், விருஷசேனனும், சேர்ந்து அர்ச்சுனன்மீதிற் பாய்ந்து பல் வகை யம்புகளை யெய்து பூமி யாகாசங்களைச் சரமய மாக்கினார்கள். அது

கண்டு பாண்டவவீரன் வெகுண்டு அக்கினிச்சுவாலைகளுக் கொப்
பாகிய வெகு பாணங்களைப் பெய்து அவைகளைத் துணித்துத் தள்ளி
எதிர்த்த சத்துருக்களின் தேர் குதிரைகளைக் கொன்று அவர் தேகங்
கள் பிளந்து போகும்படி யடித்தான். அடிக்கவே அவ்விருவரும் நிற்
கமாட்டாமல் தேரினின்றும் குதித்து யுத்த பூமியை விட் டோடி
னார்கள். பின்பு அர்ச்சுனன் மற்றைத் திருதராஷ்டிர குமாரனையும்
கால் பாவாமற் பறக்கடித்துப் பளபளப்பாய் விளங்காநின்ற திவ்ய
குண்டல கிரீடாதிகள் பொருந்தி விளங்காநின்ற அநேக ராஜகுமா
ரருடைய சிரங்களை யறுத்துத் தள்ளினான். அந்தச் சிரங்களாலே
அவ் யுத்த பூமியானது செந்தாமரை மலர்கள் பரப்பப்பட்டதுபோ
லிருந்தது. இவ்விதமாக கிரீடியானவன் சண்டப்பிரசண்டமாய் தங்
கள் பக்ஷத்தை நாசஞ் செய்யக்.கண்டு கர்ணன், துரியோதனன்,
சகுனி, துரோணர், அசுவத்தாமர், கிருபர், இவர்க ளெல்லாரும் ஒன்
றாய்க் கூடி பார்த்தனை வளைத்துக்கொண்டு வெகு வேகமாய் கோ
டைகாலத் திடிகளுக் கொப்பா யிருக்கும்படியான பாணங்களை வரு
ஷிக்கத் தொடங்கினார்கள். அப்போது அர்ச்சுனன் தன் தேரைச் சரி
யான விடத்தில் நிறுத்திக்கொண்டு எதிரிகள் பிரயோகித்த அத்த
னை பாணங்களையும் ஒரே காலத்தில் நாசஞ் செய்யக் கருதி தான்
முன்பு இந்திர லோகத்தில் ஐந்து வருஷ காலம் வாசஞ் செய்து
சம்பாதித்த அயிந்திராஸ்திரத்தைப் பிரயோகித்தான். பிரயோகிக்க
வே கோடி சூரியப்பிரகாசமாய் விளங்கிய அந்த மகாஸ்திரத்தினின்
றும் அநேக அஸ்திரங்கள் புறப்பட்டு முழுவதும் வியாபித்து அவ
ர்கள் விட் டிருந்த பாணங்களை யெல்லாம் சூர்ணமாக்கியது மன்றி
அவர்களின் தேர், சக்கிரம், குதிரை, அசம் முதலாகிய சகலத்தை
யும் சின்னபின்னமாய் முறித்துத் தள்ளின. அந்தச் செய்கை
யாவருக்கும் ஆச்சரியகரமா யிருந்தது. ஏனெனில், கர்ணன் முத
லான வீரர் வந்து சூழ்ந்து விற்களை வளைத்து அம்புகளைத் தொடுத்
து விடுத்த வவ்வளவு காலமாயினும் அவர்களின் பாணம் தேர் முத
லானவை ஸ்திரமாய்க் காணப்படவில்லை யன்றோ! ஒரு பெரிய கா
ட்டின்மீது வானத்தினின்றும் அக்கினி வருஷம் வருஷித்தாற்
போல் தோற்றப்பட்டதே யன்றி வே றில்லை. இவ்விதமாய் இந்தி
ராஸ்திரத்தை விடுத்து தானும் காண்டீவத்தைக் குண்டலம்போல்
வளைத்து அநேக பாணங்களை விடத் தொடங்கினான். அப்போது
அந்தக் காண்டீவம் எப்படி விளங்கிற் றென்றால், நல்ல கார்காலத்
தில் மேகங்களி னடுவில் மின்னற் கொடிபோலவும், சுற்றிச் சுழ
ற்றப் படுகின்ற குறைக்கொள்ளி போலவும், மகா விஷ்ணுவினு

டைய சக்கிரம்போலவும், மிகவும் விநோதமாய் விளங்கிற்று. அந்தக்
கவுரவரில் அநேகர் தேகங்களில் மிகுந்த காய மடைந்து தரையில்
விழுந்தார்கள். துரோணர் முதலானோரும் மூர்ச்சை யுடைந்தார்கள்.
அந்தச் சமயத்தில் அர்ச்சுனன் இறுமாப்புடனே உத்தரனை நோக்கி
தனது தேரை அச்வத்தாம ரிடத்துக்கு நடத்தும்படி கட்டளையிட அ
வனும் அப்படியே தென்புறத்தி லிருந்த குருபுத்திரரது சேனைக்கெ
திரிலே தேரைக் கொண்டுபோய் நிறுத்தினான். இவ்வளவுக்குள்ளே
பீஷ்மர் முதலானோ ரனைவரும் மூர்ச்சை தெளிந்து ஆயுத முதலா
இயவைகளோடு சன்னத்தராகி அர்ச்சுனனை அசுவத்தாம ரிடத்திற்
குப் போகவொட்டாமல் மடக்கினார்கள். இப்படி யிருக்கச் சகல
ஜனங்களும் ஓ கோ கோ! தெய்வச் செயலாய் அர்ச்சுனன் வடபுற
த்துக்குத் திரும்பாமல் தென்புறத்திற்குத் திரும்பியபடியால் துரி
யோதனன் பிழைத்தா னென்று சொல்லிக்கொண்டார்கள். அது கே
ட்டு துரியோதனன் மனம் பொறாமல் மிகுந்த சேனைகளைக் கூட்டி
க்கொண்டு யார் தடுத்தாலும் கேளாமல் அர்ச்சுனனுக் கெதிரில் வந்
து நின்றான். அப்போது அர்ச்சுனன் மிகவும் கோப மடைந்து கை
யில் காண்டீவத்தையும் ஒரு அம்பையும் பிடித்துச் சாரதியை நோக்
கி வீழ்ந்தோய் உத்தரா? இந்தத் தனுசின் மகிமை தேவர்க்கும் வெல்ல
க்கூடாதது. இதில் சந்தானஞ் செய்யப்படு மிந்தப் பாணம் வீணாகா
து. ஆகையால் இதனாலே இந்தத் துரியோதனன் சிரத்தை யாவ
ரும் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அறுத்துத் தள்ளுகிறேன்
தேரை விரைவில் நடத் தென்று சொல்ல, அவன் அதுகேட்டு மன
தில் அப்படியே செய்ய நினைத்துக் கைகூப்பி மகா ராஜாவே? இத்
தேரை எவ்வெவ் விடங்களில் எவ்வாறு நடத்தவேண்டுமோ அம்
முறைகளில் யா னென்று மறிகிலேன். ஆதலால் இதனை நடத்த அ
ஞ்சுகின்றே னென்று கூற அதற்கு எல்லா விதங்களிலும் உன்னைக்
காக்க நான் சித்தமா யிருக்க நீ யஞ்சுவதேன்? என்று அர்ச்சுனன்
சொல்லக் கேட்டு உத்தரன் தயிரியமாய் தேரைத் துரியோதனனுக்
கெதிரில் நடத்தினான். அப்போது கிரீடியானவன் காண்டீவத்தைக்
குணத்தொனி செய்து சங்கத்தையும் பூரித்தான். அது கேட்டு மகா
வீரரும் மனதில் மூர்ச்சை யடைந்தார்கள். அர்ச்சுனனோ முன் னெடு
த்த பாணத்தோடு மற்றொரு பாணத்தையுங் கூட்டிச் சத்துருவின்
மார்பி லெய்தான். அந்தத் துரியோதனனும் அவைகளா லடிபட்டு
அதிக கோபத்தை யடைந்து தீக்ஷணமாகிய ஒரு பாணத்தை யெடு
த்துத் தன் சத்துருவின் நெற்றியி லெய்தான். அதன் பின்பு அர்ச்சு
னன் வெகு பாணங்களைச் சந்தானஞ் செய்து விட துரியோதனன்

அவைகளை யறுத்துத் தள்ளி அவ் வர்ச்சுனன்மீது பல பல பாணங்களைச் சொரிந்தான். அவைகளினுலே மேகங்களால் சூரியன் மறைக்கப்பட்டதுபோல் அர்ச்சுனன் மறைக்கப்பட் டிருக்கக் கண்டு விகர்ண னென்பன் பெரிய மத யானையின்மீதேறி அர்ச்சுனனை ஜயிக்கவேண்டு மென்று வந்தான். அதற்குள்ளே அர்ச்சுனன் அச் சரக்கூட்டை நீக்கி கொடிதாகிய வோ ரம்பினுலே சத்துரு யானையின் கும்பஸ்தலத்தை பிளந்தான். பிளக்கவே அவ் யானை வீரிட்டுப் பூமியில் விழுந்தது. அந்த விகர்ணனே அதினின்றுங் குதித்து எண்ணூ றடி பின்னுக் கோடி விவிம்சதி யென்பவனுடைய ரதத்தி லேறிக்கொண்டான். துரியோதனனே அர்ச்சுனனை வெல்லும்படியான சில பாணங்களை யெடுத்தான். அது கண்டு அர்ச்சுனன் முன் மத யானையின் கும்பஸ்தலங்களைப் பிளந்த பாணத்துக் கொப்பாகிய பாணத்தை யெடுத்துத் துரியோதனனது மார்பி லெய்தான். அதனுலே யவன் நடுநடுங்கித் தனக்குச் சகாயமாக வந்த விகர்ணனு மோடிப்போனபடியினுலே தானும் தேரைத் திருப்பிக்கொண் டோடிப்போனுன். அப்படி உதிரத்தைக் கக்கிக்கொண்டு ஓடுகின்கிற துரியோதனனை அர்ச்சுனன் அழைத்து "வாராய் துரியோதனு, நீ மஹா சூராகிய கவுரவ குலத்திற் பிறந்து யுத்தத்தில் இப்படி யோட லாகாது. மஹாராஜா வென்று பேர் பெற்ற நீ யோடுவது தகுதி யல்ல. உன் புக ழெல்லாம் வீ ணுகின்றது. உயிர் சத மல்லவே! அதனைக் காப்பாற்றுகிற நிமித்தமாய் தருமத்திற்கும், மானத்திற்கும், விரோதமாகிய செய்கை செய்யவேண்டா மென்று சொன்னுன். அவனே இதை யொன்றையும் காது கொடுத்துக் கேட்காமல் யுத்தரங்கத்தைக் கடந் தோடினுன். அப்போது அந்தச் சேனையி லிருந்த அநேக வீரர் கையி லிருந்த ஆயுதங்களைக் கீழே யெறிந்து முகத்தைத் திருப்பி யர்ச்சுனனைப் பார்த்துக்கொண்டவாங்கே துரியோதனன் வழியைப் பிடித் தோடினுர்கள், சிலர் உயிருக் கஞ்சாமல் அர்ச்சுனனை யெதிர்த்து யுத்தஞ் செய்ய வாரம்பித்தார்கள், அவர்களை யெல்லாம் அர்ச்சுனன் பாணங்களினுலே நன்று யடித்தான், அடிக்கவே அவ ரவர் அப்படி யப்படியே வாகனங்களோடு விழுந் திறந்தார்கள். இப்படி யானைக்கூட்டத்தின் மத்தியிற் புகுந்த சிங்கத்தைப்போலே வீரரை யெல்லாம் நாசம்பண்ணி கர்ச்சித்து அங்கே காணப்பட்ட கர்ணனையும் துச்சாதனனையும் நோக்கிப் பன்னிரண் டம்புகளை விடுத்தான். அதனுலே அடிபட்டாலும் சூரனுகிய கர்ணன் அவ்விடம் விட்டுச் சலியாமல் ஓடுகிற துரியோதனனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னுன். கேளீர் மஹாராஜாவே? நீ ரோடுவ தேன்? நாம் பாண்டவ

னைக் காணக் கருதி யன்றோ இந்நகரத்திற்கு வந்தோம். இவ் வர்ச்சுன
னைக் கண்டமாத்திரத்தில் நாம் வந்த காரியம் கைக்கூடிற்று. யுத்தம்
நேரிட்டபடியினாலே கையி லானமட்டும் யுத்தமுஞ் செய்தோம். யா
வருக்கும் ஜயாபஜயங்கள் மாறி வருவ துண்டு. அதனாலே குறை
யொன்று மில்லை. அர்ச்சுனனுக் கிப்போது ஜய கால மானால் பின்னா
லே நமக்கு ஜய காலம் வரும். இப்பொழுது நடக்கவேண்டுவ தென்
ன வென்றால், அஞ்ஞாதவாசம் நிறைவேறு முன்னமே அர்ச்சுனனை
நாம் கண்டுபிடித்தபடியால் அவன் அண்ணன் தம்பிமார்களோடு
மறுபடி வனவாசம் போகவேண்டும், நாம் நமது பட்டணம் போ
ய்ச் சேரவேண்டும், என்று கர்ணன் சொல்லிய பேச்சைக் கேட்டு
துரியோதனன் ஓடிவந்து பீஷ்மர் துரோணர் முதலானோர் சார்பிற்
சேர்ந்தான். அப்போது அவனைப் பார்த்து அர்ச்சுனன் சொல்லுகி
றான். கேளாய் துரியோதனா, நீ ஏகசத்திராதிபதி யென்று இறு
மாப்பு கொண்டு எங்களைக்குறித்து பவுருஷங்களையும் வெகுவாய்ப்
பேசி சமயம் வந்தபோது ஓடுகிறாயே! இது நன்றா யிருக்கின்ற
தா? நீ ஓடிப்போய் மறுபடி அரசாக்ஷியையும் பல் வகைப் போ
கங்களையும் அடையக் கருதுகிறாயோ? அங்ஙனம் கருதாதே. ஏனெ
னில், யுத்தத்தில் தோற்று ஓடுகின்றவனுக்கு இம்மை மறுமை இவ்
விரண்டும் கெடுமென்று பெரியோர் சொல்லுகிறார்கள். ஆதலால்
நின்று யுத்தஞ் செய்; அஞ்சாதே. யுதிஷ்டிர னநுமதி யின்றி நா னு
ன் னுயிரை வாங்கேன். அப்படி வாங்குகிறதா யிருந்தால் இதுவரை
யில் உனக்குப் பதின் மூன்று திவசங்களா யிருக்குமே என்று சொ
ல்லக் கேட்டு திருதராஷ்டிர குமாரன் மனம் பொறுக்காமல் அர்ச்சு
னனுக் கெதிராகத் திரும்பினான். திரும்பி அர்ச்சுனனைப் பார்த்
து கேளாய் அர்ச்சுனா, நான் தேவேந்திர னெதிர்த்து வந்தாலும் பய
ப்பட மாட்டேன். அப்படி யிருக்க உன்னைக் கண்டு பயப்படுவேனோ?
நான் ஏகச் சத்திராதிபதியாகி சகல பாக்கியங்களையும் அநுபவி
த்தவன் தான். இன்னும் அநுபவிக்கப் போகிறவன் தான். உன்
னைப்போலே காட்டி லலைந்து திரிந்து போகத்திற்கு வீங்கினவ
னல்லேன். என் பராக்கிரமத்தைக் காட்டுகிறேன் பாரென்று கை
யில் வில் லெடுத்து அம்புகளை விடுக்கத் தலைப்பட்டான். இவ்விதமா
ய் அர்ச்சுனனோடு யுத்தத்திற்கு சித்தமாகிய துரியோதனனுக்கு உப
பலமாக கர்ணன் அவனுக்கு வலப்பக்கத்தில் நின்று யுத்தஞ் செய்
யத் தொடங்கினான். பீஷ்மரும் அதி வேகமாய் அவனுக்குப்பின்
புறத்தில் வந்து அர்ச்சுனன் விடுக்கு மம்புகளைத் துரியோதனன் மீது
விழ வொட்டாமற் தடுத்துக்கொண் டிருந்தார். அன்றியும் துரோ

ணர், கிருபர், விவிம்சதி, துச்சாதனன், இந்நால்வரும் துரியோதனனு க்கு முன் புறத்திலிருந்து துரியோதனன்மீதில் பாணங்கள் விழவொ ட்டாமற் செய்தார்கள். இவ்விதமாய் மகா ரதிகராகிய இவ ரெல்லாம் அர்ச்சுன னொருவனை வளைத்துக்கொண்டு ஊழிகாலத்துக் கொண்ட ல்கள் உன்னதமாகிய தோர் பெரிய மலையின்மீது மழை பொழிந்தாற் போல் பாணங்களை ஓய் வில்லாமல் வருஷித்தார்கள். அப்போது அ ர்ச்சுனன் அவைகளினால் கிஞ்சித்தேனு மஞ்சாமல் தான் துரியோ தனனோடு யுத்தஞ் செய்ய முயன்றால் இவ ரெல்லாரும் சூழ்ந்து தடு க்கின்றா ரென்று நினைந்த வெகுளி யடைந்து மோகனாஸ்திரத்தைச் சந்தானஞ் செய்து பிரயோகித்தான். பிரயோகிக்கவே அந்த அஸ்தி ரத்தின் மகிமையினாலே திசைக ளெல்லாம் பாண மயமாய்ப் போய் அந்தச் சேனையி லிருந்த யானை குதிரை முதலிய சதுரங்கங்களும் வீரரும் ஒன்றுந் தோற்றாமல் மயங்கி நின்றார்கள். அது கண்டு சங் கத்தை யெடுத்து ஆகாசமதிரும்படி நாதஞ் செய்தான். அதனாலேயு ம் அந்தச் சேனை யெல்லாம் உள்ளே நடுக்கமுற்றுக் கையி லிருந்த வாயுதங்கள் நழுவி விழச் சோர்ந்து மூர்ச்சை யடைந்து வீழ்ந்தது. இ வ்வகையாய் உடம்பு தெரியாமல் இட்டகா லிட்ட கைகளாய்த் தூ ங்குவது போல் கிடக்கிற சத்துரு பக்ஷத்தைக் கண்டு களிப்புற்று பா ர்த்தன் நாடகசாலையில் உத்தரை சொல்லிய பேச்சை நினைத்துத் த ன் சாரதியை நோக்கிச் சொல்லுகிறான். பார்த்தாயோ உத்தரகுமா ரா, நான் விடுத்த மோகனாஸ்திர பலத்தினாலே இவ ரெல்லாம் நி னைவு தப்பி யுறங்கிக் கிடக்கிறார்கள். ஆதலால் நீ சீக்கிரம் தேரை வி ட்டுக் குதித்து எதிரிசேனையிற் புகுந்து அஞ்சாமல் துரோணர், கிரு பர், இவர்கள் தரித்திருக்கிற அழகான வெள்ளை வஸ்திரங்களையும், கர்ணனது பொற்சரிகை வஸ்திரத்தையும், அசுவத்தாமர், துரியோ தனன், இவர்களின் நீல வர்ணமாகிய வுயர்ந்த வஸ்திரங்களையும், ம ற்று முள்ள எல்லா வீரர்களின் வஸ்திரங்களையும், எல்லாருடைய வாபரணங்களையும், உரிந்து கொண்டுவா. ஆனால் பீஷ்மரிடத்திற் கு மாத்திரம் போகாதே. ஏனென்றால், அவருக்கு இந்த அஸ்திரத் தினால் உபத்திரவ மில்லை. இவ்வாடை யாபரணங்களை நம்முடைய உத்தரைக்குப் பதுமை யலங்காரஞ் செய்ய வுதவும்படி கொடுப்போ ம். நம்மை முன்னமே யவள் கேட்டிருக்கிறா ளல்லவா? ஆதலால் இவர்கட்கு இம்மூர்ச்சை தெளியா முன்னமே நீ போய் நீ முறைத்த படி ஆடை யாபரணங்களை யுரிந்துகொண்டு வா வென்று அர்ச்சு னன் சொல்லியதைக் கேட்டு விராடகுமாரனும் வெகு சந்தோஷத் தோடு திடீ ரென்று தேரினின்றுங் குதித்து சேனையில் பிரவேசித்

து அர்ச்சுனன் சொல்லியபடி சகலமான பேர்களின் ஆடை யாபரணங்களையும் கொடிச் சீலைகளையுங்கூட உரிந்துகொண்டு வந்து அர்ச்சுனன் தேரின்மீதில் வைத்து குதிரைகளைப் பட்டணத்திற்கு நோகத் திருப்பி வெகு வேகமா யோட்டினான். இப்படி அர்ச்சுனன் திரும்பியதைக் கண்டு பீஷ்மர் தீக்ஷணங்களான சில பாணங்களை யர்ச்சுனன்மீது பிரயோகித்தார். அர்ச்சுனனோ அவருடைய சக்தியையும் பிரபாவத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டு சந்தோஷித்து அவர் விடுத்த பாணங்களைச் சிதைத் தெறிந்து மிகவும் கொடுமையாகிய சில பாணங்களினாலே அவருடைய தேர் குதிரைகளை வீழ்த்தி மற்றும் பத்துப்பாணங்களை விடுத்து பீஷ்மனை வெலு வெலுக்கச் செய்து மேகமண்டலத்தினின்றும் சூரியன் வெளிப்பட்டாற்போல் அந்தர மண்டலத்தினின்றும் வெளிப்பட்டுத் தன்தேரை தடையின்றி பட்டணத்திற்கு நடத்தினான். இதற்குள்ளே துரியோதனன் மூர்ச்சை தெளிந்து கண்விழித்துப் பார்த்துத் தன் சேவகரைக் கூவி விளித்து ஓ சேவகரே! அர்ச்சுனன் நம்மோடு போரிடச் சக்தி யில்லாமையினாலே திருடன்போல் சமயம் பார்த்து அதோ ஓடுகிறான். அவனைப் பின் றொடர்ந்து பிடித்துக்கொண்டு வாருங்க ளென்று கூறக் கேட்டுக் காங்கேயர் நன்றாகச் சிரித்து அத்துரியோதனனை நோக்கிச் சொல்லுகிறார். ஓகோகோ! துரியோதன மகாராஜனே? நீவெகு சூரன். ஆதலாலேதான் ஓடுகிற அர்ச்சுனனைப் பிடிக்கும்படி கட்டளை யிடுகிறாய். இத்தனை நாழிகையும் கையி லிருந்த வில் லம்புகள் நழுகி விழுந்ததும் தெரியாமல் அவன் பிரயோகித்த அஸ்திர பலத்தினாலே மூர்ச்சை போய்க் கிடந்து இப்போது உன் னங்கங்களையும் நன்றா யுற்றுப்பாராமல் நம் மெல்லாரையும் சாமர்த்தியத்தினா லெய்து வெற்றிபெற்று, இறுமாப்போடு செல்கின்ற வீரனைப் பார்த்து இங்ஙனம் பேசத் துணிந்தாய், நன்றாயிற்று. உன் தேகத்தை உற்றுப்பார். வஸ்திரமெங்கே போயிற்று, உன் பக்ஷத்தாரையு மூற்றுப் பார். பிறந்த வடிவாய்க் காணப்படுகிறார்கள். உன் பராக்கிரமத்துக்கு அஞ்சி ஓடுகிறவன் உங்களை நிர்வாண மாக்கித் தான் போவானோ! திருடன் மகா வீரரான நீங்கள் சேனைகளோடு யுத்த ரங்கத்தில் யுத்த சன்னத்தாக நிற்க உங்கள் சொத்தைத் திருடிக்கொண்டு போவானோ! நன்றாக யோசித்தாய். யா னுனக்கு மற் றொன்றை யுற்றுக் கேள். இன்றைக்கு நீங்கள் மறுபிறப்பு பிறந்தீர்கள். ஏனெனில், உங்க ளுயிர்கள் அந்த மகாவீரன் கையி லகப்பட்டிருந்து விடப் பட்டனவல்லவோ! உங்களைச் சங்கரிக்கும்படியான நினைப்பு தரும சீலனாகிய அவனுக் குண்டாக வில்லை. ஏனெனில், க்ஷத்திரிய தருமத்தின்படி மூர்

ச்சித்தவன், ஆயுதத்தை யெறிந்து விட்டவன், சரண மடைந்தவன், ஓடுகின்றவன், தூங்குகின்றவன், போருக்கே வாராதவன், இப்படிப்பட்ட பேர்களைக் கொல்லக்கூடா தாகையாலும், தமையனார் கட்டளை யில்லாமையாலும், அலக்ஷியத்தினாலும், தயையினாலும், அந்த மகா புருஷன் அவ்வாறு செய்யாமல் உங்க ளாடை யாபரணங்களை மாத்திர முரிந்துகொண்டு போனான். இவ்வளவுதா னேதுக்கு? மூர்ச்சிக்கச் செய்த மோகனாஸ்திரத்தி னாலேயே சங்கரிக்க நினைத்தால் அப்படி செய்யலா மல்லவா? ஆதலால் உங்களுக்கு நல்ல காலமானதுபற்றி நீங்க ளிவ்வளவோடு தப்பும்படி யாயிற்று. இப்படியிருக்க அவனைப் பிடித்துக்கொண்டு வரச் சொல்லுகிறாயே, இது முப்பத்து முக்கோடி தேவர்கள் ஒன்றாகச் சேர்ந்தாலும் நிறைவேறாத காரிய மாயிற்றே! இச்சேனையி லிருக்கின்றவர்களா லாகுமோ? ஆகையால் இப்படிப்பட்ட துர்ப்புத்தியை விட்டு இறந்தவர் போக மற்றவரையாகிலும் கூட்டிக்கொண்டு அஸ்தின பட்டணம் போய்ச்சேருவோம். அப்படி சம்மதி யில்லாமற் போனால் யமபட்டணம் போய்ச் சேருவோம் என்று பிதாமகர் சொல்லிய பேச்சைக் கேட்டுத் துரியோதனன் தன்னையும் மற்றவரையு முற்றும் பார்த்து மிகுந்த நாணத்தையும், விசனத்தையும், பொறாமையையு மடைந்து ஒன்றுந் தோற்றாமல் பெருமூச் செறிந்துகொண்டு நின்றான். இவ்விதமாக பீஷ்மர் சொன்ன பேச்சைக் கேட்டு யாவரும் நன்று சொன்னாரென்று சிலாகித்து துரியோதனனோடுகூட அஸ்தினபட்டணத்துக்குத் திரும்பக் கருதினார்கள். அப்போது அர்ச்சுனன் காண்டீவத்திற் சில பாணங்களைச் சந்தானஞ் செய்து விடுத்து அவ்வகையாலே வந்தனஞ் செய்யத்தக்க பீஷ்மர் துரோணர் கிருபர் முதலானோரை வந்தனஞ் செய்து சில பாணங்களினாலே விடை கொள்கிறேனென் றறிவித்து மற் றொரு பாணத்தைப் பிரயோகித்து துரியோதனனது கிரீடத்தை வீழ்த்திச் சங்கைப் பூரித்துச் சென்றான். அதனாலே துரியோதனன் சிர மறுந்துபோனதை விட மிகுந்த துயரத்தை யடைந்து தலை யிறங்கிக்கொண்டு சென்றான். மற்றவர்களும் பிரளய கால சூரியனைப்போல் விளங்கும்படியான கிரீடியைத் திரும்பிக்கூட பார்க்க மாட்டாமல் நடுநடுங்கி பட்டணத்திற்குப் போய்ச் சேரும்படியான துரிதத்திலேயே யிருந்தார்கள். அர்ச்சுனனோ கம்பீரமாகிய சிங்கம்போல் மிகுந்த பெருமையுற்றுப் போகுமளவில் உத்தரனை நோக்கி கேளாய் உத்தரா, நம்முடைய சத்துருக்க ளெல்லாம் தோற்று ஓடுகிறார்கள். நமது பக்ஷக்களும் பட்டணம் போய்ச் சேர்ந்தன. ஆகையால் நாம் வெற்றி பெற்றோம். இப்போது நீ செய்ய

வேண்டுவ தென்ன வென்றால், யானையாகிலு மொருவனை மகாராஜாவி னிடத்திற்கு அனுப்பி அர்ச்சுனன் நா னென்பதையும், நான் ஜயித்தே னென்பதையும், இவைகளை யெல்லாம் வெளியிடாமல் நீயே ஜயித்ததாகச் செய்தி தெரிவி. அதற்காகப் பட்டணத்தை யவர்கள் அலங்காரஞ் செய்து நிருத்த கீத வாத்திய முதலான விருதுகளோடு உனக் கெதிர் கொண்டுவந்து சிறப்பாய் உன்னைக் கனப்படுத்தட்டும். இப்படி யாகவேண்டுவதே நியாய மென்று சொல்லிக் கொண்டே போனான். இப்படி போகும்போது முன்னே யுத்தத்தில் நிற்கமாட்டாமல் ஓடி யொளித் திருந்த சிலர் மெள்ள வெளியில் வந்து நகரம் போய்ச் சேர முயன்றவர் இவ் வர்ச்சுனனைக் கண்டு வயிற்றிற் கல நெருப்பு கொட்டியதுபோ லாகி நா வறண்டு கண்க ளாணியிட உடம்பு வேர்வை விட்டு நடுங்கக் கைகூப்பித் தழ தழத்துச் சொல்லுகிறார்கள். சுவாமி, மகாராஜாவே? வீராதிவீரரே? நாங்கள் செய்த வெல்லாப் பிழைகளையும் பொறுத்து அபயங் கொடுத்துக் காப்பாற்றி யருளவேண்டும். எங்களுக்கு உமது திருவடித் தாமரையிணை யன்றி வேறு சரண மில்லை யென்று சாஷ்டாங்கமாய்த் தெண்ட னிட அர்ச்சுனன் புன்னகை கொண்டு அவர்களை நோக்கி அப்படியே உங்களுக்கு அபய மீந்தேன். அஞ்சவேண்டாம். எழுந்திருங்கள், நான் சரண மடைந்தவனையும், பாலகனையும், மூப்பனையும், அநாதனையும்; ஆயுதத்தைக் கை விட்டவர்களையும், இப்படிப்பட்ட பேர்களைக் கொல்வ தில்லை. நீங்கள் சந்தோஷமாய் உங்க ளிடத்திற்குச் செல்லுங்க ளென்று சொல்லக் கேட்டு அவர்கள் மனங் குளிர்ந்து மிகுந்த சந்தோஷத்துடனே அர்ச்சுனனைப் புகழ்ந்து வாழ்த்தி கவுரவரோடு சேர்ந்து அஸ்தினாபட்டணத்துக்குப் போனார்கள். அர்ச்சுனனோ விராட புத்திரனோடு முன் சொல்லிக்கொண்டு வந்த சங்கதியைத் தொடர்ந்து மறுபடியும் சொல்லுகிறான். கேளாய் உத்தரா, நான் சொல்லிய சங்கதியை நீ யங்கீகாரமாய்க் கேட்க வில்லைபோ லிருக்கிறது. அப்படி கூடாது. நான் சொல்லியபடி கேட்பாயாகில் உன்னோடுகூடப் பட்டணத்திற்கு வருவேன். இல்லாவிடில் வரமாட்டேன். யா ருன்னைக் கேட்டாலும் கவுரவரை நானே வென்றே னென்று சொல், யோசியாதே. அப்படி யதிகமாய்க் கேட்டால் ஒரு தேவபுருஷன் எனக்கு சகாயஞ் செய்தான். அந்தைக்கொண்டு யான் வெற்றி பெற்றே னென்று சொல். இவ்வித மன்றி வேறு விதஞ் சொல்லாதே. என் பேரைச் சொன்னாயானால் அவர்கட்கு மிகுந்த நடுக்க முண்டாகும். ஆதலால் அங்ஙனஞ் சொல்வது நெறி யல்ல. ஒரு வேளை என் பேச்சைக் கடந்து நடப்பாயாகில் உ

ன்றீ தென்றனுக்கு மிகுந்த கோப முண்டாகும் என்று அர்ச்சுனன் சொல்லியதைக் கேட்டு கேளீர் மகாராஜாவே? தேவர்க்கு மரிய உமது சக்தியால் நிறைவேறின விச் செய்கையை உமது பாத தூளுக்கும் நிக ராகாத நான் எனது சக்தியால் நிறைவேறிற் றென்று சொல்ல எனது நா வெங்ஙனம் துணியும்? என் மனது நாணத்தை யெங்ஙனம் துறக்கும்? இது என்னால் முடியாத வேலையாகவே இருக்கின்றது. ஆகிலும் உமது சித்தத்திற் கேற்றபடி நடக்கவேண்டுவ தெனது கடமை ஆதலால் அவ்வாறே கூறுகிறேன். எல்லா வகையினாலும் யான் பூசிக்கத்தக்க நீர் என்னுடனே நகரத்திற்கு வந்து எனக்கும் என் றந்தை முதலானோர்க்கும்என் றங்கைக்கும் மற்றும் பட்டணத்தி லிருக்கிறவர்க்கும் சந்தோஷத்தைச் செய்யவேண்டும் என்று கூறிய உத்தரனை அர்ச்சுனன் மிகவும் சந்தோஷத்தோடு கொண்டாடினான். உத்தரனும் சந்தோஷத்தோடு தேரை நடத்திக்கொண்டு வன்னிமரத்தி னண்டையில் வரும்போது அந்தத் தேர் முதலானவை மாயமாய்ப் போயின. பின்பு அர்ச்சுனன் காண்டீவ முதலானவைகளை முன்போலவே கட்டி வன்னிமரத்தின்கண் வைத்துத் தானும் பிருகன்னளை வேடம் பூண்டு சாரதியாகிய உத்தரனை ராஜ ஸ்தானத்தி லிருத்தி முன் தேரைப் பட்டணத்துக் கெதிராக நடத்திக்கொண்டு போய்ச் சமீபத்திற் சேர்ந்தபின் விராட புத்திரனைப் பார்த்து வாராய் ராஜகுமாரா, நமது பசுக்களும் சத்துருக்களுடைய சொத்துகளும் பட்டணம் போய்ச் சேர்ந் திருக்குமே? நாம் இங்கே இறங்கிக் குதிரைகளை விடாயாற்றி நாமும் சற்றே விடாய் தீர்ந்து சாயங்காலம் பட்டணத்திற்குப் போவோம். பட்டணத்தாரும் எதிர்கொண்டு வரட்டும் என்று சொல்லக் கேட்டு விராட புத்திரன் அப்படியே யங்கீகரித்து நகருக்குத் தூதரை யனுப்பினான். கவுரவரும் அஸ்தினா பட்டணம் போய்ச் சேர்ந்தார்கள். இப்படி யிருக்க விராட மகாராஜனும் முதல் நாள் திரிகர்த்தனை வெற்றிகொண்டாலும் அன்றைக்கு மத்தியானவரையில் அங்கே யிருந் தினைப்பாறி மூன்று யாமகாலத்தில் பட்டணம் வந்து சேர்ந்து சபையில் சிங்காதனத்தில் சற்று நேர மிருந்து க்ஷேம விசாரணை செய்ய வந்த நால் வருணத்தோரையும் கொண்டாடி அவர்கட்கு விடை கொடுத்து குபேரனது வீட்டுக் கொப்பாய் விளங்கும்படியான அந்தப்புரஞ் சென்று உத்தரனைக் காணமல் அவன் வடபுறத்தில் கவுரவரோடு யுத்தஞ் செய்ய பிருகன்னளையோடு போ யிருக்கிறானென்கிற செய்தி கேட்டு மனோ வியாகுல மடைந்து மந்திரிகளைப் பார்த்துச் சொல்லுகிறான். கேட்டீரோ மந்திரிமாரே! பீஷ்மர் துரோணாதி கவுரவரோடு ஒன்று மறியாத நம்மு சி

றவன் நபும்சகையாகிய பிருகன்னளையின் சாரத்திய சகாயங் கொண்டு சண்டை செய்யப் போனானும். ஓ கோ கோ! எப்படி யவன் தப்பிவரப் போகிறான்? நமது பசுக்கள் போனாலும் போகட்டும். இவனாகிலும் தப்பினாற் போது மல்லவோ? நமது சிறுவன் அவர்களா லடிபட்டு எங்கே விழுந்து கிடக்கிறானோ? என்ன வாயிற்றோ! என் மனம் பதைக்குதே! என்ன செய்வேன் ? இப்போதாகிலும் நமது சதுரங்க சேனையும் நமக்கு இதத்தைச் சிந்திக்கும்படியாகிய சூரரும் அவ்விடம் போய்ச் சேர்ந்து சகாயஞ் செய்யவேண்டும். அப்படிக்குச் சீக்கிரத்தில் சன்னாகஞ் செய்யுங்க ளென்று கட்டளை யிட்டு சேனைத் தலைவ ராகிய ராஜகுமாரனை நோக்கி ஓ ராஜகுமாரரே? நீங்கள் வெகு தீவரத்திற் சென்று எனது குமாரன் பிழைத்திருக்கிறா னில்லை யென்கிற செய்தியைச் சீக்கிர மறிவியுங்கள். உங்களாற் கூடிய வரையில் சத்துருக்களோ டெதிர்த்து சண்டை செய்யுங்கள், என்று சொல்லிக் கொண் டிருக்க சமீபத்தி லிருந்த கங்கபட்டர் அரசனை நோக்கிக் கூறலுற்றார். கேளீர் மகாராஜாவே? எந்த ராஜாவாகிலும் எந்த ராஜகுமாரனாகிலும் பிருகன்னளையைச் சாரதியாகக் கொண்டு யுத்தத்திற்குச் சென்றால் அவன் வெற்றி பெற்றே வருவான். அந்தக் கவுரவரானாலும் சரியே, அல்லது முப்பத்துமுக்கோடி தேவர்க ளானாலும் சரியே, அவனை யெதிர்த்தவர் சித்தமாகத் தோல்வி யடைவார்கள். ஆதலால் நமது குமாரன் ஒரு உபத்திரவமுமின்றி வெற்றிகொண்டு வருவான், நீர் அஞ்சவேண்டாம். மனச் சஞ்சலத்தை யகற்று மென்று கங்கபட்டர் சொல்லியதைக் கேட்டு விராடமகாராசன் கிஞ்சித்து சந்தோஷ மடைந்து தைரியமா யிருக்குமளவில் உத்தரனா லனுப்பப்பட்ட தூதர் வந்து பணிந்து சுவாமி நமது குமாரர் அதிரத மகாரதராகிய பீஷ்மர் துரோணர் முதலான வீரரையும் அவரது அகண்டமாகிய சேனாசமுத்திரத்தையும் சண்டப்பிரசண்டமா யெதிர்த்துத் தும்சஞ் செய்து ஜய லக்ஷிமியை மணந்து அவர்களால் கவரப்பட் டிருந்த நமது கோக்கூட்டத்தையும் அவர்கள் விட் டோடிப்போன பல் வகைச் சொத்துக்களையும் நமது நகருக் கனுப்பி இச் செய்தி தெரிவிக்கும்படி யடியேங்களுக்குக் கட்டளை யிட்டு இதோ பின்னாலே வருகிறார் என் றுரைக்கக் கேட்டு அவ் வரசன் ஆனந்தக் கடலி லாழ்ந்து கங்கபட்டரைச் சிலாகித்து அத் தூதருக்கு மிகுந்த பரிசு கொடுத்துக் கொண்டாடி மந்திரிகளை நோக்கி நகரத்தை யலங்கரிக்கும்படிக்கும் மாரனுக்கு கெதிராக நிருத்த கீத வாத்தியாதிகளோடு சதுரங்க சேனையும் மற்று முள்ள ராஜ புருஷரும் போகும்படிக்கும் கட்டளை யிட்டான். அந்தப்படியே சகல

சேனைகளும் தகுந்த வாகனங்களோடு ராஜகுமாரரும் பதினெண் வாத்தியங்களும் நடனஞ் செய்யும் வேசிகளும் மற்றும் சகல பரிவாரங்களும் எதிர்கொண்டு போயின. இப்படியிருக்க கங்கபட்டர் அரசனைப் பார்த்து கேளும் ராஜாவே? நான் சொல்லியபடி பிருகன்னளையின் சகாயத்தினாலே உமது குமாரன் வெற்றி பெற்றானல்லவா? மகா சந்தோஷமாயிற்று. அந்த பிருகன்னளையின் சக்தி மிக விசேஷமானது. மாதலி தாருகன் முதலான பேர்களும் சாரத்தியத்தில் அவளுக்குச் சமான மாகமாட்டார்கள். அவளுடைய புத்தியும் புத்தியும் ஒப்பற்றவை. அவளுடைய சாரத்திய பலத்தினாலே ரதிகன் அற்பனாயிருந்தாலும் சத்துருக்களை வெல்வானென்று சொல்லிய பேச்சைக் கேட்டுச் சந்தோஷித்து அவனைப் பார்த்து கேளீர் கங்கபட்டரே, தெய்வச் செயலாய் நமது குமாரன் வெற்றி பெற்றானல்லவா? அதற்காக நம்முடைய நகர முழுதும் அலங்கரிக்கப் பட்டது. சகல பரிவாரமும் அனுப்பப்பட்டது. வேதியர் சொஸ்திவாசனஞ் செய்யும்படி நியமிக்கப் பட்டனர். நமது அரண்மனை வெகு விநோதமாக அலங்காரஞ் செய்யப்பட்டது. நமது உத்தரை தமையனைப் பார்க்கும்பொருட்டுத் தோழிகளோடும் தகுந்த பரிசனங்களோடும் அனுப்பப்பட்டாள். இப்படி செய்யவேண்டுவ தெல்லாம் செய்தாயிற்று. ஆதலால் நாமிப்போது சயிரந்திரியைக் கொண்டு சொக்கட்டானை யழைப்பித்து ஆடுவோம் வாருமென்றான். அதுகேட்டு கங்கபட்டர் ஓய் மகாராஜாவே? இப்போது நான் சொக்கட்டானாடமாட்டேன். ஏனென்றால் அதிக சந்தோஷத்தை யடைந்தவன், அதிக விசன மடைந்தவன், ஸ்திரீகளைச் சமீபத்தில் வைத்துக்கொண் டிருக்கிறவன், இப்படிப்பட்ட பேர்களோடு சூதாடினால் ஏதாகிலும் ஒரு கேடே வரும். ஆதலால் நானாடமாட்டேனென்றார். அதற்கு அவ்வரசன் ஓய் கங்கபட்டரே? உன் பேச்சைத் தடுக்காதேயும். உமக்கு வேண்டிய பொருள் கொடுக்கிறேன். ஆட வாருமென்றான். அப்படி சொல்லியும் கங்கர் அரசனை நோக்கி ஓ அரசனே? இப்படியாகிலும் வலுமை செய்து சூதாடுவதினுமக் கென்ன பயன்? யுதிஷ்டிரர் இப்படிக்குச் சூதாடியல்லவோ அரசாட்சியையும் சகல சம்பத்துக்களையும் போகங்களையுமிழந்து தம்பிமாரோடும் மிகவுமரிய காதலியாகிய பாஞ்சாலியோடும் காட்டிலலைந்து திரிந்து இப்பொழுதிருக்குமிடந் தெரியாமல் அஞ்ஞாத வாசஞ் செய்கிறார். இப்படிப்பட்ட தீய செய்கைக்கு நீரேன் வலுமை செய்கிறீர்? நீர் புத்திரன் ஜயம் பெற்ற சந்தோஷத்தினாலே தன்னை மறந்திருக்கிறீர். இப்படிப்பட்ட வேளையிலும்மோடு சூதாடல் தகுதியல்ல.

ஆகிலும் உமது வலுமைக்காக ஆடுகிறேனென்று கிஞ்சித்து அங்கி
காரப்பட்டார். இப்படியிருக்க அரசன் சைரந்திரியைக்கொண்டு
சொக்கட்டானை யழைப்பித்து ஆட வாரம்பித்து கங்கனை நோக்கி
பாரும் கங்கரே? நமது குமாரனுடைய பராக்கிரமம் ஒப்பற்றதா
யிருக்கிறது. அப்படிப்பட்ட கவுரவனை யொருவனாக வெற்றிகொ
ண்டானல்லவோ? இவனிதுவரையில் யுத்தஞ் செய்தறியான்,
மிகவும் சிறுவன், பலமான சகாயமு மில்லை. நபும்சகையாகிய பிரு
கன்னளையைச் சாரதியாக வைத்துக்கொண்டு அந்தப் பெருஞ் சே
னையைச் சயித்தவிவனுக்குச் சமான மொருவனு மாகமாட்டா
னென்று சொல்லக் கேட்டு கங்கரானவர் இது உத்தரனுடைய மகி
மை அன்று, பிருகன்னளையின் மகிமை. அவளுடைய சம்பூர்ண சகா
யத்தினாலேதா னிவன் வெற்றிபெற் றிருப்பான். சந்தேக மில்லை
யென் றுரைக்க அவ் வரசன் மனம் பொறாமல் ஓய் கங்கபட்டரே?
நீரென்ன அப்படி சொல்கிறீர். அஸ்திர சஸ்திரங்களில் மிகுந்த
வல்லமை பெற்ற சூரனாகிய எனது குமாரன் ஜயிக்காமல் அந்தப்
பேடியா ஜயித் திருப்பாள்! என்ன பேச் சிது போமென்று கூற, கங்
கபட்டர், முன்பு காண்டவ தகனஞ் செய்தபோது இந்தப் பிருகன்
னளை சாரத்தியஞ் செய்ததனாலேதான் ஜய முண்டாயிற்று. ஆத
லால் இவளாலே கவுரவர் ஜயிக்கப்பட் டிருப்பார்களே யன்றி வேறு
யிருக்கமாட்டா தென்னவே அரசன் கோப மடைந்து நீர் யுக்தா யுக்
தந் தெரியாதவர். ஏனெனில், உலகத்திலே ரதிகன் ஜயிப்பானா? சா
ரதி ஜயிப்பானா! ரதிகன் சொற்படி சாரதி கேட்கவேண்டுமா? சாரதி
சொற்படி ரதிகன் கேட்கவேண்டுமோ? இப்படியிருக்க நீர் சொல்
வது லோக விசித்திரமா யிருக்கின்றது. அதேன் நமது குமாரன்
ஜயித்ததை நீரங்கீகரிக்கமாட்டே னென்கிறீர்? அரசன் பேச்சுக்கு
விரோதம் பேசுகின்றவ னொரு நாளும் சுக மடையமாட்டான். ஆ
னால் உம்மிடத்தில் அதிக விசுவாச மிருக்கிறபடியினாலே இந்தப்
பேச்சை நான் பொறுத்தேன். நீர் நன்மை யடையக் கருதினால் இ
னியாகிலு மிப்படி சொல்ல வேண்டா மெனவே கங்கபட்டர், கொ
ஞ்ச முறுத்திச் சொல்ல நினைத்து ஓ அரசனே? நீர் வீரருடைய
சொரூப மறியாமற் பேசுகிறீர். என் பேச்சை நம்பி பிருகன்னளை க
வுரவரை ஜயித்தாளென்று பறை சாற்றுவியும். சந்தேகப் படாதேயும்.
அவளை யல்லாமல் இந்திரன் முதலான தேவரானாலும் அந்தக் கவுர
வரை வெல்லமாட்டார்கள். அந்தச் சேனையில் பீஷ்மர், துரோணர்,
கிருபர், அசுவத்தாமர், கர்ணன், விகர்ணன், சோமதத்தன், ஜயத்தி
ரதன், பூரிச்சிரவன், சலன், ஜலவந்தன், துரியோதனன்; துச்சாதன

ன், விவிம்சதி, விருஷசேனன், வாதசேகன், சுவர்ச்சன், பாகிலிகன்,
பூரிசேனன், யுயுச்சு, சவுபலன், சகுனி, துமச்சேனன் இப்படிப்ப
ட்ட வீராதிவீர ரிருந் திருப்பார்க ளல்லவா? இவர்களில் ஒவ்வொருவ
ரையும், கண்ணெடுத்துப் பார்க்கும்படியான திறமைதான் யாருக்
கிருக்கிறது. அந்தப் பிருகன்னளை யொருத்திதான் அவர்களோடு யுத்
தஞ் செய்யும்படியாகிய திறமை யுள்ளவள். ஆதலால் யான் சொல்
வியதே சித்தமாயிருக்கும். உமது புத்திரன் அந்தச் சேனையின் சமீ
பத்திற்கூட செல்லமாட்டான். நான் சொல்லுகிறது பொய்யா யிரு
க்கமாட்டாதென் றுரைத்ததைக் கேட்டு அரசன் மிகுந்த கோப
மடைந்து அவளைப் பார்த்து அடீ அதம சன்னியாசி? உனக் கித்
த்தனை பொறுமை யேதுக்கு? நீ யெப்போதும் தாறுமாறாய்ப் பேசுகி
றாய். நீ மிகவும் துஷ்டன் என்று பற்கடித்துக் கைதுகொண்டே
அந்த பாச்சிகையை எடுத்து அவர் சிரத்தின் வலப்பக்கத்தி லிடித்தா
ன். இடிக்கவே மலையினின்று மருவி பெருகிறதுபோல் அவர் சிரத்
தினின்று முதிரம் பெருக வாரம்பித்தது. அப்போது அந்தக் கங்
கபட்டர் மிகுந்த நாண முற்று எதிரே நிற்கிற துரோபதியைப் பா
ர்த்து வெகுவாய் விசனப்பட்டுச் சும்மாவிருந்தார். அப்போது து
ரோபதி களை யில்லாத துயர மடைந்து அக்காலத்தி லுண்டாகிய
கோபத்தை யடக்கித் தனது மெல்லிய வஸ்திரத்தினுல் வுதிர
த்தைத் துடைத்தாள். அது கண்டு அரசன் கோபத்தோடு அவளைப்
பார்த்து அடி சைரந்திரி? நீயே யிந்தச் சன்னியாசியின் தலை யுதிரத்
தை யுனது வஸ்திரத்தினுல் துடைத்தாய்? உனக்கு மவனுக்கு மெ
ன்ன சம்மந்தம்? உண்மை கூறென்று சொல்ல, அவள் வாரீர் மகா
ராஜாவே? இவருடைய மகிமை யாரறிவார். இவ ரங்கத்தினி
ன்றும் எத்தனை யுதிர விந்து பூமியில் விழுமோ அத்தனை யாண்டு
வரையில் உமது ராச்சியத்தில் மழை பெய்யாமல் யிருந்த தொந்த
ரை யுண்டாகும். ஆனதுபற்றி உமக்கு நன்மைக்காகவே நா னிப்படி
செய்தேன். மனதி லுமக்குக் கலக்கம் வேண்டா மென்றாள். அந்த
வேளையில் அரசன் செய்த கொடுமையைத் தடுக்கும்படியாகிய சக்தி
தமக் கிருந்தாலும், அஞ்ஞாதவாச முடிந்து வெளிப்படக்கூடாதா யிரு
ந்தாலும், தமது சுபாவமாகிய பொறுமையைப்பற்றி அங்ஙனஞ் செ
ய்யாமற் சும்மா விருந்தார். துரோபதியும் பதிவிரதா தேஜசினாலே
சபிக்கச் சக்தி யிருந்தாலும் கணவ னபிப்பிராயத்திற்கு விரோத
மாக நடக்கக்கூடாதென்கிற கருத்தினாலே சும்மா விருந்தாள், என்
று சொல்லிக்கொண்டு வந்த வைசம்பாயனரைப் பார்த்து ஜனமே
ஜய மஹாராஜா வினவுகிறார். வாரும் வைசம்பாயன மஹாமுனி

வரோ? அர்ச்சுனனுக்கும் கவுரவருக்கும் நேரிட்ட யுத்தத்தைப் பார்க்க வானத்தில் வந்த தேவரெல்லாம் அவ் யுத்த முடிந்த பின் என்ன சொன்னார்கள்? அதை யருளிச் செய்யவேண்டு மென்று வினவியதைக் கேட்டு அம் முனிவர் சொல்லத் தொடங்கினார்.

கேளுமையா ஜனமேஜய மகாராஜனே? நீ மூளைத்தபடி பீஷ்மர் முதலான மகாவீர ரநேகருக்கும் அர்ச்சுனன் ஒருவனுக்கும் நடந்த யுத்த முறையையும் அதில் அர்ச்சுனன் பராக்கிரமித்ததையும் அவனது அஸ்திர சஸ்திர பிரபாவங்களையும் அஸ்த லாகவத்தையும் கவுரவவீரருடைய சாமர்த்தியங்க ளெல்லாம் வீணாகி அவர் தோற்று ஆடை யாபரணங்களைப் பறி கொடுத்து வெஃகி யோடிப்போனதையும் பார்த்து ஆச்சரியப்பட்டு அர்ச்சுனனை மிகப் புகழ்ந்து அவனுக்குப் பல ஆசிகள் கூறி தத்த முலகங்களுக்குச் சென்றார்கள். மேற் கதையைக் கேளும். விராட மஹாராஜனாலே அனுப்பப்பட்ட சேனைகள் பிருகன்னளையும் விராட புத்திரனு மிருக்கு மிடம் போய்ச் சேர்ந்தார்கள். அந்தச் சேனை பெரிய கோஷத்துடனே சமீபத்தில் வரும்போது அர்ச்சுனன் விராடபுத்திரனைப் பார்த்து, கேளாய் ராஜகுமாரா, இதோ சேனையின் இரைச்சல் கேட்கின்றதே இதனாலென்றனுக் கொரு சந்தேக முண்டாகின்றது. எப்படி யென்றால் நம்மா லடிபட்டு ஓடிப்போன கவுரவர் மறுபடியும் நினைத்துக்கொண்டு வருகிறார்களோ, இல்லாவிட்டால் உன் பிதா அனுப்பிய சேனைதான் வருகின்றதோ, நமக் கெதிராகவே வருகிறபடியினாலே உன் சேனைதான்போல் காணப்படுகின்றது, நீ யுற்றுப்பார்த்துச் சொல்லென்று கூற, அவ் விராடபுத்திரன் அப்படியே பார்த்து, கேளீர் மகாராஜனே? வருகிறது நம்முடைய சேனையே. சண்டைக்கு வருஞ் சேனையாகில் நாணோசை முதலிய ஆயுத கோஷங்கள் கேட்கு மல்லவா? அப்படி யொன்று மில்லை. அன்றியும் சந்தோஷ பேரிகை முதலிய வாத்திய முழக்கங்களும், மத்தளம், யாழ் முதலிய வாத்திய முழக்கமும், வேசிகளின் பாட லொலியும் கேட்கின்றது. இதுவு மல்லாமல்* இந்தச் சேனையி னடுவில் பெண் யானைகள்மீது அழகாய்ச் சிங்காரிக்கப்பட்ட கன்னியர் விளங்குகிறார்கள். நடுவி லொரு சிவிகையும் விளங்குகின்றது. இதை யெல்லாம் பார்த்தால் நான் வெற்றி கொண்டே னென்கிற செய்தி கேட்டமாத்திரத்திலே நமது உத்தரை என்னைப் பார்க்கக் கருதி வருகிறாள்போல் தோற்றுகிறது. அல்லாமலும் கொடி முதலானவை நம்முடையனவே. ஆதலால் ராஜாவினா லனுப்பப்பட்ட நமது சேனையே யல்லது வேறல்ல வெ

ன்று உத்தரன் கூறியதைக் கேட்டு அர்ச்சுனன் சந்தோஷித்துத் தேரி லுத்தரனை யேற்றி நடத்தினன். அந்தச் சேனையும் இவர்களைக் கண்டு மிகுந்த சந்தோஷத்தோடு கோலாகலமாய் வாழ்த்திச் சூழ்ந்துகொண்டு சத்திரசாமராதி சகல வுபசாரங்களினலும் பெருமைப்படுத்திற்று. அப்போது அந்தச் சேனையில் வந்த ராஜகுமாரரெல்லாம் உத்தரனை யாலிங்கனஞ் செய்துகொண்டு காலனது கண்டதுபோல் நீ வெற்றிபெற்று க்ஷேமமாய் வந்தாயே யென்று மிகவுங் கொண்டாடிப் புகழும்போது, உத்தரன் மனஞ் சகியாமல் தன் னுயிர்த் தோழராகிய அவ் விராஜகுமாரரோடு இதோ சாரதியா யிருக்கிற இந்த மஹா புருஷருடைய சாமர்த்திய பலத்தினலே நான் சத்துருக்களை வென்று பசுக்களையும் திருப்பிக்கொண்டு உயிரோடு வந்துசேர்ந்தேன். இந்த மகானுபாவ னருகி லில்லாமற் போனல் அந்தச் சைனியத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கவு மென்றனுக்குச் சக்தி யில்லை. ஆதலால் என்னை யேன் சும்மாய்ப் புகழுகிறீர்கள்? இவரைப் புகழுங்கள். இச் செய்தி யவர் ஒருவருக்குஞ் சொல்லவேண்டா மென்று கட்டளையிட் டிருக்கிறார். ஆனலும் நீங்க ளெனக்கு மிகவும் மித்திரராகையால் சொன்னேன் என்று உரைக்கக் கேட்டு அவரெல்லாம் மிகவும் ஆச்சரியத்தை யடைந்து வெகு விநய பக்திகளோடு அர்ச்சுனனைப் புகழ்ந்தார்கள். இவ்வகையாய்ச் சேனைகளால் சூழப்பட்டுப் பட்டணம் போய்ச் சகல ஜனங்களும் அலங்கரித்துக்கொண் டாசையோடு சூழ்ந்து வர வெகு வேடிக்கையாய் அலங்கரிக்கப்பட்ட நகரத்தை வலம்வந்து ராஜாவின் மாளிகைக்குச் சமீபத்திற் போ யிறங்கினர்கள். அப்போது அர்ச்சுனன் தான் முன் செய்த பிரதிக்ஞையின்படி கௌரவரிடத்தி லிருந்து பறித்துக் கொணர்ந்த வஸ்திர பூஷணங்களை யெல்லாம் உத்தரைக்குப் பதுமைக் யலங்காரார்த்தமாகக் கொடுத்தான். அவைகளை வாங்கிக்கொண்டு உத்தரை மிகுந்த சந்துஷ்டி யடைந்து இவனது பராக்கிரமப் பிரபாவத்தையு மறிந்து புகழ்ந்து அவன்மீதில் மனதை ரிணைத்தாள். உத்தரகுமாரன் நான் வந்திருக்கிறேன், மகாராஜாவை தரிசிக்க விரும்புகிறே னென்று காவற்காரனுக் கறிவிக்க, அவன் அச் செய்தி மகாராஜாவுக் கறிவிக்க, அவ்வரசன் தன் குமாரனையும் பிருகன்னளையையும் சீக்கிரம் பார்க்க விரும்புகிறே னாதலால் அவர்களை இங்கு வரச்செய் என்று கட்டளையிட, அக்காவற் காரனும் அதை சிரமேற் கொண்டு போகு மளவில் அரசன் பக்கத்தி லிருந்த யுதிஷ்டிரர் எழுந்து வந்து அந்தக் காவற்காரனை ஏகாந்தத்தி லழைத்துச் சொல்லுகின்றார். கேளாய் வாசற் காப்பானே, நமது மஹாரா

ஜா சொற்படி நீ ராஜ குமாரனோடு பிருகன்னளையை உள்ளே விட்டுக்கொண்டு போகாதே. அப்படி செய்வாயாகில் நமது மகா ராஜாவுக்குத் தீங்கு நேரிடும். அதே தென்றால், அதி லொரு காரண மிருக்கின்றது. அதுமிகவும் ரகசிய மானது. ஆகிலும் அதை யுனக்குத் தெரிவித்தா லல்லது நீ நம்ப மாட்டாய். ஆகையால் இப்போ த்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேள். இந்த பிருகன்னளை யாரென்றால், பாண்டவரி லொருவனாகிய அர்ச்சுனன். அவன் அஞ்ஞாத வாசமியித்த மிவ்வேடம் பூண் டிவ்விடத்தில் வருகின்றான் நமது ராஜ குமாரனோடு சகாயமாகச் சென்று பீஷ்மர் முதலாகிய கௌரவரை வெற்றி கொண்டு பசுமாடுகளைத் திருப்பிக்கொண்டு வந்தவ னவனே! இவ் வுத்தரகுமாரன் அவர்களைக் கண்திறந்து பார்க்கவு மஞ்சுவான். இதெல்லா மென்றனுக்கு நன்றாய்த் தெரியும். அவ் வர்ச்சுனனை யன்றி புகழ் பெற்ற கௌரவ வீரரைச் சயிக்க மற் றொருவரா லாகாது. நானே அப் பாண்டவர் களில் மூத்தவராகிய யுதிஷ்டிரர். இந்தச் செய்தி யெல்லா முனக்குச் சாவகாசமாய்த் தெரிவிக்கிறேன். இப்போது நான் சொல்லும் பேச்சை யுல்லங்கனஞ் செய்யாதே. என் தேகத்தில் யுத்தத்தி லன்றி எவனாகிலும் உதிரம் பெருகச் செய்தானாகில் அவனைப் புத்திர மித்திர களத்திராதிக ளோடு நாசஞ் செய்வே னென்று என் தம்பி யாகிய அவ் வர்ச்சுனன் பிரதிக்கினை செய் திருக்கிறான் இவ் வரசனோ இவை யெல்லா மொன்று மறியாமையினாலே கௌரவரை யுத்தரன் ஜயித் திருக்க மாட்டான் பிருகன்னளையே ஜயித் திருப்பா ளென்று நான் சொல்லிய பேச்சைக் கேட்டு மிகுந்த கோப மடைந்து பாச்சிகையினா லென் சிரத்தி லடித்தான். அதனாலே என் சிரத்தில் மிகுந்த உதிரம் பெருக வாரம்பிக்க, நா னதைப் பூமியில் விழவொட்டாமல் தடைத்து நிறுத்தினேன். எனக்கு அவ ரப்படி செய்ததற்காக கோப முண்டாக வில்லை. ஆகிலும் அர்ச்சுன னிதைக் கண்டா லெவ்வளவும் பொறுக்க மாட்டான். அதனாலே அரசனுக்குக் கேடு நேரிடு மானது பற்றி நீ பிருகன்னளை வேடங்கொண்டிருக்கின்ற அர்ச்சுனனை இங்கே அழைத்துக்கொண்டு வராதே என்று கங்க பட்டர் சொல்லிய வார்த்தையைக் கேட்டு வாசற் காப்பான் மிகுதியாகிய சந்தோஷத்தினாலு மாச்சரியத்தினாலும் திக்பிரமைகொண்டு கைகளைக் குப்பிச் சிரத்தின் மேலிட்டு வெகு வினயத்தோடு அங்ஙனமே செய்கிறே னென்று போய் இராஜ குமாரனைக் கண்டு கேளீர் ராஜ குமாரரே, உம்மை மாத்திரம் உள்ளே வரும்படி மகாராஜா கட்டளை யிட்டார். ஆதலால் வரவேண்டு மென்று

சொல்லி அவனுக்கு முன் வழி காட்டிக்கொண்டு சென்றான். கங்
கபட்டரும் முன்போ லரச னருகிற் சென் றுட்கார்ந்தார். உத்தரகு
மாரனோ அந்தப்புரத்தி னுள்ளே சென்று பிதாவைக் கண்டு சாஷ்
டாங்க மாகத் தெண்ட னிட்டுக் கை கூப்பி நின்று அருகிலிருக்கும்
யுதிஷ்டிரருடைய சிரத்தில் உதிர மொழுகும்படியாகிய காயத்
தைக் கண்டு மிகுந்த திகி லடைந்து தந்தையை நோக்கி, ஐயா,
மகாராஜாவே! இந்த மகானுபாவராகிய சந்நியாசியின் சிரத்தி லி
ங்ஙனம் காயப் படுத்தியவன் யார்? இதனாலே அப்படிப் பட்ட பாவி
க்கு மிகுந்த தீமை கிடைக்குமே! இவரோ வெகு பிரபால முள்ள
மகா குலத்தி லவதரித்தவர். சகல வேத சாஸ்திரங்களும் நன்றாய்க்
கேட் டறிந்தவர். அருள், பொறை, வாய்மை, நல்லொழுக்கம், மு
தலிய வெல்லா நற்குணங்க ளுக்குங் கடல் போன்றவர், தருமோத
ய மூர்த்தி, நினைத்த மாத்திரத்திற் பகைவ ரனைவரையும் நீறு செய்ய
வல்ல மகிமை யுடையவர், தேவேந்திரனோ டொக்க தேவ சிங்கா
தனத்தில் வீற்றிருக்கத் தக்கவர். இத்தன்மை யாராகிய விவர்பால் அ
பராதஞ் செய்தவ னுக்குப் புத்திர மித்திர களத்திராதிகளோடு நா
ச மோர் நொடியில் வருமே யென்று வினவிய புத்திரனைப் பார்த்
து, விராடன், கேளாய் குழந்தாய், நீ கௌரவரை வென்ற செய்தி
கேட்ட நான் சந்தோஷமா யதைக் கூற, இவர் அது சகியாமல் பே
டி ஜயித்திருப்பா னென்று சொல்ல நா னதை மறுத்து அநேக வித
மாய்ச் சொல்லியு மிவர் கேளாமல் மேன்மேலும் அதையே சிறப்
பித்துச் சொல்லக் கேட்டு என்றனுக்குக் கிஞ்சித்துக் கோபம் வந்
து பாச்சிகையைத் தலை மேற் போட்டே னதனா லிக்காய முண்டா
யிற் றென்று கூறினான். அதைக் கேட்டவுடனே குமாரன் மனம் நொந்து
மார் துடிக்கப் பிதாவைப் பார்த்து ஐயா, நமக் கெல்லாம் தீமை
தேடிக் கொண்டீரே! என் செய்வோம்! உமக் கொன்றும் தெரியாம
ற் போயிற்று. நீ ரித்தனை நாள் செய்த தவமும் புண்ணியமும் பாழா
யிற்று, நீர் கற்றறிந்தன வெல்லாம் வீணாயின, வெகு நாளாய்ப் பெ
ரியோருடன் பழகியும் பொறுமை யில்லாமற் போயிற்றே! என்ன
பயன்? இவர் மகா சாந்தி நிதி யென் றறியீரோ? இவர் சொல்வதிற்
பொய் யுண்டோ? கொஞ்ச மாராயாம லுமக் கிவ்வளவு தாமச மேனு
ண்டாயிற்று? (இது நெடுநாள் பூசித்துவந்த தெய்வத்தை யொரு நா
ள் காலா லுதைத்தாற்போ லாயிற் றல்லவோ) இத்தனை நா ளிவருக்கு
ச் செய்த வுபசார மெல்லாம் சாம்பலிற் செய்த ஆகுதி போ லாயிற்
றே. அலங்கரித் தல்லவோ தலையை வெட்டினீர்! என்ன காலக்கே
ட்டினா லுமக்குப் புத்தி மயங்கிற்றோ தெரிய வில்லை. எப்படி யானு

னு மாகட்டும். இப்போதாகிலும் விரைவி லெழுந் திருந்து சாஷ்
டாங்கமா யிவருக்குத் தெண்ட னிட்டு இவர் திருவடிகளைச் சிரமே
ல் வைத்துக்கொண்டு அடியேன் செய்த பிழைகளைப் பொறுத் தரு
ள வேண்டு மென்று க்ஷமை கொள்ளு மென்று சொன்னான். அது
கேட்டு அரசனும் மனஸ்தாப மடைந்து திடீ ரென் றெழுந்து அப்
படியே யவரை வணங்கி க்ஷமை கொண்டான். க்ஷமை கொள்ளவே
யுதிஷ்டிரர் விராட மகாராஜனைக் குறித்துச் சொல்லுகிறார். கேளு
ம் மகாராஜாவே! நீர் என் விஷயத்திற் செய்த அபராதத்துக்காக
எனக்குக் கோப மில்லை. ஆனாலும் என் னுதிரம் பூமியிற் சிந்தினால்
உமக்குத் தீமை கிடைக்கும். அதற்காக நா னதை யடக்கிச் சீர் செ
ய்தேன். அத்தீமை யாதெனின், இவ்வி ராச்சியத்தில் மழை பெய்யா
மல் ஜனங்களுக்கும் மிருகங்களுக்கும் மற்று முள்ள வெல்லாவற்
றிற்கும் நாசம் நேரிட்டு அதனாலே நீர் மிகுந்த துன்பத்தையும் அ
ப கீர்த்தியையும் அடையும்படி யாவதே யாம். அங்ஙனம் யான்
பொறுத் துதிரத்தைத் துடைத்தாலும் நீர் செய்தது கொடுஞ் செ
ய்கை யானதுபற்றி என்னை க்ஷமை கொள்ளாவிடில் உமக்கு வே
று வகையிற் றீமை நேரிடும். தெய்வாதீனமாய் நீர் அங்ஙனஞ் செ
ய்ததனால் அதுவும் உமக்கு நீங்கிற்று. இப்படி செய்யும்படி யும்மை
யேவ நான் நாணங் கொண் டிருந்தேன். மகா புத்தி சாலியாகிய வும
து புத்திரன் அதை யறிந்து செய்வித்தான். சந்தோஷ மாயிற்று.
என்று யுதிஷ்டிரர் சொல்லியதைக் கேட்டு விராடராஜன் மிகுந்த
சந்தோஷத்தை யடைந்து தெய்வாதீனம் நன்மை பெற்றோ மென்
றெண்ணினான். யுதிஷ்டிரரோ அர்ச்சுனன் அப்புறம் போகப் பார்த்
து எழுந் திருந்து அவ் வுதிரத்தை யலம்பித் துடைத்துக்கொண்டு
ராஜாவி னருகிலேயே யிருந்தார். இப்படி யான பின் விராடராஜன் த
ன் மகனைக் கட்டி யணைத்து வினவுகிறான். அப்பா மகனே! நீ யந்
தக் கௌரவ சேனையிற் புகுந்து அதிரத மகாரதராகிய வீஷ்ம துரோ
ண கர்ண துரியோதனாதிகளோடு சண்டை செய்த விதமென்ன?
நீ யொருவனாகப் பல மகாவீரரை எப்படி யெதிர்த்தாய்? இதை
யெல்லாம் சவிஸ்தார மாய்ச் சொல். அது கேட்டு மனங் குளிர்கிறே
னென்று கூறியதைக் கேட்டு உத்தரன் கூறலுற்றான். கேளும் என்
பிதாவே! நா னொருவனாகப் போய் அந்தக் கவுரவரைச் சயித்துப்
பசுமாடுகளைத் திருப்பிக்கொண்டு வரவில்லை. அப்படிப் பட்ட சக்தி
எனக்கேது? இங் கிருந்து தயிரியமாகத்தான் போனேன். போய் யுக
ப்பிரளய காலத்தில் உலகத்தை யெல்லாம் முழுகடிக்கும்படி கரை
புரண்டு பொங்கும்படியாகிய கடலோடு நிகர்த்து வெகு சவுரிய மு

ள்ள மகா சூரர் நிறைந்து சதுரங்கங்கள் சூழப் பெற்றிருந்த சேனையைக் கண்ட மாத்திரத்திலே யிருந்த திகி லடைந்து திடீரென்று குதித்து ஓட வாரம்பித்தேன். அப்போது சாரதியா யிருந்த பிருகன்னளை வெகு விதமாய்த் தேறுதல் சொல்லியும் என் மனந் துணிவு கொள்ளாம லிருந்தது. அப்படி யிருக்க பிருகன்னளை வலிமையினா லென்னை இழுத்துக்கொண்டு போக வாரம்பித்தாள். அப்போது அவள் மகிமையினால் ஒரு தேவபுருஷன் சான்னித்தியமாகி என்னை யழைத்துத் தைரியப் படுத்தித் தேரின்மீ துட்காரவைத்துச் சகல விதத்திலும் சகாயஞ் செய்ய வாரம்பித்தான். அதனாலே நான் மன வலியுற்றுச் சேனையி னருகிற் போனேன். அந்தத் தேவபுருஷ னொளியைப் பார்த்தபோதே மனதிற் கொரு திடமும் சந்தோஷமு முண்டாயிற்று. அவனுடைய காம்பீரியமும் தைரியமும் சாமர்த்தியமும் புத்தியும் ஆயுதங்களும் என்னாற் சொல்லி முடியாத மகிமை யுடையன. அவன் வில்லைத் தேவேந்திரன் வில்லோ டொத்ததென்று சொல்லத் தக்கதா யிருக்கிறது. அந்த நாணோசை கேட்டமாத்திரத்திலே பகைவர் மன முடைந்து கீழே விழத் தக்கதா யிருந்தது. அவ னட்டகாசமும் குணத் தொனியும் இடி முழக்கம்போன்ற சங் கொலியுங் கேட்டு அநேக வீர ருயிர் விட்டார்கள். அவனாற் காக்கப்பட்ட வென் மனமும் திக்பிரமை கொண்டு திகி லடைந்தது. அவனுடைய அஸ்த லாகவத்தை யென்னவென்று புகல்வேன்? நாணிபூட்டலும், அம்பெடுத்தலும், தொடுத்தலும், விடுத்தலும் இவை யொன்றுங் காணப்பட வில்லை. அக்கினிச் சுவாலைக்குச் சமானமாகிய கணைகள் ஒன்று பத் தாயிரம் பதினாயிரமாக வொன்றின்மே லொன்றாய்ப் புறப்பட்டுத் திசைகளில் வியாபித்தது மாத்திரமே காணப்பட்டது. அன்றியும் இக் கணைகள் என்ன செய்தனவோ அதுவும் காணப்பட வில்லை. இவை யாகாசத்தி லெழும்புவும் ராசி ராசியாய் யானைகளும், குதிரைகளும், தேர்களும், காலாள்களும், வீரரும் சின்னபின்னமாகச் சிதைந்து விழுந்ததுமாகவே தோற்றிற்று. அந்த விசித்திரத்தைப் பார்த்தும் மனதினாலே நிதானிக்கவேண்டுமே யன்றி வாயாற் சொல்வதும் கேள்வியினா லறிவதும் அசாத்தியம்! அந்தச் சேனையில் சிங்கங்கள்போன்ற பீஷ்மாதி வீரரை முன்பு கண்டபோது அவர் பல சாமர்த்தியங்களுக்காக என் சித்தம் எவ்வளவு ஆச்சரியத்தை யடைந்ததோ அந்த மகாபுருஷன் பராக்கிரமத்தைக் கண்டபின் அவர்கள் பராக்கிரமத்தில் அவ்வளவு அலக்ஷியத்தை யடைந்தது. சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளும். அப்படிப்பட்ட பராக்கிரமங்களும் அஸ்திர லாகவமும் சாமர்த்தியமும் இப் பூமண்

டலத்தில் மாத்திர மல்ல, சுவர்க்க லோக பாதாள லோகங்களிலும் எ
க்காலத்திலும் எப்படிப்பட்டவருக்கும் இருக்க மாட்டாது. அந்த
தாளத்துவசராகிய பீஷ்மாசாரியரும் அஸ்திர வித்தியா நிதியாகிய
துரோணாசாரியர் கிருபாசாரியர்களும் மகா சக்திவானாகிய ஆசாரி
ய குமாரரும் எதிர் நிற்க மாட்டாமல் தோற்றுப் போனார்கள். கர்ண
னும் துரியோதனனும் அடி பொறுக்கமாட்டாமல் எத்தனை தர
மோ ரணகளத்தை விட் டோடிப் போனார்கள். மற்றைப் பேர்கள்
கதியை நான் சொல்ல வேண்டுவ தில்லையே? அத்தனை சேனைகளும்
வியூகம் வியூகமாகப் பிரிந்து வெகு கட்டாய் அந்தப் புருஷன் மீதிற்
பாய்ந்து மறு க்ஷணத்தில் பதறுபோற் பறந்தோடும். இவ் வகையாய்
அந்தச் சேனை யெல்லாம் பெருங் காற்று லடிப்பட்ட வாழைத் தோ
ட்டத்தின் கதி யடைந்தது. அநேக வீரர் மாண்டார்கள். அநேக வீ
ரர் அங்கச் சேத மடைந்தார்கள். அநேகர் ஓடி யொளித்துக்கொண்
டார்கள். கடைசியில் பட்டணத்துக்கு ஓடிப்போன கௌரவ வீரரு
க்குத் தகுந்த பரிவாரங்கள்கூட இல்லாமற் போயின. வேதனை பொ
றுக்கமாட்டாமல் ஓ வென்று கதறிய கோஷம் திக் கெல்லாம் செ
விடுபடச் செய்தது. கடைசியில் துரியோதனன் எதிர் நிற்கமாட்
டாமல் ஓடும்போது அவனை விளித்து அந்த மஹாபுருஷன் சொல்
லியதாவது ஓ! கௌரவராஜனே? நீ மஹா சூரருடைய குலத்திற்
பிறந்து மஹா சூர னென்று பேர் பெற்று பாண்டவரை வெற்றி
கொண்டு ஏக சக்கிராதிபதியா யிருக்கவேண்டு மென்று தாகங்கா
ரங் கொண் டிருமாந் திருக்கிறவ னல்லவோ? இப்படிப்பட்ட நீ உயி
ரைப் பெரிதாக வெண்ணி யோட லாகாது. இப்படியாகிலும் உயிரைக்
காப்பாற்றி என்ன பய னடைவாய்? அபகீர்த்தியோடு பிழைத் திரு
ப்பதைக்காட்டிலும் இறப்பதே மேன்மை. நல்லது நீ ராச்சியத்துக்
குப் போனாலும் இப்படி வந்தது கேட்டு குடிகளும் உன்னை மதிக்
கமாட்டார்கள். அப்படி யாகும்போது உனக்குப் போகந்தான் எப்
படி கிடைக்கும்? ஆகையால், நீ இம்மை மறுமை இரண்டையு மி
ழந்து துக்கத்தை யனுபவிப்பதைக்காட்டிலும் திரும்பி வந்து யுத்
தஞ் செய்வது நன்று. ஆகையால், யுத்தஞ் செய் யென்றான். இப்
படி சொல்லும்போதும் அவன் திரும்பிப் பாராம லோடினான்
என் றிப்படி குமாரன் சொல்லிக்கொண் டிருக்க விராடராஜன் பி
ருகன்னளையைத் தன் சமீபத்திற் கழைத்து வரும்படி கட்டளை யிட்
டான். அந்தப்படி பிருகன்னளையும் வினயத்தோடு அரச னிடத்திற்
கு வந்து பணிந்து ராஜகுமாரன் பக்கத்தில் நின்றாள். நிற்கும்போ
து உத்தரன் அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே யுத்த சரித்தி

ரத்னத ராஜாவோடு சொல்லுகிறான். கேட்டீரோ மஹாராஜாவே?
அந்தத் தேவபுருஷன் முன் சொல்லியபடி வெகு விநோதமாக
அஸ்திர சஸ்திரங்களால் சத்துருக்களைத் தலை யெடுக்கவொட்டா
மடித்துக் கடைசியில் மோகனாஸ்திரப் பிரயோகத்தினாலே யா
வரையும் மயங்கச் செய்து அவர்களின் வஸ்திராபரணங்களை யெ
ல்லாம் பறித்துக் கொண்டுவந்து கொடுத்தான். அவைகளை நான்
நமது குமாரிக்குக் கொடுத்தேன். இதுவுமன்றி அந்த மஹானுபாவன்
யுத்தமெல்லாம் முடிந்தவுடனே ஓடாநின்ற துரியோதனனது கிரீ
டத்தைப் பேரம்பினால் வீழ்த்தினான். கர்ணன் முதலானோருடைய
வில்களையும் தேர் குதிரை முதலானவைகளையும் அநேகந் தரம் அ
றுத்துத் தள்ளினான். இப்படிப்பட்ட தருணங்களிலும் துரியோதன
னை யவமானமாய்ப் பேசி கிரீடத்தைத் தள்ளிய தருணத்திலும் எ
ன் மனம் நடு நடுங்கிப்போயிற்று. சத்துருக்கள் மடக்கிக்கொண்டு
போன நமது பசு மந்தைகளை மீட்கும்போது யுத்தப் பாணங்களி
னாலே பீஷ்மரை யடித்துத் தேர் குதிரைக ளில்லாதவராக்கி, து
ரோணரையுங் கிருபரையும் அப்படியே செய்து அசுவத்தாமாவை
இரண்டு பாணங்களினால் தோற்கடித்துச் சில பாணங்களினாலே
அந்தச் சேனைகளைத் துரத்தி யடித்துப் பசுக்களைப் பட்டணஞ் சே
ரும்படி செய்தான். இவ்விதமாக அவனே யாவரையும் ஜயித்துப்
பசுக்களை மீட்டுக் கொடுத்தானேயன்றி வேறில்லை என்று சொல்
லும்போது விராடராஜன் அப்பா மகனே? உன் னுயிரையும் பசு
க்களையும் காத்துக் கொடுத்த அந்தத் தேவ புருஷன் இப்போ தெ
ங்கே யிருக்கிறான்? அவனுக்கு நமது கன்னிகையைக் கொடுக்க விரு
ம்புகிறேன் என் றுரைக்கக் கேட்டு உத்தரன் ஐயா, அந்தப் புருஷன்
இன்னு மிரண்டு மூன்று தினங்களில் வருகிறேனென்று சொல்லி
மறைந்து போனான். நாளையோ நாளைநன்றைறயோ வருவான் என்று
சொல்லக் கேட்டு அரசன் சந்தோஷித் திருந்தான். பின்பு அர்ச்சு
னன் தன்னை யர்ச்சுன னென் றறியாமல் பிருகன்னளை யென்றே
நினைத்து தன் மகனுக்குச் சாரதியா யிருந்து சகாயஞ் செய்ததை
பற்றித் தன்னைக் கொண்டாடிய அவ் வரசனிடத்தில் விடை பெற்
று ராஜகுமாரனையுங் கூட அழைத்துக்கொண்டு போனான். பின்பு
அர்ச்சுனன் அந்தப்புரஞ் சென்று தான் யுத்தத்தி னின்றும் கொண்
டுவந்த வஸ்திராபரணங்களிற் சில முன் கொடுத்தவை போக மற்
றவைகளை உத்தரைக்குக் கொடுத்து ஆசீர்வதிக்க அவள் அவைக
ளைப் பெற்று மிக்க களிப்புற் றிருந்தாள்.

# பாண்டவர் வெளிப்படு மாலோசனை.

---

இப்படி யிருக்க, அர்ச்சுனன் அன்றிரவில் வீமனைக் கண்டு
சொல்லுகிறான். நம்முடைய தமையனார் கவுரவரை வென்று வந்த
என்னைச் சந்தோஷித்துப் பேசாம லிருக்கிறார். இதற்குக் காரண
மின்னதென் றறிகிலேன். நான் மன மறிந்து அபராத மொன்றுஞ்
செய்ய வில்லை. அவர் அப்படி யிருக்கின்றதனா லென் மனம் மிக வ
ருத்த முறுகின்றது என்று தம்பி சொல்லக் கேட்டு அவனைக் கூட
வே யழைத்துக்கொண்டு யுதிஷ்டிர ரிடத்திற்குப் போய் அவரோடு
அண்ணா? நம்முடைய அர்ச்சுனன் ஒருவனாய் கௌரவரை யெல்
லாம் வெற்றி கொண்டு ஜய லக்ஷிமியோடு கூடி வந்திருக்க நீர் அ
வனோடு முகங் கொடுத்துப் பேசாமலும், சந்தோஷப் படாமலும்,
கொண்டாடாமலும், தலையை மறைத்துக்கொண் டிருக்கிறீரும். அ
தெதற்காக? அவனோ மிகவும் விசனப்படுகிறான். இதன் காரணத்தை
யுரையும் என்று சொல்ல அவர் அதற்குச் சொல்லுகிறார். கேளா
ய் வீமசேனா, நானும் விராடராஜனும் இன்றைப் பகலில் சொக்கட்
டான் ஆடும்போது கௌரவரை வெற்றிகொண்டது தமது புத்திர
னே யென் றவர் கொண்டாட நான் அவனுக்குச் சக்தி யில்லை, பி
ருகன்னளை தான் வெற்றிகொண் டிருப்பா ளென்று சொல்ல, அவ்
வரசன் கேளாமல் தமது புத்திரனே யென்று அடிக்கடி சொல்லக்
கேட்டு நான் உறுதியாய் பிருகன்னளையே ஜயங் கொண்டா ளென்
று கூற, அது சகியாமல் அவன் கோபித்துப் பாச்சிகையினா லென்
றன் சிரத்தி லடித்தான். அதனாலே தலையினின்றும் உதிரம் பெரு
கிற்று. அதைத் துரோபதி தன் வஸ்திரத்தினால் துடைத்தாள். தெ
ய்வாதீனமாய் அதனாலே யது கீழே விழ வில்லை. இவன் அதைக்
கண்டால் அரசனைச் சக குடும்பமாய் நாசஞ் செய்வானே யென்று
அவனைக் காணாமல் தலை மறைவா யிருந்தேன். இதுவே யல்லது வே
று கருந் தொன்று மில்லை என்று யுதிஷ்டிரர் சொல்லக் கேட்டு
அர்ச்சுனன் காலாக்கினிபோல் கோபம் வந்து அரசனைக் கொலை செ
ய்ய நினைத்து வீமன் முகத்தைப் பார்த்தான். அப்போது வீமன் சொ
ல்லுகிறான். கேளாய் அர்ச்சுனா? தேவ குருவாகிய பிருகஸ்பதி நீதி
நூலில் மனிதன் எப்போதும் பொறுமை கொண் டிருக்கக் கூடாது, கா
லத்தில் கோபத்தையு மடையவேண்டும்; அதிலும் அற்பரிடத்தி லெ
ப்போதும் பொறுமையைக் காட்டக் கூடாது: கோப மில்லாதவனை

யாவரும் அலக்ஷியஞ் செய்வார்கள். விஷமில்லாப் பாம்பையும் நக
மும் கோரைப்பல்லு மில்லாப் புலியையும் உலகத்திற் கண்டால்
லக்ஷியஞ் செய்யாம லடிப்பார்க ளல்லவா? என்று சொல்லி யிருக்
கிறார். அது சரியாயிற்று. இப்போது நீர் னென்ன நினைக்கிறே னெ
ன்றால், இவ்வரசனைச் சமூலமாய் நாசஞ்செய்யவேண்டுமென்று நினை
க்கிறேன். அப்படி செய்து இவ் விராச்சியத்திலும் யுதிஷ்டிரருக்குப்
பட்டாபிஷேகஞ் செய்வேன். இவ் வரசன் முன்னமே நமக்குக்
கிஞ்சித்து அபகாரஞ் செய்து இருக்கிறான். எப்படி யென்றால்
துரோபதியைக் கீசகன் பிடித் திழுத்தடித் துதைத்ததைக் கண்
ணினாற் கண்டும் சும்மா விருந்தா னல்லவா? ஆதலால் என் கதா
யுதத்தினாலே மண் குடத்தை யுடைப்பதுபோ லிவன் சிரத்தை யு
டைத்துப் பின்பு துரியோதனன் முதலானோர் தலையை யுடைக்கிறே
ன் என்று உதடு துடிக்க வீமன் சொல்லியதைக் கேட்டு அர்ச்சுன
னும் கண்கள் சிவந்து சுழலத் தமையனைப் பார்த்துச் சொல்லு
கிறான். வாரீர் மகாராஜாவே? வீமன் சொல்லிப்படி செய்வதே ந
ல்ல தென்று நினைக்கிறேன். நாம் இத்தனை நாளும் கவுரவர் செய்
த தீமைகளையும் இவ்வரசன் செய்த தீமைகளையும் பொறுத்திருந்
ததைப் பற்றி யல்லவோ இவ்வளவு தொந்தரவு நேரிட்டது. அப்ப
டி செய்யாமல் அன்றே நமது சவுரியத்தை வெளிப்படுத்தி யிருந்தால்
சுகமா யிருக்கலாமே? ஆகையால் இனி யாகிலும் அப்படி யிராமல் ந
மக் கபகாரஞ் செய்தவர்களை நாசஞ் செய்து மேன்மை யடைவோம்.
வீமன் சொற்படி முன்னே இவ் விராடனைக் கொன்று பின்னே கவுர
வரைக் கொல்வோம் என்று பற்குனனுரைத் தது கேட்டு இரட்டைப்
ப்பிள்ளைகளும் அப்படி செய்வதே நன்றென்று அங்கீகரித்தார்கள்.
இவ்வாறு நால்வரும் ஒரே கருத்துக் கொண்டு ஆயுதங்களின் மேல்
கருத்தைச் செலுத்தக் கண்டு சாந்த ரூபியாகிய தருமபுத்திரர் கொ
ஞ்சங் கோபத்தைக் காட்டிச் சொல்லுகிறார். தம்பிமாரே! நீங்க ளே
ன் தருமத்தைக் கிஞ்சித்தேனும் சிந்தியாமல் பொருளையே முக்கி
யமாகச் சிந்திக்கிறீர்கள்? உங்களுடைய பராக்கிரமமே பெரிதென்று
நினையாதேயுங்கள். சத்தியமும் பொறுமையு மில்லாமற் போனால்
இப் பராக்கிரமத்தினு லொன்றும் கூடி வராது. இவ்வளவு தெரியாம
லா முன் னிருந்த சக்கிரவர்த்திக ளநேகர் கால மறிந்து பொறு
த் திருந்தார்கள். இவ்வளவு காலம் நம்மைக் காப்பாற்றிய வரசனுக்
குத் தீங்கு நினைக்கலாமா? மேலும் அபராதஞ் செய்தவன் க்ஷமிப்
பிக்காமற் போனால் அவனுக்குச் சிக்ஷை செய்யவேண்டுவது நியா
யம், க்ஷமிப்பித்தவனைக் குறித்துச் சிக்ஷை செய்தால் அது மகா பா

நக மாகும். ஆகையால் முன் தெரியாம லபராதஞ் செய்தாலும் பின்
னே வணங்கித் தெண்டனிட்டு க்ஷமிக்க வேண்டுமென்று பிரார்த்
தித்த விராடராஜன் விஷயத்தில் கிஞ்சித்தும் கோபிக்க லாகாது.
மேலும் அப்படி யவன் வணங்கும் போது அஞ்ச வேண்டாமென்
று நான் வாக்குத் தானஞ் செய்தேன். ஆதலால் இவனை இப்போது
ஒன்றுஞ் செய்ய வேண்டாம். நாம் நாளைக்குக் காலையில் வெளிப்
படையாக நமது ரூபத்தைக் கொண்டு சபையில் சிங்காதனத்தி
லுட்காருவோம். அப்போது அவனேதாகிலும் தடை செய்வானாகில்
அவனை யுத்தத்திற் கழைத்துச் சங்கரிப்போம் என்று தருமமும் நீ
தியும் சமாதானமு மாகத் தமையனார் சொல்லிய பேச்சைக் கேட்
டுத் தம்பிமார் சம்மதித்து அன் றிராத்திரி துரோபதியுடனே ஐவ
ரும் ஓரிடத்தி லிருந்து களிப் படைந்தார்கள். விராட ராஜனும் மக
ன் வெற்றி பெற்று வந்தமைக்கு மிகவும் கொண்டாடிச் சந்தோஷ
மா யிருந்தான்.

---

உத்தரையின்

## கலியாண சரித்திரம்.

---

கேளீர் ஜனமேஜய மகா ராஜாவே ? மறு நாள் பொழுது விடிந்
து சூரிய பகவான் உலகத்திற் கெல்லாம் அறி வென்னும் விளக்கை
த் தூண்டும்படியாகிய தூண்டுகோல்களைப் போன்ற தன் கிரணங்
களைப் பரப்பி விளங்கும் போது பாண்டவர் ஐவரும் ஸ்நானம்பண்
ணி திவ்ய வஸ்தி ராபரணங்களி னாலும் சந்தன குசுமாதிகளினாலு
ம் அழகா யலங்காரம் செய்துகொண்டு அப்படியே யலங்கா
ரம் பெற்று விளங்காநின்ற துரோபதியோடு கூடிக்கொண்டு ச
ேலென்று சபைக்குச் சென்று யுதிஷ்டிரர் சிங்காதனத்திலும்
மற்றவர் அவரைச் சூழ தருந்த தவிசுகளிலும் வீற்றிருந்து யாக
வேதிகையில் அக்கினிகள் எப்படி விளங்குமோ அப்படி விளங்
கினார்கள். விராட ராஜனும் நித்திய கருமங்களை நிறைவேற்றிப் பல்
வகை தானங்களையும் வேதியர்க்கு அளித்து அதிக சந்தோஷத்தோ
டு மகனாகிய உத்தரனைக் கூட்டிக்கொண்டு சபைக்கு வந்து பாண்ட

வர் ஆயிரங் கிரணங்களைப் பரப்பி விளங்கும்படியான சூரியர்போல் விளங்குகிறதைக் கண்டு வியப்படைந்து, யுதிஷ்டிரனை நோக்கிக் கூற லுற்றான். ஓய் கங்க பட்டரே? நீர் ஒரு வருஷகாலமாய் என்னோடு சூதாடிக்கொண்டு சாதாரணமா யிருந்தவர் இன்றைக்கு விசேஷமாகிய அலங்காரங்களையும் ஒளியையும் பெற்று எனது சிங்காதனத்தின்மீ துட்கார்ந்து கொண்டீரே! இஃதென்ன காரணத்தினாலே? அன்றியும் வல்லன் முதலானோரும் வெகு விநோத மாகிய அலங்காரங்களைப் பொருந்தி உம்மைச் சூழ உட்கார்ந் திருக்கிறார்களே! இதற்குங் காரண மென்ன? இதை நீர் விவரமாகச் சொல்ல வேண்டும். எனக்கு வெகு ஆச்சரியமா யிருக்கின்ற தென்று, அரசன் சொல்லிய பேச்சைக் கேட்டு அர்ச்சுனன் புன்னகை நகைத்துச் சொல்ல வாரம்பித்தான். கேளீர் விராட ராஜனே? குலத்திலும், குணத்திலும், கல்வியிலும், ஒழுக்கத்திலும், பொறுமையிலும், கொடையிலும், மகிமையிலும், ஒப்பற்ற விந்த மகா புருஷன் தேவேந்திரனோடு கூடச் சிங்காதனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்த வல்லவ ரல்லவோ? இப்படிப்பட்டவர் இப் பூலோகத்தில் ஓர் தேசத்துக்குரிய இச் சிங்கா தனத்தில் வீற்றிருக்கத் தகாதா? இவரை யா ரென்று நினைக்கிறீர்? குந்தி புத்திரரில் தலைவராகிய யுதிஷ்டிர மகாராஜ ரென்று நினையும். நாற் றிசைகளையும் வெற்றி கொண்ட மகாவீரராகிய நான்கு தம்பிமார், இவரது கண் குறிப்பினால் விட்டபடி ஆணையைச் சிர மேற் கொண்டு செலுத்துவார்கள். இவர் வேட்டைக்குப் புறப்பட்டால் முன் புறத்தில் பதினாயிரம் யானைகளும் பின் புறத்தில் ஆயிரம் யானைகளும் முன்னும் பின்னும் முப்பதினாயிரம் ரதிகரும் முப்பதினாயிரம் குதிரைகளின் மீது, வாள், வேல், முதலிய திவ்யாயுத பாணிகளாய் மகாசூரர் அநேகரும் ராஜாதி ராஜ குலத்திற் பிறந்த மகா சூராகிய எண்ணூறு ராஜ குமாரரும் சூழ்ந்து போவார்கள். இவரது சேனைகளுக்குக் கணக் கிடக் கூடாது. இவருடைய ஆணை சகல ராஜாக்களின் சிரங்களில் சூடாமணி போல் விளங்கும். கவுரவ ரனைவரும் இவருக் கூழியக் காரர்போ லிருப்பார்கள். இவரது கீர்த்தியானது மூவுலகங்களையும் வியாபித் திருக்கின்றது. இவரை எண்பத் தெண்ணாயிரம் சேவகர் எப்போதும் சூழ்ந்திருப்பார்கள். இவர் தினந்தோறும் பலவாயிரம் மூப்பர், பிணியாளர், குருடர், செவிடர், ஊமைகள், சப்பாணிகள், நொண்டிகள், திக்கில்லாதவர், இன்னு மிவ்வாறாகிய வறிஞரைப் புத்திரரிலும் அதிகப் பரிவோடு காப்பாற்றுபவர். அநேக நற்குணங்கள் இவரிடத்தில் ஒளி பெறுகின்றன. இராஜசூய மென்னும் வேள்வி யியற்றி அரசர் கு

ழாத்துள் மேன்மை பெற்றவர். இப்படிப்பட்ட இம் மகாராஜர் இச்சிங்காதனத்தி லிருக்கக் கூடா தென்று நீர் சொல்லுகிறது தகுதி யல்ல என்ற அர்ச்சுனன் மொழியைக் கேட்டு விராடராஜன் சந்தோஷத்தையும் அச்சத்தையும் வியப்பையு மடைந்து இங்ஙனம் சொல்லத் தொடங்கினான். ஓய் பிருகன்னளையி னுருவத்தைத் தரித்த புருஷனே ? இவர் யுதிஷ்டிர மகாராஜா வாகில் இவரது தம்பிமார் நால்வரும் பத்தினியும் எங்கே யிருக்கிறார்கள்? இந்த மகானுபாவர் இங்கே என்ன நிமித்தமாய் வந்தார்? சன்னியாசியாக வென்னோடு சூதாடிக்கொண் டே யிருந்தார்? அவர் சூதாடித் தோற்றுத் தம்பிமாரோடும் பத்தினியோடும் காட்டுக்குச் சென்றா ரென்றும் இப்போது எங்கே யிருக்கிறாரோ அது யாருக்கும் தெரியா தென்றும் யான் கேட் டிருப்பதினாலே நீர் சொல்வதில் கிஞ்சித்துச் சந்தேக முறுகின்றேன். ஆதலால் அதை யெல்லாம் தெரியச் சொல்வீராக என்று அரசன் வினவ, மறுபடியும் அர்ச்சுனன் சொல்லுகிறான். கேளும் ராஜாவே ? உமது பாகசாலைக்கு அதிபதியா யிருந்த இவ் வல்லனே பீமசேனன். இவனே கிம்மீரன் முதலாகிய அசுரரைச் சங்கரித்துப் பாஞ்சாலிக்குத் தெய்வ மலர் கொணர்ந்து கொடுத்தவன். இவனே கந்தருவ னென்கிற நாமத்தை வகித்து இரவில் கீசகனையும் உபகீசகரையும் கொலை செய்து துரோபதிக்கு மானங் காத்தவன். இவனே முன் சிங்கங்கள், புலிகள், முதலிய மிருகங்களோடும் மல்லரோடும் முஷ்டியுத்தஞ் செய்து வெற்றி யடைந்தவன். இவனே பகாசுரனையும் இடிம்பாசுரனையும் ஜடாசுரனையும் சங்கரித்து வேதியருக்கும் முனிவருக்கும் துக்கத்தைத் தீர்த்தவன். மகிமை பெற்ற கதாயுத மேந்திச் சத்துருக்களுக்குக் கால தண்ட மேந்திய இயமன் போல் காணப்படுகிறவ னிவனே. உமது குதிரைச் சாலைக்கு அதிபதியா யிருந்த இவனே நகுலன். கோசலைக்கு அதிபதியா யிருந்த இவனே சகாதேவன். இவ் விருவரும் யுத்தத்திற் சென்றால் வாயுவும் அக்கினியும் போல் சத்துரு சேனையை யெரித்துப் போடுவார்கள். அஸ்திர சஸ்திரங்களில் வெகு சாமர்த்திய முள்ளவர்கள். அழகில் மிக்கவர்கள். வெகு கீர்த்தி யுடையவர்கள். அநேக வாயிரம் ரதிகருக்கு அதிபதிகளா யிருக்கும்படி. யானவர்கள். இதோ இந்தச் சைரந்திரியே பாஞ்சால ராஜனுடைய மகளாகிய துரோபதி, அக்கினியிற் பிறந்தவள். பூவுலகத்திலும் ஒப்பற்ற ரூப லாவண்ணிய சவுந்தரியங்களால் பேர் பெற்றவள். திருஷ்டத்தியும்னனுக்கு உடன் பிறந்தவள். நிதானித்துப் பாரும், என்று சொல்லக் கேட்டு, அர்ச்சுனன் யாரோ வென்று மயங்கிநிற்கிற அவ்வரசனுக்கு வீமன் சொல்லுகிறான். ஓய் ராஜாவே? நீ

ர் இப்போது அர்ச்சுனன் யாரோ வென்று மயங்குகிறீ ரல்லவா?
அது வேண்டாம். இந்நேரம் எங்கள் சுரூபத்தைவெளியிட்டுச் சொ
ல்லிய விவனே அர்ச்சுனன். இவனே காண்டீவ மென்னும் விற்பி
டித்த மகாவீரன். பிரம்மாஸ்திர முதலிய வெல்லா அஸ்திரங்களையும்
மற்றும் வில் வித்தையின் நுட்பங்களையு மறிந்தவ னிவனே. தேவேந்
திரனுக்குப் பிரியமாகிய காண்டா வனத்தை யக்கினிக்கு அளி
த்து இந்திரனால் பெய்விக்கப்பட்ட பெரு மழையைத் துளியும் மேல்
விழாமற் தடுத்தவன் இவனே. தேவ பூமியி லிருந்த ராஜாக்களை
யும் வெற்றிகொண்டு கப்பம் வாங்கியவன். உமது அந்தப்புரத்தில்
பிருகன்னளை யென்று பேர் வைத்துக்கொண்டு உத்தரைக்கு நாட்டி
யஞ் சொல்லியவ னிவனே! இவனே இப்போது கௌரவரை
ஜயித்துப் பசுக்களை மீட்டவன். நாங்க ளெல்லா மிவ்விடத்தி லிரு
க்கவேண்டிய காரண மேதென்கிறீ ரல்லவா? நாங்கள் சகுனியோ
டு சூதாடி தோற்றபோது பன்னிரண்டு வருஷம் வனவாசமும் ஒரு
வருஷம் அஞ்ஞாதவாசமும் செய்யவேண்டியதாக நேரிட்டபடியி
னால் வனவாச முடிந்த பின்னர் உமது ராச்சியம் செழிப்பும் சுகமு
முள்ளதென்று நீர் தருமசீல ரானதுபற்றி அடுத்தபேர்களைக் காப்
பாற்றுவீ ரென்று அறிந்து மாறு வேடம் பூண்டு இவ்விடம் வந்து
உமது கர்ப்பவாசத்தி லிவ் வொரு வருஷத்தையும் க்ஷேமமாகக் கழித்
தோம். உமது நன்மையினால் இந்த விபத்தாகிய கடலைக் கடந்து
கரை யேறினோம். ஆதலால் நீரே நமக்கு முக்கிய பந்து என்று வீ
மன் சொல்லிக்கொண்டே யிருக்கையில் உத்தரகுமாரன் தன் பிதா
வை நோக்கி உத்தர கோக்கிரகண யுத்தத்தில் அர்ச்சுனன் வெளிப்
பட்டு வானரத் துவசத்தோடு கூடி விளங்காநின்ற திவ்ய ரதத்தின்
மேலேறி காண்டீவத்தைக் கைப் பிடித்து யாவரையும் வென்று
தன்னையும் காப்பாற்றிப் பசுக்களையும் மீட்டா னென் றுரைத்தான்.
அது கேட்டு விராடராஜன் மிகுந்த களிப்புடனே வீமன், அர்ச்சுன
ன், நகுல சகாதேவர், இந் நால்வரையும் ஆலிங்கனஞ் செய்து யுதி
ஷ்டிரரைத் தெண்ட னிட்டுக் கைகளைக் குவித்துச் சிரமேல் வை
த்து நேத்திரங்களி னின்று மானந்த வெள்ளம் பெருக தேகம் புளக
முறச் சொல்லியதாவது, ஓய் மகானுபாவரே! நான் செய்த பாக்கி
யத்தினாலே நீங்க ளிப்படி என்னிடத்திற் சேரும்படி யாயிற்று. புண்ணி
யஞ் செய்தவனானேன். உங்களுக்கு நேரிட்ட துன்பம் எனது நல்வினைப்பய
னோ விருக்கிறது. தெய்வாதீனமாய் நீங்க ளிப்பதின்மூன்று வரு
ஷங்களையும் விரோத மின்றி கழித்தீர்கள். இனி இவ் விராச்சிய
மும் எனது சகல சொத்துக்களும் குடும்பங்களும் தேகமும் இவை

யெல்லாம் உம்முடையனவே. பேதம் நினைக்கவேண்டாம். யான் செய்த பிழைகளைப் பொறுத் தருளவேண்டும். இஷ்டமானபடி யாளவேண்டு மென்று கூறியதைக் கேட்டு யுதிஷ்டிரர் வெகுவாய் சந்தோஷித்தார். பின்பு உத்தரன் பிதாவைப் பார்த்து ஐயா, நாம் இவர்களைப் பாண்டவ ரென் றறியாமல் தகாத தொழில்களி லேவி, மனம் போனபடி யெல்லாம் பேசி யிருப்போ மல்லவா? இன்னும் இந்த யுதிஷ்டிரர் விஷயத்தில் கொடுமையான அபராத மெல்லாம் செய்திருப்போமே! அன்றியும் தென் புறத்தில் திரிகர்த்தரோடு சண்டையில் இந்த மகானுபாவருடைய சகாயத்தினாலேயும், பீமசேனனாலேயும், வட புறத்தி லர்ச்சுனனாலேயு மன்றோ நாம் வெற்றி பெற்றோம். ஆகையா லிவ் வபராதங்க ளெல்லாம் பொறுக்கும்படி நாம் அவர்களை பூஜித்து மகா வீரனாகிய அர்ச்சுனனுக்கு நமது கன்னிகையைக் கொடுக்கவேண்டும். இவ்வாறு செய்யாமற் போனால் நமக்கு நன்மை கிடைக்கமாட்டாது. ஆதலால் தீவரத்தி லப்படி செய்யவேண்டும். இவரை நாம் பூஜிப்பது பெரி தல்ல. ஏனெனில், இவர் இப் பூமண்டலத்தி லிருக்கிற சகல மகா ராஜர்களும், தேவர்களும், கொண்டாடிப் பூஜிக்கப் பட்டவ ரன்றோ என்று சொல்லவே விராடராஜனும் அப்படியே செய்யவேண்டு மென் றங்கீகரித்து தமது மந்திரி முதலானோரை யழைத்து இச் செய்திகளை தெரிவிக்க, அவர்கள் அரசன் கருத்தை மிகக் கொண்டாடிச் சம்மதித்தார்கள். பின்பு விராட மகாராஜன் தன் புத்திரியாகிய உத்தரகுமாரியை மங்கள ஸ்நானஞ் செய்வித்துச் சகல திவ் யாபரணங்களாலும், விலை யுயர்ந்த பட்டாடைகளினாலும், புழுகு சவ்வாது முதலிய பூச்சினாலும், ஜாதி செண்பக முதலிய மலர் மாலைகளினாலும், அலங்கரித்து அவளை மங்கள வஸ்துக்களோடு முன்னிட்டுக்கொண்டு அநேகம் காணிக்கைகளையு மெடுத்துக்கொண்டு மந்திரி முதலான பரிவாரஞ் சூழ யுதிஷ்டிரரிடத்தில் வந்து தெண்ட னிட்டுக் கை கூப்பி ஐயா, ராஜாதி ராஜனே? சாம்பலினால் மறைந் திருக்கின்ற நெருப்பைப்போல் மாறு வேடத்தினால் மறைந் திருக்கு மும்மை யறியாமல் யான் செய்த பிழைகளை தயாளுவாகிய நீர் க்ஷமித் தருளி எனது பட்டமகிஷியாகிய சுதேஷ்ணாதேவியின் வயிற்றி லுதித்தவளும் எனக்கு மிகுந்த இஷ்ட குமாரியானவளும் ரூப லாவண்ணியங்களினா லுயர்ந்தவளும் நற்குணங்க ளமைந்தவளுமாகிய இக் கன்னிகையை உம்முடைய தம்பியாகிய அர்ச்சுனனுக்குக் கொடுக்கக் கருது மென் கருத்து நிறைவேறும்படி கைக்கொண் டருளவேண்டு மென்று வேண்ட, யுதிஷ்டிரர் வெகு சந்தோஷ முற்று, அவ் வரசனை நோக்கி கேளீர் விராட

மகாராஜனே; நீர் இத்தனை நாளும் எங்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்ததனால் உமக்கு நாங்கள் உபசாரஞ் செய்யவேண்டியதா யிருக்க நீர் எங்களுக் குபசாரஞ் செய்வது தகுதி யல்ல. அன்றியும் உம்மிடத்தில் எங்களுக்குக் கிஞ்சித்தாகிலும் கோப மிருந்தா லல்லவோ நீர் மன்னிப்படி கேட்க வேண்டும். அப்படி யொன்று மில்லையே, நீ ரேன் இப்படி வேண்டுகிறீர்? இக் கன்னிகையை அர்ச்சுனனுக்குக் கொடுக்கிறே னென்று சொல்லியதைக் கேட்க மிக வானந்த முறுகின்றேன். தருமசீலரும் வயதில் முதிர்ந்தவருமாகிய நீர் சுபாவமாயே பூஜிக்கத் தக்கவர். சம்மந்திய மானால் கேட்க வேண்டுவதென்ன? இப்படிப்பட்ட நீர் எங்களுக்குப் பந்துவாகும்படி நாங்கள் நல்வினை செய் திருந்ததைக் கொண்டாடவேண்டியதா யிருக்கிறது. இனி சகலமும் உம் மபிப்பிராயப்படியே நடப்போம் என்றது கேட்டு விராடன் புன் சிரிப்புடனே யாவரும் கேட்க மறுபடியு மொரு வார்த்தை சொல்லுகிறான். கேளீர் யுதிஷ்டிர மகாராஜாவே? உமது மகிமை யறிய தேவர்க்கு மரியது. ஆகையால் எளியனாகிய யா னெவ்வள வறிந்து துதிப்பேன்? ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யொருவருக்கு அதை யறியத் தகும். ஆனாலும் ஏதோ தெரிந்தவரைக்கும் சொன்னேன். நான் மூப் படைந்தபடியினாலும், என் புத்திரருக்குத் தகுந்த சக்தி யில்லாமையினாலும், இனி யிவ் விராச்சியத்தை வகிக்க எனக்கு சக்தி யில்லை. ஆதலால் அதையும் நீரே கைக் கொண்டு ஆளவேண்டும். யான் தவசியாகிச் சுகமா யிருக்கிறேன். இப்படி செய்து என்னைப் புனிதனாக்கவேண்டு மென் றுரைத்ததைக் கேட்டு, தருமபுத்திரர் அர்ச்சுனனது முகத்தைப் பார்த்தார். அர்ச்சுனனும் அக் குறிப் பறிந்து கூறலுற்றான். கேளீர் விராட மகாராஜனே, நீர் அன்பினால் சொல்கிறது சரிதான். ஆனாலும் நாங்கள் அதருமத்திற்கு எவ்வளவு மிசைய மாட்டோம். நமக்கு நியாய மில்லாத சொத்தை யபேக்ஷிப்பது நன்மை யல்லவே? தருமத்திற்குப் பயந் தல்லவோ பதின்மூன்று வருஷம் மிகுந்த வருத்தத்தையும் சகித்தோம். அவராய்க் கொடுத்தாலும் தரும சீலருடைய ராச்சியத்தைக் கைக்கொள்ளோம். எங்களுக்குக் குல முறைப்படி வரவேண்டியதாகையால் குரு ராச்சியத்தை மாத்திர மபேக்ஷிக்கிறோம். கன்னிகையை என்னை விவாகஞ் செய்துகொள்ளும்படி சொல்லியது, அங்கீகரிக்கத் தக்கதுதான். ஆனாலும் அதைக்குறித்து கிஞ்சித்து சொல்லுகிறேன் கேளும். இந்த வோ ராண் டளவில். இக் குமாரிகை என்னை பிருகன்னளை யென்றே நினைத்து ரகசியமாகிய பல சங்கதிகளைச் சொல்லி யிருப்பாள். அன்றியும் என்னிடத்தில் நாட்டிய வி

த்தை கற்றிருக்கிறாள். வித்தை சொல்லியவன் மந்திர முபதேசித்
தவன் இவர்கள் ஆசாரிய ராவா ரென்று முனிவருரைத் திருக்கின்
றார்கள். குருவானவன் சிஷையை மணக்கக்கூடா தென்று சாஸ்
திர மிருத்தல்பற்றி நா னவளை மணப்பது நீதி யல்ல. ஆனால் என
க்கு அபிமன்னு வென் றொரு மக னிருக்கிறான். அவன் ஸ்ரீ கிருஷ்
ணருக்கு உடன் பிறந்தாள் வயிற்றிற் பிறந்தவன். ரூப பல பராக்
கிரமங்களில் பேர் பெற்றவன். அவனுக் கிந்தக் கன்னிகையைக் கலி
யாணஞ் செய்யும்படி நிச்சயிக்கிறேன். அதை நீர் அங்கீகரிக்கவே
ண்டும் எனக் கேட்டு விராடராஜன் கேளீர் அர்ச்சுன மகாராஜனே?
நீர் சொல்லிய பேச்சைக் கேட்க மிகவு மானந்த மாயிற்று. ஏனெ
னில் உமது குணங்களையும், ஸ்ரீ கிருஷ்ணருடைய குணங்களையும்,
இவ் விரண்டினையு முடையனா யிருத்தல் பற்றி உம்மிலும் மிகச் சிற
ப்பை யுடைய உமது குமாரன் நமக்கு மருமகனாக நேரிடுகிறா னல்
லவா? அன்றியும் மகா ரதருக்குச் சிரோ பூஷணம் போன்ற நீர் சம்
மந்தியாக நேரிடுகிறீ ரல்லவா? எங்ஙனமாகிலும் மகா குலவானாகிய
உமது சம்மந்தத்தை விரும்பிய வெனக்கு இங்ஙனம் நேரிடுவது
வெகு சந்தோஷகரமானது. நம்முடைய கன்னிகையோ ரூப குணங்
களினாலும் வயதினாலும் அக் குமாரனுக்குப் பொருந்தி யிருப்பா
ளென்று சொல்லுகையில், யுதிஷ்டிரர் அவ் வரசனை நோக்கி ஓ! அ
ரசனே? இப்போதுமக்கும் நமக்கும் சம்மந்தம் நேரிடுவது வெகு சந்
தோஷமா யிருக்கிறது. ஆதலால் அக் காரியத்தைச் சீக்கிரமாய் நிறை
வேற்ற முயன்று உமது பந்துக்களை வரவழையும். நானும் என் பந்
துக்களாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி முதலானோரை வரவழைக்கிறேன்
என்று சொல்லக் கேட்டு விராடராஜன் யுதிஷ்டிரரை யாலிங்கனஞ்
செய்துகொண்டு ராஜாதி ராஜனான நீர் ஏழையேனிடத்தி லிவ்வ
ளவு அனுக்கிரகஞ் செய்தீ ரல்லவா? புனிதனானே னென்றார். தரு
மபுத்திரரும் மகாராஜாவே? நீ ரப்படி சொல்ல லொண்ணாது. இத்
தனை நாள் தம்பிமார்களைப்போல எங்களை யாதரித்துக் காப்பாற்
றிய உம்மை எங்க ளவரோடு ஆருவதாக நினைக்கிறோம். நீரும் அப்
படியே பேத மில்லாமல் நினைக்கவேண்டு மென்றார். இவ் விதமா
யிருவரும் பேசிக்கொண் டிருக்கும் போது துரியோதன மகாராஜனா
லனுப்பப்பட்ட தூத னொருவன் வந்து, யுதிஷ்டிரனைப் பணிந்து
கைகூப்பிச் சொல்லுகிறான். கேளீர் மகாராஜாவே? எங்களுக்கு அ
திபதியாகிய துரியோதன மகாராஜா உம்மோடு விண்ணப்பஞ் செய்
யச் சொல்லி எனக்குக் கட்டளை யிட்டதைச் செவி சாற்றல்வேண்
டும். நீங்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒருவருஷம் அஞ்

ஞாதவாசமும், செய்யும்படி செய்த பிரதிக்கினையை நிறைவேற்றாமற் போனீர்கள். எப்படியென்றால், அஞ்ஞாதவாசம் நிறைவேறா முன்னமே அர்ச்சுனன் வெளிப்புறப்பட்டுச் சண்டைக்கு வந்தானல்லவா! ஆதலால், நீங்கள் மறுபடியும் சீக்கிரம் வனவாசம் போகவேண்டுமென்று தெரிவிக்கச் சொன்னானென்று சொல்லக் கேட்டு தருமபுத்திரர் புன் சிரிப்பு சிரித்துச் சொல்லுகிறார். கேளப்பா தூதா? துரியோதன மஹாராஜன் சொல்லியது இருக்கட்டும். பீஷ்மர் முதலானோர் நாங்கள் பிரதிக்கினையை நிறைவேற்றவில்லையென்று சொல்வாராகில் அப்படியே மறுபடியும் வனவாசம் போகிறோம். ஆதலால்; உங்கள் ராஜாவை நமக்கெல்லாம் பெரியோர்களும் பூஜிக்கத் தக்கவரும் சத்தியவாதிகளும் தருமவான்களுமாகிய பீஷ்மர் முதலானோரைக் கேட்டு இச் சங்கதி தெரிந்து கொள்ளச் சொல். நாங்களோ வொரு நிமிஷமுங் குறைவு படாமல் அப்பதின் மூன்று வருஷங்களையும் நிறைவேற்றி யிருக்கிறோம். ஆதலால், மறுபடியும் போகமாட்டோம். இச் செய்தி உங்களரசனுக்குச் சொல்லென்றதைக் கேட்டு அத்தூதன் துரியோதனனிடத்திற் சென்று யுதிஷ்டிரர் சொல்லியபடி சொன்னான். அது கேட்டுத் துரியோதனன், பீஷ்மாசாரியர், துரோணாசாரியர், கிருபாசாரியர், அஸ்வத்தாமர், பூரிச்சிரவன், கர்ணன், இவர்களனைவரையுங் கூட்டி இச் செய்தியெடுத்துச் சொன்னான். அதற்குப் பீஷ்மர் சொல்லத் தொடங்கினார். கேளப்பா துரியோதனா, உத்தர கோக்கிரகண யுத்தத்தில் அர்ச்சுனன் வெளிப்பட்டு வந்தபோது நானும் துரோணரும் சங்கேதித்து யோசித்துப் பார்த்தோம். அந் நாளுக்கு முன்னாளோடு பதின் மூன்றாண்டுகள் நிறைவேறின வென்று தெரிந்தது. நீயும் பார், சரியாகவே யிருக்கும். இன்னொன்று நீ நினைக்க வேண்டும். தேவேந்திர பட்டம் கிடைப்பதா யிருந்தாலும், பிரமபட்டம் கிடைப்பதா யிருந்தாலும், பாண்டவர் அதருமத்திற் குட்பட மாட்டார்கள். அப்படி யிருக்க இந்தக் கவுரவ ராச்சியத்திற்காகச் சத்தியந் தவறுவார்களா! தவற மாட்டார்கள். ஆதலால், நம் மியாவருக்கும் இம்மை மறுமைகளில் நன்மை பயக்கத்தக்கதா யொன்று சொல்லுகிறேன் கேள். பாண்டவருக்குக் குல முறையாய்க் கிடைத்த இராச்சியத்தை யொப்புவித்துச் சந்தி செய்துகொண்டு சமாதானமாக விருந்தா யானால் கீர்த்தி பிரதிஷ்டைகளையும் போகத்தையும் சுகத்தையு மடைவாய். உன்னைச் சேர்ந்தவர்களும் சவுக்கியமா யிருப்பார்கள். இல்லா விட்டால் இவைகளுக்கு மாறான பேறுகளையே பெறுவாய். இது சிறந்த வழி. அல்லது ஆயுதங்களின் முன்னிலை

யில் வெற்றி கொண்டு ஏக சக்கிரமா யனுபவிக்க வேண்டும். இப்படி
செய்வதில் இராச்சியமோ அல்லது வீர சுவர்க்கமோ இரண்டி
லொன்று கிடைக்கும். இவ் விரண்டு வழியையும் விட்டு சூதாடி, ய
வர்கள் ராச்சியத்தை யனுபவிப்பது இனி கூடாது. இவைகளில்
உனக் கெந்த வழி சம்மதமோ அந்த வழியிலே நட என்று சொல்லி
ய பீஷ்மரைப் பார்த்து துரியோதனன் தாய் தந்தைகளாகிய கா
ந்தாரி, திரிதராஷ்டிரன், இவ் விருவருங் கேட்டுக்கொண் டிருக்க
வொரு பேச்சு பேசினான். கேளீர் பிதாமகரே, எப்படி யிருந்தாலும்
நான் பாண்டவருக்குச் சமாதான மாக ஓர் ஊசி நாட்டத்தக்க இட
மும் கொடேன். மற் றென்ன செய்வே னென்றால், யுத்தஞ் செய்
து வெற்றி பெற்றே னாகில் சாசுவதமா யிவ் விராச்சியத்தை யனுப
விக்கிறேன். அவர்களால் அடிக்கப்பட்டே னாகில் சுவர்க்கத்தை
யடைகிறேன். இதுவே என் னுறுதியான சம்மதியென்றான். இப்
படி துரியோதனன் மிகப் பிடிவாதமாய்ப் பேசியதைக் கேட்டு அச்
சபையி லிருந்த யாவரும் தெய்வச் செயலைத் தடுக்க யாரா லாகு
மென்று நினைத்து விசனப்பட்டு எழுந்து தம் தம் மனைகட்குச்
சென்றார்கள்.

இது இப்படி யிருக்க, விராட ராஜன் தம் பந்துக்களைக் கலியாண
த்துக்கு வரும்படி தூதரை யனுப்பினான். பாண்டவரும் தம் பந்து
க்களுக்குத் தூதரை யனுப்பி வெகு சமர்த்தனாகிய ஒரு தூதனை ஸ்ரீகி
ருஷ்ணர், பலராமர் முதலானோரையும், சுபத்திரை, அபிமன்னு
முதலானோரையும், அழைத்துக்கொண்டு வரும்படி துவாரகைக்கு
அனுப்பினார். அந்தத் தூதன் துவாரகைக்குச் சென்று ஸ்ரீகிருஷ்
ணருக்கும் பலராமருக்கு மிச் செய்தி விண்ணப்பஞ் செய்ய அவ
ர்கள் அள வில்லா வானந்த மடைந்து, பாண்டவர் வெளிப்பட்ட
செய்தியும் அபிமன்னுவுக்குக் கலியாணம் நடக்கப்போகிற செய்
தியும் யாவருக்குந் தெரிவித்து இது கேட்டுச் சந்தோஷ மடைந்த
குகுரர், அந்தகர், விருஷ்ணிகர் முதலான வருக்கத் தாரோடும், சு
பத்திரை, ருக்குமணி, சத்தியபாமை முதலானோரோடும், சாத்திய
கி, கிருதவர்மா, ஆர்த்திக்கியன், அக்குரூரன், அனாதிருஷ்டி, பிர
த்யும்னன், சாம்பன், நிசடன், உல்முகன், இந்திரசேனன், அபிம
ன்னு, முதலிய பேர்களோடும் கூடிக்கொண்டு கரை புரண்டு வரு
ம் சமுத்திரம் போன்ற சதுரங்க சேனையாற் சூழப்பட்டு, துந்துமி,
காகளம், சங்கம், முதலிய வாத்திய கோஷங்களினால் திசைகள்
செவிடு படும்படியாகக் கோலாகலமாய்ப் புறப்பட்டு விராடநகரம்

வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணரோடு வந்த சேனைகள் பதினாயி
ரம் யானைகள், ஒரு லக்ஷம் குதிரைகள், ஐம்பதினாயிரம் தேர்கள், ப
த்து லக்ஷம் காலாள்களாகையால் இவ் வொரு சேனையினாலேயே
அவ்விராட நகரத்துச் சூழ விருந்த விட மெல்லாம் நிறைந்து மற்
றைச் சேனைகட்கு இட மில்லாமற் போயிற்று. இவ்வாறாக ஸ்ரீகிரு
ஷ்ண ராம ரிருவரும் வந்த செய்தி கேட்டு தரும புத்திரர் தம்பிமா
ரோடு விராட ராஜனையும் அவன் பரிவாரத்தையு மழைத்துக்கொ
ண்டு அஷ்டாதச வாத்தியங்களும், சூதர், மாகர், வந்திகள், பாட
கர், நாட்டியப் பெண்கள், சத்திர சாமராதிகள், ரதகஜ துரக பதா
திகள், மறையோர், இவர்களோடு கூடக் கண்களி லானந்தக் கண்
ணீர் பெருக எதிர்கொண்டு போய் அர்க்கிய பாத்தியாதிகளால்
பூஜித்துச் சந்தோஷத்தினால் மெய் மறந்து சாஷ்டாங்க நமஸ்கார
ஞ் செய்து நின்றார். யாதவரும் பாண்டவர் முதலானவர்களும் ஒரு
வரோடொருவர் சேர்ந்து தகுந்தபடி மரியாதை செய்தும் பெற்
றும் கொண்டாடிக் கொண்டார்கள். இப்படி யிருக்க, யுதிஷ்டிரர்
கைகளைக் குவித்து சிரமேற் கொண்டு ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை
நோக்கி விண்ணப்பஞ் செய்கிறார். சுவாமி! சகலலோக நாதரே!
தேவரீர் திருவடிகளை நம்பிய பேர்களுக்கு ஒரு குறைவும் நேரிடா
தாகையால் அடியேங்கள் இப்பதின் மூன்று வருஷ காலத்தையும்
சுகமாய்க் கடந்து கரை யேறினோம். இனிமேலும் அடியேங்களிட
த்தில் கிருபையைப் பூரணமாய் வைத்துக் காத் தருள வேண்டும். இ
தற் கதிகமாய் விண்ணப்பஞ் செய்ய வல்லே னல்லே னென்றார்.
இது கேட்டு ஸ்ரீகிருஷ்ணர், யாவரும் கேட்டுக் கொண்டிருக்க புன்
னகை கொண்டு நீர் மகானுபாவர், மகா தரும நிஷ்டர். ஆதலால் ஒ
ரு குறைவும் நேரிடாது. அஞ்சவேண்டா மென்றார். அப்போது து
ரோபதியும் விராட ராஜனுடைய ஸ்திரீகளும் ஸ்ரீ ருக்குமணி முத
லான பேர்களைப் பூசித்து தகுந்தபடி யுபசரித்தார்கள். அந்தச் சமய
த்தில் துரோபதி ஸ்ரீ கிருஷ்ண னருகிற் சென்று இஞ்சித்து கண்ணீ
ர் மல்க தெண்ட னிட்டு ஒன்றும் பேச மாட்டாமல் நின்றாள். அந்த
க் கிருஷ்ணர் அவளது குறிப்பைக் கண்டு தமது திருக்கைகளா லவ
ளை யணைத்து தமது உத்தரீயத்தினா லவள் கண்ணீரைத் துடைத்
து கேளாய் பாக்கியவதி, நீ மஹா பதிவிருதை யாதலால், உனக்கு
வந்த ஆபத்துக்க ளெல்லாம் நீங்கின. இப்படிப்பட்ட பர்த்தாக்களை
யுடைய நீ விசனத்தைப் பாராட்ட லாகாது. இனி யொருக்காலும்
விசனத்தை யடைய மாட்டாய். மகா மேன்மை யடைந்து சந்தோ
ஷ மனுபவிப்பாய். உனது பர்த்தாக்களே வெற்றி பெறுவார்கள்.

நான் அர்ச்சுனனோடு கூடிக்கொண்டு துரியோத ஞாதிகளைச் சக குடு
ம்பமாய் நாசஞ் செய்கிறேன், அஞ்சாதே, என் பேச்சைத் திடமாக
வெண்ணு என்று சொல்லி யுதிஷ்டிரர் முதலானோரை யழைத்து
சீக்கிரம் பட்டணம் போவோம், விவாக காரியம் நடக்கட்டு மென்
று சொல்லி யாவரும் கூடி பட்டணத்துக்கு வருகையில் காசிரா
ஜனும் சைப்பியனும் இவ் விருவரும் இரண் டக்ஷோகிணி சேனைக
ளோடு கூட யுதிஷ்டிர ரிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். யாவரும்
தகுந்த பூஜிதை பெற்று நகரம் சேர்ந்த வுடனே பாஞ்சால தேசத்து
ராஜாக்கள் மூன் றக்ஷோகிணி சேனைகளோடு வந்து சேர்ந்தார்கள்.
பின்பு திரோபதியின் குமாரர் ஐவரும் திஷ்டத்யும்னனும், சிகண்
டியும், தகுந்த பரிவாரத்தோடு வந்து சேர்ந்தார்கள். இப்படியே ம
ற்று மநேக ராஜாக்கள் வந்துசேர்ந்தாரகள். அவரெல்லாம், யுதிஷ்டி
டிரரைக் கண்டு பூஜித்து வெகு சந்தோஷத்தை யடைய, யுதிஷ்டிரரு
ம் அவ ரவருக்குத் தகுந்தபடி யுபசரித்துச் சந்தோஷித்தார். அப்படி
யே விராடமகாராஜனுக்குப் பந்துக்களாகிய வெகு ராஜாக்கள் சே
னைகளோடு வந்து சேர்ந்தார்கள். இவ்வகையாய் நீதிகளை யறிந்தவரு
ம், தருமத்தில் நிலைபெற்றவரும், பல பராக்கிரமங் களிலும் அஸ்
திர சஸ்திர சாமர்த்தியத்திலும் சிறந்தவரும், அநேக புண்ணியங்
கள் செய்தவரும், யாகங்களை நிறைவேற்றியவருமான பல ராஜா
க்கள் அந் நகரத்திற் சேர அந் நகரம் கிருதயுகத் துலகம்போல வெ
கு பிரகாசம் பொருந்தி யிருந்தது. எங்கே பார்த்தாலும் யானைக
ளும், குதிரைகளும், ரதங்களும், நாநா தேசத்து மனிதரு மாகவே
காணப்பட்டன. பின்பு விராட மகாராஜன் நகரத்தை யெல்லாம்
வெகு அழகா யலங்கரித்து அநேக சாலைக ளேற்படுத்தி வந்த
ராஜாக்களுக்கு வேண்டிய வாச ஸ்தானங்களைக் கொடுத்துத் தம
து மாளிகையை தேவேந்திர கிரகத்திலு மதிசயிக்கும்படி யலங்
கரித்து நல்ல முகூர்த்தத்தில் உத்தரைக்கு விவாகஞ் செய்விக்க வா
ரம்பித்தார். புரோகிதர் அநேகராகிய வேத வேதாந்தங்களை யறிந்த
வேதியரோடு அந்தக் கன்னிகைக்குச் செய்ய வேண்டிய சாந்திகளை
ச் செய்தார். ராஜாவோ தேவ லோகத்திலும் கிடையாத திவ்ய
வஸ்துக்களை யழைப்பித்து அறு வகை யுண்டிகளையும் வேதியர்க்கு
ம் அரசருக்கும் மற்றை வருணத்தாருக்கும் பூரண திருப்தி யாகும்படி
யளித்தார். யாவரும் இப்படி யாமெங்குங் கண்ட தில்லை யெனக்
கொண்டாடிப் புசித்தார்கள். மறையோர் புசித்த பின்னர், உத்
தரைக்கும், அபிமன்னுவுக்கும், ஆசிர்வாதஞ் செய்தார்கள். பின்பு
யுதிஷ்டிரர் அபிமன்னுவுக்கு நடப்பிக்கவேண்டிய சாந்திகள்

வேதியரைக் கொண்டு செய்வித்து, அவனை யநேக திவ்யாபரண வஸ்திரங்களினாலே அலங்கரித்து கலியாண மண்டபத்திற்கு அழைத்து வந்து சம்மந்திகளுக்கு நடக்க வேண்டிய மரியாதைகளை நடத்தினார்கள். சுதேஷ்ணாதேவியும் மற்று முள்ள விராட ராஜனுடைய ஸ்திரீகளும் துரோபதி சுபத்திரைகளையும் ருக்குமணி முதலானோரையும் முன்னிட்டுக்கொண்டு உத்தரைக்கு திவ்யாலங்காரஞ் செய்து சுபமாகிய பாடல் முதலானவையோடு கல்லியாண மண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். இப்படியான பின் புஷ்பங்களினாலும், மற்றும் வாசனை வஸ்துக்களினாலும், திவ்ய தூபங்களினாலும், குமுகுமாய மானமாய் சுக கரமாகிய காற்று வீசும்படியானதாய் திவ்ய ரத்தி னலங்காரம் பெற் றிருக்கையால் தகத்தகாயமானமாய் அஷ்டாதச வாத்தியங்களி னோசைகளினால் திக்குகளை யெதி ரிரைச்சற் போடச் செய்யத் தக்கதாய் விளங்காநின்ற அம் மண்டபத்தில் விராடராஜன் தமது பந்துக்களோடு ஸ்ரீ கிருஷ்ண யுதிஷ்டிராதிகளைப் பூஜித்து அவ ரனுமதியால் ரத்தினக் கும்பத்தைக் கையி லெடுத்து, மணவாளனைச் சுப்ரசுனத்தி விருத்திக் கன்னிகைன்யத் தாரை வார்த்துக் கொடுத்தார். அப்போது யாவரும் வெகு உல்லாசமாய் ஆசீர்வதித்தார்கள். பின்பு தவுமியர் அக்கினியில் மந்திரப்படி ஓமஞ் செய்து உத்தரையை அபிமன்னுவுக்கு பாணிக்கிரகண முதலானவை செய்வித்து விவாகத்தை நிறைவேற்றினார்கள். அப்போது நடனஞ் செய்வோர், பாடுவோர், சூத மாகதாதிகளும், தங்கள் தங்கள் வித்தையை நடத்தினார்கள். பிராமணர் வேத கோஷத்தோடு ஆசீர்வதித்தார். விராடராஜனும் யுதிஷ்டிர மகாராஜனும் அந்தப் பிராமணருக்கு அநேக கோதான, பூதான, சுவர்ணதான, வஸ்திர தானாதிகள் செய்து அன்ன பானாதிகளினாலே நன்றாய்ப் பூஜித்தார்கள். மற்றவருக்கும் தகுந்த பரிசு கொடுத்துப் பூஜித்தார்கள். பின்பு விராடராஜா சம்மந்திகளுக்கும் அவர் பந்துக்களுக்கும் வெகு சிறப்பாய் விருந்து செய்து, ஒப்பில்லாத வெகுமதிகளைச் செய்தான். அன்றியும் தன் மகளுக்கு எழாயிரம் குதிரைகளும், இரண்டாயிரம் யானைகளும், வெகு திவ்யாபரணங்களும், தனங்களும், மற்று மநேக வேலைக்காரிகளும், சீதனமாகக் கொடுத்து மருமகனுக்கும் வெகுமதிகள் செய்தான். யுதிஷ்டிரருக்கும், விராடராஜனுக்கும், அவன் பந்துக்களுக்கும், யாதவர் பாஞ்சாலர் முதலானோருக்கும், வெகுமதிகளைச் செய்தான். ஸ்ரீகிருஷ்ணன் பாண்டவருக்கும் வெகு வெகுமதிகளைச் செய்து மணவாளனுக்கும் மணவாளிக்கும் வெகு அரிய வஸ்துக்களை வரிசை யெடுத்தார். இவ் வகையாகவே யாவரும் ஒரு

வருக் கொருவர் தகுந்த வெகுமதிகளைச் செய்தும் பெற்றும் சந்துஷ்டி யடைந்தார்கள். வந்த வேந்த ரனைவரும் சுயமாக வெகு சிறப்படைந்தவ ராஜனலும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கும் யுதிஷ்டிரருக்கும் உள் ளடங்கி யிருந்தார்கள்.

இவ்வாறு மிகச் சிறப்பாய் விவாகம் நிறைவேறிய பின்னர் ஸ்ரீகிருஷ்ணன் வேதியருக்கு வெகு தானங்களைச் செய்தான். சகல வருணத்தாரும், சகல தேசத்தாரும், யாவரும் தகுந்த உபசாரத்தையும் பரிசையும், பெற்று யுதிஷ்டிர கிருஷ்ணாதிகளையும் விராடராஜனையும் கொண்டாடிப் போனார்கள். பின்பு விராடமகாராஜன் மிகவும் பிரார்த்தித்தபடியினலே பாண்டவரும் ஸ்ரீகிருஷ்ணன் முதலானோரும் கொஞ்ச நாள் அவ்விடத்திலேயே வாசமா யிருந்தார்க ளென்று வைசம்பாயன மகாமுனிவர் ஜனமேஜய மகாராஜனுக்கு அருளிச் செய்தார். இதை சூதபுராணிகர் நைமிசாரண்ணிய ரிஷிகளுக் குரைத்தார்.

உத்தரையின் கலியாண சரித்திரம்

முற்றிற்று.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

(விருத்தம்.)

இப்பெரும் பருவ முணர்த்தவர் படித்தோ ரெழுதினே ரிதன் பொருள் விரித்தோர், செப்பரு மன்பாற் கேட்டுளோ ரதன் பேர் செப்பினேர் தீமையிற் றீர்ந்தே, எப்பெருஞ் சிறப்பு மைந்தரும் வாழ்வு மிசைந்த தீர்க்காயுவு முளரா, யொப்பருங் கதியி னிலைபெற விளங்கி யும்பரும் புகழ வாழ்வரே.

ஸ்ரீ மகாபாரத மென்னும் இதிகாசத்தில்

விராடபர்வம் முற்றிற்று.

116408

சுபமுண்டாக.